சூரிய வேர்வை

மேலாண்மை. பொன்னுச்சாமி

திருவரசு புத்தக நிலையம்

சூரிய வேர்வை

மேலாண்மை. பொன்னுச்சாமி

23, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை – 600 017.

முதற் பதிப்பு : நவம்பர், 2008
© உரிமை: ஆசிரியருக்கு

பதிப்பாசிரியர் : **வானதி திருநாவுக்கரசு**

விலை: ரூ. 80-00

- Title : **SOORIYA VERVAI**
- Author : Melanmai. PONNUSAMY
- Language : Tamil
- Subject : Short Stories
- Edition : First Edition, November, 2008
- Pages : 234
- Published by : **THIRUVARASU PUTHAKA NILAYAM**
  23, Deenadayalu Street,
  Thyagaraya Nagar,
  Chennai – 600017.
  © 24342810 / 24310769
- Price : **Rs. 80-00**

Laser typeset at : **Amirtha Graphics,** Chenai-94. ph.: 24840046

Printed at : **NOVENA OFFSET PRINTING CO.,** Chennai - 5 ✆ 28446166, 28446891

சமர்ப்பணம்

எனது பாலக வயசில் ஒரு வீட்டு முற்றத்தில்
தினந்தோறும் கூடுகிற அந்திநேரப் பாலகர்
சபையில் வகைவகையான கணக்கற்ற
ராஜாராணி கதைகள் சொல்லி எனது கற்பனை
வளத்தை வளப்படுத்தி அடார்த்தி செய்த
அமரர் அருஞ்சுனை (எனது 'பாட்டையா'
சிறுகதையின் நாயகன்) அவர்கள்,
என் பிற்பகுதி பாலக வயசில் எனக்கு வண்டி
வண்டியாகக் கதைகள் சொல்லி, கிணற்று
நீரில் நீச்சலும் கற்றுத்தந்து என்னை
வளப்படுத்திய *அமரர் செ.மு.துரைச்சாமி*
அவர்கள் நினைவுச் சுவடுகளுக்கு...

முன்னுரை

அணு-சூரியன்- உழவன்

ஆதியிலும் ஆதியானதும், ஆதிக்கெல்லாம் பழைமையானதும், மனித உழைப்பு. கலை, கவிதை, சிற்பம், கலாசாரம், விஞ்ஞானம், கட்டிட நாகரிகம், கணினி, ஆலயங்கள் என்று சகலமும் மனித உழைப்பின் வளர்முகங்கள்.

சூரியனைப் போன்று மூலாதார முதன்மையானது வேர்வை. வேர்வை உலகப் பேரழகுகளின் மூல ஊற்று. அணுக்களின் திரட்சி பொருட்கள் என்றால், வேர்வைத் துளிகளின் திரட்சி, பிரபஞ்சப் பேரழகு. கோடானுகோடி கால நதிப்பிரவாகப் பெருக்கில் உலகத்தின் அகமும் முகமும் உயிரும் வளர்ந்து வளர்ந்து அழகு பெற்றிருப்பது, மனித உழைப்பு எனும் மகத்தான சிருஷ்டிப்பாற்றலால் தான்.

கையால் கல்லை உடைத்து, கூர்மையாக்கி கல்லா யுதம் படைத்ததும், கல்லாயுதங்களால் வேட்டையாடப் பட்ட மிருகங்களின் மாமிசச் சதையின் ரத்தவரிகளை பச்சையாக கடித்துக் குதறியதும், வேட்டையாடப்பட்ட மிருகங்களை வசக்கி, பழக்கி, கால்நடையாக்கிக் கொண்டதும், கால்நடை மந்தைகளை காப்பாற்ற புற்காடு தேடி இடம் பெயர்ந்ததும், பெருகிய மந்தைகளின் உயிர் காக்க புல் விதைகளை உணவாக்கியதும், உணவை விளைவிக்கிற பயிர் விவசாயம் பிறந்ததும்... மனித உழைப்பினால்தான்.

காட்டுக்குகையில் ஒளிந்திருந்த காலத்திலிருந்து, நதிக்கரையோரங்களில் கூடாரமடித்த மனித சமூகம், ஊராக, நகரமாக, பெருநகரமாகப் பல்கிப் பெருகி உயர்ந்ததும் மனித உழைப்பினால்தான்.

கடவுளை விடவும் உன்னதமான மனித உழைப்பு, வரலாற்றையும், இலக்கியக்காவியங்களையும், சக்கர வர்த்திகளையும், மன்னர்களையும், ஆலைமுதலாளிகளை யும், கணினிப் பிரபஞ்சவிரிவையும் படைத்திருக்கிறது.

அந்த மனித உழைப்பு ஆராதிக்கப்படுகிறதா? போற்றப்படுகிறதா? கடவுளைப் போல வணங்கப்படு கிறதா? கௌரவிக்கப்படுகிறதா? வேர்வையும், உழைப்பையும் தருகிற உழைப்பாளிகளும், உழவர்களும் உயர்த்தப்படுகிறார்களா?

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்- வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்"

என்ற மகாகவி பாரதி மிகச்சரியான தீர்ப்பு எழுதினார். அந்தத் தீர்ப்பு, நிறைவேற்றப்பட்டிருக்கிறதா? சமூகத்தின் நடைமுறை நனவாக்கப்பட்டிருக்கிறதா?

இல்லை... இல்லை... இல்லை... இல்லவே இல்லை.

உழைப்பும் உழவும் காலம்காலமாக அவமதிக்கப் பட்டு வந்திருக்கிறது. அடிமைப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. விவசாயப் பொருளாதார நாடான இந்தியாவே விவசாயத்தின் முதுகெலும்பை முறித்துக் கொண்டிருக்கிறது.

உழைப்பாளிகளும் உழவர்களும் வறுமையில் ஆழ்த்தப்பட்டிருக்கிறார்கள். ஏழ்மையில் துயரப்படும்படி வீழ்த்தப்பட்டிருக்கிறார்கள்.

வாய்க்கு ருசியான உணவு கூட இல்லாமல், உழவுமக்கள் சீரழிவது... உலக மகா முரண்.

தாது வருஷப் பஞ்சம் போன்ற கொடிய பயங்கரமான பஞ்சம், பசி, பட்டினி, வறட்சி, வெள்ளச் சேதாரங்களை யெல்லாம் மனித உழைப்பால் வென்று மீண்டு வந்த உழவு மக்கள், இப்போதைய உலகமயப் பொருளாதாரச் சீரழிவுச் சூறாவளி தாளாமல் தத்தளிக்கின்றனர். தற்கொலைகள் நிகழ்கிற பயங்கர அவலம்.

இத்தனைக்கும் மத்தியில் வாழ்க்கையுடன் எதிர்த்து நின்று மல்லுக்கட்டுகிற மன ஆற்றலை பண்பாட்டு வடிவக் கொண்டாட்டங்களில் பெறுகின்றனர்.

அவர்களே கட்டிய சிறிய கோவில்கள். அவர்களே அமரவைத்த அம்மனின் வடிவங்கள். அவர்களே சாட்டிய திருவிழா. அவர்களையே சுழற்றியடித்து கும்மாளம் போட வைக்கிற அதிசயம்.

கிராமத்து மக்களின் முடிவில்லாத் துயரங்கள், துன்பங்களை திருவிழா கொண்டாட்ட மகிழ்வில் சற்றே மறக்கின்றனர். 'தீரும்' என்ற நம்பிக்கையை உருவாக்கிக் கொள்கின்றனர்.

விளையாட்டு, சிறுபிள்ளைகளின் மனசுக்கும் உடம்புக்கும் உல்லாசம் தருவதைப்போல, திருவிழா பண்பாட்டுக் கொண்டாட்டங்கள் கிராமத்து ஏழை எளிய உழைப்பாளி மக்களுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றன.

அந்த மகிழ்ச்சியைப் பெறுவதற்கு அவர்கள் படுகிற பாடுகளும், அல்லாடல்களும் கணக்கற்ற சோகம் நிறைந்தவை.

உழைப்பும், மானுடமும், உழவனும், உழவும் பலதளங்களில் அவமதிக்கப்படுகின்றனர். துயரத்திற்கு உள்ளாகி வருகின்றனர். படைத்ததையெல்லாம் செல்வந்தர்களுக்கு படையலாக்கி விட்டு, துன்பத்தையும் சோகத்தையும், ஏழ்மையையும், வறுமையையும் அனுபவிக்கின்றனர்.

சமகாலத்துச் சிறுகதைகளில் விவசாயமக்களின் உள்-வெளி-வாழ்வின் அவலங்களை யாரும் பிரதிபலிப்ப தில்லை. மத்திய தரவர்க்க வாழ்க்கைச் சூழலையே கதைப்பொருளாக்கி கதைகள் வருகின்றன.

கிராமங்களும், விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும், அரசாங்கத்தாலும், சமூகத்தாலும் மட்டும் புறக்கணிக்கப்படுவதில்லை. இலக்கியவாதிகளா லும் கண்டுகொள்ளாமல் அலட்சியப்படுத்தப்படு கின்றனர்.

நான் கிராமத்திலேயே பிறந்து கிராமத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிற எழுத்தாளன். கிராமத்து வாழ்வின் அவலங்களை மார்க்ஸீய மனசுடன் நோக்குகிறவன்.

சகலராலும் கைவிடப்பட்ட கிராமத்து உழைப்பாளி மக்களையும், கிராமத்து முரண்களையும் பற்றி நான் நெருங்கி நின்று மனசால் உணர்ந்து, மொழியால்

உணர்த்திக்கொண்டிருக்கிறேன் என்பதில் எனக்கொரு நியாயமான நினைவுப்பெருமிதம். ஆத்ம மகிழ்வு.

கிராமங்களைப் பற்றி எழுதுவதிலும் ஒருவகை யுண்டு. பதினேழு வயதுவரை கிராமத்தில் வாழ்ந்த நினைவுகளை மட்டும் மூலதனமாக வைத்துக் கொண்டு... கல்லூரி, உத்யோகம், கல்யாணம் என்று நகரவாழ்வில் உறைந்து போய் விட்டவர்கள் எழுதுகிற கிராமத்திலக்கியம்.

சற்றே பழைய காலத்து கிராம வாழ்க்கைதாம் இம்மாதிரியான படைப்புகளில் பதிவாகும். உயிர்கலந்த உணர்வுப் பதிவாகாது அது.

கிராமங்களிலேயே வாழ்ந்து, கிராம வாழ்க்கையின் இன்றைய நிலவரங்களுடன் ஒன்றிக்கலந்து பழகி, துயரப்பட்ட ஈரமனச்சிந்தனையுடன் இன்றைய கிராம வாழ்வின் அவலத்தையும், போராட்டத்தையும் அதற்கே யுரிய புத்தம்புதிய வெதுவெதுப்புடன் எழுதுகிற பாக்கியம் எனக்குக் கிட்டியிருக்கிறது.

கிராம மக்களின் மொழியைப்போலவே எனது கதை களும் எளிமையானவை. இயல்பானவை. உணர்ச்சிமய மானவை.

எளிமையான மொழியில் சமூக முரணின் ஆழத்தை உணர்த்துகிற கதைகள். கிராமத்து மனிதர்களின் பண்புகளும், மன ஈரங்களும், கோப வன்மங்களும், உழைப்பு மூர்க்கமும், துயர அவலங்களும் கதைகளில் உயிர்ப்புடன் துடிதுடிக்கின்றன.

இத்தொகுப்பிலுள்ள எல்லாச் சிறுகதைகளும் எனக்குப் பிடித்தமானவை. 'இச்சிமரம்' ரொம்ப வித்தியாச மான சிறப்புச் சிறுகதை. 'பூப்பாதையும் தார்ரோடும்' ரொம்பச் சிறப்பான கதை. யாரும் தொடாத புதிய களம்.

'கொண்டாட்டம்,' 'கோழிகூவியும்' இரண்டு சிறுகதைகளும் தனித்துவமான சிறப்புகளைக் கொண்டவை.

இரண்டு சிறுகதைகளிலும் பெண், குடும்ப நிர்வாகம் செய்கின்றாள். 'பெண் தலைமையேற்கிற குடும்பங்கள் உருப்படாது' என்கிற ஒட்டுமொத்த சமூகத்தின் பொதுப் புத்திக்கு எதிரான கலகத்தை நிகழ்த்துகின்றன இக்கதைகள்.

'வால்கா முதல் கங்கை வரை' என்ற ராகுல்ஜியின் மகத்தான நூலை வாசித்தவனுக்கு... ஆதிகாலத்துக் கற்காலத்து வாழ்க்கையில் பெண்ணே சமூகத்தின் தலைவியாகத் திகழ்ந்ததையும், தாய்வழிச் சமூகம் நிலவியது என்பதையும் நிச்சயம் அறிந்திருக்க முடியும்.

கிராமத்து ஏழை உழைப்பாளி குடும்பங்களில் பெண்தலைமை இயல்பாகவே நிலவுகின்றது என்பது, மத்தியதரவர்க்கத்து வாசகர்களுக்கு அதிர்ச்சி தரத்தக்க சத்தியம். அன்றாடம் கிராமங்களில் கண்டுணர முடிகிற சத்தியம்.

அந்த சத்தியத்தை இந்த இருகதைகளிலும் உரத்துச் சொல்லியிருக்கிறேன். சிறுகதை இலக்கிய மரபுக்கே மாறான குரல் இது.

'அன்பு விதை' ரொம்பப் பிடித்தமான சிறுகதை. 'இஸ்லாமியர்கள் எல்லோரையும் தீவிரவாதிகள்' என்று

எண்ணத்தக்க விதத்தில் அமெரிக்காவும், ஊடகங்களும் பிரசாரம் செய்கிற சமகால கொடிய சூழலுக்கு எதிரான எனது குரல். ஒற்றைக்குரல்.

இலக்கியவாதிகளின் கற்றைக்குரல் இதைத் தொடர்ந்து வரவேண்டியது, காலத்தின் பசி.

மற்ற சிறுகதைகளும் அதற்குரிய முக்கியத்துவமும் தனிச்சிறப்பும் பெற்றிருக்கின்றன.

இத்தொகுப்புக்கான பொதுத்தலைப்பை தேர்வு செய்வதற்குள் 'ஆத்தாடி, அம்மாடி' என்றாகி விட்டது. ரொம்பவே திண்டாடிவிட்டேன்.

'சூரிய வேர்வை' என்ற தலைப்பு சரிதானா என்ற சந்தேகம் இன்னமும் உறுத்துகிறது.

இத்தொகுப்பிலுள்ள சிறகதைகளை பிரசுரித்து, கௌரவம் செய்த எல்லா பத்திரிகைகளுக்கும், அதன் ஆசிரியர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.

இத்தொகுப்புக்கான கதைகள் வந்த பிரதிகளைப் பாதுகாத்து, சேகரித்து, ஒழுங்குபடுத்தி வைத்த எனது மகள் ராஜ அன்னம் எம்.எஸ்ஸி., எம்.ஃபில் (கணிதம்) பாராட்டுக்குரியவள். இத்தொகுப்பை உருவாக்குகிற கடினமுயற்சிக்கு என்னைத் தூண்டி, சுடரச்செய்த எனது மூத்தமகள் வைகறைச் செல்வியும் பாராட்டுக்குரியவள். எனது இலக்கியப் பயணத்திற்கு ஆதாரபலமாகவும் ஆணி வேராகவும் திகழ்ந்து வருகிற எனது தம்பி கரிகாலன் என்றென்றும் நன்றிக்குரியவன்.

எனது இந்த நூலை வெளியிடுகிற திருவரசு புத்தக நிலையத்தாருக்கும், பதிப்பாசிரியர் 'வெற்றிப்படிகள்' புகழ் ஐயா 'வானதி' திருநாவுக்கரசு அவர்களுக்கும், கங்கை புத்தக நிலையம் பொறுப்பாளர் திரு.ராமு அவர்களுக்கும், அட்டை ஓவியம் அமைத்துத்தந்த ஓவியர் ஸ்யாம் அவர்களுக்கும் எனது பாசமிகு நன்றிகள் உரித்தாகுக.

இனி... நீங்களும் 'சூரிய வேர்வை'யும்...

வாசித்து முடித்தபிறகு மௌனத்தில் ஆழ்ந்துவிட வேண்டாம். வாசித்தவுடன் எழுகிற மன உணர்வுகளை ஓர் அஞ்சலட்டையில் எழுதியனுப்புங்கள், தயவு செய்து.

உங்களது பாராட்டு வார்த்தைகள், என்னை உற்சாகப்படுத்தி என் பேனாவுக்கு இன்னும் மையூற்றும், கண்டுணர்ந்து நீங்கள் உணர்த்துகிற குறைகளும் என்னை நெறிப்படுத்தி இன்னும் கூர்மையாக்கும். இரண்டுமே இலக்கிய வளர்ச்சிக்கு உரமாகும். நன்றி!

மேலாண்மறைநாடு
626127
இராஜபாளையம் வழி
விருதுநகர் மாவட்டம்
04562/271233
9942610700

என்றும் உங்கள்
மேலாண்மை.
பொன்னுச்சாமி

ஆசிரியரின் பிற நூல்கள்

மானுடம் வெல்லும்	சிறுகதைத் தொகுப்பு
சிபிகள்	,,
பூக்காத மாலை	,,
மானுடப் பிரவாகம்	,,
பூச்சுமை	,,
தாய்மதி	,,
காகிதம்	,,
கணக்கு	,,
விரல்	,,
உயிர் காற்று	,,
என் கனா	,,
மனப்பூ	,,
ஒருமாலை பூத்துவரும்	,,
அன்பூவாசம்	,,
வெண்பூமனம்	,,
மானாவாரிப்பூ	,,
ராசாத்தி	,,
மின்சாரப்பூ	,,
பூமனச்சுனை	,,
பூமாயன்	,,
பூக்கும் மாலை	,,
கோடுகள்	குறுநாவல் தொகுப்பு
தழும்பு	,,
மரம்	,,
ஈஸ்வர	,,
பாசத் தீ	,,
முற்றுகை	நாவல்
இனி	,,
அச்சமே நரகம்	,,
ஆகாயச் சிறகுகள்	,,
ஊர் மண்	,,
முழுநிலா	,,
சிறுகதைப் படைப்பின் உள்விவகாரம்	(இலக்கியக் கட்டுரை நூல்)

உள்ளடக்கம்

		பக்கம்
1.	பூப்பாதையும் தார்ரோடும்	15
2.	இச்சி மரம்	27
3.	வெயில் குணம்	37
4.	கொண்டாட்டம்	49
5.	அன்பு விதை	61
6.	மன உயரம்	73
7.	புறாச் சிறகு	86
8.	புனித வாசம்	97
9.	பணக்குணம்	110
10.	கோழி கூவியும்...	122
11.	புண்ணியவதி	134
12.	தலைமறைவு	146
13.	துவைப்பு	158
14.	சூரிய வேர்வை	169
15.	நிரகாரிப்பு	178
16.	மனக்கோணல்	190
17.	மர்மயோகிகள்	193
18.	அவள்வாசம்	201
19.	திரும்புதல்	214

1. பூப்பாதையும் தார்ரோடும்

லோடு மேன் முனியனுக்கு சைக்கிளும், ஊக்கும் என்றால் உயிர். பொன்னோ, பூவோ என்று பொத்திப் பொத்திப் பாதுகாப்பான்.

அதிலும் சைக்கிள் மீது தனிப் பிரியம். பார்த்துப் பார்த்து ரசிப்பான். ரசித்து ரசித்து அலங்கரிப்பான். அலங்கரித்து அலங்கரித்து அழகு சேர்ப்பான்.

ரிக்ஷா டயர், ரிக்ஷா ரிம், முக்கோணத்துக்கும் உறைகள். அகலக் கேரியலுக்கு சிவப்புப் பெயிண்ட். கேரியலின் குறுக்காக போல்ட் போட்டு மாட்டிய பலகைக்கும் அதே சிவப்பு வர்ணம். நல்ல இழைப்புப் போட்ட வழுவழுப்பான பலகை. அதில் வரிசைதப்பாத கச்சித ஒழுங்கோடு சுற்றி வைத்த நூல் கயிறு. கயிற்றின் நுனியில் வார்ப்பிடிப்பு.

பெடலை மிதித்து நிறுத்தினால்... ப்ரீவீலின் இரைச்சல், ஒரு சங்கீதமாக ஒலிக்கும். அதற்கும் ஆயில் போட்டுச் சுத்தமாகத் துடைத்திருப்பான். ஒரு சிறிய நட்டு லூசானாலும் சரி, உடனே அதற்குப் புதுசு போட்டு விடுவான்.

''அண்ணே... முனியன்ண்ணே''

அரசன் சோப்பு விளம்பரப் பனியனில் ஏழு கோட்டை அழுக்குடன் நின்ற சிறுவன் ஏ.ஆர்.எம்.கடைப் பையன்.

''என்னலே?''

''ஏ.ஆர்.எம்.லே கூப்பிட்டாக.''

''என்னவாம்?''

''ஆமர்நாட்டுக்கு அரிசி மூட்டை ரெண்டும், ஒரு கல்லெண்ணை (கடலெண்ணை) டின்னும் போவணும்.''

''ரோடு நல்லால்லியே... ஒரே கல்லுக்காடு... டயரை 'கேட்டு'ருமே'' தயக்கமான மறுப்பு.

டயரைப் பலி கேட்கிற ரோடு என்பதை உணர்த்துகிற சொற்பிரயோகம்.

சிவப்பு நிற சீட்டில் பெருமிதமாக ஒரு தட்டுத் தட்டினான். ஹாண்டில் பாரில் ஆசை வருடலுடன் தொட்டான். டயரை ஒரு பரிவுடன் குனிந்து பார்த்தான். மனத் தயக்கம் நீள்கிறது.

''ஆமர் நாட்லே யாரு கடைலே?''

''அருஞ்சுனை அண்ணாச்சி கடைக்கு.''

''அவரு கடையா? அப்ப வாரேன். நீ போ...''

தயக்கம் மாயமாயிற்று. சட்டென்று ஒப்புதல்.

அருஞ்சுனை தங்கமான மனிதர். ஆத்திர அவசரத்துக்கு நூறு, இருநூறு கைமாற்றுத் தருவார்.

லோடை இறக்கியவுடன் கலர் உடைத்துத் தருவார். குடித்து முடித்து ஏப்பம் விடுவதற்குள் சீரெட்டும் தீப்பெட்டியும் தருவார்.

இது அவரது உபசரிப்பு. நல்ல மனசின் முகம். கூலியில் இதைக் கழிக்க மாட்டார்.

கைலியை மடித்துக் கட்டியிருக்கிற முனியன். அகலத் தோல் பெல்ட் இடுப்பில். சதுரமான தாட்டிய மான திரேகம். அகல முகத்திற்குப் பொருத்தமான திருகல் மீசை. பெல்ட்டுக்குள் சொருகப்பட்டிருக்கிற ஊக்கு.

ரோமங்கள் அடர்ந்த கருத்த திரேகம். வெற்றுடம்பில் முக்கோண மடிப்பிலான துண்டு.

ஸ்டாண்டு கிளிப்பை காலால் தட்டிவிட, பெடலில் ஸ்டைலாகக் கால்வைத்து, சீட்டில் கைவைத்து ஓர் உன்னு உன்ன.. சைக்கிள் ஒரு ரதம் போல நகர்ந்தது.

பதினாறு சூரியக் குதிரைகள் பூட்டிய பிரபஞ்சத் தேரின் சாரதியாக உட்கார்ந்திருப்பதைப் போல ஒரு பெருமித உணர்வு. ரெட்டை பெல். தேவையில்லாமல் பெல்லடிக்க... இவனது சைக்கிளின் சீரான சங்கீத இரைச்சலில் பஜாரே திரும்பி இவனைப் பார்த்தது.

''என்ன முனியா, லோடா?''

''ம்...''

''ஒங்காட்லே மழைதாண்டா...''

''பொதிகழுதை மாதிரி மூட்டை சுமக்குற நாய்க்கு என்னடா யோகம் வேண்டிக்கிடக்கு?'' என்றான்.

இது போலியான சலிப்பு. சுயவசவு என்பதுவும் ஒரு பாவ்லாதான். அவனுக்குள் பெருமையும் பூரிப்புமே பொங்குகிறது.

காலையிலேயே ஒரு ட்ரிப் குறிஞ்சாக்குளம் போய் வந்தாகிவிட்டது. ஏறு வெயில் சுள்ளென்று அறைகிறது. இதோ பதினோரு மணிக்குள் அடுத்த ட்ரிப்.

ஓட்டலுக்கு முன்னால் ரதத்தை நிறுத்தினான். ஒரு முட்டைகோஸைப் (இனிப்பு) பிய்த்து வாயில் போட்டான். அதன் மெல்லிய இனிப்பு. ஓர் உளுந்துவடையைப் பிய்த்துத் தின்றான்.

''ஒரு டீ போடப்பா...''

பெல்ட் பையின் பட்டன்களை விடுவித்தான். அதன் 'டிப், டிப், டிப்' சத்தம் இவனுக்கு ரொம்பப் பிடிக்கும். காசை எடுத்து நீட்டி விட்டு, சைக்கிளை எடுத்தான்.

''ய்யா... அய்யா...''

பாவாடையும் சட்டையுமாக நிற்கிற மூத்த மகள்.

''என்னம்மா?''

''அம்மா ரூவா வாங்கிட்டு வரச்சொன்னா''

''இந்தா... இதுலே இருவத்தைஞ்சு ரூவா இருக்கு. அம்மாகிட்டே குடுத்துரு.''

கல்லாப்பெட்டியில் உட்கார்ந்திருந்த ஓட்டல் முதலாளியிடம் திரும்பினான்.

''மூணு வடையும் ரெண்டு பால்பன்னும் பார்சல் கட்டி... எம் மகாகிட்டே குடுத்துருங்க...''

முனியன், மகளைப் பரிவுடன் பார்த்தான். மனசுக்குள் பாசத்தின் குழைவு.

''அம்மாகிட்டே குடுத்து... நீயும் சாப்பிடு''

''ம்...''

கம்பீரமான சைக்கிள் ஏ.ஆர்.எம். கடை முன்னால் போய் நின்றது. கடைக்காரருக்கு மொட்டை போட்ட மாதிரியாகத் தலை முழுக்க வழுக்கை. மினுமினுப்பான வெற்று மண்டையில் பிடறியில் மட்டும் அஞ்சாறு ரோமங்கள்.

''மோலாளி, கூப்ட்டீங்களாமே?''

''ஆமா... முனியா, கூப்புட்டு ரொம்ப நேரமாச்சு. இம்புட்டு நேரம் கழிச்சு வந்துருக்கே...''

''டீ கீ குடிச்சுட்டு வர வேண்டாமா?''

''கடைப் பையன் குடோன் போயிருக்கான். சீரக மூடை ஒண்ணு, துவரம் பருப்பு மூட்டை ஒண்ணு, புளிச் சிப்பம் ரெண்டு, ஏ.வி.எம்.தேங்காய் எண்ணெய் டின் மூணு தூக்கிக் கொண்ணாந்து இங்கே போடு...'' அதிகாரமில்லாத தொனி. சற்றே கெஞ்சல், ஆழ்மனசில் ஒரு சுக வருடல்.

''பெறவு?''

''ஆமர் நாட்டுக்கு ஒரு லோடு''

''இப்பவே போகணுமா?''

''ஏவாரத்துக்கு எண்ணையில்லேன்னு பொலம்பிட்டு போறான், அருஞ்சொனை''

அவரது மன்றாடல் தொனி, இவனுக்குள் மகுடம் வைத்த மாதிரி.

குடோனிலிருந்து சரக்குகளை சைக்கிளில் ஏற்றினான். எத்தனை பாரம் ஏற்றினாலும் தாங்கிக் கொள்கிற கம்பீரத்துடன் தாட்டியமாக நிற்கிற சைக்கிள்.

துவரம் பருப்பு மூடையை முதுகில் ஏந்தி... சைக்கிள் கேரியலில் படுக்க வைத்தான். கச்சிதப்படுத்தினான். கையால் 'டப், டப், டப்'பென்று அறைந்து, சமப்படுத்தி னான். சீரக மூடையையும் மேலே கத்தி வசமாக வைத்து ... கையால் அறைந்து... டின்களை அதன்மேல் படுக்க வைத்து....

ஏறக்குறைய ரெண்டு குவிண்டால் பாரம்.

திரேக ரோமங்களுக்கிடையில் வியர்வைக் கசிவுகள். சாக்குத் தூசிகள் அப்பிக் கிடக்கின்றன.

ஸ்டாண்ட் கிளிப்பைத் தட்டினான். லோடில் ஒரு கையும், ஹாண்டில் பாரில் ஒரு கையுமாக வைத்து... சைக்கிளை மெல்ல உருட்டி... பெடலில் கால் வைத்தான். பாரத்திற்குப் பதறாத கம்பீரத்தில் உருள்கிற சைக்கிள். வாழ்க்கைக்கு நெஞ்சு தருகிற தைர்யத்தில் முனியன்.

ரோட்டில் ஜனசந்தடி. குறுக்கும் நெடுக்குமாக வாகனசந்தடி. இடமும் வலமுமாக உள்ள ரெண்டு பெல்களையும் 'கல, கல, கல'வென்று அடித்துக் கொண்டு மளமளவென்று முன்னேறுகிற சைக்கிள். பின்பாரம் பெரும் பாரமாக இருப்பதால்... மிதக்க எவ்வுகிற முன் வீல்.

ஏ.ஆர்.எம். முகமெல்லாம் சிரிப்பு.

''கொண்ணாந்துட்டீயா?''

''ம்...புளிச்சிப்பம் வரணும்.''

''அடுத்த நடைக்குப் போயிட்டு வந்துரு''

''யாரும் என்னைத் தேடி வந்தாகளா?''

''ஆமப்பா... ஏலச்சீட்டு மூக்கையா வந்து ஒன்னை விசாரிச்சான்ப்பா...''

''வந்தார்னா... நூத்து எழுபத்தைஞ்சு ரூபா குடுத்துட்டு... ஏங் கூலியிலே கழிச்சுக்குங்க.''

முக்கோண மடிப்புத்துண்டை விரித்து, ரெட்டை மடிப்பு மடித்து, முதுகில் போட்டுக்கொண்டு மூடைகளை ஏந்திச் சுமந்து கடைக்குள் குனிந்த நிலையில் நடந்தான். பாரத்தை பாரமாக நினைக்காமல், அலுங்காமல் நடக்கிற முனியன் கம்பீரம்.

கடைக்குள் மூடையை இறக்கிய முனியன் பொறி கடலை மூடையிலிருந்து ஒரு கை அள்ளி வாயில் அப்பினான். கற்கண்டுத் துண்டுகளில் ரெண்டை எடுத்து உள்ளே திணித்துக்கொண்டான்.

கடைக்கு முன்னால் ஏகப்பட்ட கூட்டம். கிராமத்துச் சிறு கடைக்காரர்களின் மொய்ப்பு. சிட்டை சொல்கிற போட்டி மும்முரம். ஏகப்பட்ட சைக்கிள்கள். கடைக் காரர்களின் சைக்கிள்கள். ஏகக் கசகசப்பு. ஏவாரப் பரபரப்பு.

அத்தனை அவசரத்திலும் முனியனை உபசரிக்கிற ஏ.ஆர்.எம்.மின் சிரிப்பு முகம். உதட்டில் மென்னகை.

''டேய்...''

கடைப்பையன் வந்து நின்றான்.

''எனக்கும் முனியனுக்கும் ரெண்டு பஜ்ஜி வாங்கிட்டு... டீ சொல்லிட்டு வா''

முனியனுக்குள் பரவசம். உழைப்பு வியர்வையில் வருகிற உபசரிப்புத் தென்றல். மனசுக்கு முன்னால் விரிந்திருக்கிற பூப்பாதையில் நடக்கிற நினைவுக் கால்கள்.

எப்பேர்ப்பட்ட கடை முதலாளி, ஏ.ஆர்.எம்.பெரிய லட்சாதிபதி. சுற்றுப்பட்டி முப்பது கிராமத்துச்சிறுகடைக் காரர்களும் வந்து சரக்கு வாங்குகிற பெரிய கடைக்கு முதலாளி. அப்பேர்ப்பட்டவர் இவனை உபசரிக்கிறார். கெஞ்சிச் சொல்கிறார். மென் குரலில் வேலை சொல்கிறார். இவனை மதித்து மரியாதை தருகிறார்.

முனியனுக்கு ரொம்பச் சந்தோஷமாக இருக்கிறது. முகம் அகலமாக விரிகிறது. கண்ணில் துள்ளும் மன மின்னல்.

கம்பீரமாக நிற்கிற சைக்கிளைப் பார்க்கிறான். பெருமிதமாக இருக்கிறது. சைக்கிள் லோடு மேனாக ராஜா போல உலவுகிறான். கடின உழைப்பு. ராஜ மரியாதை.

மனுசனுக்கு வேறு என்ன வேணும்?

கடையைப் பார்த்து நின்ற சைக்கிளை மாற்றி நிறுத்தினான். ரோட்டில் அதன் முகம்.

அரிசி மூடையை முதுகில் ஏந்தி, திணுங்காமல் சுமந்து கேரியலில் சாய்த்தான். பார இழுப்பு. ஏற்ற

இறக்கம் இல்லாமல் சரியாக நகற்றி மையப்படுத்தி னான். படுக்கை வசமாகக் கிடத்திய குவிண்டால் மூட்டையை ரெண்டு கையாலும் 'சப்,சப்'பென்று அறைந்து, புடைப்பைச் சப்பளித்தான். ரெண்டாவது மூட்டையை அதன்மேல் கத்தி வசமாகச் சாய்த்து, மூட்டையின் இடுப்பில் 'சப்,சப்'பென்று அறைந்து, ஒரு பள்ளம் உருவாக்கி, அதில் ரெண்டு கடலெண்ணை டின்களைக் கிடத்தி...

நூல் கயிற்றால் சுற்றி... இறுக்கிக் கட்டி, ரெண்டரைக் குவிண்டால் பாரத்துடன் சைக்கிளை நகர்த்துகிற முனியன். எகிறுகிற ஹாண்டில்பாரை இடது கையால் அழுத்தி அமுக்குகிற லாவகம்.

அடக்கிவசக்கிய குதிரையில் ஏறி அமர்ந்து விட்டவனைப் போல... முனியனின் முகக் கம்பீரம். வெற்றிப் பெருமிதத்தில் தலையை ஒரு செவுட்டுச் செவிட்டி, முன் முடியைப் பின் தள்ளுகிற உற்சாகம்.

ஐந்து மைல் தூரம். நாய் வாயில் சிக்கிய சர்க்கரைச் சாக்காகக் கிழிந்து கிடக்கிற மெட்டல் ரோடு. சிதறிக் கிடக்கிற கற்களைத் தவிர்த்து மெதுவாக வண்டியைச் செலுத்துகிற நுட்பமான சாரதியாக அவன்.

மெட்டல் ரோடு, தார் ரோடாகப் போகிறது. அதற்காகச் செம்மண்ணும், சல்லியும் குவியல் குவியலாக.

பாரத்தில் அழுந்துகிற சைக்கிள். நகர மறுக்கிறது. உன்னி உன்னி மிதித்தால்தான் உருள்கிறது.

தொடைகளில் வலி. இடுப்பெலும்பிலும் ரணக் கடுப்பு. தோள்பட்டைகளில் பிசைவு.

காட்டுப்பாதை. வண்டித் தடத்தில் நீள்கிற புழுதிப் பாதை.

அருஞ்சுனை கடை வடக்குத் தெருவில். ஆமர்நாடு சின்ன ஊர். அதில் ஒன்பது கடை. அதில் முக்கியக் கடை அருஞ்சுனை கடை தான்.

வியர்வையும், தூசியும், இளைப்பு மூச்சுமாக வருகிற முனியன் சைக்கிளைப் பார்த்தவுடன், உற்சாகமாகிவிட்ட அருஞ்சுனை 'விற்க சரக்கு உரிய நேரத்தில் வந்துவிட்டதே' என்ற சந்தோஷம்.

''வாப்பா... முனியா, வா... வா... நல்ல வேளை, டயத்துக்கு சரக்கைக் கொண்ணாந்துட்டே...''

''உங்க ஊர் ரோடுதான் ரொம்பப் பாடாவதி. லோ டோட அதுல வர்றதுக்குள்ளே, ரண வேதனையாயிருது.''

''ஆமாமா... எங்க தலையெழுத்து. என்ன செய்ய? இன்னும் மூணு மாசத்துலே தார் ஊத்திருவாங்க.''

மூடைகளைக் கடைக்குள் கொண்டு போய்ச் சுமந்து போட்டான். டின்களை அருஞ்சுனையே தூக்கிக் கொண்டார்.

நார்த்தட்டில் காரச்சேவும், பொறிகடலையும் எடுத்து வைத்து, ஒரு தேங்காய்ச் சில்லும் தந்தார்.

உள்ளங்கைக்குள் காரச்சேவை வைத்து நொறுக்கி, பொறிகடலையுடன் சேர்த்து வாயில் போட்டு, தேங்காய்ச் சில்லும் கடித்துத்தின்றால்... அதன் ருசியும் வாசமும் தனி தான்.

செம்புத் தண்ணீர் தயாராக வந்திருந்தது. குடித்த கையோடு கலரையும் குடித்தான் தந்த சிகரெட்டையும் பற்றவைத்துக் கொண்டான்.

உழைப்பின் அயற்சி சற்றுத் தணிந்தது. வியர்வையை வருடுகிற இந்த உபசரிப்புத் தென்றல். மனசுக்குள் விரிகிற பூப்பாதையில் நடக்கிற நினைவுக்கால்.

இதற்குக் காரணமான சைக்கிளைப் பாசத்துடன் பார்க்கிற முனியன். அதன் கம்பீரம். மாடாக உழைக்கிற அதன் வைராக்கியம்.

நாற்பது ரூபாய் கூலி தந்தார், அருஞ்சுனை. ''இன்னும் ஒரு அஞ்சு ரூபா குடுங்க.''

''என்னத்துக்கு?''

''ரோடு ரொம்ப மோசம். ஒடம்பு புண்ணாகிப் போச்சு.''

ரூபாயை எடுத்து நீட்டுகிற அருஞ்சுனை. கண்ணின் ஆழத்தில் சகிப்பின்மை.

மூன்று நான்கு வருஷத்திற்குப் பிறகு-

அதே ஏ.ஆர்.எம்.கடையில் நிற்கிற மஞ்சள் ஆட்டோ வேன். மூன்று சக்கர டீசல் வண்டி.

அருஞ்சுனைக்கு லோடு ஏறுகிறது. கடைச்சாமான்கள். மூடைகள், வாழைத்தார்கள், டின்கள், பல சரக்குச் சிப்பங்கள், புளிச்சிப்பங்கள்.

பன்னிரெண்டு குவிண்டால் பாரம் ஏற்றலாம். வெறும் நூற்றிருபதுதான் கூலி.

எல்லாச் சாமான்களும் தவறாமல் ஏற்றப்படுகிறதா என்று சுற்றிச்சுற்றி வந்து கண்காணிக்கிற அருஞ்சுனை.

ஆட்டோ வேன் டிரைவருக்கு டீயும், வடையும் வாங்கித் தருகிற அருஞ்சுனை. பக்கத்தில் நிற்கிற முனியன்.

அவர் கவனிப்பாரா... பேசுவாரா... சிரிப்பாரா... என்று எதிர்பார்ப்புடன் ஏக்கமாகப் பார்க்கிறான்.

வேலை மும்முரத்தில் அவர் கவனிக்கவேயில்லை.

''என்ன அண்ணாச்சி... ஆளை மறந்துட்டீங்களே... கண்டுக்கவே மாட்டேங்கீக... எனக்கு லோடு தர மாட்டீகளா?''

''வா...வா... முனியா.. நல்லாயிருக்கீயா?'' என்று ஒப்புக்குப் பேசிச் சமாளிக்கிற அவர்.

''ரெண்டு குவிண்டாலுக்கு நாப்பது ரூபா கூலி தரணும், ஒனக்கு. பன்னெண்டு குவிண்டாலுக்கு வெறும் நூத்தி இருபது தான், ஆட்டோ வேனுக்கு. ஏவாரத்துக்குத் தோதாக எது இருக்கோ... அதைத்தானே பாக்க முடியும்?''

உலர்ந்த குரலில் அவரது பேச்சு. விட்டேற்றியான அலட்சியம்.

தார் ரோடு வந்ததால் போகிற ஆட்டோ வேன். இவனது பூப்பாதை மாயமாகிவிட்ட கூத்து.

சைக்கிளைப் பார்த்தான். உயிர்க்களையில்லாமல், பெயிண்ட் உரிந்து... கிழடுதட்டிப் போயிற்று– இவனது வாழ்க்கையைப் போல.

ஓம் சக்தி தீபாவளி மலர் 2007

✱ ✱ ✱

2. இச்சிமரம்

ஒன்பது வருஷமாயிற்று, இந்த ஊரை விட்டுப் போய். எட்டாப்பு முடித்தவுடன், சென்னைப்பக்கம் போனது. இலவச விடுதி வாசம். பொறியியல் படித்து, பொறியியல் கல்லூரியிலேயே லெக்சரராகப் பணி.

ஊரையும் தாத்தாவையும் பார்த்துவிட்டுப் போகலாமே என்று வந்த நேற்றிலிருந்து ஊரைப் பார்க்கப் பார்க்க இவனுக்குள் வினோதமான உணர்வுகள். புதிர்மயமான பிரமிப்புகள். நீளநீள நினைவுகள்.

ரொம்ப மாறியிருக்கிற மாதிரியான தோற்றம். மாறாமலிருக்கிற மாதிரியும் ஒரு மயக்கம். கணுக்கால் வரை தவழும் கைலியும், அரைக்கைச் சட்டையுமாக வெளியே வந்தான்.

பால்பண்ணை கட்டிடம் அப்போது மைதானத்தில் தனித்துப் பளிச்சென்று தெரியும். புதுப்பணக்காரர்

வீடுபோல ஆடம்பரத் தோற்றம். இப்போது பார்த்தால்... நொடித்துப்போன பணக்காரர் வீடுபோல கன்னங்கரேலென்று நரைத்துக் கிடக்கிறது. வெள்ளையடிக்கவும் விதியற்றுப் போன ஏழ்மை.

அதை மறைக்கிற மாதிரி புதிதாக பெரிய பெரிய வீடுகள். மாடுகளை நிறுத்தி பால் பீய்ச்சிய இடம் பூராவும் கூளப்படப்புகளும் வீடுகளுமாயிருக்கிறது. ஏர்க்கலப்பைகள் தெரியவில்லை. ஏகப்பட்ட டிராக்டர்கள் தெரிகிறது.

பஸ் வந்து திரும்புகிற இடத்தில் வேப்பமரங்கள் நிறைய உருவாகியிருக்கின்றன. புதிதாக மூன்று டீக்கடைகள் முளைத்திருக்கின்றன. ரெண்டு மளிகைக் கடைகள். டீக்கடைகள் எம்புட்டோ பெரிதாகியிருக்கின்றன. டிபனும், வடையும், முட்டைக்கோஸ¬ம், பால், பன்னும் எந்நேரமும் உயிர்ப்புடன் களைகட்டுகின்றன. வியாபார மும்முரம்.

முன்பெல்லாம்... ஒரே ஒரு டீக்கடை மட்டும் இருக்கும். டீ மட்டும்தான் கிடைக்கும். டீக்கும் சீனி போட மாட்டார்கள். காய்ச்சி வைத்திருக்கிற வெல்லப் பாகுதான் ஊற்றுவார்கள்.

இப்போது... டீக்கடைகள் ரொம்பத் தடபுடல்.

இதெல்லாம் முன்னேற்றமா... மாற்றமா... வளர்ச்சியா? இவனுக்குள் யோசனைகள்.

நிச்சயமாக... முன்னேற்றம்தான். பெரிய மாற்றம் தான். ஒரே ஒரு பஸ்தான் முன்பு வரும். இப்போது

ஏழெட்டுத் தடவைகள் வந்து திரும்புகின்றன டவுன் பஸ்கள். அடிக்கடி மினி பஸ்வேறு. இத்தனையையும் தவற விட்டவர்கள், ஒரு சில நேரம் ஆட்டோவில் வருகிறார்கள்.

இவன் கூட திருவேங்கடத்திலிருந்து நேற்று ஆட்டோவில்தான் வந்தான். எண்பது ரூபாய் வாங்கி விட்டார்கள்.

ஆட்டோவிலிருந்து இறங்கி... தரையில் கால் வைத்தபோது மனசுக்குள் ஒரு சிலிர்ப்போடியது. வெறும் காலுடன் தெருப்புழுதியில் சுற்றித்திரிந்த அந்த நாள். இப்போது தெருப்புழுதியைக் காணோம். சிமெண்டுப் பாதையாகியிருந்தது தெரு.

டீக்கடைக்கு வந்தான். சுற்றிநிற்கிற பெரியவர்கள் வினோதமாக இவனைப் பார்க்கிறார்கள். வேற்றாளைப் பார்க்கிறமாதிரி வெறித்துப் பார்க்கிறார்கள்.

''தம்பி... யாருப்பா...? புதுசா இருக்கு''

ஒருத்தர் தயங்கித்தயங்கிக் கேட்கிறார். அதற்குள் இன்னொருத்தர் குறுக்கிட்டு பதில் சொன்னார். ''நம்ம... மாடசாமி நாடாரு பேரன்...''

''யாரு.... செத்துப்போன செண்பகம் மகனா...?''

''ஆமா... சின்னப்புள்ளையிலே இங்க தான் தாத்தா வீட்லே கஞ்சியை குடிச்சிக்கிட்டு... நம்ம ஊரு பள்ளிக் கூடத்துலே படிச்சான்....''

''இப்ப எங்க இருக்கே... தம்பி?''

''மெட்ராஸ்லே''

''என்ன செய்றே?''

''இன்ஜினீயரிங் காலேஜ்லே வாத்யாரா இருக்கேன்...''

''உங்களையெல்லாம் வளர்க்குறதுக்கு அரும்பாடு பட்ட மனுசர், உங்க தாத்தா. தவங்குற காலத்துலே நீ நல்லபடியா பாத்துக்கணும்பா...''

''ஆட்டும்...''

விசாரிப்புகளோடு அறிவுரையும் சொல்கிற கிராமத்து மனசு. உரிமை எடுத்துக் கொள்கிற அந்யோந்யம். 'எனக்கென்ன' என்று ஒதுங்கிக் கொள்ளத் தெரியாத வெள்ளந்தித்தனம்.

டீ ரொம்ப ருசியாக இருந்தது. சென்னையில் இப்படி யான ருசியை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. இப்படியான அக்கறையான பாச விசாரிப்புகளையும் எதிர்பார்க்க முடியாது.

எல்லாரும் இவனை மதிப்பும் மரியாதையாகப் பார்க்கின்றனர்.

டீக்கிளாஸை நீட்டினான். காசு தந்தான். எதிர்த்தாற் போல் சற்றுத் தள்ளியிருந்த இச்சி மரத்தை பார்த்தான். ரொம்பப் பெரிசாக வளர்ந்திருந்தது. இலைகளின் அடர்த்திக்குள் பசுமை இருட்டு பம்மியிருந்தது. மைனாக்களின் கீச்சிடல், சாம்பல் நிறப் பெண் குயில் கிளை நுனியில் நின்று கூவுகிறது. சிறுவயசில் மனசில் பதிந்த இச்சிமரம்.

அவன் உதட்டில் மெல்லிய சிரிப்பு. மென்முறுவல். சாம்பல் நிறக்குயில்.

'மெட்ராஸ்லே போய்... குயிலோட நெறம் சாம்பல்னு சொன்னா... ஒரு பய நம்ப மாட்டான்...' என்ற நினைவுமின்னல்.

இச்சிமரம் என்றவுடன் இவனுக்குள் சோலைச்சாமி சட்டென்று நினைவுக்கு வந்தார். தூசிபடிந்த நினைவு. வளர்த்தியான ஆள். ஒல்லியான தோற்றம். காய்ந்த வாளைமீன்போல இருப்பார். மல் துணியில் தைத்த கை வைத்த பனியன்தான் எந்நேரமும் போட்டிருப்பார்.

இச்சிமரநிழலில் பகல் முழுக்க முடிவெட்டுவார். சுருட்டி வைத்திருக்கிற பையை விரித்து நீட்டினால்... கத்தரிக்கு ஒரு பை, கத்திக்கு ஒரு பை, தீட்டுக்கல்லுக்கு ஒரு பை, தீட்டுவாருக்கு ஒரு பை, முள்வாங்கிக்கு ஒரு பை என்று தைக்கப்பட்டிருக்கும். அதது, அததன் உறையில் மாட்டப்பட்டிருக்கும். வெட்டுப்பட்ட ரோம இணுக்குகளும் ஒட்டியிருக்கும்.

இவனுக்கு அவரைக் கண்டாலே குலைநடுக்கம். பதறுவான். என்னமோ தெரியவில்லை, இனம்புரியாத பயம். சிறுவயதுப் பயம்.

இத்தனைக்கும் அரட்டமாட்டார். 'ராசா...' என்று மிருதுவான குழைவில்தான் அழைப்பார்.

முடிவெட்ட அவரிடம் தான் போயாக வேண்டும். பயந்துகொண்டே தான் போவான். ய்ாருக்காவது முகச்சவரம் செய்து கொண்டிருப்பார். ''என்ன ராசா... முடிவெட்டணுமா?''

''ம்''

''அதுக்குள்ளே வளந்துருச்சா?''

''ம்''

''சித்தே... உக்காரும், ராசா...''

அவர் குத்துக்காலிட்டு உட்கார்ந்திருப்பார். பொழுது முழுக்க அப்படியே உட்கார்ந்துகொண்டு, வருகிறவர்களுக் கெல்லாம் முகச்சவரமும், முடிவெட்டுமாக விடாத வேலை.

இவனுக்கு ஆச்சரியமாக இருக்கும். 'இம்புட்டு நேரமும் குத்துக்கால் வைச்சு உக்காந்திருக்க முடியுதா? எரிச்சல் பத்தாதா? ரத்த ஓட்டம் நின்றுபோய்... முள்முள்ளாய் குத்தாதா?'

குவிந்து உதிர்ந்துகிடந்த ரோமக்கற்றைகளை வலது கையால் கூட்டிப் பரசி அள்ளி இச்சிமரத்தூரில் போடுவார், சோலைசாமி.

''ம்...ம்... உக்காருங்க ராசா..''

இவன் சம்மணம் கூட்டி உட்கார்வான். அவர் பக்கத்தில் உட்கார்ந்தவுடன் ஒரு நெடிவரும். பீடிநாற்ற மும், வேர்வை நாற்றமும் கலந்த ஒரு நெடி.

தலையில் தெளிக்கப்படுகிற தண்ணீர், காது வழியாக கீழே வழியும். கத்தரிப்பான் ஒரு கையில். சீப்பு ஒரு கையில். முடிவெட்டுகிறபோது, கரிச்சான் கீச்சிடுகிற மாதிரி ஒரு சத்தம் லயத்துடன் வந்துக்கொண்டே யிருக்கும். ''கர்ரிச்...கர்ரிச்... கர்ரிரிச்ச்''.

ஆனால்... சாணைபிடிக்காத கத்தரி. ரோமத்தைப் பறித்துப்பிடுங்கும். 'சுரீர், சுரீர், சுரீ'ரென காந்தும். வலி

உயிர்போகும்.

''ஸ்ஸ்ஸ ஆ...ஆ'' என்று வலிதாளாமல் இவன் கத்துவான்.

''எதுக்கு ராசா, கத்துறீக? கத்தக்கூடாது. கழுத்தையா அறுக்கேன்?'' குரல் கனிவாக இருக்கும். ஆனால், ஒரு கண்டிப்பு ஒளிந்திருக்கும்.

மறுபடியும் ஒரு 'சுரீர்... சுரீர்... சுரீர்...'

''ஸ்ஸ்ஸ ஆஆ...''

''ராசா, கத்தக்கூடாது... கத்துனா... காதை கத்தரிச்சிடுவேன்.''

அம்புட்டுத்தான்... இவனுக்குள் 'டர்ரா'கி விடுவான். ஒண்ணுக்கு முட்டிக் கொண்டு வருகிற மாதிரி இருக்கும். பயத்தில் மனசு கிடந்து படபடக்கும். கழுத்தடியில் அச்ச வியர்வையின் நசநசப்பு.

கனிவான குழைவான குரலில் வருகிற 'கத்தரிச்சிருவேன்' என்கிற மென்கண்டிப்பு, நிஜம்போலத் தோன்றும். மனசுக்குள் ஆணிவேராக இறங்கிப்படரும். 'எந்தக் கணத்திலும் வெட்டுப்பட்ட செவித்துண்டு, மடியில் வந்து விழக்கூடும்' என்கிற பயப்படபடப்பு, நிரந்தரமாகத் துடித்துக்கொண்டிருக்கும்.

முடிவெட்டுக்குத் தோதாக தலையை ரெண்டு கையிலும் பற்றி, 'அங்குட்டும், இங்குட்டும்' திருப்புவது... திருப்புகிற போது 'வெடுக், வெடுக்'கென திருப்புவது... அப்படியே தாழ்ந்து தாழ்ந்து குனிகிற முகத்தை 'வெடுக், வெடுக்'கென நிமிர்த்துவது...

எல்லாமே இவனுக்கு வலிக்கும். ஆனால், தடுக்க முடியாது. 'காது துண்டாகி விடுமோ' என்ற பதற்றம். நடுக்கம்...

ஒவ்வொரு தடவை முடிவெட்டப் போகிற போதும்... இதே கூத்துதான் நடக்கும். அதே கனவு. அதே குழைவு... 'காது துண்டாகி விழப்போகிறதோ' என்கிற பயப்படபடப்பு.

சோலைசாமியை வேறு இடங்களில் பார்த்தாலும்... இவனுக்குள் ஒண்ணுக்கு முட்டிக் கொண்டு வரும். எந்த இடத்தில், என்ன சூழலில், பார்த்தாலும் பயம் வந்துவிடும். தெறித்து ஓடிவிடுவான்.

தாத்தாகூட சில சமயம் இவனை மிரட்டுவதற்கு...

''சோலைசாமியை வரச்சொல்லட்டா?'' என்பார்.

இவன் அப்படியே அரண்டுபோய்... கட்டுப்பட்டு விடுவான்.

...அந்த வயசில் பயந்து நடுங்கி அரண்டு கிடந்ததை, இப்போது நினைத்தால் ஆச்சரியமாக இருக்கிறது. நாவிதருக்குப் பயந்து அரண்டதாக... யாரிடமாச்சும் சொன்னால், நம்புவார்களா? ஆனால், நிஜம், அதுதான்...

அவனுள் மீண்டும் ஒரு மென்முறுவல். பாலக வயசுப் பயத்தை எண்ணிய மனமின்னல். அந்த அறியாமையின் அழகை நினைத்த மனசின் ஒளி.

''இப்ப... சோலைசாமி இருக்காரா...? இன்னும் முடிவெட்டுகிறாரா?...'' அவனுக்குள் குறுகுறுக்கிற கேள்வி.

யாரிடமாச்சும் கேட்கலாமா? இச்சி மரத்துக்கே போய்ப் பாத்துரலாமே?

நினைவு, நெஞ்சில் எழும் கணத்திலேயே...

நினைவின் உருவமாக வருகிற சோலைசாமி.

அதே அழுக்கான பழுப்பு நிறவேட்டி, அதே மல் துணிப் பனியன். அதே ஒல்லித் தோற்றம். முதுமையில் வளைந்த முதுகு காரணமாக சற்றே வளர்த்திக் குறைவு. தலையெல்லாம் நரை.

வேட்டியையும் கையையும் அடித்து ஒட்டியிருந்த ரோம இணுக்குகளை உதறிக்கொண்டே வருகிற பெரியவர்.

பெஞ்சுகளிலும் சேர்களிலும் உட்கார்ந்திருக்கிற மனிதர்களுக்கு மத்தியில், தரையில் குத்துக்கால் வைத்து உட்கார்கிற அதே சோலைசாமி. வெகு இயல்பாக... சகஜமாக... இவனது கால் மாட்டில் உட்கார்ந்திருக் கிறார்.

''ராசா... இது யாரு...?''

கண்ணிமைகளில் கூட நரை மின்னல்.

''நா...நா... மாடசாமித் தாத்தா பேரன்...''

''மெட்ராஸ்லே தானே இருக்கீக? சின்னப் புள்ளை யிலே பாத்தது. பெரியாளாகிட்டீக''

''ஆமா...''

''எப்ப வந்தீக...?''

''நேத்து...''

''உங்க நாவிதனை எதாச்சும் கவனிக்கக் கூடாதா?'' இயல்பான இரைஞ்சும் குரல்.

''ரெண்டுவடையும், டீயும் குடுத்துருங்க'' என்கிற இவன், டீக்கடைக்காரரைப் பார்த்து.

''நீங்க... மகராசா... நல்லா இருக்கணும்'' நன்றியை ஆசீர்வாதமாகச் சொல்கிற அந்த எளிய மனசு... உயர் பண்பின் செல்வ மனசு.

சோலைசாமி வடை தின்று முடித்தவுடன் டீ வந்தது, வெள்ளை வெளேரென்ற பிளாஸ்டிக் குவளையில்.

எல்லோருக்கும் கண்ணாடிக் கிளாஸ். இவருக்கு மட்டும்?

இவன் மனசு அதிர்கிறது. அதிர்வில் முணு முணுத்தே விடுகிறான்.

''இதுலே மாறலியா?''

ஆனந்த விகடன்,
மார்ச்-2008

✱ ✱ ✱

3. வெயில் குணம்

வெயில், தீவெயிலாகக் கொளுத்துகிறது. பங்குனி சித்திரை மாசத்து வெயிலைப் போல் எரிக்கிறது.

புரட்டாசி மாசம்தான். இருபத்தெட்டாகிறது தேதி. ஐப்பசி பிறக்கப் போகிறது. மழைக்காலமாக இருக்க வேண்டிய பருவம்.

நாய் வராத ஊரில் நாட்டாமை பண்ணுகிற நரியைப் போல... மழை வராமல் ஏமாற்றியதால், வெயிலுக்குக் கொண்டாட்டம். வைத்தது சட்டம் என்று அனலாக அழிச்சாட்டியம் பண்ணுகிறது.

தெருக் காட்டுத் தண்ணீரும், ஈரக்கூதலுமாக நீர்க் கசிவெடுக்க வேண்டிய காலத்தில்... காலனின் கண்ணாகக் கொலை வெயில்.

வெயிலையே வெறித்துப் பார்க்கிற வீராச்சாமியின் கண்கள் இடுங்குகின்றன. கண்ணிமைக்குள் வெயிலின் காந்தல்.

முக்கால் குறுக்கம் இறவைப் புஞ்சையில் மக்காச் சோளத்தை ஊன்றி வைத்து விட்டு... ஏக்கமும் புலம்பலுமாக ஆகாயத்தையே வெறிக்கிற வீராச்சாமி 'எப்படா மழை பெய்யும்...' என்று சோளப் பயிர்களைப் போலவே காய்ந்து, உலர்ந்து... வாடித் தவிக்கிற வீராச்சாமிகள், ஊர் பூராவிலும்.

''ஊரையே புரட்டியெடுக்கிற அடைமழை பெய்ய வேண்டிய புரட்டாசி... இப்படி வரட்டிழுப்பும், மொரட்டு வெயிலுமாய்ப் போகுதாக்கும்?''

''புளிச்ச தண்ணியை வவுறுமுட்ட குடிச்சிட்டுப் பாடுபட வேண்டிய சம்சாரிக, டீக்கடையே கதின்னு கெடக்குறோம்லே? பருவமும் நம்மளை மாதிரியே தலைகீழா மாறிக்கிடுச்சு...''

பஸ் வந்து வட்டமடித்துத் திரும்புகிற மைதானத்துக்குப் பெயர் 'பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையம்.' அதன் மூலையில் ஒரு டீக்கடை. பலகாரங்கள், புரோட்டாவுடன் கூடிய ஒரு கடை. ''அருஞ்சுனை காத்த அய்யனார் துணை'' என்ற தலைப்புடன் எழுதி மாட்டியிருக்கிற வர்ணப்போர்டு. உள்ளே வண்ணத் தொலைக்காட்சி. எந்நேரமும் சினிமா. வெளியேயும் ஒலிபரப்புகிற ஸ்பீக்கர் ஏற்பாடு.

மைதானத்தின் வடக்கு எல்லையில் அணிவகுத்து நிற்கிற வேப்பமரங்கள், அடியில் சிமிண்டுத் திண்ணை. கால் மாட்டில் மம்முட்டியுடன் உட்கார்ந்திருக்கிற வீராச்சாமி. மேல்துண்டு தோளில் கிடக்கிறது.

இப்ப இருக்கிற ரெண்டு ஃபேஸ் கரண்டில் பம்ப் ஷெட் மோட்டார் ஓடாது. இது நிற்கவும், வரப்போகிற

மூன்று பேஸ் கரண்டுக்காகத்தான் வீராச்சாமி காத்திருக்கிறான். அவன் மட்டுமல்ல... மரத்தடியில் உட்கார்ந்து ஏக்கமும் துக்கமுமாகப் பேசிக் கொண்டிருக்கிற எல்லாச் சம்சாரிகளும்.

கழுவிக் கவிழ்த்திய சட்டி மாதிரி சுத்தமாக இருக்கிற ஆகாயத்தில் வெயிலின் தீயாட்சி. சில சமயம் மேகம் திரண்டுவரும். பருத்தியம்பாரம் போல மேகம். பழுத்துப் பழுத்து வெயிலடிக்கும். காற்றில்லாத புழுக்கம். மரங்களின் இலைகள் அசையாத இறுக்கம்.

'மழைக்கோப்பு கருக்கொள்ளுதோ' என்று ஆவலும் ஆர்வமுமாகச் சம்சாரிகள் நினைப்பதற்குள்... மரங்களின் தலையசையும். வெயிலின் இறுக்கத்தை வருடித் தருகிற இளங்காற்று.

அம்புட்டுதான், தொலைந்தது. கூடிச்சேர்ந்த மேகம், காற்று எழும்பியவுடன் நாலா திசையிலும் கலைந்து சிதறிவிடும்.

''இந்த ஊளைக் காத்துதான், மழைக்கருவை அழிக்குற காலக் கூத்துவன்.''

''இப்படியே மழை பின்னடிச்சுப் போய்ட்டா... மானாவாரிக் கரிசல் காட்டுலே வளர்ந்து நிக்குற மக்காச்சோள வெள்ளாமை, எப்படி வெளையும்?''

''காய்ஞ்சு கெடுக்கிற மழை, மனுசமக்களை ஓய்ச்சு, மாய்ச்சிட்டுத்தான் மறுசோலி பாக்கும்.''

கசந்த குரலில் பேசுகிற கடற்கரையை ஆமோதிப்புடன் பார்க்கிற வீராச்சாமி.

டீக்கடையில் வியாபார மும்முரம். புரோட்டா கல் புகைகிறது. டி.வி.யின் சத்த முழக்கம்.

வீராச்சாமி இங்கிருந்தே சவுண்டு விடுகிறான்.

''அருஞ்சொனை, ரெண்டு வடை குடு.''

''உளுந்தவடையா, மாவு வடையா?''

''அதுலே ஒண்ணு, இதுலே ஒண்ணு.''

''இனிப்பு ஏதாச்சும் வேணுமா?''

''மழை பண்ணுற நாசக்கூத்துலே... இனிப்பு ஒண்ணுதான் கொறைச்சல்.''

வீராச்சாமியின் மனச்சலிப்பான குரல். மதிய வெயிலின் உக்கிரம், வேப்பமரத்து இலைகளை மீறி சிந்திச் சிதறுகிற சில்லறைச் சூரிய இணுக்குகளிலும் உஷ்ணம்.

''மதியச் சாப்பாடே இந்த வடைதான். கொண்டா.''

விரக்தி கலந்த சோகக் குரல்.

வடையைப் பிய்த்து வாயில் போட்டு, ஒரு செம்பு தண்ணீரை 'மடக்...மடக்...''கெனக் குடித்தான். நாவும் மனசும் நிறைந்த ததும்பல்.

''ஒரு டீயும் சிகரெட்டும் குடப்பா''.

டீ குடிக்கிற வரைக்கும் காத்திருந்த மாதிரி... புறாக்கூட்டத்தில் வந்து விழுந்த கல் மாதிரி, சட்டென்று உதித்த மௌனம்.

கரண்டு நின்றது. டி.வி, ஸ்பீக்கர், வானொலி என்று அத்தனை சத்தங்களும் வாயைப் பொத்திக்கொள்ள...

மரத்து நிழலில் உட்கார்ந்திருந்த அத்தனை சம்சாரிகளும் மம்பட்டியும் கையுமாக வெயிலுக்குள் தெறித்த மாதிரி சிதறிப் பாய்ந்தனர். வீராச்சாமியும்தான்.

நடு உச்சி வெயில். சுள்ளென்று அறைகிறது. தோள் பட்டையெல்லாம் தீயாய்க் காந்துகிற வெயில். முதுகிலும் பரவுகிற காந்தல், வெயிலைப் பொருட் படுத்தாத உழைப்பு வேட்கை.

''மூணு பேஸ் கரண்டு வந்துருச்சு... ஓடுங்க, காடுகரைகளைப் பாத்து.''

ஆள் ஆளுக்கு தாக்கல் சொல்லிக் கொண்டனர். வீராச்சாமி வண்டிப் பாதையில் 'வெக்...வெக்...' கென்று வேகமாக நடந்தான். ஓடைக்குள் விழுந்து கரையேறினான். தோள்துண்டைக் குத்திப் பிடுங்கிக் கேலி பண்ணுகிற வேலி மரத்து விளார். முள்ளிலிருந்து துண்டை உருவிக்கொண்டு... புஞ்சைப் பொழிகளில் நடந்து...

பம்ப் ஷெட் ரூம், விவசாயத்தைப் போல சிதில மடைந்து கிடக்கிறது. பனங்கட்டையெல்லாம் கரையான் பற்றி, உளுத்துப் போய்ச் சரிந்து கிடக்கிறது.

ரெட்டைக் கதவுகள் உடைந்து தொங்குகின்றன. உள்ளே போனால்... குப்பென்று முகத்தில் மோதுகிற, வெளவால் வீச்சம். புழுக்கை நெடி, உவர் மண்ணின் கமறல்.

இருட்டு குகைக்குள் இறங்கி... படி, படியாகத் தவழ்ந்து, மூன்றாவது 'அடிப்பெட்டுக்குள்' இறங்கி...

ஏர் வாய்ஸ் திறந்து விட்டான். மூச்சுத் திணற வைக்கிற இறுக்கம். மறுபடி மேலேறி வந்து...

பச்சைப் பட்டனை ஓர் அழுத்து அழுத்தினால்...

உயிர் பெறுகிற மோட்டார், 'டர்ர்ரூ...டர்ர்ர்ரூ...' என்று உறுமி விட்டு... 'சொத....சொத...'வென்று நீரை அள்ளி ஊற்றுகிற சத்தம்.

சிமெண்டுத் தொட்டியில் விழுகிற தண்ணீர்... வாய்க்கால் தூசிகளையெல்லாம் வாரியள்ளிக் கொண்டு.. பாம்புக் குட்டிகளாக நுரைத்தலைகளோடு முன்னோடு கிறது.

வெளியே வந்தால்... சப்பென்று அறைகிற வெயில் காந்தல். தீக்கற்றை மோதுகிற மாதிரி இருக்கிறது. வாய்க்கால் தண்ணீரைக் காலால் எற்றிக் கொண்டே உடன் அழைத்துச் செல்கிற வீராச்சாமி. கொதி புழுதி யாகக் கிடந்த வாய்க்காலில் உருளுகிற தண்ணீரும் சுடு தண்ணீராகி விடுகிறது.

வாடித் துவண்ட மக்காச்சோளப் பயிர், சாம்பல் பூத்த முகங்களோடு குறாவி (குறை+ஆவி)ப் போய் நிற்கின்றன.

மழையில்லாத வெயிலின் தகிப்பு, அதுகளை வாட்டி வதைக்கிறது. தலை தொங்கிக் கிடக்கின்றன.

வீராச்சாமிக்கு அதுகளின் வாட்டத்தைப் பார்க்கப் பார்க்கக் குலைகொதிக்கிறது. இதுவாவது பரவா யில்லை. கிணறு இருக்கிறது. வற்றிப் போனாலும், ஆழத்திலாவது தண்ணீர் கிடக்கிறது. இறைத்துக் கொள்ளலாம். பாத்தி பாத்தியாகக் கொத்திவிட்டுத் தண்ணீர் பாய்ச்சலாம். உசுரைக் காப்பாத்தலாம்.

கரிசல் காட்டில் என்ன செய்ய? மானாவாரி. வானத்தை நம்பிப் பிழைப்பு. முழங்கால் உயரத்தில் பயிர்கள்.

மழையில்லாமல் மருகி மாய்கிற வங்கொடுமை.

உழுது விதைத்து... முளைத்த விதைகளை மயில்களிடமிருந்து பாதுகாத்து... வம்பாடுபட்ட அத்தனை உழைப்பும், மழையில்லாக் கொடுமையால் மண்ணாவதா?

மண்ணை நம்பி, மண்ணைக் கட்டி மாரடிக்கிற சம்சாரியே மண்ணாகிப் போக வேண்டியதுதானா?

முதல் மடையைக் கொத்தி விலக்கினான். வாய்க் காலில் இருக்கும் புல்லைச் செதுக்கி வரப்பில் அள்ளிப் போட்டான். பாத்திக்குப் பாத்தியாக வாய்மடையைக் கொத்தி விலக்கினான். தண்ணீர் பாத்தி முழுக்கப் பரவிப் படர்கிறது.

வெயிலில் கருகிய சருகுகளை நீர் தள்ளுகிற 'நெறு நெறு' சத்தம். நீர் பாய்ந்த பாத்திகளில் நுரை விடுகிற வெடிப்புகள். மைனாக்களும், கொக்குகளும் வந்து நிற்கின்றன. நீர் பாய்ந்த பாத்திகளின் வெடிப்புகளி லிருந்து வெளிப்படுகிற புழு, பூச்சிகளைப் பொறுக்குகிற பசியோடு கொக்குகள்.

வெயில் தகிக்கிறது. முதுகெல்லாம் தீக்காயத்தின் காந்தலைப்போல் வெயில் சூடு. மேல் துண்டை வாய்க்கால் தண்ணீரில் நனைத்துப் பிழிந்து, முதுகு முழுக்கப் பரத்திவிட்டு, கழுத்தில் கட்டிக் கொள்கிற வீராச்சாமி.

இந்த மக்காச்சோளப் பயிர் முளைத்தபோது...

மந்தை மந்தையாக வந்து விழுந்த மயில்கூட்டம். முளையைக் கொத்தினால், விதை கிடைக்கும் என்ற விபரம் தெரிந்த மயில்கள்.

கண்மாய்களின் உள்வாய்களில் வரிசை வரிசையாக அணிவகுத்துநின்ற கருவேல மரங்கள். அவைதான் மயில்களுக்கு வாழ்விடம். பகல் முழுக்க பாம்பு, புழு, பூச்சிகளைப் பொறுக்கித் தின்பது. நரிகளிடமிருந்து தப்பிக்கக் கருவேல மரங்களில் இரவில் தங்கிக் கொள்வது...

வனத்துறைக்கான கருவேல மரங்கள்.

ஆள் ஆளுக்கு வெட்டிக் காலி பண்ணிய வெள்ளை வேட்டி அரசியல் புள்ளிகள். கருவேல மரமே இல்லாத பொட்டலாக, கண்மாய்.

வாழ்விடம் தொலைத்து, அகதிகளாக ஊர்த் தோட்டங்களுக்குப் புலம்பெயர்ந்த மயில்கள். வயிற்றுப் பாட்டுக்கு அதுகள் அலைய... விவசாய அழிமானமாக அது மாற... அதுகளோடு மல்லுக்கட்டி வெள்ளாமை யைப் பாதுகாக்கச் சம்சாரிகள் மாய்ந்து மடிய...

வீராச்சாமி... இந்தப் பயிர்களைப் பாதுகாக்க நடத்துன மல்லுக்கட்டையும்... காலையும் மாலையும் ஓடி ஓடி மயில்களைத் துரத்தி மாய்ந்ததையும் நினைத்துக் கொண்டான்.

மம்பட்டியால் ஈர மண்ணைக் கொத்திக் கொத்தி... தோள்பட்டையெல்லாம் வலி கடுக்கிறது. தொடை யெல்லாம் கட்டிப் பிசைகிற வலி.

பசியும் தாகமும் சேர்ந்து கொண்டது. காலையில் குடித்த கஞ்சி, ரெண்டு வடையும் டீயும் சாப்பிட்டது. பசி, தீயாகப் பிடுங்குகிறது. நாவறட்சி, தொண்டை யெல்லாம் ஈரப்பதமில்லாமல் உலர்ந்துவிட்டது. எச்சி லெல்லாம் உறைந்து கட்டியாகிவிட்டது. பிசின் கட்டி.

கடல் மேல் பயணம் போனவன் கதையாக... வாய்க்கால் தண்ணீரில் நின்று கொண்டே தாகத்தில் தவிக்கிறான். இந்தத் தண்ணீர் உப்புத் தண்ணீர்.

நிரை நிரையாக நீர் பாய்ந்து... ஒரு முறுசலும் முடிந்து, மறு முறுசலுக்கான பெருவாய்க்காலின் மடையையும் விலக்கினான். வெயிலின் நிறம் மாறி யிருக்கிறது. தகிப்புக் குறையவில்லை. தீக்கோலாகச் சுடுகிறது. கன்னக் கதுப்புகளில் வெயிலின் தீத்தீண்டல்.

அடிவயிற்றில் பிசைகிற வலியைப் போன்ற பசி. நெஞ்சுக் காந்தல். குடிக்கத் தண்ணீர் இருந்தாலும் தகை அடங்கும். நெஞ்சுக் காந்தல் மட்டுப்படும்.

வெயில் காட்டத்துக்கு கண்ணைச் சுருக்கிக்கொண்டு பொழுதுக் காலைப் பார்த்தான். மணி, நாலு இருக்குமா? பொழுது தகதகக்கிறது.

இன்னும் இரண்டு மணி நேரம். வெயிலில் கிடந்து வேக வேண்டும். வெந்து சாகவேண்டும். சலிப்பிலும் மலைப்பிலும் மனசு.

வீராச்சாமிக்கு வெயிலை நினைக்க நினைக்க ஏகக் கடுப்பு. ஈரக் கூதலடிக்க வேண்டிய புரட்டாசி மாதத்தில், பங்குனி, சித்திரை வெயிலா? காலம் தப்பிய வெயில் கோலம் மனசு தகிக்கிறது.

வெயிலுக்குப் பயந்தவனில்லை, வீராச்சாமி. வீராச்சாமி மட்டுமல்ல... அவனைப்போன்ற சம்சாரிகள் பிறந்தது முதல், காலமெல்லாம் வெயிலில் நனைந்து, வெயிலில் ஊறி... வெயிலில் காய்ந்து, வெயிலில் உலர்ந்து... வெயிலை, நிலா வெயிலாக நினைத்து...

வெயிலே உழைப்புக் களமாகப் பழகிப் போன விவசாயம்.

''டடக்...''

பொழுதுக்கால் விழுந்த நேரத்தில் மின்சாரமும், மோட்டாரும் நின்றுவிட்டன. மிச்சத்துத் தண்ணீருக்கு மூன்று பாத்திகள் வாய்மடையைத் திறந்து வைத்தான்.

தொட்டித் தண்ணீருக்கு வந்தான். தலைமுடியைத் தொட்டால் சுடுகிறது. தோள்பட்டையெல்லாம் காய்ச்சல் கண்ட உடம்பாகச் சுடுகிறது. வெயிலின் வேகம் இன்னும் குறையவில்லை. உக்கிரம் மறையாத வெயில்.

தொட்டித் தண்ணீரில் உடம்பை அலசினான். மம்பட்டியைக் கழுவினான். உடம்பெல்லாம் துவள்கிற அயற்சி. வாட்டுகிற பசியும், தாகமும். வெயிலின் காந்தல் இன்னும் மனசுக்குள் நிற்கிறது.

துண்டை உதறி... ஈர உடம்பை அழுந்தத் துடைத்தான். காலுக்கு ரெக்கை முளைத்த மாதிரி பரபரத்தான்.

வீட்டுக்குப் போகணும்...

வயிறு முட்டத் தண்ணீர் குடிக்கணும். காபி குடிக்கணும். முடிந்தால் சோறு சாப்பிடணும்.

ஆவல் பறப்பில் கால்கள் ஊரை நோக்கிப் பறக்கின்றன. 'வேகு...வேகு...' என்று நடையை எட்டிப் போட்டான்.

அந்தி வெயில், மஞ்சள் நதியாக அவனை விழுங்குகிறது. ஆசை தீராமல்,

ஊருக்குள் நுழைந்தால்-

முதல் வீடு, காரை வீடு. மூணு மாடி வீடு. மூன்று டக்கர்கள். நாலு தொழுவம் நிறையப் பசுக்கள். கணக்கு வழக்கில்லாத காடுகரைச் சமுத்திரம். பெருங்கை ராமசுப்பு.

வீட்டைக் கடக்கிறபோது-

வீட்டுக்குள்ளிருந்து உறக்கச் சடவுடன் நெஞ்சு ரோமங்களைத் தடவிக் கொண்டே வெளி வருகிற ராமசுப்பு. கொட்டாவி நெரிகிறது.

மதிய விருந்து உண்டு முடித்த அசதியுடன் கட்டிலில் சாய்ந்து குறட்டை விட்டவர், இப்பத்தான் எழுந்து வருகிறார் போலும்!

அந்திவெயிலில் அவரது கண்கள் கூசி இடுங்குகின்றன.

''யப்பா... என்னமா வெயிலு கொளுத்துது?''

ஆச்சரிய வேதனையுடனான அவரது சலிப்புச் சொற்கள். மெல்லிய முணுமுணுப்பு. வெயிலைக் கடுப்புடன் பார்க்கிறார்.

வீராச்சாமி உயிரெல்லாம் கிடந்து கொதிக்கிறது. அவரை எரித்துவிடுவது போலப் பார்க்கிறான். மனசு

பூராவும் ரௌத்ரத்தின் தீக்காந்தல். மனசு முழுக்க அக்னிவெயில்.

''அந்திவெயிலே... உங்களுக்கு 'கொளுத்துற' மாதிரியிருக்கா? இதெல்லாம்... நெழல் வாட்டத்துலே உழைக்காம உக்காந்து திங்குற மன மப்பு இல்லே?'' பொறாமையால் வெடித்த வீராச்சாமி, சற்றே சமனப்பட்டான். நிதானமானான், நினைவில்.

ஆயினும் வீராச்சாமி மனசுக்குள் புதிர்த்தனமான ஒரு கேள்வி முளைக்கிறது. ஓர் அநீதி கண்ட மனக்கேள்வி.

'வெயிலும், காத்தும் எல்லாருக்கும் சமம்னு சொல்றாங்களே... அது நெசந்தானா? இல்லே, பொய்யா?'

அவனுள்ளிருந்து வெளிப்படுகிற கொதி மூச்சு.

ஓம் சக்தி

மே 2008

✱ ✱ ✱

4. கொண்டாட்டம்

கழுவிக் கவிழ்த்திய கோழிக்குழம்புச்சட்டியைப் போல, வெறிச்சென்று கிடக்கிறது ஊர். சட்டியில் இன்னும் குழம்பு வாசம் கமகமப்பதைப்போல, தெருக்களில், ஊர்ப்பொங்கலின் கோலாகலச்சுவடுகள்.

பஸ்வந்து திரும்புகிற மைதானத்தில் ஊர்திரும்புகிற விருந்தாடிகள் கூட்டம். விருந்தாடிகளை வழியனுப்ப வந்த வீட்டாள் கூட்டம்.

'ஸ்ரீசக்தி மாரியம்மன் பொங்கல் திருவிழாவிற்கு வருகை தந்த பக்தகோடிகளை வரவேற்ற' டிஜிடல் பேனர்கள் வண்ணப் பிரம்மாண்டச் சுவர்களாக...

'அருஞ்சுனை காத்த அய்யனார் துணை' என்று ஆரம்பிக்கிற பெரிய டிஜிட்டல் பேனர் டீக்கடையின் தலைமகுடமாக ஜொலிக்கிறது. பஜ்ஜியும், முட்டைக் கோஸூம் (ஓர் இனிப்புப் பலகாரம்) வடையும், தட்டு

களில் குமிகுமியாக... பார்க்கிற பிள்ளைகளுக்கு எச்சில் ஊறுகிறது.

பெரியாள்களுக்கே திடீர் பசி வருகிறது. 'ரெண்டை வாங்கி பிய்ச்சுத்தின்போமா' என்று ஆலாய் பறக்கிற அடிவயிற்றாவல்.

ஒரு சிறுமிக்கு எச்சில் ஊறுகிறது.

''யம்மா...யம்மா...யம்ம்ம்மா...''

''என்னடி...? அத்தை கிட்டே பேசிக்கிட்டிருக் கேன்லே?''

''என்னவாம்... மருமவளுக்கு?''

''எனக்கு... எனக்கு... அந்தா... அது வேணும்'' கொஞ்சல் சிரிப்பும், கோணல் முகமுமாக உடம்பை நெளித்துக்கொண்டே கையை பஜ்ஜி பக்கமாக நீட்டுகிறாள்.

''வாயையும் கையையும் அமுக்கிக்கிட்டு பேசாமக் கிட... அத்தையை பஸ்ஸேத்திவிடணும்''

''பஸ்வர நேரமிருக்கு...''

விருந்தாடியே டீக்கடைக்குப் போய் மூணு பஜ்ஜி வாங்கிக்கொண்டு வந்து தர... மலர்ச்சிரிப்பில் சிறுமி.

''மதினி... இதென்ன பழக்கம்? விருந்தாடியா வந்த நீங்களா, வாங்கித்தர்றது''

''மருமகாதானே...? நாளைக்கு எங்க வீட்டுக்கு வரப்போறவதானே?''

'பஸ் எப்ப வரும், எப்ப வரும்' என்று தவியாய் தவிக்கின்றனர். 'கிழக்குத் திசையில் புழுதிப்படலம் எழுகிறதா' என்று எட்டி எட்டிப்பார்க்கின்றனர்.

மதியச்சாப்பாடு முடித்து விருந்தாடிகளை நகர்த்திக் கொண்டு வந்தாயிற்று. மூனு மணிபஸ் வந்து, ஏற்றி விட்டு விட்டால்.... பாடு முடியும். பஸ் வரலேன்னா...?

மறுபடியும் விருந்தாடிகளுக்கு ராத்திரிச் சாப்பாடு தயார் பண்ண... 'மாங்கு, மாங்'கென்று பாடுபட்டு மாயணும். உசுர்வதை.

மைதானம் முழுக்க ஆட்கள். ஆண்கள், பெண்கள், சிறுமிகள், பொடிசுகள் என்று கலர் கலரான டிரஸ்க ளோடு... ஒரே கோலாகலம். குதூகலக் கூப்பாடுகள்.

அந்தக் கடைக்கும், இந்தக் கடைக்குமாக ஓடித் திரிகிற சின்னஞ்சிறிசுகள். உற்சாகச் சிறகடிப்புகள்.

பஜ்ஜியை ஆவல்ஆவலாய் பிய்த்துத் தின்கிற மகளைப் பார்க்கிற ஆவுடைக்குள் கோபமும் கடுப்பும். 'விருந்தாடிகளுக்கு முன்னால் பஜ்ஜி கேட்டு அசிங்கப் படுத்திட்டாளே' என்ற எரிச்சல். ஆனாலும் அறிமுகத் தில் காட்டாமல் மதினியுடன் சிரித்தமுகம் காட்டிப் பேசுகிற ஆவுடை.

மதினியைச் சுற்றிலும் பஸ்ஸேற வேண்டிய சக விருந்தாடிகள். வைகாசி மாத வெய்யில் தோலைக் கருக்கி உரிக்கிறது. வரிசையாக இருக்கிற வேப்ப மரங்கள். சிதறிவிழுந்த சில்லரைக் காசுகளாக வேப்ப மரத்து இலைகளை ஊடுருவி மண்ணில் விழுந்து கிடக்கிற சூரியத்துளிகள்.

ஊர் பூராவும் பாதை நெடுகிலும் கட்டியிருந்த டியூப்லைட்களைகழற்றிக்கொண்டே வருகிற மைக்செட் காரர்கள். சீரியல்பல்ப் ஒளியலங்காரமாக வானுயரத்துக்கு நின்ற அம்மன், இப்போது வெறும் மூங்கில் தப்பைக ளாக... அதை ஒவ்வொன்றாகக் கழற்றி இறக்குகிறார்கள்.

பதினைந்து நாட்களுக்குமுன்பே பொங்கல் சாட்டி விட்டார்கள். சக்தி மாரியம்மன் கோவில் திருவிழா, வைகாசி 3, 4, 5 தேதிகளில் என்று.

அப்போது ஆவுடை கையில் இருந்தது வெறும் எழுநூறு ரூபாய்தான். கோவில் வரியே அறுநூறு ரூபாய். சரியாப்போச்சு. வீடுவெள்ளையடிக்கணும்; போனது வந்ததுகளை சரிபார்க்கணும். வீட்டாள்களுக்கு புதுத் துணிமணிகள் எடுக்கணும். பலகாரம் பச்சடி செய்ய ணும். கடாக்கறிக்குச் சொல்லணும். நாட்டுக்கோழிகள் ரெண்டை வாங்கிக்கட்டிப்போடணும். விருந்தாள் களுக்கு வரச் சொல்லி அழைப்பு விடணும். மாவிளக்குப் போடணும். பொங்கல் வைக்கணும். முளைப்பாரி போடணும்.

இம்புட்டுக்கும் பணம் வேணும்.

எம்புட்டு'ணும்'கள். மலைக்க வைக்கிற'ணும்'கள். ஆயாசப்படுத்துகிற'ணும்'கள். மனசைப்போட்டு அலைக்கழிக்கிற'ணும்'கள்.

ஆவுடை பெருமூச்சு விட்டாள். பிறந்தது முதல் உழைப்பு. பாடு, பாடு என்று பொழுதுக்கும் பாடு. வருஷம் முழுக்க பாடு. பாடுபட்டு பாடுபட்டே

வளர்ந்திருக்கு. வாழ்ந்திருக்கு. கல்யாணம் முடித்து, குழந்தை பெற்று, வீடுகட்டியிருக்கு.

பாடுபட்டு பாடுபட்டு உலகத்தையே அழகுபடுத்த முடிஞ்சிருக்கு. ஊர்த்திருவிழாவை சமாளிக்கமுடியாதா என்ற முரட்டுத்தன்னம்பிக்கை. வியர்வைக்கேயுரிய வைராக்யம். சூர்ய வைராக்யம்.

வந்து அமுக்கிய கவலையை உதறியெறிகிற ஆவுடை. ''அம்மன் வழிகாட்டாமலா போயிருவா?'' என்று நம்பிக்கையுடன் முணுமுணுத்துக்கொண்டாள்.

சாயங்காலம் திருவேங்கடம் மினிபஸ்ஸில் ஏறினாள். சுண்ணாம்பு வாங்கிக்கொண்டு வந்தாள். ராத்திரி எட்டுமணியிருக்கும், பரமுவரும்போது.

அவன் ஃபயர் ஆபீஸில் வேலை. ''என்ன... உங்க ஆபீஸ்ல அட்வான்ஸ் ஏதாச்சும் கேட்டுப் பாக்க முடியுமா?''

''கோவில் திருவிழாவைச் சொல்லி... கண்ணைக் கசக்கணும். ஏதாச்சும் பெயர்ந்தாலும் பெயரும்.''

''வாங்கிரலாம். செலவழிச்சிரலாம். சம்பளத்துலே கழிக்குறப்போ... கைச்செலவுக்கு வறட்டிழுப்பாகும்.'.

''ஆகத்தான் செய்யும். மாவு குறையாம பணியாரம் வருமா? மத்தசெலவுக்கு என்ன செய்யப்போற?''

''ஏதாச்சும் செய்யணும். ஆத்தாதான் வழிகாட்டணும்''.

ஆவுடைக்குள் நம்பிக்கையிருந்தாலும், அதையும் மீறிக்கொண்டு சஞ்சல நினைவுகள். 'என்ன செய்ய, எது

செய்ய' என்ற கவலைகள். 'யாரிடம் போய், என்ன கேட்க' என்ற குழப்பங்கள். நினைக்க நினைக்க மனசைச் சூழ்கிற இருட்டுக் காடு.

''வர்ற ஞாயித்துக் கெழமை லீவ்தானே?''

''ஆமா...''

''அன்னிக்கு நாம ரெண்டுபேரும் சேர்ந்து வெள்ளையடிப்பை முடிச்சிருவமா?''

''ம்''

பரமு பாட்டாளி. சொன்னதைச் செய்வான். சுயமாக எதுவும் செய்யத் தெரியாது. வீட்டு நிர்வாகம் பூராவும் ஆவுடைதான். பரமு எதிலும் நெஞ்சைக் காட்டுவ தில்லை. தலையிடுவதேயில்லை.

ஆபீஸிலும் வெளியிலும் பரமுவை இதற்காகவே கேலிபண்ணி மூக்கை உரிப்பார்கள்.

''என்ன, ஆவுடை கட்டுன தாலியை காணலே?'' என்று அக்கறையாய் ஒருத்தன் கேட்டால், 'கே' என்று ஒரே சிரிப்பாணிக் கூத்து.

இது மாதிரி நக்கல் நையாண்டிக்கெல்லாம் அசைந்துக் கொடுக்கமாட்டான். பொருட்படுத்தவும் மாட்டான். தினசரி யாராவது சிலர் பாடாய்படுத்தத்தான் செய்வார்கள். அவர்களும் விடமாட்டார்கள்.

பரமுவால் அட்வான்ஸ் தொகை ஐநூறுதான் வாங்க முடிந்தது.

கையில் மடியில் கனமாக பணம் வைத்திருப்பவர் கள் ஜவுளிவாங்க இராஜபாளையம், சிவகாசி என்று

பஸ்ஸேறி பயணம் போகிறார்கள். திருவேங்கடத்திற்குப் போய் துணிமணி வாங்குகிறவர்களும் உண்டு.

இதற்கெல்லாம் ''ஐவேஸ்'' வேண்டும். கையில் பசை இருக்கணும். ஆவுடைக்கும் ஆசைதான். யோக மில்லையே. அதற்காக ஊர்க்காரர்கள் மத்தியில் பொங்கலும் பொழுதுமாக புதுசு உடுத்தாமலிருக்க முடியுமா?

உள்ளூரிலேயே மடத்தில் ஜவுளிக்கடை இருக்கிறது. சுமாரான சின்னக்கடை. என்ன செய்ய? ஏழைக்கேத்த எள்ளுருண்டை.

போய் கடை வாசலில் நின்றாள், ஆவுடை. வந்து நிற்கிற பாவனையிலேயே கடைக்காரர் 'உள்க்குட்டு' உணர்ந்துக்கொண்டார். முகம் சுண்டினார்.

''என்னம்மா... நம்ம பாக்கியை அப்படியே போட்டுட்டியே...''

''தாரேன் அண்ணாச்சி. ஒங்களுக்கு முன்னூறு ரூவா தரணும். அயத்துப் போகலை.''

''கைவந்து சேர்ந்தாத் தானே, காரியத்துக்கு ஆகும்?''

''ஊர்த்திருவிழா சாட்டியாச்சு. எல்லாரும் துணிமணி எடுக்க வெளியூர் போறாக, பெரிய கடைகள்லே போய் நெனச்ச டிசைனை எடுக்கலாம்...னு போறாக. நா எதுக்கு உள்ளூர் அண்ணாச்சி தான் முக்கியம்னு வந்து நிக்கேன்?.'' இவளும் எதிர்பாணம் விட்டாள். ரெண்டு பேரும் இப்படியே... அவரவர் குறிதப்பாமல்... வாக்கு வார்த்தை சாமர்த்தியமாக- சாகசமாக நடத்தி....

வாய்த் தள்ளுமுள்ளு வார்த்தைச் சாகசம்

பழைய பாக்கியாக இருந்த மூந்நூறு ரூபாயை வரவு வைத்துவிட்டு... புதிதாக ரெண்டாயிரத்து நானூறுக்கு சரக்கு போட்டாள். அதிலும் முந்நூறு ரூபாயை வரவு வைத்து விட்டு....

கோவில் திருவிழாவை கொண்டாடி முடித்து விடலாம். இவ்வளவு பெரிய தொகையிலான கடனை எப்படி அடைப்பது? கூலி வேலை பார்த்து குடும்ப வயிறு நனைக்கிற ஆவுடைக்கு இது பெரியசுமை யல்லவா? குருவிதலைப் பனங்காய்தான்.

ஆவுடைக்குள் அடிமனசில் இந்த எறும்பு நினைவு ஊர்ந்தாலும்... மேல் மனசில் ஒரு ததும்பல்.

காடுகரைக, சொத்துசுகம் வைச்சிருக்கிற நம்மளை மாதிரி, ஏதுமற்ற ஏழைச்சிறுக்கி ஆவுடையும் பொங்கல் கொண்டாடிரமுடியுமா? புதுத்துணி, கறிபுளி, பலகாரம் பச்சடி என்றும் எல்லாம் செய்ஞ்சிரமுடியுமா? ஏலுமா'ன்னு எக்காளமும், எகத்தாளமுமா நெனச்சுக்கிட்டிருக்கிற ஊர்ச்சிறுக்கிக கண்ணுமுன்னாடி... நின்னு காட்டிர லாமே! நிமிர்ந்து நிக்கலாமே... நானும் சளைச்சவ இல்லே, இளைச்சவ இல்லேன்னு சமதையா பொங்கல் கொண்டாடிக் காட்டிரலாமே...

ஆவுடைக்குள் ரெக்கை முளைக்கிற சந்தோஷமனசு. ஏழ்மையின் அவமான அசிங்கத்திலிருந்து தப்பித்துக் கரையேறிவிட்டோமே என்ற பெருமிதம். ரெண்டு கையிலும் ஜவுளிப்பைகள். சேலையும், வேட்டியும் சட்டைத் துணிகளும், பிள்ளைகளுக்கான துணிமணி

களும் உள்ள பைகள். மனசுக்குப் பிடித்தமான நிறங்கள். கௌரவத்தை நிலைநாட்டுகிற தரம்.

ஆவுடை ரெண்டு கைகளிலும் பை தொங்க.... ரெண்டு பக்கமும் பார்வையை எறிந்துகொண்டு, மகாராணிக்குரிய மனத்ததும்பலுடன் நடந்தாள்.

முத்தையா நாடாரிடம் ரெண்டு கிலோ கடாக்கறிக்கு சொல்லிவிட்டாள். வீட்டிலேயே ்கோழிகள் கிடக்கிறது.

ரெண்டு சேவலையும், மேற்கொண்டு திரிகிற நாலு கோழிகளையும் விலைக்குப் போட்டால்... கடை கண்ணியில் கறிமசால் சாமான் கதை முடிந்து போகும்.

அப்புறமென்ன...

மலைப்பாறையாக போட்டு கனத்துக்கொண்டிருந்த கவலைகள் மாயமாக... மனசு இலேசாயிற்று. பொங்கலை கொண்டாடுகிற சந்தோஷத்தை பரிபூரணமாக அனுபவிக்கலாம், தடை எதுவுமில்லை.

ஆவுடைக்கு நிஜமாக பூரிப்பாக இருந்தது. தன்னாலும் இப்படி நிர்வாகம் செய்யமுடிந்திருக்கிறதே... பெண்ணாலும் நிர்வாகம் பண்ணமுடியும் என்று காட்ட முடிந்திருக்கிறதே...

அவளை நினைத்து அவளுக்கே பெருமையாக இருந்தது. பெண்மைக் கம்பீரம்.

ஊர் இந்த மூன்றுநாளும் ரெக்கைக் கட்டிப் பறந்தது. சொந்த பந்தங்கள் வந்துகுவிந்தனர். ஆவுடை வீட்டிலும் நிறைய ஆட்கள். பரமுவீட்டு வகையில்... இவள் வீட்டு முறையில்...

ஊர் முழுக்க டியூப்லைட்கள். ஒளிச்சிலையாக வானைமுட்டிய அம்மன் சீரியல். மூலைமூலைக்கு வரவேற்புப் பேனர்கள் டிஜிடலில். கூம்பு வடிவிலான பெரிய பெரிய குழாய்கட்டிய மைச்செட் முழக்கம். ஊரெல்லாம் நீர் தெளிப்பு. சுத்தப்படுத்தப்பட்ட தெருக்கள்.

முளைப்பாரி ஊர்வலம் கண்கொள்ளாக்காட்சி, ஆவுடையும் முளைப்பாரி போட்டிருந்தாள். முளைப் பாரி போட்டவர்களுக்கெல்லாம் கோவில் திருவிழாவுக் குழுவிலிருந்து புதுச்சேலை எடுத்துத் தந்திருந்தார்கள்.

கொட்டுமேளத்துக்கு மட்டும் எட்டாயிரம். ஊரையே அசத்திவிட்டது. சாமி ஊர்வலமும் சப்பர வருகையும்... மஞ்சள் தண்ணீர் ஊற்றிவிளையாடுகிற இளவட்டக் கூத்துக்களுமாக...

ஊரே... கொதிக்கவைத்த கோழிக்குழம்புச்சட்டியாக கமகமத்தது. ஆவுடைக்கு புதுச்சேலை ரெண்டாகிவிட்ட மகிழ்ச்சி. பரமுவுக்கு வேட்டிசட்டை. பிள்ளைகளுக்குத் துணிமணி.

வீடுநிறைய உறவுகள். மதினி, அத்தை, சித்தப்பா, சின்னாத்தா என்று ஏராளமான பாச உறவுகள். வீடு முழுக்க பிள்ளைகளின் ஓட்ட பாட்டம். உற்சாகப் பிரவாகம்.

தெருவெல்லாம் ஜனப்பெருக்கு. ஜனங்களின் முகமெல்லாம் ஒளிப்பெருக்கு. ஊரின் இண்டு இடுக்களில் கூட மின் விளக்குகள்.

மேடை, பெரிய மேடை. வண்ணமயமான ஒளி ஜாலத்துடன் நடந்த ஆடலும் பாடலும். கூத்தும் சிரிப்பு

மாக நடந்த பட்டிமன்றம். இப்படி நிறைய கலை நிகழ்ச்சிகள். எதைப்பார்க்க... எதை விடுவது?

மூன்று நாளும் கண்ணிமை மூடவில்லை. மூட மனசு வரவில்லை. ஊரோடு சேர்ந்து, கூடிக்கொண்டாடு கிற பரவசம். மனிதமுகங்களின் மகிழ்ச்சித் தேரோட்டம்.

சாமி கும்பிடுகிற பக்தியை விட... மனித உறவுகள் கூடிக்கலந்துக்கொண்டாடுகிற பண்பாட்டுப் பரவசமே கூடுதலாக இருந்தது. வருஷம் பூராவும் வறுமையுடன் வாழ்க்கையுடன்- நடத்தப்போகிற மல்லுக்கட்டுக்கான மனோபலத்தை சேகரித்துத் தருகிற பண்பாட்டு மனச்செறிவு.

ஆவுடை தரையில் கால் பரவாமல் மிதந்து வந்தாள். சிரிப்பும், பேச்சும், மகிழ்ச்சியுமாக கூத்தாடி வந்தாள். கும்மியடித்து மகிழ்கிற மனப்பரவசம்.

''பஸ்ஸூ வருது... பஸ்ஸூ வந்துருச்சு'' குழந்தை களின் கூட்டுக் கும்மாளக் கூச்சல் புழுதிப்படலமாக எழுகிறது. பேருந்து வந்து, வட்டமடித்து திரும்ப... மதினியோடு மற்ற உறவுக்காரர்களை பஸ்ஸில் ஏற்றிவிட்டு, பேச்சும், சிரிப்பும், விசாரிப்புகளுமாக கையசைத்து அனுப்பிவிட்டு...

ஆவுடை ஒரு மனத்ததும்பலோடு வீடு திரும்பினாள். மகளும் கூட வந்தாள். ரெக்கைக் கட்டி பறக்கிற மனப் பரவசம். தரையில் கால் பாவாத ஆனந்த மனப்பறப்பு.

டிஜிடல் பேனரை இளவட்டங்கள் கழற்றிக் கொண்டிருந்தனர். முத்தையா நாடார் எதிரில் வந்தார்.

''என்ன ஆவுடை, கறிரூவா நாளைக்குக் கெடைக் குமா?''

ரெக்கையில் அரிவாள் வெட்டு விழுந்த மாதிரி யிருந்தது. யதார்த்த மண்ணில் பதிக்கிற கால்.

''தாரேன்ண்ணாச்சி... இன்னும் ரெண்டு நாள்லே''

நா உலர்ந்து... வாய்வறண்டு... மனசு தடுமாறி... நிதர்சன வாழ்வில் முட்டி மோதிய அதிர்வில், கொண்டாட்ட மகிழ்ச்சி மாயமாகி...

ஜவுளிக்கடைக்காரர் மடத்தில் உட்கார்ந்திருந்தார். ''என்ன ஆவுடை, பொங்கல் கொண்டாடியாச்சா? ஒரே 'ஜேஜே'ன்னு ஊரே கூத்தாடுச்சே...''

''ஆமாண்ணாச்சி...'' அவளுக்குள் ஊர்கிற எறும்பு நினைவு.

''நம்மளை அயத்துராதேம்மா...''

''ஆட்டும்ண்ணாச்சி''

ஆவுடையின் ரெண்டாவது ரெக்கையிலும் அரிவாள் வெட்டு. சிறகிழந்து நிஜமண்ணில் சரிந்த வாழ்க்கைப்பறவையாக... ஆவுடை.

'கொண்டாட்டம் முடிஞ்சிருச்சு. இனிமே வருஷம் பூராவும் திண்டாட்டம்தானோ?'

அவளுக்குள் எறும்புக்கடிகளின் வலி. நிதர்சன வாழ்க்கை எறும்புகள்.

மகள் விரலைப்பற்றி பின் தொடர... வாழ்க்கை அவள் மனவிரலைப்பற்றி பின்தொடர்கிறது, காலத்தைப் போல.

செம்மலர்
ஜுலை 2008

★ ★ ★

5. அன்பு விதை

டிரைவருக்குப் பின்னால் மூன்றாவது வரிசையில் சீட் வேண்டும், எனக்கு. முதுகுத் தண்டுவடத்தில் பிரச்சனை. வேறு இடம் என்றால் விவகாரம்.

பயணம் முடிந்த நான்கு நாட்களுக்கு தோள்பட்டையிலும் முதுகிலும் வலி பின்னியெடுக்கும்.ள மேலிருந்து முழங்கை வரை உளைச்சல் குடைந்தெடுக்கும்.

நான் மைதானம் போய்ச் சேர்ந்தபிறகுதான் பஸ் வந்தது. ஆற அமர ஏறி, கச்சிதமான இடத்தில் உட்கார்ந்துக் கொண்டேன்.

இராஜபாளையம் போய்ச் சேர்ந்தவுடன் பஸ் மாறணும். தேனி போகிற பஸ்ஸில் ஏறணும். மூன்று மணிநேரப் பயணம்.

நினைத்தாலே மலைப்பாக இருக்கிறது. தொலை தூரம். நெடுநேரப் பயணம்.

அதிலும் மூன்றாவது வரிசையில் சீட் கிடைக்கா விட்டால், கதை கந்தல்தான். சீரழிந்த பிழைப்பாகி விடும்.

இராஜபாளையம் இறங்கியவுடன் நெடுநேரப் பயணத்துக்கு உடம்பைத் தயார் செய்தேன். தண்ணீர் குடித்து... ஒரு டீ குடித்து... பாத்ரூம் போய்விட்டு வந்து நின்றால்....

போடிக்குப் போகிற பஸ் புறப்பட்டு நகர்ந்து கொண்டிருந்தது. வண்டி ஏறக்குறைய நிறைந்திருந்தது. கடைசியில் மட்டும் ஏழெட்டு சீட்கள் கிடந்தன.

நான் திகைத்துத் தேங்கி விட்டேன். இராஜபாளை யம் பஸ்ஸ்டாண்ட், எப்பவும் கூட்டம் நெரிபடத்தான் செய்யும். ஜேஜே என்றிருக்கும்.

இன்றைக்கு... வழக்கத்தை விடவும் கூடுதலாக கூட்டம் நெருக்கமாக அலைமோதுகிற மாதிரியிருக் கிறது. எல்லாப் பஸ்களும் வந்து நின்ற மாயத்தில் கூட்டம் அப்பிவிடுகிறது.

பஸ் நகர்ந்த பின்பு... ஐந்தாவது நிமிஷத்தில் அடுத்த பஸ் 'தேனி' என்ற போர்டு மாட்டி வந்து நின்றது. 'மொளோர்' என்று கூட்டமாய் வந்து மோதுகிற மனிதர்கள்.

அடித்துப் பிடித்து நெருக்கி முண்டியடிக்கிற ஜனப் பேரலையில், நானும் மல்லுக்கட்டி தெல்லுத்தெறித்து... தத்திப்புத்தி ஏறிவிட்டேன்.

மூன்றாவது சீட்டில் பேக்கை வைத்து உட்கார்ந்து விட்டேன். ஜனங்களின் பரபரப்பு. ஆவேசத் துடிதுடிப்பு.

இடித்துப்பிடித்து ஏறுகிற அவசரம். வெளியிலிருந்து துண்டுகளை, பைகளை வீசியெறிந்து சீட் பிடிக்கிற மும்முரம். அலைய குலைய ஓடித்திரிகிற ஆட்கள்.

நான் என் சீட்டைப் பறி கொடுக்காமலிருக்க வேண்டும்.

''சார்... ப்ளீஸ், கொஞ்சம் மாறி உக்காருங்களேன்...'' என்று கைக்குழந்தையுடன் வருகிற பெண்மணியோ... கர்ப்பிணித் தாயோ வந்து கேட்டுவிட்டால், தர்ம சங்கடம்தான்.

''ஸ்பைனல் கார்டுலே ப்ராப்ளம்'' என்று சொல்லவாமுடியும்? சொன்னாலும், அது புரிந்து கொள்ளப்படுமா?

நல்லவேளை... இன்னொருத்தர் வந்து உட்கார்ந்து விட்டார். துணைக்கு.

வெள்ளைவேட்டி தும்பைப்பூ மாதிரி, சந்தனக் கலர் சட்டை. பவுடர் பூசிய சிவந்த முகம். நெற்றியில் பக்தி பூர்வமான பொட்டு. சந்தனப்பொட்டின் உள்பக்கம் குங்குமப்புள்ளி. அடியில் வெண்ணிற நீற்றின் கோடு.

''ஜன்னலோரம் நா உக்காந்துக்கிடட்டா?''

''ஏன்?''

''சும்மாதான்.. எப்பவாச்சும் சில சமயம் வாமிட் வரும்''

''அப்பச்சரி...''

அவர் நெளிந்து வளைந்து சப்பளித்து விலகி... ஜன்னலோரம் போனார். அவர் முகத்தில் புன்னகை

யொளி . உதட்டுக் கனிவான குறுநகையில் ஒரு நன்றி உணர்வு.

மூன்று பேருக்கான சீட்டில் நான் நடுவில் இருப்பதா? விளிம்புக்குப் போவதா?

கூட்டம் சள்ளை பறிகிறது. 'நா முந்தி நீ முந்தி' என்று ஒரே முண்டியடிப்பு. கூச்சலும் கூப்பாடுமாக சத்தக்காடு.

நிச்சயமாக ஸ்டாண்டிங் இருக்கும். விளிம்பில் உட்கார்கிறபோது... நிற்கக் கூட இடமில்லாமல் நெரி பட்டுச் சாய்கிற பயணிகளை இடதுதோளில் சுமந்து தீர வேண்டும். ''மேலே சாயாதீக'' என்று சொல்ல முடியாது.

வசதியாக உட்கார்ந்து வருகிறவர் நிற்கக் கூட இடமில்லாமல் திண்டாடித் திணறிச் சாய்கிறவரை ''சாயாதே மேலே'' என்று சொல்வது ரொம்ப ரொம்ப ஈனத்தனம். ஈரமில்லாத அநாகரிகம்.

நான் நடுவில் உட்கார்ந்து மடியில் எனது பேக்கை வைத்துக் கொண்டேன். என் பக்கத்திலிருந்த இடத்தில் ஒரு மனிதர் உட்கார்ந்தார். சுத்தமான பளீர் வெள்ளையில் வேட்டியும் சட்டையும். காலில் 'கட்ஷூ'. கையிலிருந்த கனத்த தோல்பையை காலுக்கடியில் வைத்துக் கொண்டார். பளிச்சென்றிருக்கிற முகத்தில் அன்பான புன்னகை நிரந்தரச்சுடராக ஒளிவீசியது. மேல் பையில் செல்போன் இருக்கிறதா என்று தொட்டுப்பார்த்துக்கொண்டார்.

கண்ணாடிக் கண்ணுக்குள்ளிருந்த ஏதோ ஓர் இனம் புரியாத புன்னகை... மனசுக்குள் வருடுகிறது. 'பார், பார்' என்று வற்புறுத்துகிறது.

நானும் அவர் முகத்தை நேருக்குநேராக பார்த்து, காரணமில்லாமல் சிநேகச்சிரிப்பு சிரித்தேன். சிரிக்கத் தோன்றுகிறது. அவருள் சுபாவமாக நல்லுணர்வு, நரம்புரத்தமாக ஓடிக்கொண்டிருப்பதை... கண்களின் அமைதியான ஒளி உணர்த்துகிறது.

அவருடன் பேசவேண்டும் எனத்தோன்றுகிறது. ஆனால், ஏதோ ஒரு மனத்தடங்கல். முன்னப்பின்னே அறிமுகமில்லாதவரிடம் வந்து உட்கார்ந்தவுடன் பேசத் துவங்குவது செயற்கையாக இருக்கும்.

அவரே கூட வெறுப்பில் முகம் சுளித்து விடக்கூடும்.

சீல்த்தூரை (ஸ்ரீவில்லிபுத்தூர்) பஸ் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

''எதுக்கு மடியிலே சுமக்கணும்? பேக்கை மேலே வைச்சிரலாமே''

குரலின் அமைதியில் மென்மையான பண்பு.

''பரவாலே... இருக்கட்டும்'' என்கிறேன்.

''நீங்க என்ன தேனியா?''

'உங்க சொந்த ஊர் தேனியா என்கிறாரா' என்கிற மெல்லிய குழப்பமும், திகைப்பும் எனக்குள்.

''தேனி இல்லே... இங்கதான் பக்கத்துக் கிராமம். மேலாண் மறைநாடு''.

அவர் கண்ணில் சுருக்கம். பதிலின் குழப்பம்.

''தேனிக்கு ஒரு நிகழ்ச்சிக்காக போய்க்கிட்டிக்கேன்'' என்று தெளிவாக்கினேன்.

''அடடே... அப்படியா!''

''நீங்க?''

''நா... இதே ஊருதான். ராசபாளையம். தேனிக்குப் போறேன்...''

''பஸ்லே... வழக்கத்தை விட கூட்டம் ஜாஸ்தியா யிருக்கே...?''

''இன்னிக்கு முகூர்த்த நாள்லே? அதான்''

கிருஷ்ணன் கோவிலில் ஸ்டாண்டிங் ஆகிவிட்டது. அவர் பக்கத்தில் நிற்கிறவர்களுக்கெல்லாம் நிஜமாகவே இரக்கப்பட்டார்.

''தொலைதூரப் பயணமாக இருக்கே.... இல்லேன்னா... எந்திச்சு, எடம் குடுத்துரலாம்'' என்று அடிக்கடி முணுமுணுப்பது, செயற்கையான பாவ்லா அல்ல; மன அன்பின் தூய வெளிப்பாடு. தர்ம சங்கடத்தில் இருப்புக் கொள்ளாமல் தத்தளித்தார்.

''இங்க நின்னுக்கோங்க...'' இப்படி பையை வைச்சுக்கோங்க...'' ''இங்க கம்பியை நல்ல புடிச்சுக் கோங்க'' என்று எந்நேரமும் அவர்களுடன் இங்கிதமாக பேசிக் கொண்டே வந்தார். ஒத்தாசைத் தொனியிலான உபசரிப்புக் குரல். குரலில் ஒரு குழைவு. கனிவு. செயற்கையற்ற இயல்புத் தன்மை.

டி.கல்லுப்பட்டி தாண்டுகிற போது, கூட்டம் புளிச்சிப்பம் மாதிரி கிட்டிக்கப்பட்டிருந்தது. ஆணும் பெண்ணும் பேதமில்லாமல் சிரமப்பட்டனர். புதுச் சேலையின் சரசரப்புகளும், வெயில் வேக்காடுகளுமாக

ஒரே வியர்வை நசநசப்பு. கால் வைக்கக் கூட இட மில்லாத தவிப்பு...''

''ஏய்க்... கால்லே மிதிக்காதே...''

''ஆத்தாடி... சாய்ஞ்சிக்கிட்டே வந்து அமுக்குனா, எப்படி?

''கம்பியாச்சும் புடிக்க எடங்குடுங்க... பாதகத்திகளா...''

அந்தி நேர ஆலமரத்து மைனாக்களாக ஒரே சத்தக் காடு. வலி நிறைந்த கூவல்காடு. சதையோடு சதையாக அப்பிக்கிடக்கிற அந்த நெருக்கடியிலும், சதையை பிய்த்துக்கொண்டு ஊடுருவி வருகிற கண்டக்டர். டிக்கட் வாங்க அவர் படுகிற பாடுகள்.

இதைப் பார்க்கவே எனக்கு பரிதாபமாக இருந்தது. மனசுக்குள் வலி.

போதிய பஸ்கள் விடாத சர்க்கார். பயணங்களையே நரகாவஸ்தையாக்குகிற கசப்பான அனுபவம்....

நினைக்க நினைக்க எரிச்சலாக இருக்கிறது. காணக் கண் சகிக்காத கொடுமையாக இருக்கிறது.

பேக்கிலிருந்து ஒரு புத்தகம் எடுத்தேன்.

பார்க்கச்சகிக்காத இந்த நரகாவஸ்தையிலிருந்து தப்பிப்பதற்கு ஒரே வழி, புத்தகம்தான். இப்போதைக்கு அதுதான் வசதி.

செ.திவான் எழுதிய ''சுதந்திரப் போரில் இஸ்லாமியர்கள் பங்கு'' என்ற சிறிய புத்தகம்.

சிறையில்வாடுகிற திப்புசுல்தானின் வம்சவாரிசுகள் பற்றி வாசிக்கிறபோது –

இவர் சேவையை நிறுத்தவில்லை. பக்கத்தில் நிற்கமுடியாமல் "S" வளைவாக நின்ற பெண்ணுக்கு ஆதரவுச் சொற்கள் கூறுகிறார். அவளது இடுப்பிலிருந்த மூன்றுவயதுக் குழந்தையை வாங்கி மடியில் வைத்துக் கொள்கிறார். பைச்சுமையையும் வாங்கி காலுக்கடியில் வைக்கிறார்.

பிள்ளையோ அம்மாவிடம் போக அடம்பண்ணி அழ... அழுகிற பிள்ளைக்கு பேனாவைக் கொடுத்து விளையாட்டுக் காட்டுகிறார். சாந்தப்படுத்துகிறார்.

வாசலை ஒட்டி நிற்கிற இன்னொரு சுடிதார்ப் பெண்ணுக்காக பதறிப் பதைக்கிறார்.

''எம்மா... தாய், வாசலோரம். ஜாக்கிரதையாயிரு. இங்குட்டு வந்துரும்மா...''

வியர்வையில் நசநசத்து... காற்று இல்லாத இறுக்கத்தில் மூச்சுத் திணறித் தவிக்கிற ஆட்களைப் பார்த்து மன அலைபாய்வோடு புலம்புகிறார்.

''இறைவா... ஆண்டவரே... ஆறுதல் தாரும்'' ஜன்னலோரத்தில் உறங்கிக் கொண்டே வந்தவர், என் புத்தகத்தைப் பார்த்தார். கண்ணில் துல்லியமாக வெளிப்பட்ட வெறுப்புணர்வு. முகச்சுளிப்பில் சந்தனப் பொட்டு நெரிபட்டு... ஒற்றை இணுக்கு உதிர்ந்தது.

''நீங்க... ராவுத்தமாரா?''

''இல்லே...''

''இந்துவா...?''

''ம்''

''அப்புறமெதுக்கு இப்படி புத்தகமெல்லாம் வாசிக்கிறீக?''

''எல்லா மனுசரையும் நேசிக்கிற இந்தியனாக வாழ்றதுக்கு''

''இந்தியாவைத்தான் இவங்க குண்டுபோட்டு தகர்க்குறாங்களே. பார்லிமெண்ட்லே குண்டு... ஆந்திரா வுலே குண்டு... எங்கப் பாத்தாலும் வெடிகுண்டு வெடிச்சு நாட்டையே நாசக்காடு பண்றாங்களே...''

''இவங்கன்னு சொல்றீகளே... இஸ்லாமியர்கள் எல்லாருமா?''

''ஆமா... எல்லாருந்தான். குண்டு வைக்கிறவங்க ளுக்கு மத்த ராவுத்தமாரு மறைமுக சப்போர்ட். தீவிரவாதம்தானே, நம்ம முன்னாடி பெருஞ்சவாலா நிக்குது.''

''ஊரே கூடி ஒத்தை வீட்டுக்காரன் வீட்டை அராஜ கமா இடிச்சு நொறுக்குனா... அந்த ஒத்தை வீட்டுக்கார வீட்டுப்புள்ளைகள்லே ஒருத்தன் அருவாளோட பாயத் தான் செய்வான். அதுக்கு வீட்டுக்காரனா பொறுப்பு?''

''பெறவு?''

''அராஜகம் பண்ணுன ஊருதான் பொறுப்பு''

''என்ன சொல்றீக?''

''சும்மா செவனேன்னு இருந்த பாபர் மசூதியை அநியாயமா இடிச்சாக... 'ஏன் இப்படி இடிச்சீக'ன்னு

கேட்ட ராவுத்தமாரு மூவாயிரம் பேரை கொன்னு சீரழிச்சாக. அவுகலூட்டு பொண்டு புள்ளைகளை ஈவு இரக்கம் பார்க்காம நாசக்காடு பண்ணுனது, அநியாய மில்லியா?''

''அப்ப... குண்டுவைச்சு கொல்றது, சரின்னு சொல்றீகளா?''

''சரின்னு சொல்லலே... மனுசக் கொலையே மாபாதகம்தான். ஆனா... சிறுபான்மையினரின் தீவிர வாதம்ங்குறது, பெரும்பான்மையினரின் அராஜகத்து னாலேதான் உருவாகுதுன்னு சொல்றேன்''.

சந்தனப் பொட்டுக்காரர் கோபம் கோபமாக பேசுகிறார். பேசுகிற உணர்ச்சி ஆவேசத்தில்... எச்சில் துளிகள் சிதறித் தெறிக்கின்றன. சத்தத்தை உயர்த்துகிறார். சண்டை மாதிரியான ஒரு தோற்றம் வருகிறது. ஒரு வெக்கை சுடுகிறது.

நாகரிகம் கருதி... நான் பேச்சை நிறுத்திக் கொண்டேன். இடதுபக்கத்தில் இவரைப் பார்த்தேன். இவர் எங்களது வாக்கு வாதத்தை துளிக்கூட பொருட் படுத்தாமல்... நின்று கொண்டு திணறித்தவித்து வருவோருடன்... பரிவுடன் பேச்சு குடுத்து... ஆறுதலாக பேசி... சிரமத்தை மறக்கடிக்கிற சேவையில் தீவிரமாக ஈடுபடுகிறார்.

ஜன்னலோரத்து சந்தனப் பொட்டுக்காரர் இன்னும் பேச்சைவிடவில்லை. உக்கிரமாகச் சீறிச்சினந்து, ராவுத்தமார்களைத் திட்டித்தீர்த்துக்கொண்டிருந்தார்.

நான் காதுகேளாததுபோல இவரையே கவனிப்பது போல பாவனை செய்தேன்.

ஆண்டிப்பட்டி வந்துவிட்டது.

''என்ன.... நீங்க இன்னும் சேவையை நிறுத்தலியா?'' என்று நான் விசாரித்தேன்.

''என்னத்துக்கு நிறுத்தணும்?''

''நீங்க நெசமாவே மனுசரை நேசிக்கிற பண்போட இருக்கீங்க...'' நெகிழ்ச்சியோடு நான்.

''குடுக்க குடுக்க கொறையாதது, அன்புதான். அந்த அன்பை செலவழிக்குறதுலே எதுக்கு கஞ்சத்தனம்?''

''அதுக்கு ஒரு மனசுவேணும்''

''அந்த மனசு உள்ளதாலேதான... நம்ம பேரு மனுசன்.''

சந்தனப் பொட்டு இன்னும் அனல்பறக்க, கனல் தெறிக்க, பேசிக்கொண்டே வருகிறார்.

இவர் மடியிலிருக்கும் பிள்ளையை இடம்மாற்றி அடுத்த காலில் வைத்துக்கொண்டு செல்போனை எடுத்தார்.

நம்பர் போட்டு காதோரத்தில் வைத்துக்கொண்டு காத்திருந்தார். ரிங்டோன் நின்றவுடன்.

''அலோ... கதீஜாவா? நாந்தாம்மா. ஆண்டிப் பட்டியை தாண்டி வந்துக்கிட்டிருக்கேன்... வாப்பா இருக்காரா? நா வர்ற வரைக்கும் வெயிட் பண்ணச் சொல்லு... மகமதுசஃபி இருக்கானா? இல்லையா?

பஜார்லேயா? போன் பண்ணி அவனை வீட்டுக்கு வரச்சொல்லு... இந்தா வந்துக்கிட்டிருக்கேன்...''

சந்தனப் பொட்டுக்காரர் 'கப்சிப்'பென்றாகிப் போனார். சற்றே வெலவெலப்புடனும் குற்ற உணர்ச்சியுடனும் இவரைப் பார்த்தார். என் முகத்தையும் தர்மசங்கடமாகப் பார்த்தார்.

எதையும் கண்டுக்கொள்ளாத அந்த மனிதர், இறங்குவதற்கான ஆயத்தத்திலும் நிதானம் சிதறாத புன்னகையுடன் இருந்தார்.

''வெறுப்பையும் பகையையும் விதைக்குறது வெடிகுண்டுகளைவிட ஆபத்தானது. அன்பையும் பாசத்தையும் பரப்புறது எல்லாருக்குமே பாதுகாப்பானது. இல்லியா? எல்லாப்புகழும் இறைவனுக்கே.''

ஒரு குழந்தையிடம் பேசுகிற மாதிரியான கனிந்த குரலில் கொஞ்சலுடன் கூறிவிட்டு அவர் எழுந்தார்.

இப்போதும்-

அவர் கண்ணாடிக் கண்ணுக்குள் அதே அன்பின் ஒளி.

சந்தனப் பொட்டுக்காரரை நிமிர்ந்து பார்க்க விரும்பாமல், நானும் புத்தகத்தை பேக்குக்குள் வைத்தேன். வாழ்க்கையைப் போல ஓடுகிற பஸ்.

'தங்கம்' மாதஇதழ்,
நவம்பர் 2007

★ ★ ★

6. மன உயரம்

“**யா**த்தா... மூக்காத்தா... ஒனக்கு போன் வந்துருக்காம். சைக்கிள் கடையிலே சொல்லுதாக”

நடுத்தெருவில் நின்று ஊருக்கே கேட்கிற மாதிரி கூவல்காடு போடுகிறான் முத்தன்.

“போனா...? எனக்கா? எனக்கு போன் பண்ற அளவுக்கு, சொந்த பந்தம் யாரு இருக்காக? நானே நாதியத்த சிறுக்கி.”

வியப்பும், புலம்பலும், துயரார்ந்த கசந்த மனசில் அங்கலாய்ப்புமாக ‘வேகு,வேகு’ என்று வேகமாக பாய்ந்து வருகிற மூக்காத்தா.

‘தன்னையும் ஒரு மனுசியாக மதிச்சு போன் பண்றதுக்கு ஆளு இருக்கா? அந்த மரியாதைனய தர்றதுக்கு நாதி இருக்கா? அந்த மரியாதையை பெறுவதற்கு தகுதி எனக்கு இருக்கா?

அவளையும் முந்திக்கொண்டு வேகமாகப் பாய்கிற நினைவுகள். குழப்பமும் திகைப்புமான நினைவுகள்.

''என்ன... மூக்காத்தா வெறிப்பாய்ச்சலா ஓடுதா? என்ன விஷயமாம்?''

''அவளுக்குப் போன் வந்திருக்காம்''

''பாரப்பா! இது என்ன கூத்து! யாருக்கு போன் வர்றதுன்னு ஒரு விவஸ்தையே கிடையாதா?''

''ஒத்தைரூவா இருந்தா... யாரு வேணும்னாலும் போன் பண்ணலாம். யாருக்குவேணும்னாலும் வரலாம்''

மூக்காத்தா நினைத்த மாதிரியே மடத்தில் உட்கார்ந்திருந்த ரெண்டு மூன்றுபேர் ஏளனமும், பரிகாச வியப்புமாக பேசி, கெக்கலிக்கிற சத்தரகளை.

அலையகுலைய பதற்றமும் பரபரப்புமாக ஓடிவருகிற மூக்காத்தாவை நிதானப்படுத்துகிற சைக்கிள் கடைக்காரர்.

''மெதுவா... வாம்மா... நீ வந்த பெறவுதான் போன்போடுவாக...''

ஓட்டத்தை நிறுத்தி நடைக்குவந்த மூக்காத்தா. நெஞ்சின் ஏற்ற இறக்கம். ஓடி வந்த மூச்சிரைப்பு. 'தஸ்ஸு, புஸ்ஸ்'ஸென்கிற சுவாசத்திணறல், முதுமைத் தளர்ச்சி.

நாலாதிசைகளிலும் ஓடிப்பாய்கிற நினைவுகள், 'துக்கச் செய்தி ஏதாச்சும் இருக்குமோ...' என்ற திசையிலும் ஓடித்திரும்புகின்றன.

சைக்கிள் கடையில்தான் அந்த மஞ்சள்நிறப் போன் பெட்டி தபால்பெட்டி மாதிரி சுவரோடு அப்பி நிற்கிறது. ஒத்தை ரூபாய் நாணயத்தைப் போட்டால், எங்கு வேண்டுமானாலும் பண்ணலாம், சில சமயம் அதிலேயே போன் வரவும் செய்யும்.

அந்தக் காலை நேரத்திலும் மூக்காத்தா முகத்தில் வியர்வைத் துளிகள். செவிரோமங்கள் நனைத்து இறங்குகிற வியர்வை வரிகள்.

இளைப்பும் களைப்புமாக விடைக்கிற நாசி நுனி. சட்டை இல்லாத திரேகத்தில், வாழ்ந்த நாட்களின் எண்ணிக்கையில் தோல் சுருக்கங்கள், கருத்த உடம்பில் முதுமையான தளர்வு. தொங்குகிற சதைகள். பாம்படம் இல்லாமல் நனைந்த சணல்கயிறாகத் தொங்குகிற செவிச்சதை. பாதி நரைத்த தலை. நீலநிறத்து அழுக்குச் சேலை.

மஞ்சப்பெட்டியையே பார்த்துக்கொண்டிருந்தாள் மூக்காத்தா. அவள் வியர்வை முகத்தில் நினைவுக் குழப்பம்.

சைக்கிள் கடைக்காரரிடம் கேட்கிறாள்.

''போன் பண்றவுக... இன்னார்னு சொன்னாகளா?''

''சுப்புலாபுரம் சுப்பம்மான்னு சொன்னாக...''

அவளுக்குள் இன்னாரென பிடிபட்ட தெளிவு. சட்டென்று கற்றையாக எழுந்த கசப்பான நினைப்பு. மூளைக்குள் தீப்பிடித்த மாதிரியிருந்தது.

'அவளா? அந்த நாய் என்னத்துக்கு போன் பண்ண னும்? அவ சங்காத்தமே வேண்டாம்னு அத்தெறிஞ் சாச்சே... இனி அவளோட என்ன பேச்சு?'

மூக்காத்தாவுக்குள் ஆங்காரமும் ஆத்திரமுமாய் மனத் தளதளப்பு. உலை பானைச்சோறாக கொதிக்கிற வெப்ப நினைவுகள். சுப்பம்மா என்றவுடன் மிளகாயை அரைத்து அப்பிய மாதிரி காந்தலெடுக்கிற மனசு.

அவா... செய்ஞ்சது அப்படி!

அக்காவின் ஒற்றை மகள். சுப்புலாபுரத்துக்கு வாழ்க்கைப்பட்டவள். அவள் கல்யாணத்துக்கு இவள் போயிருந்தாள்.

''மூக்காத்தா... எம்புள்ளைக்கு கல்யாணம் வைச்சிருக்கேன். வந்துரு...''

''இதைச்சொல்லணுமாக்கா? நம்ம புள்ளை கல்யாணம், நம்ம இல்லாமலா?''

''செய்ய ஆசை நெறைய இருக்கு. ஏஞ்சத்து இம்புட்டுத்தான். தப்பா நெனைச்சுக்காதே... ஒனக்கு ஒரு சேலை எடுத்து வைச்சிக்கேன்...''

''எனக்கெதுக்கு? சின்னஞ்சிறிசுகளுக்கு செய்ஞ்சு அழகு பாருக்கா...''

''இருந்தாலும், பொண்ணோட சின்னாத்தா, நீ. ஒனக்கு செய்ய வேண்டிய மரியாதையை செய்ய ணும்லே?''

அக்கா அசலான பாசத்தோடு கையைப் பிடித்துக் கொண்டு மருகினாள். கையை பற்றி வருடிய வருடலில்

அவளது வாஞ்சையும், நெக்குருகிப்போய் நிற்கிற நெகிழ்ச்சியும் தெரிந்தது. மூக்காத்தாவுக்கு அப்படியே பூரிப்பும், புளகிப்புமாக இருந்தது. நெஞ்சின் அடியாழத்தில் ஈரநதிப் பிரவகிப்பு.

''யக்கா... நீ இம்புட்டுச் சொன்னதே போதும்க்கா'' என்று நாத்தளுதளுத்தாள். மனசுகிடந்து பொங்கியது.

''சுப்பம்மாவுக்கு நா ஒரு சோடி கம்மல் வாங்கியா ரேன்...'' என்று பதில் மரியாதை பற்றியும் சொன்னாள்.

அப்படியே கம்மலோடு போனாள், மூக்காத்தா. கல்யாணம் எளிமையாக நடந்தாலும், சந்தோஷமாக நடந்தது. நாலுநாளும் கூடவே இருந்து, அம்புட்டு ஜோலிகளிலும் பங்கெடுத்துக் கொண்டாள் மூக்காத்தா. வேலைகளை இழுத்துப்போட்டுக் கொண்டு, ஓடிஓடிச் செய்த உரிமை. பாச உறுத்து.

அக்கா செத்த இழவுக்குப் போயிருந்தாள். மூணு நாள் கூடவேயிருந்து சுப்பம்மாவுக்கு ஆறுதலும் தேறுதலும் சொல்லிவிட்டு வந்தாள்.

சுப்பம்மாவை இவளும் மகள்போலத்தான் நினைத்தாள். பாசம் பாசமாய் நெகிழ்ந்து போய் பேசினாள். அடிக்கொரு தடவை ஊர்வழிபோய், தாயில்லாப் பிள்ளையாகிப் போன சுப்பம்மாவை பார்த்துப் பேசி, தைர்யம் சொல்லிவந்தாள்.

இவளுக்குச் சொந்தமான ஓடு போட்ட வீட்டையும், முக்கால் குறுக்கம் இறவைப் புஞ்சையையும் சுப்பம்மா வுக்கு தருவது என்று கூட யோசித்திருந்தாள்.

இவளுக்குப் பிள்ளையுமில்லை. குட்டியுமில்லை. சொத்தை வைத்து பரிபாலிக்க வாரிசும் இல்லை.

அதனால்தான் சுப்பம்மா முகத்தைச் சுளிக்க ஆரம்பித்தாளோ? வெறுப்பும் கசப்புமாக எரிந்து விழுந்தாளோ?

'புள்ளையில்லாத கெழடு. நாளைக்கு நோய்னு படுத்துட்டா... நாமதான், 'பீமோத்தரம்' அள்ள வேண்டியது வருமோ' என்று நினைத்திருப்பாளோ... அந்த நாற்றமெடுத்த சுமைக்குப் பயந்து, இப்பவே ஒதுக்குகிறாளோ?

போனால், வந்தால் பேச்சைக் குறைத்தாள் சுப்பம்மாள். எது கேட்டாலும், எம்புட்டுக் குழைவாகப் பேசினாலும்... ஒரு 'ம்'தான் பதில்.

சுப்புலாபுரம் போவதை, கொஞ்சகொஞ்சமாக நிறுத்தினாள் மூக்காத்தா.

அக்கா ஞாபகம் வந்து வந்து அலை மோதும். அழுகை அழுகையாக வரும். அக்கா எடுத்துத் தந்த அந்தக் கல்யாணச் சேலையை அப்பப்ப எடுத்துப் பார்ப்பாள். முகர்ந்து பார்ப்பாள். அக்கா வாசம் வந்து மனசைப் பிசையும்.

அண்டவுடாமல், ஒண்டவுடாமல் அடைக்கோழி மாதிரி 'உர்ர்ர்'ரென்று உறுமி விரட்டுகிற சுப்பம்மாவை யும் நினைப்பாள், பாசக்காரி மூக்காத்தா.

அக்கா மகளை நினைத்து நினைத்து அழுவாள்.

சுப்பம்மாவுக்கு ஒன்றுக்கு ரெண்டு ஆண்பிள்ளை கள் பிறந்தன. நிறைமாச கர்ப்பமாக இருக்குற போது,

''துணைக்கு வந்து கூடவே இருந்து, அடுப்பு வேலை செய்ய வரட்டா?'' என்று சைக்கிளில் வந்து ஜவுளி வியாபாரம் பண்ணுகிற சுப்புலாபுரம் முதலியாரிடம் சொல்லிவிட்டாள் மூக்காத்தா.

மூஞ்சியில் அடித்தமாதிரி 'வேண்டாம்' என்ற பதிலே வந்தது. ''யாரு தயவும் வேண்டாம். என்னைப் படைச்ச கடவுளே எனக்குத் தொணை''ன்னு சுப்பம்மா ரொம்பக் கோபத்தோட எடுத்தெறிஞ்சு சொல்லிட்டாம்மா'' என்று விலாவாரியாக விளக்கமாகச் சொன்னார் முதலியார்.

மூக்காத்தாவுக்கு மூக்கறுபட்ட மாதிரிஅவமானமாக இருந்தது. உட்கார்ந்திருந்த தனித்த பொழுதிலெல்லாம் நினைத்து நினைத்து அழுவாள். நிராகரிக்கப்படுகிற வலி.

இப்படி நிறைய்ய... நிறைய்ய்ய...

ஒரு சம்பவம்தான் மூக்கம்மாவையும் விறைக்க வைத்தது. வெறுக்க வைத்தது. முழுசாக முறிக்க வைத்தது.

சுப்புலாபுரம் ஊர்த்திருவிழா சாட்டிவிட்டார்கள். தேதி குறித்து, ஊர் சாட்டி, காப்பும் கட்டி விட்டார்கள்.

வேப்பங்கொழையும், கத்தரிக்காயும், இன்னும் பல தான்யப் பொட்டலமும் கோர்த்த கொச்சைக் கயிற்றை பாதையை மறித்து நாலு தெருவிலும் கட்டிவிட்டார்கள்.

மூன்று நாள் திருவிழாவின் நிகழ்ச்சிகளையும், கடாவெட்டுகளும், எல்லா வீடுகளுக்கும் ஏராள

ஊர்களிலிருந்து சொந்த பந்தம் வந்து குவிவதையும், வெள்ளையடிப்பும், விழா மும்முரமாய் ஊர் தடபுடலாவதையும், தேரோட்டம், முளைப்பாரி, சாமி ஊர்வலம் என்று நடக்க இருப்பதையும், மூன்று நாளும் வீடு தப்பாமல் பலகாரம் பச்சடி, கடாக்கறி சோறு என்று ஊரே மணக்கும் –

என்று சைக்கிளில் வருகிற ஜவுளி வியாபாரி முதலியார் பெருமைபொங்க... விளக்கி விளக்கிச் சொன்னார்.

சொந்த ஊர்த்திருவிழா என்ற பெருமிதமும் பூரிப்பும் பொங்கப்பொங்க அவர் சொல்ல சொல்ல... அதையும் ஒரு ரசிப்புடன் - ருசிப்புடன் சொல்ல...

மூக்காத்தாவுக்கு மனசுகிடந்து கூத்தாடியது. சிறுபிள்ளை மாதிரி மனசுகிடந்து குதித்தது. 'வரட்டா, வரட்டா' என்று நினைவு துடித்தது.

சுப்பம்மா வீட்டுக்கு விருந்தாடியாகப் போய், மூன்று நாள் திருவிழாவையும் பார்த்து ரசிக்கலாமே, ஆக்கி அவித்துப் போடுகிற பலகாரத்தை ருசிக்கலாமே என்று ஏங்கித் தவிக்கிற ஏழை மனசு. எதையும் நெகிழ்வாக எடுத்துக் கொள்கிற பாசமனசு.

''ஒங்க சின்னாத்தா ஊர்ப்பொங்கலுக்கு வரணும்னு ரொம்ப ஆசைப்படுதாள். வரட்டான்னு கேட்டு விட்டாள்னு போய்ச்சொல்லுதீராய்யா... மொதலியாரே.''

ஆசையிலும் ஆவலிலும் பூத்து விரிந்த கிழட்டு முகம் வெறும் காது ஆட, அவள் குதூகலக் கொந்தளிப்புடன் பேசுகிற பாச உணர்வு.

மறுவாரம் பதிலோடு வந்தார். அவருக்கே சொல்ல மனசு வரவில்லை. ஆசைப்படுகிற முகத்தில் காறித் துப்புவதா? பாசக்கார மனசில் தீக்கங்கை அள்ளிப் போடுவதா?

''என்ன சொன்னீகளாய்யா? அவா... என்ன பதில் சொல்லியனுப்பிச்சா?''

''நாங்களே காய்ஞ்சு கனல் பறந்துபோய்க் கெடக்கோம். கைக்கும் மெய்க்கும் காசு இல்லாம கண்ணுமுழி பிதுங்கிக் கிடக்கோம். இதுலே பொங்கலும் திங்களும் எங்குட்டுக் கூடி... கொண்டாட?''

முதலியாரின் அசைந்த உதடுகளில் சுப்பம்மாவின் வெறுப்பும் சிடுசிடுப்புமான குரல். தீக்கங்காக நெஞ்சைச் சுட்டுத் தகிக்கிற சொற்கள்.

மூக்காத்தாவுக்குச் செருப்பால் அடித்தமாதிரி இருந்தது. சீலையை உருவிக்கொண்டு தெருப்புழுதியில் உருட்டி விட்ட மாதிரி இருந்தது.

இப்படியொரு கொடிய நிராகரிப்பா?

மூக்காத்தாவுக்கு 'ச்சேய்' என்று வந்தது. உடைத்துக் கொண்டு பொங்கிப் பீறிட்டு வந்த அழுகையை அடக்கிக் கொண்டாள்.

'ச்சேய்... இந்தச் சிறுக்கி செய்ஞ்ச அவமானத்துக்கு அழுகக்கூடாது. அம்புட்டுக் கேவலமா நாம? பாசத்துக்கு இதுதான் பதிலா? ஆசைக்கு செருப்படியா பதில்? பொங்கலுக்கு வரட்டான்னு கேட்டவுளுக்கு, வெளக்க மாத்தடியா?''

அழுகக்கூடாது. கண்கலங்கக் கூடாது. நெஞ்சு உடையக்கூடாது. உறையணும். நெஞ்சுகிடந்து கல்லா இறுகணும். வைராக்யத்தில் பாறையாகணும். வெறுப்பிலும் ரோஷத்திலும் பாறையாகிற மனசு, தீப்பொறியா தெறிக்கணும்.

போதும். அக்கா மகள்னா, நம்ம மகள்ன்னு நெனைச்சு நெனைச்சு உருகிவழிஞ்ச மனசு இறுகிப் போகட்டும். அவளோட சங்காத்தமே வேண்டாம். ஒட்டும் வேண்டாம். ஒறவும் வேண்டாம். நல்லதுலே யும் கூட வேண்டாம். பொல்லதுலேயும் கூட வேண்டாம்.

மூக்காத்தா மனசு 'திகுதிகு'வென தீப்பிடித்து எரிந்தது. வேக்காடும் தீக்காடுமாக தகதகக்கிற நினைவுகள்.

சண்டாளக் கோபமும், சாபத்தெறிப்புமாக போய்... வீட்டுக்குள் நுழைந்தாள். ஏதேனும் ஓர் இழவு விழுந்தது போல... ஓர் உறவு கருகியதுபோல தலைமுழுகிக் குளித்தாள்.

இதெல்லாம் முடிந்து அஞ்சு வருஷம் பஞ்சாய் பறந்து போய்விட்டது.

இத்தனை காலம் கழித்து... இப்ப என்ன சுப்பம்மா? சின்னாத்தா யாவுகம் (ஞாபகம்) எப்படி வந்துச்சு? இந்தக் கிழட்டுச்சிறுக்கி இருக்காளா, செத்தாளான்னு பெரட்டிப் பாக்க ஆளத்துப்போயிருந்த எனக்கு... இப்ப என்னத்துக்கு அக்கா மகள்? அஞ்சு வருஷமா இல்லாமப் போன அக்காமகள்.

வருஷம் ஐந்தானாலும், மனாக்னி தணியவில்லை.

போன் மணி 'கிலுகிலுகிலு' என்று அடித்தது.

சைக்கிள் கடைக்காரர் தான் எடுத்தார்.

''ம்... உங்க சின்னாத்தா... மூக்காத்தாதான்... குடுக்கட்டா?'' என்றவர், மூக்கத்தாவிடம் நீட்டினார் ரிசீவரை.

''இந்தாம்மா... அப்படியே பேசு''.

''துட்டு போடணுமா?''

''அதெல்லாம் வேண்டாம். நீ பாட்டுக்குப் பேசு''

ரிஸீவரை கையில் தந்ததுடன், காதிலும், வாயிலும் பொருந்துகிற மாதிரி வைக்கவும் வேண்டிவந்தது. படபடப்பு.

மூக்காத்தா கை நடுங்கியது. முகத்தில் பதற்றம். குழப்பம். சகலத்தையும் மீறிய மனவன்மம். சுடுபட்ட ரணம்.

''யாரு... சுப்பம்மாவா?''

''யாரு... சின்னத்தாவா? நல்லாயிருக்கீயா?''

''ஏதோ... இருக்கேன்... சாமிபேரைச் சொல்லிக் கிட்டு, எங்க வீட்டுச் சோறைச் சாப்புட்டுக்கிட்டு... என்னத்தையோ நாளையும் பொழுதையும் ஓட்டுதேன்...''

''ஒம்பேரன்மாரு ரெண்டுபேரு. அஞ்சாப்பு ஒருத்தன். மூணாப்பு ஒருத்தன். முழுப்பரீட்சை லீவ். ஒரு மாசம் 'எங்காச்சும் சொந்தக்காரங்கவூட்டுக்கு ஊர்வழி விருந்தாடியா'ப் போகணும்னு ஆலாயப் பறக்குறான்க. என்னோட ஜீவனை நச்சரிச்சுப்புடுங்குறான்க.''

''ம்ம்... அப்படியா?''

''நா புகுந்த எடத்துலேயும் நாதியுமில்லே, நாத்தாங் காலுமில்லே (நாற்றாங்காலுமில்லை). பெத்தவளும் செத்துப் போய்ட்டா. பொறந்த வூட்டுச் சொந்தமும் யாருமில்லே, ஒன்னைத் தவிர...''

''ம்ம்ம்...''

''என்ன செய்ய, ஏதுசெய்றதுன்னு ஒரு எழவும் புரியலே. நாதியத்தவ வவுத்துலே பொறந்த புள்ளைகளுக்கு இந்த ஆசை வரலாமா? வந்துருச்சு... நா என்ன செய்ய?''

'நாதியத்தவா' என்ற அவலத்தொனியால் சொன்ன சுப்பம்மாவின் குரலில் அழுகைத் ததும்பல். ஒரு மெல்லிய விசும்பல்.

மூக்காத்தாவின் வேக்காடு, வைராக்யம், வெறுப்பு எல்லாவற்றையும் அடித்திழுத்துச் செய்கிற பாசப் பிரவாகமாக அந்த குரல் தளுதளுப்பு. இவளது ஈரக்குலை நடுங்கியது.

''எதுக்குடி நீ நாதியத்துப் போகணும்? குத்துக்கல்லு கணக்கா நா ஒருத்தி இருக்கேன்லே? சின்னாத்தாவும் பெத்தவா மாதிரிதாண்டி. எம்பேரப்புள்ளைக ரெண்டை யும் அனுப்பிவை. ஒரு மாசம் பூராவும் ஏங்கூட இருக்கட்டும். அந்த வைரக்கட்டிகளோட கூடியிருக்குற கொடுப்பினையை குடுத்தீயே... நீ மகராசியா நல்லா இருக்கணும்.''

ரிஸீவரைத் தொடுவதற்கு முன்பிருந்த பகையாத்மா விசும்பலைக் கேட்டவுடன் செத்துவிட்டது. மானுட

உணர்வின் பிரவகிப்பாக பொங்கிப் பூரித்துவிட்ட வேறொரு மூக்காத்தா. பாச ஆத்தா.

சைக்கிள் கடைக்குப் பக்கத்திலேயே ஊர் மடத்தில் இருந்த ஜவுளிக்கடை.

விருந்தாடியாக வருகிற பேரன்மாரை வெறுங்கை யாகவா அனுப்புவது? புதுச்சட்டைகள் எடுத்துத் தரவேண்டாமா?

''அய்யா... ஜவுளிக்கடைக்காரரே?''

''என்னம்மா?''

''அஞ்சாப்பு படிக்கிற பயலுக்கும் மூணாப்புப் படிக்கிற பயலுக்கும் கால்சட்டை, மேல்சட்டை இருக்கா?''

''இருக்கு.''

''சைஸ் சரியா வருமா?'',

''கச்சிதமா இருக்கும். அதுசரி, புள்ளைகுட்டி யில்லாத ஒனக்கெதுக்கு கால்சட்டையும், மேல்சட்டை யும்?''

''என்னோட பேரப்புள்ளைக ரெண்டு தங்கக் கட்டி வருகுதுல்லே? எம்மகா சுப்பம்மாவோட புள்ளைக.''

அவள் குரலில் பெருமிதமும், பூரிப்பும் பொங்கித் ததும்பியது. முகச்சுருக்கம் மறைந்து விட்ட மாதிரியோர் மலர்ச்சி.

நடந்தாள் மூக்காத்தா. வழக்கத்தை விட ரெண்டடி உயரமாகத் தெரிந்தாள்.

தாமரை,
ஜூலை 2008

✱ ✱ ✱

7. புறாச்சிறகு

உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓட்டமாய் ஓடுகிற மாடத்தி. ஓடுகிற வேகத்தில் காலடிப்பாவாடை 'சட் சட்'டென்று அடித்துக்கொள்கிறது. பதற்றமாய் திரும்பிப் பார்க்கிறாள். பிரம்பு ஒன்று காற்றைக் கிழித்துக்கொண்டு அந்தரத்தில் பறந்து வருகிறது. இவளைக் குறிவைத்து விரட்டி வருகிறது.

முதுகில் குத்திவிடுமோ... உடம்பைக் குடைந்து, நெஞ்சுவழியாக வெளிவந்து விடுமோ... தலைதெறிக்க ஓடுகிற சிறுமி மாடத்தி. நாவெல்லாம் உலர்கிறது. நெஞ்சு கிடந்து இளைக்கிறது. எலும்பு உருவிக்கொண்ட மாதிரி, தொடையெல்லாம் வலி.

வீடு... தெரு... ஓடை... காட்டுப்பாதை என்று வியர்க்க விறுவிறுக்க ஓடித் தவிக்கிறாள்.

''ஐயோ...ஐயோ...ஐயோ...'' என்று பதறித் துடிக்கிற பிஞ்சு மனசு. தப்பிக்க வழியே இல்லையா?

'ஏதோ ஒரு கிடங்கு எதிர்ப்பட.... தப்பித்தால் போதுமென்று அதில் குதிக்க... எதுவோ பெரீய்ய பாழ்கிணறு.

பகீரிடுகிற உள்மனசு. ''ஐயோ... செத்தோம்'' என்ற அலறல். கிணற்றுக்குள் விழுந்த மாடத்தி, விழுங்கிக் கொள்கிற தண்ணீர்... முடிவில்லாமல் உள்சரிவாக போய்க்கொண்டேயிருக்கிற மாடத்தி... பச்சைக் கண்ணாடித் திரையாக அடித்தண்ணீர்....

''ஐயோ...ஐய்யய்யோ... சாவுதான் எங்கதியா?''

''**ய**ம்மா... என்ற கதறலுடன் கண் விழிக்கிற மாடத்தி. அலங்கமலங்க பார்த்தாள். ஒருகாலை உள் மடக்காக மடக்கி, வலதுகாலை பின்பக்கமாக மடக்கி... குப்புற விழுந்து இடது முழங்கை ஊன்றிய நிலையில் இங்கிலீஷ் பாடம் எழுதிக்கொண்டிருந்தவள்... அப்படியே நோட்டின் மீதே விழுந்து உறங்கிய உறக்கத்தில் வந்த கனா. கனாவை நினைத்தாலே குலை பதறுகிறது. நோட்டைப் பார்க்கிறாள்.

நோட்டின் இருபக்கத்திலும் எட்டு வார்த்தைகள். பதினாறு வரிகளிலும் அதே வார்த்தைகளை எழுதணும்.

வீட்டுக்கணக்கு ஆறு. தமிழ்ப்பாடத்தில் ஒரு பாடத்தைப் 'பார்த்து' எழுதணும்.

''சனி, ஞாயிறு லீவ்.அங்க இங்க விளையாடப் போகாம ஒழுங்கு மரியாதையா வீட்டுப்பாடம் பூராவும் முடிச்சிட்டு வரணும். இல்லே...? ஏங்கிட்டே பிரம்பு இருக்கு. தொலி உரிஞ்சிரும்...'' கரகரத்த முரட்டுக்குரல்.

அஞ்சாப்பு சாரின் அதட்டல். மட்டியை கடித்துக் கொண்டு, கோபமுறைப்போடு பிரம்பை ஆட்டிக் காட்டிய விதம். ஏழாள் உயரக் கருப்பண்ணசாமி மாதிரி இருந்தது.

அஞ்சாப்பு சார்... ரொம்பக் கோபக்காரர். அவரது சிரித்த முகத்தை யாரும் பார்த்திருக்கமாட்டார்கள். சிடுசிடுத்த முகம், கடுகடுத்த பார்வை. ''அடியாத மாடு படியாது'' என்று அடிக்கடி சொல்வார். முணுக்கென்று கோபம் வந்தால்போதும், பிரம்பைத்தான் எடுப்பார். பிரம்பை ஆட்டுவார்.

''இங்க வா... மூதி...''

நடுங்கி முழிக்கும் பிள்ளை, நீர் கோர்க்கும் கண்கள், நெஞ்சு 'திக் திக்'கென்றாகும் பார்க்கிற பிள்ளைகளுக்கு. அடி உதட்டை அழுந்தக் கடித்து ஆங்காரமாய் விழிப்பார். பார்வையில் தெறிக்கிற கனல்.

''கிட்ட வா... சனியனே...''

உயர்ந்த ஸ்தாயியில் அதட்டல். நனைந்த சுண்டெலியாய் நடுங்கி நெருங்கும் பிள்ளையை, சுளீர்ரென்று சுழற்றியடிக்கிற அடி. ஓங்கிச் சுழன்ற பிரம்பின் அதிர்வுகள். பிள்ளை... துடியாய் துடித்தாலும் தீப்பட்ட மாதிரி துள்ளத்துடிக்க கதறும். மொத்த வகுப்பே கிடந்து நடுங்கி உறையும். எல்லா பிள்ளைகளின் உயிரும் உறைந்து இறுகும்.

இதே அடி நமக்கும்தானே... என்று கிடந்து மிரளும். மாடத்தி அடிவாங்காத நாளே கிடையாது. ஞாயிற்றுக்

கிழமைதாம் தப்பிப்பாள். அஞ்சாப்பு சார் அடித்தாலே தீப்பிடித்த மாதிரியிருக்கும். சுரீரென்று தோலை வெட்டி இழுக்கும். உயிரையே கிள்ளின மாதிரி துடியாய்த் துடிப்பாள்.

...ஒருநாள் கரும்போர்டில் BALU என்று பெரிய பெரிய எழுத்தாக எழுதிப் போட்டுவிட்டு....

''இதை யாருக்காச்சும் வாசிக்கத் தெரியுமா?'' என்றார். மாடத்திக்குள் ஒரு குதூகல ஊற்றுப் பீறிடல். துள்ளும் மகிழ்ச்சி நதி. ''பாலு'' என்ற பதில் இவளுக்குத் தெரியும். சொல்லப் பரப்பரக்கிற மனசு.

சாரின் பார்வை முத்துலட்சுமியிடமிருந்து தொடங்கியது. பார்வையின் இறுக்கம் ''உனக்குத் தெரியுமா?'' என்ற கேள்வி. பிள்ளைகளின் மௌனமும், கலங்கிய பார்வையும் ''இல்லை'' என்று பொருள். நகர்ந்து நகர்ந்து ஊர்ந்து வருகிற பார்வை.

''யாராச்சும் நமக்கு முந்தி சொல்லிருவாகளோ'' என்ற உதறலான முணுமுணுப்பு மாடத்திக்குள்.

மாடத்தி முறை வந்தது. முகமெல்லாம் பூத்துச் சிரிக்க... உற்சாகப்பெருக்கோடு, ''பாளு'' என்றாள்.

''எங்க...? இன்னொரு வாட்டி சொல்லு?''

''பாளு''

''சனியன்புடிச்ச உங்கக்கிட்டே தொண்டைத் தண்ணியை வத்தடிக்கேனே... அதான், பாழ்'' என்று கோபமும் ஏளனமாய் சொன்ன வாத்தியார்.

சுருங்கி ஒடுங்கிய அந்தச்சிறிய முகம். கருத்து சிறுத்த மாடத்தி முகத்தில் புரியாமை இருட்டு. மாடத்தியை

கடந்து போன வாத்தியார் பார்வை, இறுகலான பார்வை. ''அட, அறிவுகெட்ட மூதிகளா'' என்கிற ஏளனப் பார்வை.

எல்லாரிடமும் மௌனமே பதில். மறுபடியும் மாடத்தியிடமே நங்கூரமிட்ட பார்வை.

''பாளுவா...பாலுவா...?''

வாத்தியாரின் கேள்வி. இறுகலும் முறுகலுமான குரலின் கேள்வி.

மாலையை எதிர்பார்த்த பூமனசில் விழுந்த செருப்படி. பாராட்டை எதிர்பார்த்த அவளுக்கு துயரக்குழப்பம்.

இவள் மனசுக்குள் ''பாலு'' என்று நினைத்துக் கொண்டே ''பாளு'' என்று உச்சரிக்க...

''இங்க... முன்ன...வா''

பக்கத்தில் நெருங்குகிற பதற்ற அலைகள்.

''கையை நீட்டு.''

கண்கள் கலங்க... நெஞ்சு பதற... நீட்டிய கையில் சுழன்றடித்த ஒரு பிரம்படி. தீக்கங்கு வைத்த மாதிரி உள்ளங்கை காந்தியது. பிரம்படிபட்ட இடம் கன்றிச் சிவந்திருந்தது. வலி தாளாமல் கையை உதறுகிற மாடத்தி.

மற்ற எல்லாருக்கும் உள்ளங்கையில் மூன்று மூன்று அடிகள்... நோட்டைப் பார்த்தாள். ஏழு வார்த்தைகளையும் வரிசை வரிசையாக எழுதிவிட்டாள். இன்னும் ஒரெழுத்து. பதினாறு தடவை எழுத வேண்டும். உறக்கம் கண்ணைச் சொக்கியது.

சற்றுத் தள்ளி... குச்சியடுக்குற பார்வதி. அவளைச் சுற்றிலும் குவியலாகவும், சிந்திச் சிதறியும் குச்சிகள், மருந்து முக்காத வெறுந் தீக்குச்சிகள். மடியில் படுத்திருக்கிற சக்கை, பக்கத்தில் நிறுத்தப்பட்டிருந்த கட்டைகள்.

உள்ளூர் தீப்பெட்டியாபீஸ். பார்வதியே போய் தலைச்சும்மாடு வைத்து, அதன்மேல் பத்துக் கட்டைகளை படுக்க வைத்து சுமந்துவருவாள். மூன்று நடை. வீட்டி லேயே உட்கார்ந்து குச்சியடுக்குவாள். ஒரு கட்டைக்கு ஒண்ணரை ரூபாய், சின்னப் பிள்ளையிலிருந்து அடுக்கிப் பழக்கம். பார்வதிக்கு கை, மளமளவென்று வேலை செய்யும்.

இடது கையால் குச்சிகளை அள்ளி... மார்பில் ஒரு குத்து, குச்சிகள் வரிசைப்படும். மடியில் கிடக்கும் சக்கை யில் வலதுகை விரல்களால் குச்சிகளை சர்ரென இழுப் பாள். இடுக்குகளில் குச்சிகள் கச்சிதமாக படுத்துக் கொள்ளும். ஒரு சிறிய குலுக்கு. அப்படியே பூப்போல தூக்கி, கட்டையின் கம்புகளில் மாட்டிவிடுவாள்.

பேய் மாதிரி வேலை செய்வாள். புயலாக கைகள் செயல்படும். உட்கார்ந்த இடத்தைவிட்டு லேசில் எழ மாட்டாள். 'ஒன்றுக்கு', ரெண்டுக்கு'க்கூட ரொம்ப யோசித்துத்தான் எழுவாள்.

அப்படி வேலை செய்தால்தான் ஒருநாளைக்கு முப்பது கட்டை அடுக்க முடியும். குச்சியடுக்கிக் கொண்டே உறங்கி விழுகிற மகள் மாடத்தியைப் பார்த்தாள். பாவமாக இருந்தது.

''இன்னும் ரொம்ப எழுதணுமா?''

''இங்கிலீஷ்லே கொஞ்சம். தமிழ்லே ரெண்டு பக்கம்.'' ''அஞ்சாப்பு வாத்தியாரு அடி பின்னியெடுத்து வாரு. சாணி பிதுங்கிப் போகும்.''

''சரி சரி... அடுப்புலே கடுங்காப்பி கெடக்கு. சுட வைச்சி குடிச்சிட்டு... எழுது.''

''நீ எந்திருச்சு சுடவைச்சுத் தந்தா... என்ன?''

''கட்டையிலே குச்சியடுக்க.. ஒங்க அப்பனா வருவான்?''

''நீ என்னை எழுதவுட்டுருந்தா... நேத்தே எழுதி முடிச்சிருப்பேன்... 'குச்சியடுக்கு, குச்சியடுக்கு'ன்னு நீதான் என்னைப் பாடாய்ப்படுத்துனே?''

''திங்குறதுக்கும் உடுத்துறதுக்கும் வேணும்லே? பாடுபட்டாதான் பைசா பார்க்க முடியும்?''

குடிகாரப் புருஷன். எவனிடம் எங்கே பல்லை இளித்துக்கொண்டிருப்பானோ... குடித்துவிட்டு எங்கே மல்லாந்து கிடக்கிறானோ... அது பொறுப்போட அக்கறையோட பாடுபட்டு தினச்சம்பளம் கொண்ணாந்து குடுத்தா... நா இம்புட்டுச் சீரழிய வேண்டியதில்லையே...''

அடுப்புக்குள் கழிவுக்குச்சிகளை அள்ளிப்போட்டு, வாயாலேயே ''ப்பூ...'' என்று ஊதிப் புகையாக்கி, நெருப்பாக்குகிற பூஞ்சிட்டைப் பார்க்கிற பார்வதிக்குள் கவலைப் புகையாக நினைவுகள்.

வழக்கமாக முப்பது கட்டைகள் தூக்குகிற பார்வதி, சனி, ஞாயிறு வந்துவிட்டால் முப்பதெட்டு கட்டைகள் தூக்குவாள். இப்பவெல்லாம் அவளுக்கும் கைதேர்ந்து விட்டது. சனி, ஞாயிறு என்றால் மாடத்தி, இருபத்தைந்து ரூபாய்க்கு அடுக்கிவிடுவாள். மாசத்துக்கு ஐநூறு ரூபாய் வருமானம்.

அதனால்தான் அஞ்சாப்பு வாத்தியாரிடம் தினம் தினம் அடிவாங்க வேண்டியிருக்கிறது.

டம்ளரில் கடும்காப்பியை ஆற்றி ஆற்றிக் குடித்தாள். அம்மாவுக்கு அரை டம்ளரில் டீ தந்தாள். பக்கத்து வீடுகளில் 'கோலங்கள்' ஓடுகிற சத்தம். பார்வதிக்குள் மனச்சோர்வு. ஒரு டி.வி.நாடகம் கூட பார்க்க முடியாத விதியாகிப் போச்சு. மகள் தந்த டீயை ஒரே மடக்கில் முழுங்கிவிட்டு குச்சியடுக்குவதில் மும்முரமாகிற பார்வதி.

''யம்மா...கண்ணு... உக்காந்து வெருசா எழுதி முடி...''

''ஆட்டும்மா...''

அவளுக்குள் பிரம்பை ஓங்கி ஏழாள் உயரத்துக்கு வருகிற கருப்பண்ணசாமி.

பார்வதிக்குள் ஒரு சின்னக் கனவு. பன்னெண்டு வரைக்குமாச்சும் புள்ளையைப் படிக்க வைச்சிரணும். சுடிதார் போட்டுக்கிட்டு நம்புள்ளையும் ஏதாச்சும் ஒரு கம்பெனியிலே வேலைப்பார்க்கணும். மாசம் ரெண்டாயிரம் கெடைச்சாலும் போதும். கௌரவமான பொழைப்பாயிடும்.

ரெண்டு மாதம் போயிற்று. அரைப் பரீட்சை லீவ் வந்தது. பொழுதுக்கும் குச்சியடுக்கும்படி ஏவிய பார்வதி.

''கொஸ்டின் பேப்பரைப் பார்த்து நோட்லே எழுதிட்டு வரணும் இல்லே... தொலியை உரிச்சு தொங்கப் போட்டுருவேன்.''

அஞ்சாப்பு சாரின் அச்சுறுத்தலை சொல்லிச் சொல்லி அழுகிற மாடத்தி, ''யம்மா... எழுதணும்மா... இல்லேன்னா, அடி கொன்னுருவாரும்மா'' கெஞ்சிக் கெஞ்சி மருகினாள்.

''நாளைக்கு எழுதுடி. நாளையிலேருந்து கட்டாயமா எழுதும்மா. நாளையிலேருந்து சத்தியமா எழுதவுடு தேம்மா....''

இல்லாமையும் ஏழ்மையும் பார்வதியை பாடாய்ப் படுத்த... மாடத்தியை ஒவ்வொரு நாளாய் நகர்த்திவிட சட்டென்று வந்து நின்றது லீவ் முடிந்த பள்ளி நாள்.

''யம்மா... நாளைக்கு ஸ்கூல்''

மாடத்தியைவிட பார்வதியே ரொம்பப் பதறினாள்.

'அடப்பாதரவே... எம் புள்ளை அடிவாங்கிச் சாகுறதுக்கு நானே காரணமாயிட்டேனே... வேணும்னா செஞ்சென்? வவுத்துப்பாட்டு ஞாயம்... இப்ப என்ன செய்ய?''

''யம்மா... நா நாளைக்குப் போகலே, ஸ்கூலுக்குப் போகலம்மா''

''ஏண்டி?''

''எல்லோரும் எழுதிட்டு வந்துருப்பாக. நா மட்டும் எழுதாமப்போய் நிக்குறது, அவமானமா இருக்கும்.

கல்லெறிபட்ட புறாக்குஞ்சாக வாடி வதங்கி நிற்கிற மாடத்தியை பார்க்கப் பார்க்க... பெத்த தாய்க்கு குலைநடுங்கி வந்தது. ''ஐயோ.. ஐயோ என்று கிடந்து கதறியது. ஈரக்குலையே நடுங்கியது.

'இப்ப என்ன செய்ய.... என்ன செய்ய... என்ன செய்ய...'

தாய் மனத்தீவிரம், யோசனைத் தீவிரம், பரபரக்கிற தாய்ப்பாச நினைவுகள். 'ஒன்றுக்கு', 'ரெண்டுக்கு'க் கூட எழுவதற்கு தயங்குகிற பார்வதி, எல்லாவற்றையும் தூக்கிப்போட்டு விட்டு, விருட்டென எழுந்தாள். சேலையில் ஒட்டித் தொங்கிய குச்சிகளை தட்டி உதறினாள். சாயம்போன நைலக்ஸ் சேலை, அவளது வாழ்க்கையைப் போல நிறமிழந்து கிடந்தது.

''சாட்சிக்காரன்கிட்டே சீரழியுறதைவிட சண்டைக் காரன் கால்லே விழுந்துரலாம்'' என்று சத்தமாய் முணுமுணுத்த பார்வதியின் நடையில், தெருவே 'தக் தக்'கென அதிர்ந்தது.

அஞ்சாப்பு வாத்தியார் அவர் வீட்டு முற்றத்தில் நின்றார். ''நல்லவேளை. கும்புடப்போன தெய்வம் எதிர்ல வந்த மாதிரி தயாரா நிக்குறீக.''

''என்னம்மா...?''

''ஒங்களைப் பார்க்கத்தான் வந்தேன்... எங்க தலையெழுத்து. வறுமைப்பட்ட வரட்டிழுப்புப் பொழைப்பு. ... இப்படியாகிப்போச்சு எங்கதி. என் நச்சரிப்புலே குச்சியடுக்கிட்டா, எம்புள்ளே.''

சோகப்பதற்றத்தில் வருகிற சொல் தடுமாற்றம்.

''சொல்லும்மா... அழுகாமச் சொல்லு''

பரிவும் கருணையுமாக கனிந்த அவரது குரல். இவள் நடந்ததைச் சொல்லியழுதாள். பிழைப்பு ஞாயம்... மகள் பற்றிய கனவு... எல்லாம் வரிசை தப்பிய குழப்பத்துடன் சொல்லிச் சொல்லி அழுதாள். சொற்களுக்கு முந்துகிற அழுகையும், கண்ணீரும் அவளையே பரிதாபமாக நோக்கிய அவர்.

''சரி...சரி... புரிஞ்சுக்கிட்டேன். ஒம்புள்ளையை அனுப்பிவை, பள்ளிக்கூடத்துக்கு. நா... அடிக்கலே. தண்டிக்கலே போதுமா?''

''போதும் சாமி... அதுபோதும்'' அவள் முகத்தில் சிறிய வெளிச்சம். முந்திச் சீலையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். கையெடுத்துப் பலமுறை கும்பிட்டுவிட்டு, தெருவில் இறங்கிப் போகிற பார்வதி. அவளையே சோகத்துடன் பார்க்கிற அவருக்குள் மாடத்தி என்ற சிறிய புறாக்குஞ்சு.

'நாளைக்கு பள்ளி வருவா, மாடத்தி. ஆனா...?'

அவருக்குள் நொண்டியடிக்கிற நினைவுகள்.

'இவளோட ஏழ்மையும் இல்லாமையும் அந்தப் புறாக்குஞ்சை பள்ளியிலே பறக்கவுடுமா?'

அவரது சோகம் படிந்த சந்தேகம்.

அது வெறும் சந்தேகம் மட்டுமல்ல.

தி சண்டே இந்தியன்,
ஜுலை 2008.

✱ ✱ ✱

8. புனித வாசம்

ஏதோ வேற்றுச் சத்தம் கேட்டு முழித்தான் நடராசன். விடிவிளக்கின் மங்கலான பச்சை வெளிச்சம். எல்லாரும் உறங்குகிறார்கள். எங்கோ மயில்கள் கத்துகிற சத்தம். சிறகடிக்கிற சத்தம். பனை ஓலையின் சலசலப்பு. அடுத்த தெருவில் பொட்டை நாயை விரட்டுகிற ஆண் நாய்களின் உறுமல்கள்.

எல்லாச் சத்தங்களையும் விலக்கி ஒதுக்கிவிட்டு, மனசைக் கூர்மைப்படுத்தி, காதில் நிறுத்தி, நுட்பமானான். வேற்றுச்சத்தத்தைத் துல்லியப்படுத்துகிற முயற்சி.

'கீச்...கீச்...கீச்... ஹ்யா... ஹ்யா...'' என்ற மாதிரிமெல்லிய குரல். பூமிக்கே புதுசாக வந்த உயிரின் குரல்.

கோழி அடை கிடப்பது ஞாபகத்துக்கு வந்தது. 'அட... குஞ்சு பொறிச்சிருச்சா? முட்டையைப் பிளந்து

கொண்டு ஈரக்கொழ கொழப்புடன் முதல் குஞ்சு வந்திருக்கும். தலைப்பிள்ளை.

குஞ்சை வாஞ்சையுடன் அலகால் உருட்டி பக்கத்தில் இழுக்கும் கோழியில் பாச உறுமல்... 'ர்ர்ர்ர்.... ரூ...ர்ர்ர்...ரூ'.

கதவைத் திறந்தான். மாம்பலகைக் கதவு ஊதிக் கொண்டு வர மறுக்கிறது. வெடுக்கென்று இழுத்த பிறகு வந்தது. வெளியே வீட்டின் இடது பக்கம் தாழ்வாரம். கூரைச்சாய்ப்பு. அதற்கு அடியில் சிமிண்டுத் திண்ணை. திண்ணையின் அடிப்பாகம் முழுக்க கோழிக் கூடு. உள்ளேதான் பாதி உடைத்த வட்ட மண் பானையில் மணல் நிரப்பி, அதன் மேல் பதிமூன்று முட்டைகள் வைத்து... வசதி பண்ணிக்கொடுக்க, முட்டை மேல் 20 நாளாக படுத்தே கிடக்கிற கோழி. இரைபொறுக்காமல், ஊர் மேயாமல்... குலைப்பட்டினியாக பத்தியம் காக்கிற கோழி. வைராக்கியமாக பிரசவச் சுமையை சுமக்கிற கோழி. நாலு நாளைக்கொரு தடவை றெக்கையடித்துக் கொண்டு கூவலோடு வெளியே வரும். வெள்ளை வெள்ளையாக பீய்ச்சும். வெளிப் பானைத் தண்ணீரில், அலகை வைத்து, உறிஞ்சி, அண்ணாந்து நாலு மடக்கு குடிக்கும். அதுதான் உணவு.

'முட்டைகளை யாரும் களவாண்டு விடுவார்களோ' என்ற பயப்பாதையில் மிரட்டலான கூவலோடு றெக்கை யடித்து ஓடி வந்து, முட்டைமேல் படுத்துக் கொள்ளும். முட்டைகளை எண்ணிச் சரிபார்க்கிற மாதிரி, 'ர்ர்ர்ரூ ர்ர்ரூ' என்ற உறுமல்களோடு ஒவ்வொரு முட்டையாக அலகால் உருட்டி, உருட்டி... அடிமடிக்குள் வைத்துக் கொள்ளும்.

கோழியின் முகமே வெளுத்துப் போயிற்று. ரத்த சிவப்பான கொண்டை, நாடி, செவியெல்லாம் ரத்த சோகை வந்த மாதிரி வெளுப்பேறிப் போய் விட்டன. அரைச் சொருகலாக வட்டக்கண்.

'ஹ்யா... ஹ்யா...ஹ்யா... க்கீ...க்கீ...'' குஞ்சின் பிஞ்சுக்குரல். மனசே குதூகலப்படுகிறது. பார்க்க ஆசைப் படுகிற மனப்பரப்பு. கோழிக் கூட்டுக்குள் குனிந்து பார்க்க பயம். தயக்கம்.

'செல்லு வந்து அப்பிக்கொள்ளுமோ... உடம் பெல்லாம் அரிக்குமே...''

கண்ணுக்குத் தட்டுப்படாத பொடி சைஸில் வெள்ளைப் புள்ளியாக கோழிப்பேன். ஜீவன் செத்த அடைக்கோழிகளிடம் மட்டுமே இருக்கும். பார்த்த கணத்தில் வந்து அப்பிக்கொள்ளும். செவியோரங்களில் ரொம்ப அரிக்கும். தோல் சுருக்க மடிப்புகளுக்குள் ஊர்ந்து நகரும். அரிக்கும். சொறிய சொறிய உடம்பு தான் புண்ணாகும். அது, சாகாது. தேங்காயெண்ணெய் 'குளு...ரத்' தேய்த்தால்தான் அரிப்புமடங்கும்.

நடராசன் டார்ச் லைட்டோடு கூண்டுக்குள் குனிந்தான். ஊமத்தம் பூவைப்போல கோழிக்குஞ்சு பார்க்கப் பார்க்க லட்சணமாக இருக்கிறது. ஆசை ஆசை யாக இருக்கிறது. உருட்டிய பூப்பந்து போலிருந்தது. அதன் சிறு அலகு, நெல்மணிபோலிருந்தது.

இவனையே எதிரியாகப் பாவித்து ''க்க்ர்ர்ரு... க்க்க்ர்ர்ர்ரு...'' என்று பகை வெக்கையோடு உறுமுகிற தாய்க்கோழி. தாய்ப் பாச பயம். பாசக் கோபம். நல்ல சாதிக் கோழி. நாட்டுக்கோழி. இவன் தலையைக் கண்ட

தும், கோபப் பயத்தில் கொண்டை ரோமம் சிலிர்த்து, றெக்கைகள் புடைக்க, எல்லா ரோமங்களும் சிலிர்த்து... பயக் கூப்பாடாகக் கத்த ஆரம்பிக்க...

தலையை இழுத்துக் கொண்ட நடராசன். மூஞ்சி யெல்லாம் அப்பிய தூசிகள் நகர்கிற மாதிரியோர் கூச்ச உணர்வு. அப்பிக்கொண்ட செல். தேய்க்கத் தேய்க்க அரிக்கிறது. தாங்க முடியாத அரிப்பு.

''ம்ம்... சனிக்கிழமை... நல்லநாள்தான்... சனிப் பெருக்கு... மொதக்குஞ்சு.'' என்று முணுமுணுத்துக் கொண்ட நடராசன்.

முகத்தைக் கழுவி... உடம்பைக் கழுவி... துடைத்து, எண்ணெய் தேய்த்த பிறகும்... செவி மடிப்பில்-கண்ணோரத்தில்- செல் அரிப்பு.

தன் தலையைக் கண்டதும் மிரட்டலாய் உறுமிய கோழி. முட்டைகளையும், புது குஞ்சையும் கட்டிக் காக்கிற அக்கறை. அன்பில் துளிர்க்கிற கோபம். பாச ரௌத்ரம்.

நடராசன் ஆச்சரியமாக யோசித்தான். கோழிகிட்டே எம்புட்டுப் பாசமிருக்கு. பாசத்துக்காக தெனம் தவசம் போட்ட ஆளையே எதுத்துப் பாக்குற தீவிரம்... மனுசப் பாசத்தை விட... அசலானது!

அழுது சிணுசிணுங்கிற கைக்குழந்தையை இடுப்பில் வைத்திருக்கிற பார்வதி. அந்தச் சிணுங்கலை நிறுத்து வதற்கு படாத பாடுபடுகிறாள். ஒரு சீராக குலுக்கிக் கொண்டே... குழந்தையுடன் பேச்சு கொடுக்கிறாள். கவனத்தை அங்கும் இங்குமாய் திருப்புகிறாள். உலகை யும் உறவையும் கற்றுத் தருகிறாள்.

''டேய் டேய்... டேய்டேய்... இங்க பாரு... மரம்... மரத்துலே பாரு குருவி, அந்தா... மைனா, காக்கா, அய்க்...காக்கா பறந்து வருது பாரு... இங்க பாரு... மாமா... ஆச்சி... பாட்டையா... அட... இந்தா... மாடு... பசுமாடுடா''

பதினோரு குஞ்சுகளையும் கூட்டிக்கொண்டு வண்டிப் பாதைக்கு வருகிற கோழி குஞ்சுகள் தொடர் கின்றனவா என்று நின்று கவனிக்கிறது. ''கேர்...கேர்... கேர்...'' என்ற அழைப்புத் தொனியோடு முன் செல்கிறது. செவலை, கறுப்புக் குஞ்சுகளெல்லாம் வந்து விட்டன. ரெண்டு வெள்ளைக் குஞ்சுகள் மட்டும் பயமறி யாத இளங்குஞ்சாக ஆபத்தான இடத்தில் நிற்கின்றன.

'கேர்...கேர்...' என்று அதன் மொழியில் அதட்டு கிறது. கேட்டுக் கொள்ளாத சேட்டை மழலைகள்.

''இந்தா...வருது, குஞ்சைத் தூக்குற பருந்து'' என்கிற எச்சரிக்கை தருகிற தொனியில்... கழுத்தை உயர்த்தி நிமிர்கிற கோழி. 'ங்ங்ர்ர்ர் ங்ங்ங்ர்ர்ர்' என்று ஒரே இழுப்பான நீள் கூவல்.

பயந்தடித்துக்கொண்டு ஓடி வருகிற வெள்ளைக் குஞ்சுகள். ''வீயா...வீயா... வீயா...'' என்ற பயக் கூச்சலில் எல்லாக் குஞ்சுகளும் கூரை நிழலுக்கு பயந்தோடுகிற ஓட்டம்.

பயம்- சஞ்சலம்- தெளிந்த நிலையில், கம்பீரமாக நடந்து வருகிற கோழி. பிள்ளைகளை 'வழிக்கு' கொண்டு வருவதில் வெற்றி கண்ட பெருமித நடை.

கூரை நிழலில் கூட்டி ஒதுக்கப்பட்ட குப்பை, மழைத் தண்ணீரில் வந்து ஒதுங்கி,காய்ந்துபோன கம்மங்

கதிர்ச் சக்கைக் குவியல். குனிந்து கொத்துகிறகோழி. காலால் குத்திக் கிளறி, அலகால் கொத்துகிறது. தானியப் மணிகள் இருப்பதைப் பார்த்துக் கொண்டது. புதை யலைக் கண்ட குதூகலம். மனத்துள்ளல்.

'கெட்... கெட்... கெட்... கெட்..' கோழியின் வினோதமான கூவல். குஞ்சுகளைக் கூப்பிடுகிற குழைவுத்தொனி.

''வாங்கடா கண்ணுகளா... வந்து தின்னுங்கடா'' என்றழைக்கிற தாய்மைக் கனிவான கொஞ்சலழைப்பு.

பூப்பந்துகளாக 'குடு, குடு, குடு, வென்று ஓடி வருகிற குஞ்சுகள். வண்ணங்கள் வேற்றுமைப்பட்டா லும், ஈன்ற தாய் ஒன்று என்கிற ஒற்றுமையோடு ஓடி வருகிற பூங்குஞ்சுகள். கோழியின் காலைச் சுற்றி வந்து நின்று கொண்டு ''கீயா, கீயா, கீயா'' என்கிற பிஞ்சுகள், கொத்திக் காட்டும் இரையைக் கூட கொத்தித் தின்னத் தெரியாமல்... வெறும் கத்தலாகக் கத்துகின்றன.

கோழி 'ட்டக்..ட்டக்... ட்டக்' என்று குரல் மாற்றி கூவுகிறது. அலகால் ஒரு தானியமணியை கொத்தி... குஞ்சுகளுக்குக் காட்டி விட்டு... தவற விடுகிறது.

ஒரு குஞ்சு அந்தத் தானியமணியை சிறு மஞ்சள் அலகால் கொத்துகிறது. கொத்திய வேகத்தில் உள்ளே போய்விட்ட தானியம். குஞ்சுக்கு விக்குகிறது. சிறு கழுத்தை உயர்த்தி, நெளித்து... விழுங்க மாட்டாமல் திணறுகிறது. மற்ற குஞ்சுகளும் தானியமணிகளைப் பொறுக்குகின்றன.

குப்பைக்குமிகள்...கூளக்குமிகள் தேடித் தேடி... கிண்டிக்கிளறுகிற கோழி. ''நீங்களும் கிளறுங்க, செல்லங்களா...'' என்று கத்தும் குரலால் கற்றுத் தருகிற கோழி.

அழும்பிள்ளையை அமர்த்த முடியாமல் தத்தளிக்கும் அம்மாவை விட... இந்தக் கோழி, குஞ்சுகளுக்கு உலகை யும், உறவையும், உயிர் வாழும் முறையையும் நன்றாகவே கற்றுத் தருகிறது. நடராசன் கோழியையே கூர்ந்து கவனித்தான். உள்ளுக்குள் பூத்துச் சொரிந்த ஆச்சரியப் பூக்கள். நினைவிதழ் விரிப்புகள். பறவையிடம் கற்றுக்கொள்ள மனிதருக்கு நிறைய இருக்கத்தான் செய்கின்றனவா? கூடி வாழும் பண்பைக் காகத்திடம், கொண்ட லட்சியத்தில் குறியாக இருப்பதைக் கொக்கிடம், நன்றியை நாயிடம், நம்பிக்கையை யானையிடம், உழைப்பைக் காளையிடம் மனிதர்கள் கற்றுக் கொள்ளணுமா? பிராணிகள் மனிதருக்கு ஞானம் தரும் ஆசானா? நிசம்தானா?

நடராசனுக்குள் பூவாசமாகப் பரவிப் படர்கிற நினைவுகள். பார்வதியை நெருங்கினான், நடராசன்.

''தங்கச்சி, மாப்புள்ளே வூட்லே இருக்காரா?''

''அவர் எப்ப வூட்லே இருந்தாரு, அண்ணாச்சி?''

''பெறவு?''

''ஒலகத் தொழிலாளர்களே ஒண்ணு சேருங்கன்னு ஊரு ஊரா கத்துவாரு. கேட்டா... 'எல்லா மனுசரும் என் ரத்தம் தான். அவங்க கவலைங்க, ஏங்கவலைக'ம் பார்''

பார்வதி குரலில் பீறிட்ட சலிப்பும், கசப்பும்.

''எல்லா ஆம்பளைகளும் நாட்டைப் புடுங்கி வீட்லே போடுவாக. உங்க மாப்புள்ளே' 'நாடு, நாடு'ன்னு வீட்டைத் தொலைக்காரு...''

பார்வதியின் மன வேதனையும் சோகமும் குரலில் கசிகிறது.

'ஏண்டா... கேட்டோம்' என்றிருந்தது நடராசனுக்கு.

'என்னத்தையாச்சும் சொல்லிச் சமாளிக்கணுமே' என்று வார்த்தைகளை மனசுக்குள் தேடிப் பொறுக்கினான்.

''சரிசரி... பார்வதி, மாப்புள்ளை நீ நெனைக்குற மாதிரியில்லே. நல்ல புத்திசாலி. நல்ல மனசுக்காரரு. 'எல்லா ஊரும் நம்ம ஊரு. எல்லா மனுசரும் நம்ம ஒறவு'ன்னு சொல்லி வர்ற ஆதித்தமிழன் மனசை... இப்ப, நம்ம மாப்பிள்ளைதான் கொள்கையா வைச்சிருக்காரும்மா...''

''என்னமோ அண்ணாச்சி உங்க மாப்பிள்ளையை நீங்கதான் மெச்சிக்கணும்.''

குழந்தையும் கையுமாக அவள் நகர்ந்து செல்ல, அவளது விசும்பல் இவனுக்குக் கேட்கிறது. நடராசனுக்குள் பார்வதியின் கணவன்.

ஆச்சரியமான ஆளுதான். கூடப் பொறந்த அண்ணன் தம்பிக கூட... பங்காளிகளாக இல்லாமல், பகையாளிக ளாக இருக்கிற இந்தக் காலத்திலும்... சோமாலியா மக்கள் சோகத்துக்கு இந்த ஆளு வந்துருவாரு. குஜராத்தில் குத்துண்ட சிசுவுக்காக மனம் கொதிப்பாரு. வித்தியாசமான ஆளுதான்.

நடராசன் கோழியைத் தேடினான். மேற்கில் வேப்ப மரத்து நிழலில் நின்றது. கட்டற்று சுதந்திரமாக உலாவுகிற பூங்குஞ்சுகள்.

இவன் வைத்த கன்று. பார்த்துப் பார்த்து பாதுகாத்து வளர்த்த மரம். இன்றைக்கு மைனாக்கள், காகம், குயில்கள், குருவிகளுக்கு வாசஸ்தலமாயிருக்கிற வேப்ப மரம்.

வேப்ப மரத்தை நோக்கி மெல்லமெல்ல நடக்கிற இவனது மகன் செல்வம். மூன்று வயது முல்லை. கையில் ஒரு நீளக்குச்சியோடு தத்தித் தத்தி நடந்து போகிறான். தன் பிள்ளையின் தளிர் நடையை ரசித்துக் கொண்டேயிருந்த நடராசன்.

ஹைக்கூ கவிதைபோல நடக்கிற செல்வம். கால்முளைத்த கவிதை.

குச்சியோடு தத்திப்போன செல்வம், தன் குச்சியால் செவலைக் குஞ்சைத் துரத்தினான். 'வீயா, வீயா' என்று வீறிட்ட குஞ்சு. பயக் கத்தல்.

தூரத்தில் பழங்குப்பையை கிளறிக் கொண்டிருந்த சாம்பல் நிறக்கோழி. தன் குஞ்சின் வீறிடல் கேட்ட கணத்தில்—

றெக்கைகளை விரித்து மாரடித்துக்கொண்டே கோப மூர்க்கமாகப் பாய்ந்து வந்த கோழி, குபீரென்று சீறிச் சினந்து பாய்ந்த வேகத்தில் செல்வத்தின் மீது மோதிக் கொத்தி... றெக்கையால் அடித்து....

பயத்தில் அதிர்ந்து, மல்லாக்க விழுந்து கத்தி வீறிட்ட செல்வம். துடித்துப்போன நடராசன், காற்றாகப் பாய்ந்து ஓடினான். பிள்ளையைத் தூக்கிய வேகத்தில் — 'கோழியை எத்தலாமா' என்று நிமிர்ந்தால்—

இவன் ஓடி வந்த அதிர்வில் திடுக்கிட்டு... பயந்தோடிப் போன கோழி.

நடராசனின் மனைவியும் சத்தம் கேட்டு ஓடிவந்தவள், செல்வத்தை வாங்கிக் கொண்டு போய்விட்டாள். செல்வத்தின் அழுகைச் சத்தம் இன்னும் கேட்கிறது.

குஞ்சைத் தூக்க குறி வைத்துக் கீழ் நோக்கி அம்பெனப் பாய்ந்து வருகிற பருந்தை... பறந்தடித்து விரட்டிய கோழியின் அதிசயத் துணிச்சலை பார்த்துப் பார்த்து பிரமித்திருக்கிற நடராசனுக்கு, தன்மகனைப் பாய்ந்தடித்த துணிச்சலை நினைத்து நினைத்து மனம் கொதித்தான். பிரமிக்க முடியவில்லை. வெறுப்பாக இருந்தது. கோபம் கோபமாக வந்தது. நேரம் நகர்ந்தது. நகர நகர... கோபம் குறைந்து யோசித்தான்.

கோழியின் அன்பு, ஊமையன்பல்ல. செயலூக்கமுள்ள அன்பு. எதிரி எத்தனை பெரிய ராட்சஸமாயிருந்தாலும் மோதிப் போரிடுகிற ஆற்றலைத் தருகிற அர்த்தமுள்ள அன்பு. குஞ்சுகளை நேசிக்கிற கோழி.

குஞ்சுக்கு உலகம் கற்றுத் தருகிறது. இரை பொறுக்கக் கற்றுத் தருகிறது. பகைப் பிராணிகளிடமிருந்து பாதுகாக்கும் முறையைக் கற்றுத் தருகிறது.

மனுசனைவிட கோழி மகத்தானதுதான். உயர் பண்பு கொண்டதுதான். மனுசருக்கு கோழியும் ஆசான்தான்.

ரெண்டு மாசமிருக்கும். நடராசன் பேருக்கு ஒரு காயிதம் வந்திருந்தது. நீலநிற இன்லெண்ட் லெட்டர். பதனமாக உடைத்தான். விரிப்பதற்கு முன்- எங்கிருந்து வந்த கடிதம் என்று திருப்பிப் பார்த்தான்.

''பொற்கொடியம்மா, அருஞ்சுனை காத்த அய்யனார் சுவாமி கோவில், மேலப்புதுக்குடி, தூத்துக்குடி மாவட்டம்''.

பொற்கொடியம்மா என்றவுடன், மனசில் வந்த ஒரு பெரியம்மா. மதுரைக்குப் போயிருந்த இடத்தில்... ஒரு வயதான அம்மாவுக்கு ''ரொம்ப அர்ஜெண்ட்'' என்று தேடிக்கொண்டிருந்த ரத்த வகை இவனிடமிருந்தது.

ரத்தம் தந்தான். அந்தப் பெரியம்மா பெயர் பொற் கொடியம்மா.

'எதற்கு கடிதம்?' நடராசனுக்குள் திகைப்பு. கேள்வி. யோசனை. அவசரமாக விரித்தான்.

''அன்புள்ள தம்பி, சௌகரியம். சௌகரியம் உண்டாக ஆசி.

நீங்கள் தந்த ரத்தத்தால் உயிர் பெற்றேன். முழுமை யான ஆரோக்கியம் பெற்றேன். மிக மிக நன்றி தம்பி.

மதுரைதான் எனது ஊர். எங்கள் குலதெய்வம் கும்பிட வந்திருந்தோம் மேலப்புதுக்குடிக்கு. ரத்தம் தந்து, பணமும் பெற மறுத்துவிட்ட உங்கள் நல்ல உள்ளத்தை எண்ணி நெகிழ்ந்தோம். கோவிலிலும் உங்கள் ஞாபகம்தான்.

உங்கள் பெயருக்கும் ஒரு பூஜை நடத்தி, அதன் பிரசாதத்தை தனிப் பார்சலாக அனுப்பி இருக்கிறேன். பெற்றுக் கொள்ளவும்.

அருஞ்சுனை காத்த அய்யனார் உங்கள் நல்ல மனசையும், குடும்பத்தையும் காப்பாற்றி உயர்த்துவார். வாழ்க! எனது ஆசிகள். இப்படிக்கு பொற்கொடியம்மா''

நடராசனுக்குள் நெகிழ்வு. நெகிழ்ந்த மனசின் பரவசம். தனது ஒரு சிறிய உதவிக்கு, இத்தனை பெரிய

நன்றியா? உறவேயில்லாத ஓர் அம்மா... இத்தனை நெகிழ்ச்சியோடு உறவாகிறார்களே...

வலி நிறைந்த குஞ்சுகளின் கூச்சல். ''கீயா... கீயா... கீயா...'' என்று வீறிடுகிற குஞ்சுகள். ரணம் தாளாத வேதனைக் குரல்கள்.

திடுக்கிடலோடு வெளியே வந்த நடராசன். கோழி, புது மினுமினுப்போடு இருக்கிறது. ரோம மினு மினுப்பே தனி அழகாயிருக்கிறது. முகம், ரத்தச் சிவப்பாக தகதகக்கிறது. கொண்டையும், செவியும், மூஞ்சியும் ரத்தம் கோதின பருவச்சிவப்பு.

சேவலுடன் மேய்கிறது. 'கோ், கோ்...' என்று வாஞ்சைக் குரலோடு வட்டமடிக்கிற சேவலுக்கு இடம் கொடுத்து, இணைக் குரல் தருகிறது. 'உர்ர்ர் ரு' என்று மிரளவில்லை. ரோமம் சிலிர்க்கவில்லை.

தாயென்று வாஞ்சையோடு காலைச் சுற்றுகிற குஞ்சுகளை கோபமாய் கொத்தி விரட்டுகிற கோழி. கொத்திய கொத்தல்களில் குஞ்சுகளின் உச்சி மண்டை யில் ரத்தப் புள்ளிகள், அண்டி அண்டி வருகிற பிள்ளை களை அண்ட விடாமல் கொத்திக் குதறுகிற கோழி. விடலைக் கோழி.

காமப் பருவத்தில் தாய்ப் பாசத்தை தொலைத்து விட்ட கோழி. பருந்தை எதிர்த்து பாய்ந்து பறந்த தாய்மை. செல்வத்தையே கொத்தி மலர்த்திய தாய்மை. காமத்தில் மாயமாகிப்போன தாய்மை. தன் உடம்பின் தேவையே உயிரின் தேவையாகிப் போன கோழி. மனதின் உறவாகிப் படியாத - தற்காலிக உணர்ச்சியாக

இருந்து மறைந்துவிட்ட- பாச உணர்ச்சி. உறவாகப் பரிணமிக்காத வெற்று மிருக உணர்ச்சி.

பறவைகளின் வாசஸ்தலமான வேப்ப மரத்தை வைத்துப் பாதுகாத்த தனது உயிர் நேயம்.

உலக மனிதர்களை உறவு மனிதர்களாக நினைத்து கருணை வீரத்தோடு செயல்படுகிற பார்வதி கணவன்.

உறவேயில்லாமல், நன்றியினால் உறவாகிப் போகிற பொற்கொடியம்மா...

தன்னலப் பிறவியாக மட்டுமே பிழைக்கிற கோழி பிராணிகள். சமூகப் பிறவியாகவே வாழ்கிற மனிதர்கள். சார்ந்தும் சுமந்தும் பிணைந்து பந்தமாகிற மனிதர்கள்...

நடராசனுக்குள் பூவாசமாகப் பரவிப் படர்கிற நினைவுகள். உள்ளுக்குள் இறங்கி இறங்கி வேர்பதிக்கிற உணர்வுகள்.

தன்னலப் பிராணிகள் மனிதருக்கு எப்போதும் ஆசானாக இருக்கவே முடியாது...

நடராசன் கையிலிருந்து சடசடத்த நீலநிறக் கடிதத்தைப் பார்த்தான். எல்லாப் பூவாசத்தையும் மிஞ்சுகிற மனித வாசம் அதில் கமழ்ந்தது.

சரஸ் சாரல்
பிப்ரவரி 2003

✱ ✱ ✱

9. பணக்குணம்

ஓடைக்குப் போய்விட்டு 'வேகு, வேகு' என்று ஓட்டமாய் ஓடி வருகிற சின்னப்பன். வீடு வந்து சேருவதற்குள் ''கஞ்சியை ஊத்து, கஞ்சியை ஊத்து'' என்று பெஞ்சாதியை விரட்டினான்.

''என்னத்துக்கு இந்தப் பறப்பு பறக்கே?''

''வெறகு வெட்டப் போகணும்லே? வலையப் பட்டி கம்மாய்க்குப் போவணும்லே?''

''அதுக்கு இப்ப என்ன? இன்னும் சித்தநாழி கழிச்சுப் போவலாம்லே?''

''அந்த நாட்டாமையெல்லாம் நீ பண்ணாதே, கஞ்சியை ஊத்துனா... நாய்கணக்கா ஊத்து...''

கோபம் 'சுள்ளென்று வருகிறது, காமாட்சிக்கு. ''நாய் பேய்னு பேசுனா... வெளக்குமாறு பிய்ஞ்சு போகும்'' என்று சுடச்சுட கொதி மனசை கொட்ட நினைத்தாள். அடக்கிக் கொண்டாள்.

சின்னப்பன், கோபத்தில் கத்தவில்லை. பயத்தில் கத்துகிறான். என்னத்துக்குப் பயப்படுறான்? பயப்படுற வனை கோபித்து என்ன செய்ய?

இவள் கஞ்சியை ஊற்றுவதற்குள் சைக்கிளை எடுத்து முற்றத்தில் வைக்கிற சின்னப்பன். துரட்டியை யும், வெட்டரிவாளையும் கேரியலில் இறுக்கிக் கட்டு கிறான். டயர்களை நசுக்கிப் பார்க்கிறான். பெடலை ஒரு சுற்றுச்சுற்றி... பிரிவீலை ஓட விட்டான். அதன் சீரான இரைச்சல்.

சின்னப்பன் கஞ்சிக்கு முன்னால் குத்துக்கால் வைத்து உட்கார்ந்தான். வழக்கம்போல 'அது, இது'வென்று பேசவில்லை. கடிச்சிக் கிடைகூட கேட்கவில்லை. மனிதன் மாதிரி ருசித்தும் சாப்பிடவில்லை. ஆடுமாடு வாய்வைத்து மண்டுவதைப் போல... ஒரே மூச்சில் குடித்துமுடித்தான்.

அதற்குள் காமாட்சி தூக்குச்சட்டியில் சோறும், ஐந்து லிட்டர் கேனில் தண்ணீரும் கொண்டு வந்து வைத்தாள்.

''பீடி சீரெட்டு வாங்கிட்டு வரட்டா?''

''வேண்டாம். போறவழியிலே ஆமநாட்டுலே வாங்கிக்கிடுதேன்.''

என்னத்துக்கோ பயந்தோடுகிறவனைப்போல பர பரக்கிற புருஷன். பதைப்பும் பதற்றமுமாக துறுதுறுக் கிறான். முகத்தின் உயிர்க்களையைக் காணோம். வெளுத்துக்கிடக்கிற முகத்தில் மனசின் இருட்டு. மனுசர் எதுக்கோ அரண்டு கிடக்கிறார்.

''நீயும்... மசமசன்னு நிக்காதே... வெருசா புஞ்சைக்குப் போய் வேலைஜோலியைப் பாரு''

''நீ எப்ப வருவே?''

''சாயங்காலம் வரமுடியாது. வர்றதுக்குள்ளே இருட்டிரும்...''

''சோத்துக்கு...?''

''ஆம நாட்டுக் கடையிலே நீயே போய் வாங்கிக்க... நா வெருசா போறேன்...''

ஹாண்டில் பாரில் தூக்குச்சட்டி, கேரியலின் வலது சைடில் அடிப்பக்கத்தில் தண்ணீர்கேன். கட்டம் போட்ட துண்டை தலைப்பாகையாக் கட்டுகிறவேகம். கைலியை மடித்துக் கட்டுகிற துரிதம். ஸ்டாண்ட் கிளிப்பைத் தட்டுகிற விறுவிறுப்பு.

மணி ஏழரை கூட ஆகவில்லை. எட்டுமணியானாலும், போகாமல் தயங்குகிறவன். ''போய்யா... போய்யா'' என்று நாலுதடவை தள்ளினால்தான்... மெல்ல அசைவான். அப்பேர்ப்பட்டவன்... இன்று இப்படி பறக்கிறான். என்னத்துக்கு?

சைக்கிளில் தெருவில் போகிற சின்னப்பனையே ஏதேதோ நினைப்புகளுடன் பார்க்கிற காமாட்சி.

பெயர்தான் சின்னப்பன். ஆள் மூட்டுப் பெருத்த ஆள். ஓங்கு தாங்கானவன். நல்ல வளர்த்தி. வளர்த்திக் கேத்த மாதிரியான திரேக தாட்டியம். பார்க்க... பீமன் கணக்காக கம்பீரமாக இருக்கும்.

வேலையிலும், ராட்சஸன்தான். துரட்டியால் சீமைக்கரு வேலமரத்தின் விளார்களை வெட்டி இழுத்து அமுக்கித்தள்ளுவான். கட்டைகளில் அரிவாளை ஓங்கி இறக்குவான். 'சதக், சதக்'கென்று அரிவாள் இறங்கும். நிமிஷ நேரத்தில் விறகுக் குவியல் மலையாக உயரும்.

ராத்திரியில்... அந்த ''நினைப்பு'' வந்து விட்டாலும், அப்படித்தான். இவளைப்புரட்டி எடுத்து பாடாய்படுத்து வான். இவள் உடம்பு புண்ணாகிப்போகும். மனசோ, தேனில் சிக்கிய எறும்பாக கிறங்கிக் கிடக்கும். திரேக மெல்லாம் சுகச்சுவடுகள். இன்பவலிகள்.

அப்பேற்பட்ட தாட்டியமான ஆள், இப்ப என்னத்துக்குப் பயந்து சாகுறாரு? என்னத்துக்கு இந்த ஓட்டம்? களவாண்டவனைப் போல கதிகலங்கிப்போய் என்னத்துக்கு ஓடணும்?

காமாட்சிக்குள் பின்னலாடுகிற நினைவுகள். உயிர் கலந்த உயிரைத் தழுவிச் செல்கிற நினைவுகள். ஆத்ம பங்காளியைப்பற்றிய நினைவுப் பெருமூச்சுடன்... வீட்டுக்குள் வந்தாள்.

அவளுக்குள்ளும் துரிதச் சிறகுகள். ரெண்டு பிள்ளைகளையும் விரட்டி அதட்டி 'வெருசா' பள்ளிக் கூடம் அனுப்பிவிட்டு... இவளும் கதவைப் பூட்டி விட்டு காட்டுக்கு ஓடும்போது.

கடைவாசலில் சற்று திகைத்தாள்.

''ரெண்டு ஊறுகாய் குடுங்க''

''என்ன ஊறுகாய்?''

''செல்வம் ஊறுகாய்?''

தெருவுக்குள் ஓடி ஊரைத்தாண்டி ஓட்டமாய் பறந்தாள்.

ஆமர்நாடு கிராமம்தான். டீக்கடைகள், மளிகைக் கடைகள் இருக்கிற பெரிய கிராமம். ஐஸ்துரை நாடார் டீக்கடை முன்னாலுள்ள வேப்பமரநிழலில் சைக்கிளை நிறுத்திய சின்னப்பன்.

பக்கத்தில் ஒரு டிராக்டர். ஒரு பெரிய மலையை தூக்கி வைத்த மாதிரி, மிளகாய் வற்றல் தாட்டுகள் பாரமேற்றப்பட்டிருந்தன. பெரிய பெரிய சதுரத் தாட்டுகள். பாரமேற்றிமுடித்துவிட்டு... பாரக்கயிறு போட்டு ஏழெட்டுபேர் இறுக்கிக் கொண்டிருந்தனர்.

''ந்தா... ந்தா... ந்த்த்தா...'' என்று சவுண்டு கொடுத்துக்கொண்டே இழுத்தனர்.

''சத்தம்தான் பெருசா வருது. கவுறு இறுக மாட்டேங்குது''

''இழுக்குற கையிலே உசுரு இருந்தாத்தானே?''

''இந்தா... சல்லம்பட்டி சின்னப்பன் வந்துட்டா னப்பா...''

''அப்படி வலுவான ஆளுக கைவச்சாத்தான் பாரம் இறுகும்''

''சின்னப்பா... இங்க வாய்யா... ஒரு கைபுடி''

''நா வெறகு வெட்டப் போவணும். ரொம்பத் தூரம்''

''இருக்கட்டுமய்யா... ஒன்னை மாதிரி ஓங்கு தாங்கா இருக்குற ஆளு, உதவ மாட்டேன்னு சொன்னா... எப்படி?''

''சின்னப்பன் வந்துட்டான்னா... பீமன் வந்த மாதிரிதான்''

'ம்ம்ம்... பெறகு என்ன செய்ய' என்ற சூள் கொட்டலுடன் பாரக்கயிறில் கை வைத்தான். ஐந்து நிமிஷத்தில் வேலை முடிந்தது.

ரெண்டு உளுந்துவடையை பிய்த்துச் சாப்பிடச் சொல்லி, டீயும் வாங்கித் தந்து... மூன்று சிகரெட்டும் வாங்கித் தந்துவிட்டனர்.

இவன் பலத்துக்கும், தாட்டியத் திரேகத்துக்கும் கிடைத்த மகுடம் என்ற பெருமிதத்ததும்பல், அவனுக்குள். ஒரு மனப்பரவசம். பூரிப்பு. பீமன்களுக்கும் சில சமயத்தில் சிம்மாசனம் கிடைத்து விடுகிறது.

சைக்கிளின் பெடலில் காலை வைத்தான். வலையப்பட்டி கண்மாயுக்குள் ஒன்பது மணிக்கெல்லாம் வந்து விட்டனர்.

சக தொழிலாளர்கள் வந்திருந்தனர். சைக்கிளை பெரிய வாகை மரத்துநிழலில் நிறுத்தினான். மேல் சட்டையையும், கைலியையும் கழற்றி... ஒருசேர உருட்டிச்சுருட்டி சைக்கிளில் வைத்தான். தலையில்

துண்டு, இடுப்பில் காக்கி டவுசர். சைக்கிள் கேரியலில் தொங்கிய கனத்த பூட்ஸை (கல்குவாரியில் வேலை பார்த்த செந்தட்டிக் காளைத் தேவர் ஓசியாகத் தந்தது) காலில் மாட்டிக் கொண்டான்.

இது காலில் இருந்தால்... முள்கவை மேல் தைர்ய மாக காலை வைக்கலாம். முள்ளுக்குப் பயப்படாமல்... முள் மரத்துக்குள் வெட்டலாம். விறகைக் குவிக்கலாம்.

சீமைக்கருவேலமுள் விஷமுள். இது காலில் தைத்து, 'ஜலம்' வைத்து... பன்னிக்குட்டி மாதிரி கால் வீங்கி... மண்டையை போட்டவர்களும் உண்டு. கால் விளங்கா மல் போனவர்களும் உண்டு.

எச்சரிக்கையாக வேலை செய்ய வேண்டும். வேலி மரக் கூப்புக்குள் இறங்கி விறகுவெட்டுவதென்றால்... சும்மா இல்லை. பாம்புப் புற்றுக்குள் இறங்கி வருகிற மாதிரிதான். நூறு ரூபாய் சம்பளத்துக்காக உயிரைப் பணயம் வைத்த இந்த உழைப்புப் போராட்டம்.

இரும்புத் துரட்டியும், வெட்டரிவாளுமாக முள்குமிமேல் மிதித்து களத்தில் இறங்கிய சின்னப்பன். ஏற்கனவே வெட்டுப்பட்ட விறகுக் குமிகள். இழுத்து ஒதுக்கப்பட்ட விளார்குமிகள். விளார்கள் நீக்கப்பட்டு, வெற்று விறகுடன் உரித்த கோழிகளாக நிற்கிற சீமைக் கருவேல மரங்கள்.

இந்தத் தோப்பையே விலைக்கு வாங்கியிருக்கிற வன், செந்தூரரான். ஆள்விட்டு, விறகுவெட்டி, செங்கற் சூளைக்குப் போட்டு பணமாக்குகிறவன்.

செந்தூரானையே தேடுகிற சின்னப்பமனசு. அவன் வந்திருந்தால், எக்ஸெல் வண்டி வாகை மரநிழலில் நின்றிருக்கும்.

''என்னப்பா... செந்தூரான் வரல்லியா?''

''வரலே''

''நாலுநாளா சம்பளமே தரல்லியே... ஒனக்கு என்னமும் தந்தாரா?''

''எனக்கா? ஒரு கழுதையும் தரல்லே.''

''அன்னாடம் சம்பளம் வாங்குனாலேயே.. திண்டாடுன பொழைப்பு. இதுலே நாலைஞ்சு நாளா... சம்பளம் தரல்லேன்னா... நம்ம கதி என்னாகுறது?''

சின்னப்பனுக்குள் உயிர் வடிந்த மாதிரியோர் மனத்தளர்வு. ஏதோ அதிர்வான சோகத்தை எதிர்கொண்டு விட்ட மனப் பகீர். வருத்தத்தில் துவள்கிற தாட்டியமான திரேகம்.

வேலிமரத்தூரில் காலை வைத்துக்கொண்டு, கிளையை வெட்டுகிற சின்னப்பன். வெட்டரிவாள் மேலும் கீழுமாய் ஏறி இறங்க... சிதறுகிற மரச்சிராய்கள். வெட்டப்பட்ட தடிகளை துண்டு துண்டாக நறுக்கி, விறகுக்குவியலின் மீது எறிகிற சின்னப்பன். ஏறுகிற வெயில், நீர்க்கோடுகளாய் நெளிந்து வழிகிற வியர்வைப்பெருக்கு. திரேகமெல்லாம் பூத்து நசநசக்கிற வியர்வையில், பொடிப்பொடியான வேலி இலைகள் விழுந்து அப்பிக்கிடக்கின்றன.

''செந்தூரரான்... செங்கச்சூளையிலே இருக்காராம். பணத்துக்காக காத்திருக்காராம். சாயங்காலம் வந்துருவாராம்...''

சின்னப்பன் காதுக்குள் வந்து விழுகிற சர்க்கரைப் பாகுச் சொற்கள். நெஞ்சுக்குள் தித்திக்கிறது. மூச்சுத் திணறல் முடிச்சவிழ்ந்து... இயல்பாகிற சுவாசம். மனசுக்குள் றெக்கைமுளைக்கிற மாதிரியோர் உணர்வு. மேகவெளிக்குள் ஊடுருவிப் பறந்துபோகிற மாதிரி யோர் மனப்பரவசம்.

'ஐந்நூறு ரூவா கெடைக்கும்' என்ற நினைப்பி லேயே சின்னப்பனுக்குள் வருகிற வெளிச்சம். விலகித் தெறித்தோடுகின்ற இருள்துண்டுகள். 'மானம் மரியா தையை காப்பாத்தி... நெஞ்சு நிமிர்ந்து நடக்கலாம்.'

'சரி செங்கச்சூளையிலே பணம் வந்து சேரலைன்னா? செந்தூரரானுக்கு 'நாளை'ன்னு வாய்தா சொல்லிட்டா...?'

இவனுக்குள் செங்கற்சூளைத்தீயாக குப்பென்று பற்றுகிற சந்தேக நினைவு. சூளைப்புகை மூட்டமாக மனசுக்குள் மண்டுகிற காட்டமான நினைவுகள். அவனுக்குள் மறுபடியும் உயிர்வடிந்த மனத்தளர்வு. சூளைத்தீயில் வெந்து சாம்பலான விறகாக... அவனது உணர்வுகள். சோகப்பெருமூச்சு விட்டான்.

'கையிலே ரூவா இல்லாம... ஊர் போகமுடியுமா? ஊர்போனா... மானத்தோட இருக்க முடியுமா? பசியும் பட்டினியுமா எப்பாடுபட்டாலும்... மானமரியாதை யோட இருக்குறதால... உசுர் வைச்சு வாழமுடியுது. அந்த மானமும் போச்சுன்னா...?'

அவனுக்குள் குலை பதற்றம். நரம்பெங்கும் ஓடிப் பரவுகிற பயநடுக்கம். வரப்போகும் அவமானம் பற்றிய திகில். பூதாகரக் கற்பனைகள். கன்னா பின்னாவென்று அச்ச நினைவுகள்.

அவன் அஞ்சியபடியே ஆயிற்று.

சாயங்காலம் செந்தூரான் வரவில்லை. நாளைக்குத் தான் முழுச்சம்பளமும் என்ற தகவல் மட்டுமே வந்தது.

உயிர் நரம்பு அறுந்த மாதிரி இருந்தது சின்னப்பனுக்கு.

சாயங்காலமே காமாட்சி காட்டிலிருந்து வந்து விட்டாள். சோறு தண்ணீர் காய்ச்சிக்கொண்டிருந்தா லும்... மனசுக்குள் ஒரு மருகல்.

வாட்டமாக துவண்டு கிடந்த சின்னப்பனின் முகம், மனசுக்குள் வந்துவந்துபோனது. பதற்றமும் பயமுமாய் ஓடிய அவன். களவாணியைப் போல ஓடிஒளிந்த அவனது அரண்ட முகம்.

'என்னாகுமோ... ஏதாகுமோ...' என்ற பதைப்பு, இவளுக்குள்.

பொழுது மயங்கிவிட்டது. இருட்டு முழுசாக வந்துவிட்டது. தெரு விளக்குகளின் கண்விழிப்பில் வெள்ளை வெளிச்சம் தெருவில் கிடந்தது.

சைக்கிளில் வந்து முற்றத்தில் காலை ஊன்றிய சின்னப்பன்.

வாசலில் நிற்கிற காமாட்சி.

''யாராச்சும் வந்தாகளா? என்னைத் தேடி விசாரிச்சாகளா?''

பதற்றத்தில் நனைந்த குரல். வாடித்துவண்ட குரல்.

''யாரு வருவாக? யாரை நெனைச்சுப் பதறுதீக?''

கேள்விக்குப்பதில்போல பெரிய மோட்டார் பைக் ஏகப்பட்ட வெளிச்சத்துடன் வந்து நின்றது. வண்டியி லிருந்து இறங்குகிற ஃபைனான்ஸ்காரர். ஒல்லியிலும் ஒல்லியான ஆள். உரித்துப்போட்ட ஒற்றை எலும்பு போல ஒரு கீற்றுத் தோற்றம். கட்டையான உருவம். சின்னப்பன் பக்கத்தில் நிற்கிறபோது, அவனது தொடை உயரத்துக்குத்தான் இருப்பான்.

காமாட்சிக்குள் தீ வைத்த மாதிரி நினைவுப்பகீர்.

இவரிடம் ஊர்த்திருவிழாச்சமயத்தில் வாங்கிய ரெண்டாயிரம் ரூபாய் கடன். ஆயிரத்தைந்நூறு ரூபாய் கட்டியபிறகும்.. வட்டி வட்டியாக ஏறி இன்னும் ஆயிரத்து இருநூறு ரூபாய் கடன் இருக்கிறது. தவணை தவறி மூன்று நாளாகவிட்டது.

இந்தக் கடனுக்குப் பதறிப்போய்த்தான்... இந்த ஆள், இத்தனை தவிப்பு தவிச்சாரா? இவனும், படுபாதகப் பயல்தான். ஈவு இரக்கமில்லாமல், தாரதம்மியமில்லா மல் சகட்டுமேனிக்கு எகத்தாளமாகப் பேசி அதட்டு வதில் படுகில்லாடி.

சைக்கிளின் ஹாண்டில் பாரில் அந்த ஒல்லி எலும்புவின் கை. சின்னப்பனின் நெஞ்சுச் சட்டையை கொத்தாகப் பற்றியிருப்பதான ஒரு பிரமை.

''என்ன தவணை தரல்லியா?'' எலும்பின் அதட்டலான அதிகாரம்.

''மாசாமாசம் ஒழுங்கா குடுத்து வந்துருக்கேன்...'' பணிவான பவ்யம்.

''இந்த மாசம் தரல்லியே... என்ன மனசுலே நெனைப்பு? பெரிய கொம்புன்னு திமிரா?''

''இல்லே... ரெண்டு நாள் தாமதமாயிடுச்சு. அதுவும் இந்த மாசம் மட்டும்தான்...''

''மூணுநாள்... ஒன்னைத் தேடித்தேடி நாங்கள் அலையணுமோ? தேடியலைஞ்சா... பெட்ரோல் செலவு யாரு தருவா? உங்கப்பனா தர்றது?''

''கோபப்படாதீங்க... வார்த்தையை எறியாதீக... நாளைக்கு கட்டாயமா தர்றேன்...''

''எப்படி நம்புறது?''

''சத்தியமா தர்றேன்...''

அவமானத்துக்குப் பயந்த நடுக்கமாக... கம்மிய குரலில் உலர்ந்த உதடுகள் குழைய... குன்றிக்குறுகிய மனப்பணிவுடன் பேசுகிற சின்னப்பன். பீமன். தாட்டிய திரேகம்.

ஒல்லி எலும்பு அதட்டுகிறது. வரம்புமீறி வார்த்தையை எறிகிறது. அச்சுறுத்துகிறது. அதிகாரம் பண்ணி அவமானம் செய்கிறது.

பணம் என்பது அம்புட்டுப் பெரிய பலமான விஷயமா? பீமனையே சாய்த்து வீழ்த்துகிற ராட்சஸமா?''

காமாட்சிக்கு மனசுகிடந்து கொதிக்கிறது. வெட்டுப் பட்டு தரையில் எறியப்பட்ட விறகுத்துண்டாக... உயிர் அறுந்துபோய்.. அவமானப்பட்ட இருண்ட முகத்துடன் வருகிற புருஷன்...

''வஞ்சகமில்லாம ஒழைக்குற மனுசங்களுக்கு இதுதான் கிடைக்குது. ஏழை பாழைகளை இப்படி கூத்துபண்ணி வேடிக்கை பாக்குற அந்தச் சாமிக்கு கண்ணு இருக்கா, இல்லே, அவிஞ்சுதான் போச்சா?''

அழுகையும் கொதிப்புமாக கதறி வெடிக்கிற காமாட்சி. ''மனுசன் செய்ற அக்குரமத்துக்கு, சாமி என்ன செய்யும்? நீ சத்தாம் போடாம... உள்ள வா.''

உயிர்தளர்ந்த சின்னப்பனின் குரல். லௌகீக வாழ்வின் குரல்.

''இப்படியேவா... காலம் போயிரும்? வா...வா... காமாட்சி... நமக்கும் ஒரு காலம் வராமலா போயிரும்...?''

வாழ்க்கைக்கு கால்களைத் தருகிற நம்பிக்கையின் குரல்.

கல்கி தீபாவளி மலர், 2007

★ ★ ★

10.கோழி கூவியும்...

சாயங்காலப் பொழுது. வெயிலின் முகம், நிறம் மாறி மஞ்சளாகிறது. பொழுது சாயச் சாய சரஸ்வதிக்குள் 'திக்திக்'கென்கிறது. மாரி வந்துருவானோ?' என்கிற திகிலாக இருக்கிறது. இன்றைக்கு அவன் வந்து நின்றால்... என்ன பதில் சொல்லிச் சமாளிப்பது? எப்படி அவன் முகத்தை ஏறிட்டுப் பார்ப்பது?

சக்தி மாரியம்மன் கோவிலில் திருவிழா சாட்டியாகிவிட்டது. மூணு நாள் திருவிழா, தடபுடலான ஏற்பாடுகள், தலைக்கட்டு வரி ஐநூறு ரூபாய். கூடுதல்தான். கொடுத்துதானே ஆகணும்?

'இப்பத் தாரேன்', 'பெறகு தாரேன்' என்று இவளும், நாளையும் பொழுதையும் இழுத்தடித்துவிட்டாள்.

மஞ்சள் பையும் நோட்டுமாக ''லொடுக் லொடுக்'' என்று அனுதினமும் வந்து நச்சரிக்கிற மாரி.

''நானும் எம்புட்டுத் தடவைதான், அலைஞ்சு சீரழியுறது? நடந்து நடந்து கால் நரம்பு அத்துப்போச்சு.''

''இருக்கட்டும்... பொறுத்துக்க. நான் வைச்சுக் கிட்டா வஞ்சகம் பண்ணுறேன்? கைக்கும், மெய்க்கும் காசு ஆப்புடமாட்டேங்குது.''

''என்ன செய்வியோ, ஏது செய்வியோ... எனக்குத் தெரியாது. வர்ற சனிக்கிழமை சாயங்காலம் வருவேன். ரூவாயை எடுத்து கையிலே வைக்கணும். அப்பவும் வாய்தா சொன்னா... நான் மனுசனாவே இருக்க மாட்டேன், ஆமா...''

மாரிக்கு ஏகக் கடுப்பு. முகமெல்லாம் கோப வெக்கை. நாழி காணம் போட்டாலும், வறுத்தெடுத்துட லாம். அம்புட்டு கனல். கண்ணெல்லாம் சிடுசிடுப்பும், எரிச்சலும்.

சரஸ்வதிக்கு அவமானமாக இருக்கிறது. ஊசியை போட்டு இங்குட்டு குத்தி, அங்குட்டு வாங்கின மாதிரி வலிக்கிறது. பக்கத்து வீட்டு வாசல்களிலும், தெருவின் ஓரஞ்சாரங்களிலும் எட்டிப் பார்க்கிற பெண் தலைகள்.

இவளது துன்பத்தை, நாளை குழாயடியில் பேசிப் பேசிப் பாயாசம் குடிப்பார்கள்.

நினைக்க நினைக்க நெஞ்சுகிடந்து நொந்து நூலாகிறது.

'இவுக மத்தியிலே மானமரியாதையோட நெஞ்சு நிமித்தி நிக்க வழியில்லியே... இல்லாக் கொடுமை.

ஏழை நிலைமை என்ன செய்ய? வாங்கிக் கட்டிக்கிட்டு தலையறுந்து கெடக்கவேண்டியிருக்கு.''

குமைச்சலும், வருத்தமுமாக சரஸ்வதியின் முகம் இருண்டு கிடக்கிறது. வெயிலில் அறுத்துப்போட்ட இளங்கொடியாக வாடித் துவள்கிற மனசு.

சாயங்கால வெயில், முற்றத்தில் தயங்கி மயங்கி நிற்கிறது. 'நிக்கட்டா, பறக்கட்டா' என்று கேட்கிறது. மேலவானத்து மேக விளிம்பெல்லாம் சூரியத் தகதகப்பு. நீளவாக்கில் படுத்துக்கிடக்கிற மேற்குத்தொடர்ச்சி மலை முதுகில் சில இடங்களில் சாரல்மேகம்.

தெற்குப் புஞ்சையிலிருந்து மேல்துண்டும், வேட்டியும், வெற்றுடம்புமாக வருகிற முருகேசன். மக்காச்சோளம் முளைத்து மூன்று நாளாகிவிட்டது. முளையைக் கொத்தி இழுத்தால், ஊன்றிய விதை கிடைக்கும் என்று மயில்களுக்குத் தெரிந்திருக்கிறது. மந்தை மந்தையாக வந்து விழுகிற மயில்களை நாயோட்டம், பேயோட்டமாக ஓடி ஓடி விரட்டிப் பார்த்துவிட்டு நொந்து, நனைந்து, நைந்து வருகிறான்.

''என்னமும் காப்பித்தண்ணி கெடைக்குமா?''

'உஸ்ஸ்ஸ்' என்கிற களைப்பான பெருமூச்சுடன் திண்ணையில் உட்கார்ந்து சுவரில் சாய்கிறான்.

வாசல்படியில் அடைக்கோழி மாதிரி முகம் வெளுத்து வாட்டமாகவும், சிடுசிடுப்பாகவும் நிற்கிற சரஸ்வதி, அதை அவன் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை.

'என்னைக்குத்தான் அவள் சிரிச்ச முகமும், சீதேவியுமாக நின்னுருக்காள்? எப்பப் பார்த்தாலும் அங்கலாய்ப்பும், ஆவேச முணுமுணுப்பும்தான். வீட்டு நிர்வாகம் பூராவும் அவ கைலதான். விவசாய நிர்வாகமும் அவதான்.

'நமக்கும் இது நல்லாத்தான் இருக்கு. பாக்கச்சொல்ற வேலையை செய்ஞ்சுட்டு, ஆக்கிப்போட்ட சோத்தைத் தின்னுட்டு... நாமபாட்டுக்கு சொதந்திரமா இருந்துரலாம்.'

அடுப்பங்கரைக்குள் சட்டிப்பெட்டி உருட்டுகிற சத்தம். வெல்லமும், தேயிலையும் போட்டு வேகவிடுகிறாளோ...

முருகேசன் பரம்பரைச் சம்சாரி. சும்மா உட்கார்ந்திருக்க மனசு சம்மதிக்காது. கையும், காலும் எதையாவது நோண்டிக்கொண்டே இருக்கும்.

காப்பி போடுகிற நேரத்தில் சும்மா இருக்க முடியாமல் எழுந்தான். கோழிக்கூட்டுக்குள் குனிந்து பார்த்தான். அடை கிடைக்கிற கோழி. ரோமங்களை சிலிர்த்து தூக்கிக்கொண்டு ''கூர்ர்ர்ர்ர்''ரென்று நீளமான குரல் எழுப்புகிறது. விலகிக்கிடக்கிற முட்டைகளை அலகால் நகர்த்தி, உள்ளிழுத்துக்கொள்கிறது.

வைக்கோல் படப்பில் கூளத்தை உருவி, பசு மாட்டுக்கு போட்டான். கழுநீர்பானையில் கைவிட்டு... கையால் பரசி, சோற்றுப்பருக்கைகளை அள்ளி... விறகுக் குவியல்களிலும், படப்பு மேலும் நின்ற

கோழிகளைக் கூப்பிட்டுப் போட்டான். வீட்டுக்குள் போய் கம்புத்தானியத்தை அள்ளி வந்து போட்டான். ரெக்கையடித்துக்கொண்டு பறந்து வருகிற கோழிகளின் ஆவல் பரபரப்பு, சேவல்களின் குதூகலக் கொக்கரிப்பு. சிறுகுஞ்சுகளின் 'வீய்யா...வீய்யா....'

தம்ளரில் ஆவிபறக்க சரஸ்வதி கொண்டுவந்து தந்த டீயைக் குடித்தான்.

''மாரி வந்துட்டுப் போறானா?''

''ம்...''

''என்ன சொன்னே?''

''நா ஒண்ணும் சொல்லலே. அவன்தான் சனிக் கிழமை கெடு வைச்சுட்டுப் போயிருக்கான்.''

''எப்படிக் குடுக்கப்போறே? ஏதாச்சும் ஏற்பாடு பண்ணி வைச்சிருக்கீயா?''

''இல்லே''.

''என்னமாச்சும் ஏற்பாடு செய்ஞ்சு... கோவில் வரியை குடுக்கிற வழியைப் பாரு. பொதுக்காரியம். கோவில் விஷயம். ஊர் பூராவும் நம்மளை பிய்ச்சுப் புடுங்கிரும்.''

அச்சுறுத்துகிற தொனியில் எச்சரிக்கிற, அவன். சரஸ்வதிக்கும் தெரியத்தான் செய்கிறது. இன்னது செய்வது என்றறியாத முழிப்பாட்டம்.

ரெண்டு ஆண்டாக புஞ்சையில் வந்த நட்டம். மிளகாய்வத்தலும், பருத்தியும் பயிரிட்டது. கடன்உடன்

வாங்கி... மருந்தடித்து... யூரியா வாங்கிக் கொட்டியது... நோயடித்து வெள்ளாமை நாசமாகிப்போனது... வெளைஞ்சு வந்த பருத்தி வெலையில்லாமல் போன கொடுமை...

மண்ணைக்கட்டி, மல்லுக்கட்டி, உயிரைக் கொடுத்து... ஊர் உலகத்துக்கெல்லாம் சோறு போடுகிற சம்சாரிபாடு... கடன்பட்டபாடுதான். வறுமைப்பட்ட பிழைப்புதான். வழித்து நக்குகிற இல்லாமைச் சீரழிவு. ச்சேய்!

சனிக்கிழமை வந்து நிற்கப்போகிற மாரிக்கு என்ன பதில் சொல்ல?

ச்ரஸ்வதிக்குள் மன உளைச்சல். வாழ்வே மறித்துக் கொண்டு நிற்கிற மாதிரியான திகைப்பு.

அந்த வெளிச்சம் மங்கி மறைகிறது. சாரல் நடுவே மேக இருட்டு. பூமியை விழுங்குகிறது.

ராத்திரிச் சோத்துக்கு வழியைப் பார்க்கணுமே என்று பெருமூச்சுடன் உள்ளே போகிற சரஸ்வதி. கோழிகளை கூட்டுக்குள் அடைக்கிற ஏற்பாட்டில் முருகேசன்.

வீட்டிலிருந்த முந்நூறு ரூபாயை எடுத்து மடியில் வைத்துக்கொண்டாள். மளிகைக்கடைக்குப் போனாள். அரிசி, பருப்பு, காய்கறியை வாங்கினாள். மூத்த பயலுக்கும், இளைய மகளுக்கும் தின்பண்டமும் வாங்கினாள். எல்லாம் பற்றுதான்.

''கணக்குலே எழுதிக்கோங்க.''

கடைக்காரர் முகத்தில் தயக்கம், சின்ன எரிச்சல்.

''பாக்கி ரொம்ப இருக்கு.''

''இருக்கட்டும். தர்றேன்''.

''திருவிழாவுக்கு சரக்குப் போடணும். ரூவா தேவைப்படுது... நீ கொஞ்சம் தர்றதுக்கு வழியைப் பாரு.''

''திருவிழாவுக்கும் நீருதான் சரக்குத் தரணும். திருவிழாக்குப் பின்னாடி ரூவா தர்றேன்.''

''நா என்ன சொல்லுதேன்?''

''நீரு சோத்துக்கு உப்பு இல்லேன்னு சொல்லுதீரு. நா நடக்குறதைச் சொல்லுதேன்.''

கடைக்காரர் முக்கிமுணங்க... சரஸ்வதி, பெட்டியுடன் திரும்பினாள்.

வழியில் கொத்தனார் வீடு. முந்நூறு ரூபாயைத் தந்தாள். 'சுண்ணாம்பு வாங்கி, வீட்டை வெள்ளையடித்துத் தரவேண்டியது உங்கள் பொறுப்பு' என்று தாட்டியமாக உரிமையோடு சொன்னாள்.

கறிக்கடை ராக்குவிடம் நின்றாள். ''திருவிழாவுக்கு கடா அறுக்கிறீரா?''

''அஞ்சு கடா அறுக்கப்போறேன். கீழ்காட்டுக்கடா. அருமையான உருப்படிக.''

''எனக்கு ஒரு கிலோ கறியும், ஒரு தலை, கால் குடலும் வேணும். சிட்டையிலே குறிச்சுக்கோரும்.''

''ரூவா?''

''இப்பவே... முன்கூட்டி வேணுமா?''

''இழுத்தடிக்காம.... பொங்கல் கழிச்சவுடனே தந்தாப்போதும்.''

''அப்பச் சரி.''

''ஊரே சுதாரிப்பாக இருக்கிறது. ஊர்த்திருவிழா வைக் கொண்டாடுகிற மகிழ்ச்சி. ஆண்டு பூராவும் மழையோடும், வெயிலோடும் மாரடித்துப் பாடுபடுகிற ஊர்ஜனத்துக்கு இது ஒரு சின்ன பூரிப்பு. மனசுக்கு 'சார்ச்' ஏற்றிக்கொள்கிற உல்லாசக் கொண்டாட்டம்.

சாமி இருக்கோ இல்லையோ, சம்சாரிக்கு இந்தக் கொண்டாட்டம் கட்டாயம் வேண்டும்.

வீடு வெள்ளையடிப்பது... வீட்டைக் கழுவி விடுவது... கோவிலை அலங்கரிப்பது என்ற மும்முரத் தீவிரம்.

'மைக்செட்' ஏற்பாடு... மேளதாள ஏற்பாடு... இன்னிசைக் கச்சேரி ஏற்பாடு என்று விழாக்குழு வேலைகள் ஒருபக்கம்.

மொத்த ஊரே ரெக்கைக் கட்டிப் பறக்கிற மாதிரி இருக்கிறது.

சரஸ்வதிக்குள் மட்டும் ரெக்கை ஒடிந்த மாதிரி ஓர் சோர்வு. அயற்சி. 'கோவில் வரி'க்கும், புதுத் துணி மணிக்கும் என்ன செய்ய?' என்கிற கவலை.

மத்ததெல்லாம் தயாராயிடுச்சு. இந்த ரெண்டு செலவுகளை எப்படிச் சமாளிக்க?

சரஸ்வதிக்குள் மலைப்பு. மலையே மறித்துக் கொண்டு நிற்கிற மாதிரியோர் திகைப்பு.

'எப்படியும் ரெண்டாயிரம் வேணுமே?'' என்கிற வருத்தக் கணக்கு.

அடுப்பங்கரைக்குள் நுழைகிறபோது, விசாரிக்கிற முருகேசன்.

''என்ன...ஏற்பாடு பண்ணிட்டியா?''

''எதுக்கு?.''

''திருவிழாச் செலவுக்கு''

''இன்னும் இல்ல. கோவில் வரிக்கும், புதுத் துணிமணிக்கும் ரெண்டாயிரம் வேணும்.''

''ரெண்டாயிரத்துக்கு எங்க போக?''

''அதான் தெரியல்லே. வழி புரியாம கண்ணுமுழி பிதுங்கிப்போய் நிக்கேன்.''

முருகேசன் உதட்டில் ஒரு ஏளனச் சிரிப்பு. கண்ணில் இகழ்ச்சியும், எகத்தாளமும்.

'பொட்டச்சி நாட்டாமை பண்ணுனா... வீட்டோட லட்சணம் இப்படித்தான் இருக்கும்' என்று சொல்லாமல் சொல்கிற அவனது ஏளனச் சிரிப்பு.

சரஸ்வதிக்குப் புரிகிறது. அந்தச் சிரிப்பின் தொனி. அவளுக்குள் ஒரு வலி.

சாட்டைக்கம்பு அடிவாங்கிய மாட்டின் வலி, எப்படியும் ஜெயித்துக் காட்டணுமே என்கிற வைராக்கியம். ரோஷம்.

'ஒரு வழியும் தெரியலியே?'' என்கிற இருட்டின் முற்றுகை.

வெள்ளிக்கிழமை சாயங்காலமாகிவிட்டது. இன்னது செய்வது என்றறியாத சோகத்துடன், சரஸ்வதி.

புதுத் துணிமணி இல்லாமல், வெறும் பொங்கலாகப் போய்விடுமா? மாரி வந்து நிப்பானே, என்ன பதில் சொல்ல?

அவளுக்குள் திகைப்பு, மலைப்பு.

இதில் முருகேசனின் ஏளனச் சிரிப்பு வேறு...

பொழுது மயங்குகிறது. மனசுக்குள் வந்து சூழ்கிற இருட்டும், சூனியமும்.

கூட்டுக்குள் அடைவதற்கு வருகிற கோழிகள், இரைக்காக 'கேர், கேர், கேர் என்று கத்துகின்றன.

வேட்டி மேல் கட்டிய பச்சைப் பெல்டும், தலைப் பாகைக்கட்டுமாக முற்றத்துக்கு வருகிற கறிக்கடைக் காரர், ராக்கு.

திகைப்பும், குழப்பமுமாக எழுந்து, 'என்ன?' என்று விசாரிக்கிற சரஸ்வதி.

''ஒண்ணுமில்லேம்மா. திருவிழாவுக்கு அஞ்சு கடா அறுக்கப்போறேன். 'பிராய்லர்' கோழியும் முந்நூறு கிலோ 'ஆர்டர்' போட்டுருக்கேன்.''

''ம்...''

''பிராய்லர் கோழி தின்னு தின்னு அலுத்துப்போன சில ஆட்கள், நாட்டுக்கோழி வேணும்னு ஆசை ஆசையா கேக்குறாங்க.''

''அதுக்கு?''

''ஒங்கிட்டே கெடக்குற கோழிக்களைத் தர்றீயா? கிலோ எம்பது ரூவான்னு எடை போட்டுக்கிடுதேன்...''

இவளுக்குள் 'பளிச்'சென்று ஒரு நிலா வெளிச்சம். இருட்டும் குழப்பமும் மண்டிக்கிடந்த மனசுக்குள் ஓர் ஒளிப்பிரவாகம்.

அடைக்கோழியையும், சிறுகுஞ்சுகளையும் மட்டும் நிறுத்தி வைத்துக்கொண்டு, மற்ற கோழிகளையும், சேவல் ரெண்டையும் எடைபோட்டதில் இருபத்திரண்டு கிலோ தேறியது.

'கோழி கூவியும்- பொழுது விடிஞ்சிருச்சே' என்ற நினைவில் கொப்பளித்த பூரிப்பு.

முருகேசனை கம்பீரமாக பார்க்கிற சரஸ்வதி. அவள் பார்வையின் தொனி, 'பொட்டச்சி நாட்டாமையிலே சக்திமாரியம்மன் பொங்கல் கொண்டாட்டம் என்ன கொறைஞ்சிபோச்சு?' என்று கேட்பது போலிருக்கிறது.

ராணி,
4.11.2007

★ ★ ★

11. புண்ணியவதி

ரெங்கராஜ் சாப்பிடுவதையே பின்னால் நின்று பார்த்துக்கொண்டிருந்தாள், சீதாலட்சுமி. இது அவனது உத்தரவு.

''ஆம்பளைக்குச் சோத்தை வைச்சுட்டு அங்குட்டு இங்குட்டுப் போயிட்டா என்ன அர்த்தம்? என்னமும் வேணும்னா சுவர்கிட்டே கேக்கவா? கைகழுவுற வரைக்கும் பக்கத்துலே நின்னு துண்டை எடுத்துக் குடுக்கணும். அதான் பொட்டைச்சிக்கு லட்சணம்.''

ஆண் என்கிற அதிகாரம் கொடிகட்டிப் பறக்கும். வார்த்தை முழுவதும் சாட்டைச் சுழற்சிதான். மின்னலாய் பாய்ந்து, தீக்கங்காக சுட்டுத் தகிக்கும். நின்ற இடத்திலேயே நிற்கிறாள்.

சீதாலட்சுமிக்கு உள்ளங்கால்கள் காந்தின. மரத்த மாதிரி உணர்ச்சியற்றுப் போன பாதங்கள், மெல்ல

பாதத்தை அசைத்தால், முள் முள்ளாக குத்தலெடுக்கின்றன.

ரெங்கராஜ் பழங்காலத்து தேக்கு மேசையின் வழவழப்பான கருமையில் முழங்கையை ஊன்றி இருந்தான். முருங்கைக்காயை எடுத்து வாயில் வைத்து, ஆற அமர உறிஞ்சி... அதைக் கிழித்து, ஒவ்வொரு இணுக்கிலுள்ள சதையையும் பெருவிரல் நகத்தால் வழித்து... சுவையறிந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கிற நிதானம்.

'நல்லாருக்கு' என்று மனசுக்குள் நினைத்துக் கொள்கிற அவனுக்கு நாவால் அதைச்சொல்ல நினைப்பு வரவில்லை. 'வாய்க்கு ருசியா ஆக்கி அவிச்சுப் போடுறதுதானே பொட்டச்சியோட ஜோலி? இதுக்கு ''நல்லாயிருக்கு''ன்னு சொல்லி ஒரு கிரீடம் வைக்கணுமாக்கும்?'- என நினைத்துக்கொள்கிற ரெங்கராஜ்.

''இன்னும் கொஞ்சம் உருளைக்கெழங்குப் பொரியல் வைக்கட்டா?'' பதற்றத்தில் தாழ்ந்த குரலில் சீதாலட்சுமி.

''ம்... என்று உறுமுகிறான் அவன்.

''வேற செம்புல தண்ணி வை.''

ஓட்டமாய் ஓடுகிற சீதாலட்சுமி வேறொரு செம்பை சாம்பல் போட்டு மினுக்கி, கழுவி, அலசி... அதில் தளும்ப தளும்ப தண்ணீர் கொண்டுவந்து பவ்வியமாக வைக்கிறாள்.

உருளைக்கிழங்கு பொரியலில் ஒரு கரண்டி வைக்கிறாள். சாம்பாரிலிருந்து அரித்தெடுத்த முருங்கைக் காய் துண்டுகளையும் எடுத்துப் போடுகிறாள்.

''ம்... ம்... போதும் போதும்'' மீசையில்லாத உதடுகள். கூர்மையான நாசி. ரத்த வரிகள் ஓடுகிற கலங்கலான கண்கள். லேசான முன்வழுக்கை. கழுத்தை வலப் பக்கமாகத் திருப்பி.. கடைக்கண்களால் அவளைப் பார்க்கிறான்.

அவனுக்குள் பலவிதமான நினைவுகள்.

பயந்து நடுங்குகிற இவள்தானா, அது? பதற்றமும், அச்சமுமாய் வெடவெடக்கிற இவளிடமிருந்துதானா அந்த விறைத்த சொற்கள்? அந்தத் தடித்த வார்த்தைகள்?

நம்பவே முடியவில்லை. ஆனால், நடப்பு.

நாலைந்து நாட்களுக்கு முன்பு- 'மொபட்'டை வீட்டு முற்றத்தில் நிறுத்தி, இடப்பாதத்தால் 'ஸ்டாண்டை'ப் போட்டான். போன இடத்தில் கொஞ்சம் விஸ்கி. நெஞ்சக்கரிப்பாக இருந்தது. சற்று கூடுதலான போதை.

''எம்புட்டு அடிச்சாலும் 'ஸ்டெடியா' நிக்குற பார்ட்டிதான். எப்படியோ இன்றைக்கு இப்புடி ஆளைத் தூக்குது!.''

மிதப்பது போன்ற உணர்வு. தனது உத்தரவில்லாமல் தானாகவே நகர்கிற கால்கள். நாக்கு உளறலெடுக்கும் என்று தோன்றுகிறது.

நேரம் பதினொரு மணிக்கு மேலாயிற்று. இவனுக்காக வந்து கதவைத் திறந்த சீதாலட்சுமி, குப்பென்று முகத்தில் மோதுகிற நாற்றம். ''ச்சேய்'' என்று கத்த வேண்டும் போலிருந்தது

பல்லையும், தன்னையும் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

இவன் உள்ளே போனவுடன் கதவைத் தாழ்ப்பாள் போட்டாள். அந்தக் காலத்துத் தாழ்ப்பாள். கையகல தாழ்ப்பாள். கதவும் கனத்த தேக்குக் கதவு. சங்கிலியை இழுத்து, பெரிய பூட்டைப் போட்டு மாட்டினாள்.

இது வழக்கம்தான். போதை ஏற்றுவது சகஜம். ஆனால் அளவோடு இருக்கும். இன்றைக்குக் கொஞ்சம் ஜாஸ்தி. குமட்டல் எடுக்கிறது. கெட்ட நாத்தம். குடலைப் புரட்டுகிறது.

''மிருக ஜென்மம்... போய்த் தொலையுது'' என்று மெல்லிசாக முணங்கியதில் சகிப்புத் தெரிந்தது. பொறுமை இருந்தது.

'பெரிய குடும்பத்துலே பொறந்துட்டோம்... குடும்பத்துக்கேத்த பொறுமை வேணும். வீட்டுச்சத்தம் வெளியே போகவிடாத பண்பு வேணும்' என்று மனசுக்குள் சொல்லிக்கொள்கிறபோது, கசப்பு வருகிறது.

அய்யா ராமானுஜத்தை நினைத்துப் பார்த்தாள். ஓங்குதாங்கான தேகம். ராஜகம்பீர உயரம். ஆணிவைத்து தைத்த செருப்பால் நடந்துவந்தால்...

''நெர்ருச்...நெர்ருச்'' சென்று சகலர் நெஞ்சும் அதிரும்.

ஒற்றை மாட்டு வண்டியில் பயணம். ஊருக்கு ஒரு வைப்பாட்டி வீட்டுக்குப் போய்த் திரும்பினாலும், ஊருக்குள் ராஜமரியாதை.

வட்டாரத்துக்கே ஒரு பெரிய பண்ணையார்.

ஊரே கையெடுத்து வணங்கும். இவர் சொல்லுக்கு மறுசொல் சொல்லாது. இவரது மூச்சுதான் அங்கு சட்டம். இவர் சொன்னதுதான் அங்கு தீர்ப்பு.

மறுபேச்சு பேசுவாரில்லை.

'அவரோட கவுரவத்தைக் காப்பாத்தறதுக்காகவாவது இந்த மனுசருக்கு கட்டுப்பட்டு இருந்தாகணும்.'

அந்தப் போதையிலும் சட்டையைக் கழற்றி, கால்-கை- உடம்பை நீரால் கழுவித் துடைத்து, வெறும் கைலியை மட்டும் உடுத்திய நிலையில் மெத்தைக் கட்டிலில் படுத்திருந்த ரெங்கராஜ், இடது முழங்கையை மடக்கி ஊன்றி, அதன்மேல் தலைவைத்து, ஒருக்களித்துப் படுத்திருக்கிற ராஜதோரணை.

''பால் வேணுமா?''

''ஊகூம்...''

''வாழைப்பழம்.''

''வேண்டாம்.''

அவன் முகத்தில் சிருங்காரம். கடுமையோ, இறுக்கமோ இல்லாத மிருது. மெல்லிய புன்னகை. இவளையே கனிவுடன் பார்த்து, ரசனையோடு சிரிக்கிறான்.

அதைப் பொருட்படுத்தாமல் அலட்சியபடுத்துகிற சீதாலட்சுமி.

''லைட்'டை அமத்தட்டா?''

''லைட் அப்படியே எரியட்டும். கதவைச் சாத்து''

கதவைச் சாத்தினாள்.

''எனக்கு ஒறக்கம் வருது. படுக்கணும்.''

''எனக்கு ஒறக்கம் வரலே. ஆசைதான் வருது''

அவனது நெஞ்சு முழுவதும் கருரோமங்கள். வலுவான தேகக்கட்டு. மீசையில்லாவிட்டாலும் ஆண்மை ததும்புகிற முகம்.

''சீத்தா... எனக்கொரு ஆசை...''

அவளது வெறுப்பான மவுனமும், கசப்பான பார்வையும் இவனை எதுவும் செய்துவிடவில்லை. அவனது திமிறலையோ, திணவையோ குறைத்துவிடவில்லை.

அவளிடம் கனத்த மவுனம். மேலேறிய பார்வையில் ஓர் இறுக்கம்.

''என்ன ஆசைன்னு கேக்கமாட்டீயா?''

சலனமற்ற உறைவில் சீதாலட்சுமி.

''நானே சொல்லுதேன்... இந்த 'லைட் வெளிச்சத்துலே ஒரு பொட்டுத்துணி இல்லாம ஒன்னை நான் பார்த்து ரசிக்கணும்.''

''அது... இந்த ஜென்மத்துலே நடக்காது.''

பணிவற்ற அவளது குரலின் விறைப்பும், விடைப் பும் இவனுக்குப் புதிதாகவும், புதிராகவும் தெரிந்தன.

''தாலி கட்டுன பொண்டாட்டி, புருஷன் ஆசைப்படி நடக்கிறவதான் பத்தினி.''

''எனக்கும் மானமிருக்கு, சூடு சுரணை இருக்கு. அவுத்துப் போட்டுட்டு நிக்க... நா ஒண்ணும் மிருக மில்லே... மனுஷி,''

''அவுத்துரு.... அவுத்துரும்மா...''

கொஞ்சுகிற கெஞ்சல் குரலில் அவனது அவசரம்.

'''செத்து கட்டையிலே போனாலும்... அது நடக்காது.''

அவள் முகத்தின் விறைப்பு. உதட்டு நெளிவில் இறுக்கம். கண்ணின் விரிவில் தெறிப்பு. முறுக்கேறிய குரலில் வன்மம்.

ரெங்கராஜ் அதிர்ந்து போய்விட்டான். இவள் போட்ட போட்டில் போதை கலைந்து, போன இடம் தெரியவில்லை. பதறிப்போய்விட்டான். இவனே எழுந்துவந்து சுவிட்சை அமுக்கினான்.

இருள் சூழ்ந்த பிறகுதான், படுக்கைக்கு நகர்ந்தாள். அவள் மேல் குறுக்காக விழுந்தது, ஒற்றைக்கால்.

அவளுக்கு மிளகாயை அரைத்து உடலில் அப்பிய மாதிரி, மனசு கிடந்து காந்தியது. இருந்தாலும் சகித்துக் கொண்டாள்.

'என்ன செய்யறது...? பெண் ஜென்மமா பெறந்து தொலைச்சுட்டோமே...! அதுவும் பெரிய வூட்டுப் பெண்ணாக பெறந்துட்டோமே?' மனக்கசப்பான முணுமுணுப்பு...

... கடைக்கண்ணால் இன்னும் பார்க்கிற ரெங்கராஜ். பயத்தில் ஒடுங்கி நிற்கிற சீதாலட்சுமி. அவனுக்குள் விநோதமான நினைவுகள்.

உருளைக்கிழங்கு பொரியலை எடுத்து வாயில் வைத்தான். சோற்றுக் கவளத்தை உருட்டி விழுங்கினான்.

''ரசம் ஊத்தணுமா?''

பவ்வியமாக பம்மிப் பதுங்கிக் கேட்கிற சீதாலட்சுமி. 'எது சீதாலட்சுமி? எது நிஜலட்சுமி? அன்றைக்கு ராத்திரி தோன்றிய பத்திரகாளியா? இந்த சாந்த சொரூபமா?

இந்த சாந்த சொரூபத்திற்குள் இருந்து... மானத்துக்கு சோதனை என்றால் அந்தப் பத்திரகாளி எழுகிறாளா?'

ராமானுஜத்துக்குக் ஏகப்பட்ட நிலபுலன்கள். கண்மாய்ப் பாசன வயற்காடுகள்... மானாவாரிக் காடுகள்... ஏழெட்டு கிணற்றுடன் நிலங்கள்... சமுத்திரம் போல் அரண்மனை மாதிரி ரெண்டு பெரிய வீடுகள். தொழுவம் நிறைய பசு மாடுகள்.

ராமானுஜத்துக்கு கையாளாக வந்து சேர்ந்த ரெங்கராஜ். ராமானுஜத்தின் ஒரே மகள் சீதாலட்சுமியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால்... ராமானுஜமும் கண்ணை மூடினால்... இத்தனைப் பெரிய சமுத்திர சொத்தும் இவன் காலடியில்.

சதிக் கனவுடன் காத்திருந்தான்.

கெஞ்சிக் கூத்தாடினான். யோக்கியமாக நடந்து கொண்டான். சீதாலட்சுமி இவனது லட்சுமியாகி... ராமானுஜமும் கண்ணை மூடிவிட...

இப்போது... இவன் பண்ணையார். சொத்து முழுவதும் சீதாலட்சுமி பெயரில். அவளும் கண்ணை மூடினால்...?

அவனுக்குள் நினைவு மின்னல்கள், ஊற்றெடுத்த மாதிரி பீறிடுகிற நினைவுகள்... கனவுகள்...

இந்தச் சனியன் தொலைந்தால்... முழுச் சுதந்திரமாய் ரெங்கராஜ், கட்டுப்பாடற்று... கேள்வி கேட்பாரற்று... அவனே ராஜா, அவனே மந்திரி என்று தனிக்காட்டு ராஜவாக...

என்ன வேணும்னாலும் செய்யலாம்... எப்படி வேணும்னாலும் செய்யலாம்...

அவனுக்குள் றெக்கை முளைக்கிற ராட்சசம். வால் முளைக்கிற குரூரம். வக்கிரத்தின் மறுமுகங்கள்.

வட்டிலில் கைகழுவிக்கொண்டே கழுத்தைத் திருப்பி, கடைக்கண்ணால் பார்க்கிற ரெங்கராஜ். இப்போதைய பார்வையில் ஒரு நூலிழை வித்தியாசம்.

நிழலாக தெரிகிற ராட்சசம். மின்னி மறைகிற கொலைக் குரூரம்.

அதையும் உன்னிப்பாக உற்றுக் கவனித்துவிட்டாள் சீதாலட்சுமி.

பதைப்புடன் துண்டெடுத்து நீட்டுகிறாள். இடக்கை யால் வாங்கித் துடைக்கிற அவனின் முக இறுக்கம். இறுகலான முகத்தின் நிழலாக மனக்கணக்கு... மன இருட்டு.

மூன்றாம் நாள் மதிய நேரம். நிலபுலன்களுக்கு வாங்கிப் போட்ட உரமூட்டைகள் பற்றிய கணக்கு பார்த்துக்கொண்டிருக்கிற ரெங்கராஜ்.

சிணுங்கி அழைக்கிற தொலைபேசி, சுற்றும் முற்றும் பார்த்தான். சீதாலட்சுமி வருகிற மாதிரி தெரியவில்லை.

''ஏய்ய்.... சீத்தா... சீத்தா...'' கத்திப் பார்த்தான். அவளைக் காணோம்.

இருந்திருந்தால்... இந்த கத்தலுக்கு அலறியடித்துக் கொண்டு ஓடிவந்திருப்பாள். வியர்க்க விறுவிறுக்க முகம் வெளுக்க வந்து நிற்பாள். வரவில்லை. 'எங்கே போய் தொலைஞ்சா?'

விடாமல் சிணுங்குகிற தொலைபேசி, எரிச்சலும், கடுப்புமாய் எழ முயன்ற ரெங்கராஜ் பாதங்களின் தடதடப்பு.

சீதாலட்சுமி ஓடிவருகிறாளோ...

வந்துவிட்டாள். ஓடி வந்ததில் மூச்சிரைக்கிறது.

''ஹலோ... யாரது? நான் சீதா பேசறேன்.''

எதிர்முனைக் குரலைக் கேட்டவுடன் சீதாலட்சுமி முகத்தில் ஒரு மலர்ச்சி. சட்டென பிரகாசிக்கிற முகம். ஒளிரும் கண்கள். மலர்ந்த பூக்காடாகச் சிரிப்பு.

''அண்ணே... என்னண்ணே... எப்படி இருக்கீங்க? எப்ப வந்தீங்க? திருப்பூர்லே இருந்து மாற்றலாகி நம்ம இடத்துப் பக்கம் வந்துட்டீங்களா? பதவி உயர்வா? இன்ஸ்பெக்டராவா? கேக்கவே சந்தோஷமா இருக்கு. அவர் ரொம்ப பிரியமா இருக்காரு... எங்க வீட்டுக்கு வரப்போறீயளா? வாங்கண்ணே... எப்பவேணும்னா லும் வாங்கண்ணே...''

இன்னும் சிரிப்பும், சிந்தாத பூரிப்புமாக பேசிக் கொண்டிருக்கிற சீதாலட்சுமி- பெருமையும், பெருமிதக் களிப்புமாகத் தெறிக்கிற சந்தோஷச் சொற்கள்.

தைரியமும், ததும்பலுமாகப் பொங்கி வழிகிற சீதாலட்சுமியைப் பார்க்கிற ரெங்கராஜ்.

அவனுள் றெக்கை ஒடிந்து, சின்னப்புள்ளியாக குறுகிப் போய்விடுகிற ராட்சசம். மனமூலையின் இடுக்குக்கள் பம்மிப் பதுங்குகிற குரூரம். வெளிமனசின் விசால ரூபம்.

'கையாளாக சேவகம் பண்ணுன என்னை, பண்ணையாராக்கின புண்ணியவதி சீத்தா. அவளைக்

கண்ணுக்குள்ளே வைச்சு, போற்றிப் பாதுகாக்குறதுதான் ஞாயம்.' அவனுள் ஓடுகிற நினைவலைகள்.

வெளிமனசின் விசால ரூபத்தின் காற்றாக ஓடுகிற மாய நினைப்பே, மனக்கனத்தைக் குறைத்து, இருட்டைத் துடைக்கிறது.

தந்திரமற்று இருப்பது மனசுக்கு லேசாக இருக்கிறது.

ரெங்கராஜ், சீத்தாவை ஒரு பாச உணர்வுடன் பார்க்க ஆசைப்பட்டான்.

ராணி
ஜுன் 2008

★ ★ ★

12. தலைமறைவு

'தீவாளியே மழை தண்ணியில்லாத வரட்டுத் தீவாளியாயிருமோ?' என்று கலங்குகிற முத்தையன்.

புரட்டாசி இருபத்தினாலு ஆகியும் இன்னும் மழைக் கண் திறக்கவில்லை. பங்குனி, சித்திரை மாசம் மாதிரி வெயில் வெளுத்து வாங்குகிறது. மானாவாரிக் கரிசல் காட்டில் ஆவணி மாசம் விதைத்த மக்காச்சோளம் சிறு பயிராகி... தாயில்லாப் பிள்ளையாக வாடி வதங்கி சாம்பல் பூத்துக்கிடக்கிறது.

பார்க்கிற முத்தையனுக்கு ஈரக்குலை கலங்குகிறது.

பச்சைப்பிள்ளைகள் பட்டினியில் கருகுகிறதைக் காணும் தாய் மனசுபோல முத்தையனின் தவிப்பு. போன மூணு வருஷமாய் நல்ல மழை. தப்பித் தவறி பருவமழை பெய்யாவிட்டாலும்... புயல் சின்னத்தால் வந்த மழை.

'டி.வி.'யில் தினந்தோறும் அதிகாரி என்னத்தையாவது சொல்லிக்கொண்டிருப்பார்.

மழை 'சொரு, சொரு' என்று ஊற்றிக்கொண்டிருந்தது. கரிசல்மண் நனைந்து, குழைந்து, நீரடித்து, நீர்க்கசிவாக நின்றது. மக்காச்சோளப் பயிருக்கு 'டி.ஏ.பி.'யும், யூரியாவும் விதைக்க விதைக்க... மொறு, மொறு' வென்று முறுக்கேறி வளர்ந்தது. மயில்தோகை விரிந்த மாதிரி கண்ணுக்குக் குளிர்ச்சியான ஒளியில் மக்காச் சோளப் பயிர்.

நல்ல விளைச்சல், விலையும்கூட, நல்ல விலை தான். எண்ணூறுக்கும் மேலே விற்றது. ஒரு மூட்டை.

நாள்பட்ட கடனெல்லாம் அடைபட்டது. பெரிய பெரிய குட்டி போட்ட வட்டிக்கடனெல்லாம் அடைத்து முடித்த நிம்மதி. இந்த வருஷமும் இப்படித்தானே இருக்கும் என்ற நினைப்பு.

அந்தத் தெம்பில்தான் ரெண்டாயிரம்... நாலாயிரம் என்று கணக்குப் பாராமல்.... 'டக்கர்' உழுவுக்கு தந்து... மூவாயிரம் ரூபாய்க்கு ''பை விதை'' வாங்கி... ஆவணி மாசமே விதைத்தாகிவிட்டது. எல்லாமே புதுக்கடன் தான்.

ஆவணி கடைசியிலேயே வெறுங்காற்று 'பாழ் பாழ்' என்று அடிக்கிற கூத்து. மண்ணை வாரித்தூற்றியது.

பருவம் தப்பிய கூத்தாட்டம். வியாபாரிகள் உஷாராகிவிட்டார்கள். மழை ரொம்ப பின்தங்குகிறதே... வறட்சியாயிடுமோ!

மழைக்கு வழி தெரியலே. கடன் குடுக்கறதை நிறுத்தியாகணும். சம்சாரிக்கு தர்ற கடனைக் கைப்பத்த வழியில்லாமப் போயிரும். மழையோட வழியில் தானே, மானாவாரி சம்சாரி பொழைப்பு வழி?

புரட்டாசி நாலாம் தேதி. மளிகைக்கடைக்குப் போயிருந்தான் முத்தையன். எப்பவும்போல உரிமை யான சகஜம்.

ரெண்டு முறுக்கு வாங்கித் தின்றான். ரெண்டு பழம் பிய்த்துத் தின்றான். ஒரு 'கலர்' குடித்தான்.

''ரெண்டு சீரெட்டு' என்றான்.

எடுத்து நீட்டிய கடைக்காரர், ஒரு தினுசாக முறைத்தார். கண்ணில் கடுப்பு. முகத்தில சிடுசிடுப்பு.

''பாக்கி எண்ணூறுக்கும் மேலாயிருச்சு.''

''ஆகட்டும். ஒரு மூட்டை மக்காச்சோள வெலை தானே?''

''வெளைஞ்சாத்தானே?''

இடக்கும் இளக்காரமுமான கடைக்காரரின் நையாண்டிக் குரல், முத்தையன் மனசு 'திக்'கென்றது.

''ஏன்... வெளையாம எங்க போகுது?''

''மழைத்தாய் மனசு வைச்சாத்தானே? தாய் மனசு கல்லாயிருச்சுன்னா... வெள்ளாமை எங்குட்டு வெளை யும்?''

''மழை இல்லாட்டாலும் மனுச நாணயம் காய்ஞ்சு போகாது. மானமரியாதையோட, சூடுசுரணையோட நாங்க நடந்துக்குவோம்.''

கோபம் கோபமாக எகிறிச் சீறுகிற முத்தையன். அதற்கெல்லாம் மடங்காத கடைக்காரர், கூடுதலாக எகிறினார்.

''நீ சூடு சுரணையோட இருந்தாலும், கடைப் பாக்கி வரணும்லே? வெள்ளாமை வாடிச்சுன்னா... என்னத்தை வைச்சு குடுப்பே?''

''தலையை அடகு வைச்சாச்சும் குடுப்பேன்''

''இந்த வீராப்புப் பேச்சுக்கெல்லாம் ஒரு அர்த்தமு மில்லே... உன் தலையை எந்த நாய் அடகு வாங்கும்?''

மட்டு மரியாதை இல்லாமல் பேசுகிற கடைக்காரர். அவமரியாதை செய்து ஆத்திரமூட்டுகிற கடைக்காரர்.

இவனுக்குத் தாங்க முடியாத கோபம், மனக் கொதிப்பு.

''இதெதுக்கு வளவளப்பேச்சு? இம்புட்டுத் தூரத்துக்கு என்னைக் கேவலமாப் பேசுன பிறகு, என்னத்துக்கு சங்காத்தம்? ஒம்மோட கடைக்கே வரலை. போதுமா?''

இதுதான் அவரது எதிர்பார்ப்பு. இதற்குத்தான் இம்புட்டுப் பேச்சு பேசி... சீண்டிவிட்டது. கடைப்பாக்கி வளர்வது நின்றாலே போதும். தன் தலை தப்பிவிடும்.

''கடைக்கு வரவேண்டாம்னு யாரும் சொல்லவா செய்வாக? கையில் துட்டோட வந்தாப் போதும்.''

மழையில்லாக் கொடுமையில் கடைக்காரரின் மனஈரம் உலர்ந்துவிட்டது. வெட்டு ஒன்று, துண்டு

ரெண்டாகப் பேசுகிறார். ''போய்த் தொலை சனியனே'' என்பது மாதிரிப் பேசுகிறார். ஊர் உலகத்துக்கு சோறு போடுகிற சம்சாரிக்கு, இதுதான் மரியாதை. இம்புட்டுத் தான் மதிப்பு.

முத்தையன் மனசு கிடந்து கசந்து அழறியது.

அன்றைக்கிலிருந்து கடை இருக்கும் திசையிலேயே விழிக்கவில்லை. மனசு வெறுத்து உலர்ந்து போகவைத்த இழிவு.

'ச்சே... ஒரு மழை இல்லேன்னவுடனே... வருஷக் கணக்கான பழக்கத்தை முகமுறிச்சு, 'இல்லே'ன்னு ஆக்கிட்டாரே...'

உரக்கடையிலும் அப்படித்தான். திரும்பிய திசை யெல்லாம் இதே கூத்துத்தான். 'மழை வராது.. மழை வராது' என்கிற தவளைக் கூச்சல். கடன் தருகிறவ னெல்லாம் கை சுருக்குகிறான். முகம் சுண்டுகிறான். ஊர் நிலவரமே சரியில்லை. அவனவன் பேச்சுவார்த்தை களை நிறுத்துகிறான். உறவுகளே உலர்ந்து, காய்ந்து, வெடிப்புகள் கண்டு...

ஐப்பசி இருபத்திரண்டில் தீபாவளி. இன்னும் ஒரு மாதம் கிடக்கிறது. அதற்குள் மழை வந்துவிடுமா?

இப்பப் பெய்யாத மழை. இருபது நாள் கழித்து பெய்வதால்... யாருக்கு என்ன பிரயோசனம்? காடு கரைகளில் பயிர்கள் வாடிக் கருகி உயிர்விட்டபிறகு .. வருகிற மழையால் யாருக்கு என்ன உபயோகம்?

'வந்துரட்டா, வந்துரட்டா' என்று மிரட்டுகிற தீபாவளி. வந்து நிற்கப்போகிற தீபாவளிக்கு என்ன பதில்

சொல்ல? எப்படி சமாளிக்க? கைக்கும் மெய்க்கும் காசில்லாமல் என்ன செய்ய? யாரிடமாவது, எப்படியாவது பணம் புரட்ட வழி இருக்கிறதா?

வெயிலை வெறிக்கிற முத்தையன். வெளியே தூரத்தில் கானல் அலைகள். அடைமழை ஊற்றவேண்டிய நேரத்தில், கானல் அலைகள் கனல்கிற வெயில். சம்சாரி பிழைப்பும் கானல்தானா?

கரிசல்காட்டிலிருந்து திரும்புகிற முத்தையன். ஏறு வெயில் தீயாய் காந்துகிறது. 'ரோடு' ஓட்டை உடைசலாக வாய் பிளந்து கிடக்கிறது. நாய் வாயில் சிக்கிய வெல்லச்சாக்காக நார்நாராகக் கிழிந்துகிடக்கிறது.

மடியில் துழாவினான். நல்லவேளை, ஒரு பீடி இருந்தது. மன நமைச்சலோடு வாய் நமைச்சலும் சேர்ந்துகொண்டது. பற்ற வைத்துவிடலாமா என்று தவிக்கிற மனசு.

'வேண்டாம்... வீட்லே போய் தண்ணி குடிச்சுட்டு பத்த வைச்சுக்கலாம்.'

நடையை எட்டிப் போட்டான்.

முந்தாநாள் சாயங்காலம். வீட்டு வெளித்திண்ணை யில் உட்கார்ந்திருந்தான் முத்தையன். பால் வாங்கி விட்டு வந்த மாடத்தி, அவசர அவசரமாக வெல்லம்... தேயிலை போட்டுக் கொதிக்க வைத்தாள்.

கவலைகள் நிறைந்த சோம்பலான நினைவுகள் அவனுள் ஈக்கூட்டமாக மொய்த்துக்கொண்டிருந்தன.

செம்பு நிறைய பச்சைத் தண்ணீரும், தம்ளர் நிறைய பால் காப்பியுமாக நீட்டினாள். கூலி வேலைக்குப் போய், வேனலாய் கொதிக்கிற வெயிலில் 'மாங்கு மாங்கு' என்று களை வெட்டி உயிரைக் கொட்டிவிட்டு வந்தவள் என்கிற அயற்சி, முகத்தில் தெரிகிறது. வியர்வை உப்புக் கோடுகள். காய்ந்து பரட்டையான தலைமுடி.

ஒரு காலை மடக்கி, ஒரு காலை தொங்கப்போட்டு சுவரில் சாய்ந்திருக்கிற அவன் பக்கத்தில் பாந்தமாக உட்கார்கிற மாடத்தி, உலர்ந்த உதட்டில் ஈர மின்னலாக ஒரு புன்னகை. கண்ணில் ஒரு குழைவுப் பார்வை.

அவனுக்குள் பதற்றமும், திகிலும் றெக்கை அடிக்கின்றன. 'என்ன கேப்பாளோ?' என்ற கிலி.

''என்ன மாடத்தி...?''

''ஒண்ணுமில்லே... தீபாவளி வரப்போகுது. நாம என்னமாச்சும் செய்யணும்லே?''

''என்ன செய்யணும்?''

''சின்னப் பாப்பாவா, நீங்க? ஒங்களுக்குத் தெரியாதா?''

''சொல்லு...'' உயிர் அறுந்த துவளலில் குரல்.

''சின்னப்பொண்ணு சின்னத்தாய்க்கு வேட்டு வாங்கணும். நாம மூணு பேருக்கும் துணிமணிக எடுக்கணும். தைக்கக் குடுத்து வாங்கணும். பலகாரம் பச்சடி செய்ய ரூவா வேணும். இம்புட்டுத்தான்.''

''கையிலே காசில்லே. கடனும் கெடைக்க மாட்டேங்குது. நா என்ன செய்ய?''

வெட்டுப்பட்ட பல்லி வாலாக துடிக்கிற அவனது இமை ரோமங்களில் ஈரச்சுமை. கலங்கிய மனசின் வருத்தப்பாரம்.

''கருசக்காட்டு வெள்ளாமை கருகிக் கிடக்கு. மழைக்கண்ணு தெறக்கலே. மாரியாத்தா மனசு பாறையாப் போச்சு. பயிர்க வாடுறதைப் பாத்துட்டு... துட்டுள்ள மகராசாமாருக எச்சரிக்கையாகுறாக... என்ன செய்யச் சொல்லுதே, என்னை?''

''அதுக்காக? அப்படியே வுட்டுற முடியுமா? ஊருபூராவும் புதுத்துணியும், மத்தாப்பும், தோசையுமா கொண்டாடிக் கூத்தாடுறப்ப... நாம மட்டும் காய்ஞ்சு கெடக்கவா? பாக்குறவுக கைகொட்டிச்சிரிச்சுரமாட்டாக? இந்தக் கேவலத்தை எப்படித் தாங்க?''

மாடத்தி சொல்லச் சொல்ல... மனம் கலங்கிப் போய் பார்க்கிற முத்தையன். அவன் கண்ணில் மனசின் வலி. காப்பியைக் குடித்தான். மனசு கசந்தது. முகம் கருத்தது.

சின்னத்தாய், விடிந்தவுடன் களத்தில்தான் போய் நிற்பாள். நேற்றிலிருந்தே வேட்டுச் சத்தம் ஊர்பூராவி லும் தெருக்காடு முழுக்க 'கேப்' வெடி வெடிக்கிற சத்தம். சீனிவேட்டு சரம் சரமாக வெடிக்கிற சத்தம். கருமருந்து வாசம்.

சின்னத்தாய்க்கு அழுகை அழுகையாக வருகிறது. அம்மா உட்கார்ந்து 'மூசு மூசெ'ன்று அழுகிறாள். தலைவிரி கோலம். மூக்கைச் சீறி சீறி சுவரில் இழுவுகி

றாள். தான் அழுவதைக் காட்டினால்... அம்மா ரொம்ப அழுவாள். பாவம்.

சிறுமி சின்னத்தாய் அழுகையை அடக்கிக் கொண்டாள். தெருவுக்குப் போகப் பயம். தெருவுக்குப் போகாமலிருந்தால்.. அம்மா நனைந்த காகிதமாக கிழிந்து கிடக்கிறதைப் பார்க்கிற கொடுமை.

மனசைக் கல்லாக்கிக்கொண்டுத் தெருவில் இறங்கினாள்.

போனவாரம், சாயங்கால நேரத்தில்... களத்தில் பிள்ளைகளின் ஆட்டம், பாட்டம், ஆலமரத்து அந்திநேர மைனாக்களாகக் கூப்பாடு கூச்சல்.

சின்னத்தாயும் அந்தக் கூட்டத்தில் புழுதி பறக்க குதித்துக்கொண்டிருந்தாள். சக சிறுமிகளுடன் கை கோர்த்துக்கொண்டு வட்டமாக நின்று, குதித்து குதித்து வட்டச்சுற்று சுற்றினாள். காலெல்லாம் புழுதி. சுற்றிலும் மண்டலமாக எழும்புகிற புழுதிப் படலம்.

ஆடிக்களைத்த நிலையில்... ''உஸ்ஸ் ஆத்தாடி'' என்று உட்கார்ந்தனர். அப்படி அப்படியே,

சின்னத்தாய் கையைக் கோர்த்திருந்த சின்னலட்சுமி கேட்டாள்.

''ஒனக்கு தீபாவளிக்கு புதுச்சட்டை எடுத்தாச்சா?''

''இல்லே... எடுக்கணும்''

''எப்ப? தைக்கப் போடணும்லே?''

''ரெடிமேடாக எடுக்கப் போறாரு. எங்க ஐயா, புது மாடலா வந்திருக்கிற சுடிதார்.''

தொடர்ந்து சின்னத்தாய், கெஞ்சலும் கொஞ்சலு மான குரலில் வாங்கப்போகிற சுடிதாரை கனவு ததும்பும் கண்களுடன் வர்ணித்தாள்.

''சூட்டு, ரோஜா நிறம். சுடிதார், கருநீலம். சால், ரோஜா நிறம். ரெண்டு பக்கமும் குஞ்சம் குஞ்சமாக தொங்கும். பாக்கப் பாக்க ரொம்ப அழகா இருக்கும்.''

இப்போது தெருவில் இறங்குகிற சின்னத்தாய், பழைய பாவாடை, பழைய சட்டை. வர்ணித்து வர்ணித்து பெருமையடித்தது, மனசுக்குள் வர... 'இப்ப சின்ன லட்சுமி கண்ணில் படாமலிருக்கணுமே?' என்று பயந்து செத்தாள்.

தெருவில் எல்லோருமே புதுத்துணி உடுத்தியிருந்த னர். அவரவர் புதுத்துணியின் சரசரப்பையும், விடைப்பையும் தடவிப் பார்த்துக்கொள்கிற அவர்களை ... ஏக்கமும், சோகமுமாகப் பார்க்கிற சின்னத்தாய், ஒளிமயமான ஊரில், இருட்டுக் கற்றையாக இவள்.

களத்திற்கு வந்து சேர்ந்தாள். சின்னலட்சுமி உட்பட எல்லாரும் புத்தம் புதுத்துணியில் சிரித்தார்கள்.

''என்ன.... ஒனக்கு சுடிதார் எடுக்கலியா?''

''எங்கய்யா.... எங்கேயோ ஊருக்குப் போயிருக் காரு. ஏழெட்டு நாளாச்சு. இன்னும் வரலே. எங்கய்யா இருந்துருந்தா... எனக்கு புது சுடிதாரு எடுத்துப்பாரு... தெரியுமா?''

உள்ளுக்குள் சீழ்வடிகிற புண்ணின் ரணத்தைச் சகித்துக்கொண்டு... விட்டுக் கொடுக்காமல் கித்தாப்பு பேசுகிற சின்னத்தாய். அவளுக்கே அவள் பொய்யாக...

குரலின் நடுக்கம். கண்களின் இமை ரோமத்தின் மனஈரம்.

சின்னலட்சுமி இவளையே கூர்ந்து பார்க்கிறாள்.

''நீ சொல்றது பொய்யி.''

''இல்லே... சத்தியமா...''

''உங்கய்யா தீபாவளிக்குப் பயந்து, எங்கேயோ ஓடிட்டாராம். எங்க அம்மாவும், அய்யாவும் பேசிக்கிட்டிருந்ததை நானும் கேட்டேனே....''

சின்னத்தாய்க்கு அடிப் பாவாடையை உருவிய மாதிரி அவமானமாக இருந்தது. அரிவாள் வெட்டாக விழுந்து, மனசைத் துண்டாக்கியது. எல்லாரிடமும் கேலிச்சிரிப்பாணி.

மூடி மறைத்து, வீட்டுக் கவுரவத்தைக் காப்பாற்ற அவள் சொன்ன பொய், கிழிபட்டுவிட்டது.

வெடித்து அழுத சின்னத்தாய். எல்லோரும் அவளைப் பரிவும், பரிதாபமுமாகப் பார்ப்பதைத் தாங்கிக்கொள்ள இயலாத அந்த அரும்புவுக்கு, மனசும் இப்ப இழிவாகத் தெரிகிறது.

கதறி அழுகிற அழுகையும், கண்ணீருமாக அடித்துப் பிடித்து ஓடிவருகிற சின்னத்தாய். சிறுமிகளுக்குள்ளி

ருந்து பிய்த்துக்கொண்டு, பிய்ந்துபோன சிறகுடன் ஓடுகிற சிட்டுக்குருவி. ஏழ்மையால் காயம்பட்ட குருவி.

வீடு வந்து பார்த்தால்...

வீட்டு வெளித் திண்ணையில் உட்கார்ந்திருக்கிற அப்பா முத்தையன். பக்கத்தில் மஞ்சள் நிறப் புதுத் துணிப்பை.

''பத்து நாளா கூலிக்கு கெணறு வெட்டுனேன். கெடைச்ச கூலியிலே துணிமணி எடுத்தேன். பெறகு என்ன செய்ய?'' என்று அம்மாவிடம் சொல்கிற அப்பா.

இப்போதும் வெடித்து அழுகிற சின்னத்தாயை, பரிவுடன் இழுத்தணைத்துக் கொண்டான், முத்தையன்.

ராணி,
மார்ச் 2008

✱ ✱ ✱

13. துவைப்பு

*அ*ந்தக் காரைவீட்டை விட்டுத் தெருக்கோடி வந்த மாடத்திக்கு மூச்சிரைத்தது. தாங்க முடியாத வெளமும் (கோபம்) வேக்காடுமாக தகித்துக் கிடக்கிறது மனசு.

'என்ன செய்ய... என்ன செய்ய' என்று மனசு கிடந்து பரபரக்கிறது. உலை பானைச் சோறாக கொதித்து தள தளக்கிறது.

தெருவில் தகிக்கிற மதிய வெயில். ஊரும் தெருவும் வெறிச்சோடிக் கிடக்கிறது. ஒரு சுடுகுஞ்சுக் கூட கிடையாது. எல்லாம்...காடு கரைகளில் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

'அங்க, இங்க' என்று ஒன்றிரண்டு கிழடு கட்டைகள், நோக்காடு பிடித்தவர்கள் இருக்கிறார்கள்.

மாடத்தி வேகவேகமாக நடக்கிறாள். ஆங்கார நடையில் 'தக், தக்,தக்'கென்று காலெடுத்து வைக்க, தரையே அதிர்கிறது.

வீடு போய்ச் சேர்ந்தாள். அழுக்குத் துணி பொட்டலம் மூன்றும் ஒரு குன்று போல கிடக்கிறது. துவைத்து மடித்து வைத்த துணிகள் ஒரே பொட்டலமாக இருக்கிறது.

இனம் பார்த்து, குறி பார்த்து இன்னன்னார் வீட்டுத் துணிமணிகள் என்று மடித்து வைத்தவை தனியாக இருக்கின்றன.

அதில் ஒரு வீட்டுத் துணி சற்று பெரிய பொட்டல மாக இருக்கிறது. அதுதான் முத்துராசு வீட்டுத் துணி.

ஆள் இருந்தால் கொடுத்து விடலாமே என்ற நினைப்புடன், அந்த வீட்டுக்குள் எட்டிப் பார்த்தாள். அதற்காக வீட்டுக்குள் நுழைந்தவளுக்குத்தான் இந்த நிலைமை.

நினைக்க நினைக்க நெஞ்சு கிடந்து கொதிக்கிறது. 'என்ன செய்ய... என்ன செய்ய...' என்று நினைவு கிடந்து பரபரக்கிறது.

இது மூணாவது தடவை. இனியும் பொறுத்துப் பொறுத்துப் போனால், ''சம்மதித்த'' மாதிரியாகி விடும்.

முத்துராசு நல்ல தேன்நிறம். தாட்டியமான ஆள். காட்டு உழைப்பில் காப்பேறிய கறிமுறுக்கு. வயசு நாற்பதுக்குள்தானிருக்கும். சின்ன மீசை.

அவர் பெஞ்சாதி வீட்டு வேலை பார்க்கும். காட்டுக்குப் போகாது. ஏதோ உடம்பில் ஒரு பிரச்சனை. தாம்பத்தியத்துக்கு முடியாத சிக்கல்.

போன மாசம் கல் கிடங்கில் தெப்பம் மாதிரி தண்ணீர். கருங்கல் குவாரி இருந்த இடம். மிகப்பெரிய

கிடங்கு. மழைத் தண்ணீர் வற்றாது. வெயிலுக்கு வற்றினால்தான் உண்டு. கருங்கல் தண்ணீரை குடிக்கவா போகிறது?

அந்தத் தண்ணீரில்தான் மாடத்தி துவைப்பாள். சுமக்க கழுதையில்லை. கழுதை வைத்திருக்க இயல வில்லை. கட்டுப்படியாகாது.

தலைச்சுமையளவுக்கு கொண்டு போய் துவைத்து காயப் போடுவாள்.

துணிகளையெல்லாம் துவைத்து முடித்து விட்டு... கருங்கல்பாறையில் காயப் போட்டு விட்டு, ஒரு வேலி மரத்து நிழலில் உட்கார்ந்திருந்தாள்.

பக்கத்தில் ரெண்டு மைனாக்கள் 'கிச்சட்டி கிச்சட்டி' என்று கத்துகின்றன. அது குதித்து பறக்கிற லட்சணம். இரை பொறுக்குகிற அவசரம்.

தோகையில்லாத பெண்மயில்கள் நாலைந்து அந்தப் பக்கமாய் சாவகாசமாய் நடந்து போயிற்று. இறங்கு பொழுது வெய்யில், சுள்ளென்று அறைகிறது.

பறக்கிற தட்டான்களையும், கரிச்சான்களையும், தேன்சிட்டுகளையும் பார்த்துக்கொண்டும், மனம் போன போக்கில் யோசித்துக்கொண்டும் இருந்த மாடத்திக்குத் திக்கென்றது.

ஆள் அரவமில்லாத அத்துவானத் தனிமையில், நினைவின் ஆழத்தில், புதைந்து கிடந்த மாடத்திக்கு... சட்டென்று கேட்ட ஆண் செருமல்.

பதறியடித்துப் போய் எழுந்தாள். ஒற்றையில் நிற்கிறோமே என்ற உதறல் பதற்றம்.

மண்வெட்டி தோளிலிருக்க... வட்டக் கட்டு தலையிலிருக்க முத்துராசுதான் இருந்தான்.

''மாடத்தி... என்ன ஒத்தையிலே இருக்கியா?''

''ம்''

''தொவைச்சு முடிச்சுட்டீயா?''

''செத்தாத்தான் முடியும்''

''என்னத்துக்கு வெறுப்பா பேசுதே?''

''விரும்பிப் பேச என்ன இருக்கு?''

''எங்கிட்டே விரும்பிப் பேசிப்பாரு. அதோட சுகம் அப்படி இருக்கும்.''

''என்ன பேசுதீக?''

''நானும் கிட்ட வரட்டா? ரெண்டு பேரும் கெடங்குக்குள்ளே போவமா?''

மோகமும் தாகமுமாய் அவன். மூர்க்கம் தெரிகிற கண்ணில், காமத்தினவு. வெறுப்பும் பயமுமாக அவள். உள்ளூர ஓடுகிற அச்ச வியர்வை.

அவனது வெட்கங்கெட்ட கேள்வி. அவளுக்கு வெளத்தை கிளப்பியது. ஆங்காரமும் ஆத்திரமுமாய் ஆவேசப்பட்டாள்.

''துணி துவைக்கிற ஏகாலிதானே, தாழ்ந்த சாதிக்காரி தானே, ஒத்தை வீட்டுக்காரிதானேன்னு ஏளனமா நெனைச்சு,

கொழுப்பெடுத்தத திமிர்த்தனமா பேசாதீரும். மானங் கெட்டுப் போகும்.''

சத்தத்தை உயர்த்தினாள். வலது கையை நீட்டி நீட்டிப் பேசிய அவளது வேகம். கனல் துண்டுகளாக தெறித்த வார்த்தைகள். கண்ணகியாகச் சீறிச் சினந்த முக விறைப்பு.

முத்துராசு அரண்டு போனான்.

''மாடத்தி, கோபப்படாம... மனசோட மூலையிலே என் நெனைப்பைப் போட்டு வை. இப்ப இல்லாட்டா, இன்னொரு நாள். எம்பேச்சைக் கேட்டா... ஒனக்கு ஆதாயம் இருக்கும்''

''மானங்கெட்ட ஆதாயத்தை நாய் கூட சீந்தாது. த்தூய்...''

முத்துராசு போய்விட்டான்.

மாடத்தி தலையிலடித்துக்கொண்டு, 'கோ, குலை' யென்று கதறினாள். உள்ளுறைந்த சோகமெல்லாம் கொப்பளித்துக் கொண்டு பீறிட்டது.

''அறிவு கெட்ட ஆம்பளை எவளோ ஒரு சிறுக்கியை கூட்டிக்கொண்டு, என்னைத் தவிக்க விட்டுப் போனதாலே தானே... வந்த நாய், போன நாயெல்லாம் 'வாரீயா'ன்னு கேக்கு...? வாய் கூசாம கேக்குற தைர்யம் வருது?''

கற்றைச் சோகம் நெஞ்சைத் தாக்க... தனது கோணல் தலையெழுத்தை எண்ணி எண்ணி அழுதாள்.

''நாதியத்த சிறுக்கியா போய்ட்டேனே...'' என்று கதறியழ அழ.. அவளுக்கே அவள் அவலமாகத் தோன்றி னாள்.

பத்து நாளைக்கு முன்னாடி...

''மாடத்தி... நீ ஆடு, குட்டிக வைச்சிருக்கே யில்லே?''

முத்துராசு பெஞ்சாதிதான் கேட்டது.

''ஆமம்மா...''

''நம்ம மேலப் புஞ்சையிலே அகத்திக் கொழை ரொம்ப கிடக்குதாம். வேணும்ங்குற அளவுக்கு ஒடிச்சுக் கட்டிக்கோ.''

''யாரு சொன்னதும்மா?''

''நம்ம மோலாளிதான் சொன்னாரு. நீ போய் ஒடிச்சுக்க.''

சாயங்காலம். வெயில் மறைந்துவிட்டது. மேகத்து வெளிச்சம் மிச்சமாயிருக்கிற நேரம். அகத்திக் கொழை ஒடிக்கலாம் என்று புறப்பட்ட மாடத்தி. மேற்கில் களத்தைக் கடந்து, ஓடைக்குள் இறங்கி ஏறி.... மஞ்சணத்தி மரங்கள் நிற்கிற மேலப்புஞ்சைக்குள் நுழைந்தால்...

அங்கே காத்திருக்கிற முத்துராசு.

இவளுக்குள் குலை பதறியது. 'அகத்திக் கொழையைக் காட்டி, 'ஆட்டை' வளைச்சுப் போடுகிற சூழ்ச்சியா இது' என்று திகைத்துத் தவித்தாள்.

வெள்ளாட்டங் கிடாய் மாதிரி பல்லை காட்டுகிற முத்துராசு.

இவளுக்குள் சண்டாளமாக பொங்கிக் குமுறுகிற ஆத்திரம். ருத்திரமாடுகிற பத்திரகாளியாக அவளுக்குள் தீக்கற்றை.

''ச்சீய்... நாயே...'' என்று காறித் துப்பி விட்டாள் மாடத்தி. வலது கையை நீட்டி ஒற்றை விரலை உயர்த்தி... ஆவேசமாகக் கண்களை விரித்தாள்.

அனல் வீசுகிற அக்கினியின் வெக்கை.

''மானங்கெட்ட நாய்... ஒன்னை மாதிரியா என்னை நெனைச்சே? நா, சாதிமான் கன்னு. ஓடைக்காட்லே மேய்ஞ்சு உசுரு வாழணும்னு நெனைக்குற ஈனப் பொறப்பு இல்லே..''

வீடு வந்து விழுந்தவுடன் வெடித்தழுகிற அம்மாவை சுற்றி நின்று கொண்டு ரெண்டு பெண் பிள்ளைகளும், ''என்னம்மா, என்னம்மா'' என்று கேட்டுக்கொண்டே அழுதன.

இதோ... இன்றைக்கு மூணாவது தடவை. துவைத்த துணியை வீடு வீடாகக் கொடுக்கணும். கடைக்குப் போய்விட்டு வந்தாள், மாடத்தி.

வழியில் முத்துராசுவின் காரை வீடு. தலைவாசல் கதவு சாத்தியிருந்தது.

'அந்த வீட்டம்மா இருக்குதான்னு பாத்தா, வெளுத்த துணியை குடுத்தரலாமே' என்று நினைத்தாள்.

கதவில் கை வைத்து தள்ளினாள். உள்ளே, ஆளற்ற வெறுமை. பெரிய அகலமான வீடு. பகல் நேரத்திலும் இருட்டாகக் கிடந்தது.

''யாருமில்லியா?''

''அவா... ஊருக்குப் போயிருக்கா. உள்ள வா மாடத்தி.''

முத்துராசுவின் விஷமக்குரல். ஆசையும் காமமும் வழிகிற விஷமக் குரல்.

பின் வாங்க முயன்ற அவள் கையை எட்டிப் பிடித்த அவன். உள்ளிழுக்க யத்தனித்த அவனது மூர்க்கம்.

தேள் கொட்டியது போலிருந்தது மாடத்திக்கு. சடேரென்று கையை ஒரு உதறு உதறி... உருவிக் கொண்டு... தெறித்தோடி வந்தாள்.

அழுக்குத் துணிப் பொட்டலத்தில் விழுந்து கதறிக் கொண்டிருக்கிற மாடத்தி. 'என்னமாச்சும் செய்யணுமே' என்று தீயாய் தகிக்கிறாள்.

இன்னும் மௌனமாயிருந்தால், சம்மதித்த மாதிரி யாகி விடும்.

என்ன செய்ய...? பல திசைகளில் ஓடுகிற நினைவுகள்.

விளக்குமாறை தூக்கிக் கொண்டு அவன் வீட்டு வாசலுக்குப் போய் விடலாமா? நாலு சாத்து சாத்தி.. மண்ணள்ளி தூற்றி... சபித்துவிட்டு வந்து விடலாமா?

விடலாம். அதுதான் நியாயம்.

ஆனால்...

இவள் ஒற்றை வீட்டுக்காரி. தாழ்த்தப்பட்ட சாதிக்காரி. நாதியில்லை.

'பிரச்சனை' என்று வந்துவிட்டால்... சாதிசனம் ஒன்று கூடிக்கொள்ளும். சொந்தம் பந்தமெல்லாம் கை கோர்த்துக் கொள்ளும்.

ஒற்றையாளாய் இவளை நிறுத்தி... ஆளும்பேரும் கூடி குற்றவாளியாக்கி விடுவார்கள்.

ஊர்க்கூட்டத்தில், சொல்லலாமா?

சொன்னால்... நியாயம் கிடைக்குமா?

கிடைக்காது.

சாதி பார்த்து... சாய்ந்து கொள்வார்கள். ஊரறிய சுய சாதிக்காரன் மானம் கெடுவதை... ஊர் சகிக்காது. இவளைத் தான் பலியிடும்.

''முன்னூறு ரூவா கேட்டா. சந்தோஷப்படுத்துதேன். கொஞ்சம் கொஞ்சமா கழிச்சுக்கோங்கன்னு சொன்னா. நா மாட்டேன்னுட்டேன். அதையே எம்மேலே பழியா மாத்திப் போட்டுட்டா.''

... என்று முத்துராசு சொன்னால்... ஊர் அதைத்தான் நம்பும். ஏழை சொல் அம்பலம் ஏறுமா? ஊரறிய கேவலப்பட்டு, அசிங்கப்பட்டு, அவமானப்பட்டு தலை தொங்கி நிக்கணுமா?

அலை பாய்கிற நினைவுகள். கொதித்து கொந்தளித்து நாலா திசைகளிலும் சீறிச் சினந்து பாய்கிற நினைவுகள்.

மதியம் சாப்பிடத் தோன்றவில்லை. குலைபட்டினி யாகக் கிடந்தாள். எழத் தோன்றவில்லை.

சாயங்காலமாயிற்று.

மாலை மாலையாக வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். அவிழ்ந்து கிடந்த தலைமுடியை உதறி அடித்துக் கொண்டை போட்டுக் கொண்டாள். பெரு மூச்சுடன் எழுந்தாள்.

கதவை இழுத்துச்சாத்திவிட்டு, 'வேகு, வேகு' என்று நடந்தாள். நடையில், தரை அதிர்ந்தது.

தெற்குத் தெருவில் தான் முத்துராசுவின் மாமனார் இருக்கிறார். இன்னும் தாட்டியமாக இருக்கிறார். அவர் முன்னால் போய் நின்றாள்.

''என்ன மாடத்தி?''

''மோலாளி, நீங்க காலாலே எத்தித் தள்ளுற அழுக்குத் துணிகளை, கையாலே அள்ளி அலசிக் குடுக்கற சாதிக்காரி. உங்க நெழல 'தஞ்சம்'னு வாழ்றவ. நாதியத்த ஒத்தை வீட்டுச் சிறுக்கி...''

''ம்... சொல்லு... என்ன விஷயம்?''

''அழுக்கை அலசுறவா, நா நா அழுக்கா திரிய ணுமா? ஊர்க்கஞ்சியை குடிச்சாலும், மானம் மரியாதை யோட நா வாழக்கூடாதா? தேவடியாளா சீரழியணுமா?''

''யார் சொன்னா அப்படி?''

''ஒங்க மருமகன்தான்.''

நடந்தது பூராவையும் சொல்லிவிட்டு, மனப் பாரத்தை இறக்கி வைத்துவிட்டு, அழுகையும் கண்ணீரு மாக வீடு திரும்பினாள்.

கதர்ச்சட்டையை ஒரு மாதிரியாகவும், பாலியெஸ் டரை வேறு மாதிரியாகவும், சாரதி சட்டையை மற்றொரு மாதிரியாகவும் வெளுக்கத் தெரிந்த மாடத்திக்கு, முத்துராசுவை இப்படித்தான் 'துவைக்க' முடிந்தது. வேறு கதி?

இவள் வீடு வந்த பிறகு...

பத்து நாளைக்கு அந்த இரண்டு வீட்டிலும் சண்டையும் சத்தமுமாக ஒரு புயல் மையம் கொண்டது.

லேடீஸ் ஸ்பெஷல்
தீபாவளி மலர் 2007

✱ ✱ ✱

14. சூரிய வேர்வை

மயில் சனியன்களோடும் கிளிக்கழுதைகளோடும் மல்லுக்கட்டி மாயமுடியவில்லை சங்கையாவுக்கு. கோடைக்கம்பு நல்ல கட்டிக்கதிராக விளைந்து கிடக்கிறது. முக்கால் குறுக்கமும் கம்பு வெள்ளாமை தான். சாம்பல் நிறம் படிந்த பசுமையில் பயிர்கள், சாரல் காற்றுக்கு ஒன்றுபோல் ஆடி அசைகின்றன. காற்றின் அலைகளை பயிர்களின் நளின அசைவுகள் கண்ணுக்குக் காட்டுகின்றன. ஆனி கடைசியாகிவிட்டது.

விளைந்து, முற்றி, மணி பிடித்திருக்கிற கம்பங் கதிர்களை கொத்திக் குதறி நாசக்காடு பண்ண மயில்கள் படைபடையாக வந்து குவிகின்றன. இங்குட்டு விரட்டினால், அங்குட்டு, அங்குட்டு விரட்டினால் இங்குட்டு வந்து குவிகின்றன.

சங்கையாவும் நிற்காமல், சளைக்காமல் ஓடிஓடிச் சாகிறான். மயில்களோ... ''வந்து பார்டா'' என்பது

போல மாய் மாலம் பண்ணுகின்றன. வம்புக்கு இழுத்து, கூத்து கட்டுகின்றன.

பச்சைப் போர்வை அகலமாக மிதந்து வருவதைப் போல கிளிகள் கூட்டமாக பறந்து வரும். கதிருக்கொன் றாக நின்றுக்கொள்ளும். கிளிச்சுமை தாளாமல் பயிர்கள் வளைந்தாடினாலும், கிளிகள் கதிரை விடாது. கொத்திக் கொத்தி தின்கும். களவுக்குரிய பதற்றத்துடன் பரபரப் பாக கொத்தும். சங்கையா... எங்குதான் ஓடமுடியும்? எத்தனை திசைகளுக்குத்தான் ஓடிச்சாவது? 'ச்ச்சேய்ய்' யென்றாகிவிடும். நொந்து நூலாகும் மனசு.

கைலியை மடித்துக்கொண்டு ஓடுகிறான். வேர்வை யில் பனியன் 'தொப், தொப்'பென்று நனைந்துவிட்டது. பொழுது புறப்படுவதற்கு முன்பு, இவன் வந்தது. ஓட்டமும் கத்தலுமாக அதட்டல் கூப்பாடுகளுமாக மயில்களைத் துரத்த ஆரம்பித்தது. இன்னும் நிற்க வில்லை. நிற்கவிடமாட்டேன் என்கின்றன, மயில் சனியன்கள்.

காடுகளில் மரங்களை வெட்டி காலி பண்ணி விட்டனர். கண்மாயின் உள்வாயில் தோப்பாக நின்ற கருவேல மரங்களை வெட்டி விறகாக்கிவிட்டனர். மயில்களின் வாழ்விடமாக இருந்தது பூராவும் வெட்டி விறகாக்கப்பட... இரை பொறுக்க ஊருக்குப் பக்கத்தில் புலம்பெயர்ந்துவிட்டன, மயில்கள். ஊரோர வேப்ப மரங்கள், பனை மரங்கள்தான் உறைவிடம்.

நரிப்பயம் தவிர, வனத்துக்குரிய பரிபூரண சுதந்திரத்துடன் சுற்றித்திரிந்து புழு பூச்சிகளை இரை

பொறுக்கி இயல்புத்தன்மையுடன் உலவித்திரிந்த மயில்கள், இப்போது எந்நேரமும் மனுசப்பயத்தில் கிடந்து சாக வேண்டியிருக்கிறது. றெக்கைகளை விரித்தடித்து மாரடிக்க வேண்டியிருக்கிறது.

நஷ்டமில்லாத குருவித்தொல்லை மட்டுமே பார்த்தனுபவித்து வந்திருந்த சங்கையா போன்ற சம்சாரிகளுக்கு... இந்த மயில் பட்டாளமும், கிளித் தாக்குதலும் ரணவேதனையான புதுச்சோதனை. வந்து வாய்த்த புதுத்தலையெழுத்து. கதறடிக்கிற அலைக்கழிப்பு.

இந்நேரம் ரெண்டு உளுந்து வடைகளை பிய்த்து வாயில் போட்டிருப்பான். ரெண்டு டீயும் குடித்திருப் பான். ரெண்டு சிகரெட்டும் பத்த வைத்திருப்பான். போச்சு... ஒண்ணுமில்லாம, அத்துப்போச்சு, மயில் சோதனையால்... பச்சைத் தண்ணீர் பல்லில் படவில்லை. தொண்டை, உதடு பூராவும் உலர்ந்து கிடக்கிறது. நாக்கில் கட்டியாகிப்போன எச்சில், பிசின்போல இருக்கிறது. நிற்காத ஓட்டம். தொண்டை காய்ந்து கனல்பறக்க கத்திக் குவித்திருக்கிறான். அதட்டல் குரல் எழுப்பி நெஞ்செல்லாம் உலர்ந்து காந்துகிறது.

வெயில், சாரல்மேகத்தால் நனைந்து கிடக்கிறது. காலைப்பொழுது மேலுக்கு ஏறிவிட்டது. கதிர்கள் பால்கோதி, மணிபிடிக்க ஆரம்பித்த நாளில் தொடங்கிய இந்த ரணவேதனை... பதினைந்து நாளாக இதே உயிர்வதைதான். சாயங்காலமும் விடியற்காலமும் உயிர் அறுந்துபோகிறது.

மக்காச்சோள தூர்க்கட்டைகளைப் பொறுக்கி யெறிந்துவிட்டு... பாத்திகட்டி... கம்பு விதைத்து, எடுப்புத் தண்ணீர்விட்டு... களைவெட்டி... யூரியா உப்பு விதைத்து தண்ணீர் பாய்ச்சி... குடும்பமே வியர்வையைக் கொட்டியிருக்கிறது.

அத்தனை வன்பாடுபட்டு உழைத்து விளையவைத்த கம்பங்கதிருக்குத்தான், எத்தனை சோதனைகள். மயில் சனியன், கிளிராட்சஸம்...ச்சேய்ய்க்! சங்கையாவுக்கு மனசே கிடந்து கசந்தது.

நாளை கதிரறுக்கணும்.அறுப்புக்கு ஆள் கூப்பிட ணும். அறுத்த கதிரைப் போட்டு வைக்க டிராக்டர் ட்ரெய்லர் வேணும். குவித்து காயப்போட்டு கம்பை நசுக்க களம் வேணும். களத்துலே விரித்துக் காயப்போட கவட்டைக் கம்பு தயார் பண்ணனும். மழைத்தூறல் வந்துவிட்டால், கதிரை கூட்டிக்குவித்து மூடிவைக்க தார்ப்பாய் வேணும். ராத்திரி நேரம் பன்றிகள் வந்து வாய் வைத்து விடாமல் காப்பாற்ற கண்விழித்துக் கிடக்கணும்.

இப்படி ஏகப்பட்ட 'ணும்'கள். ஓடி ஓடி உழைக்கிற வியர்வையைக் கேட்கிற 'ணும்'கள். விளைய வைத்த வெள்ளாமையை களத்துக்குக் கொண்டுவந்து, வீடு வந்து சேர்ப்பதற்குள் 'ஆத்தாடி, அம்மாடி' என்று ஆளைப்புரட்டியடிக்கிற 'ணும்'கள்.

ஊருக்குள் வருகிற தார் ரோடு, ஊரின் கழுத்தடியில் ஒரு சின்ன ஓடை. அந்த ஓடையைத் தாண்டி வருகிற ஓடு பாலம். சிமெண்ட் ரோடு. அங்குதான் கம்பங்கதிரை

குவித்திருக்கிறான் சங்கையா. ரெண்டு குன்றுகளாக நிற்கின்றன. காவலுக்கு கட்டில்போட்டு படுத்திருந் தான். ராத்திரி எட்டு மணி இருக்கும். பஞ்சாயத்து டி.வி. யில் செய்தி ஓடிக்கொண்டிருக்கிறது. லட்சுமி சாப்பாடு கொண்டு வந்திருந்தாள்.

எவர்சில்வர் தூக்குவாளியில் நெல்லுச்சோறு. நெத்திலிக் கருவாட்டுக் குழம்பு. ''ஓடி ஒழைச்ச ஒடம்பு... அலுத்துக் கெடக்கும். வீட்டுக்கு வந்து ஒரு குளிப்பு குளிச்சிருந்தா... அலுப்பும் வேர்வைக் கசகசப்பும் கழுவிப் போயிருக்கும்லே?''

''ம்ச்சூ! என்னத்தைக் குளிக்க இன்னும் வேலை ஜோலிக கெடக்குதே?''

''சமுத்துரத்துலே அலை வத்துனாலும்... சம்சாரிக்கு சாகுற வரைக்கும் வேலை ஜோலிக ஓயாது... சரி, சாப்புடுங்க''.

ஓடு பாலத்தில் ஒரு தெருவிளக்கு. குழல் விளக்கின் வெளிச்சம். அந்நியத் தன்மையைப் போக்கியிருக்கிறது. வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருக்கிற உணர்வு. கட்டிலில் உட்கார்ந்திருக்கிறான். வலது காலை மடித்துப் போட்டு இடதுகாலை தொங்கவிட்ட நிலையில்... கதிர் குமிகளைப் பார்த்துக்கொண்டே சாப்பிட்டான்.

கருதை விரிச்சுவிட்டு காயப்போடணும். டக்கரை விட்டு, வட்டச்சுத்து கத்த வைக்கணும். நசுங்குன கருதை ஒதுக்கணும் .தூற்றி எடுக்கணும். ஏவாரியைப் பாத்து... ரேட் பேசி... எடை போட்டு துட்டாகணும்... வாங்குன

கடன்களை அடைக்கமுடியுமா? 'உக்கார்ற' வயசுலே எட்டாப்புப் படிக்கிற பொம்பளைப்புள்ளைக்கு ஒரு கம்மல் செஞ்சு போடமுடியுமா?

மனசுக்குள் நீள்கிற நினைவுச்சரடுகள். இருக்கும் வேலைகள் பற்றியும் மனக்கனவுகள் பற்றியுமான நினைவுச் சரங்கள். ''என்ன... சாப்புடாம யோசனை?''

''ம்ம்...'' அடிமனசை கீறிப்பிளந்து வெளிப்படுகிற பெருமூச்சு. வேலைச் சுமைகள் பற்றி மனப்பாரம்.

''இன்னும் கெடக்குற வேலைகளை நினைச்சேன்..''

''கருதை கம்பாக்குற வரைக்கும் மழை தண்ணி வராம இருந்தா.. நல்லது. மழை வந்தா... பெருஞ் சீரழிவு.''

மறுநாள் பொழுது மயங்கிவிட்டது. தூற்றி யெடுக்கப்பட்ட சுத்தமான கம்பு, சிறுகுமியாக இருந்தது. வெறும் சக்கைகளும், கொம்மையும் ஒதுக்கப்பட்டிருந் தது. சங்கையா கம்மந்தூசிக்குள் மூழ்கியெழுந்தவனைப் போலிருந்தான். கண்ணிமை ரோமங்களிலும் கம்மந் தூசி, பகல் முழுக்க பாடுபட்ட களைப்பு. கண்ணில் அயற்சி, முகத்தில்... வெட்டி வெயிலில் போட்ட கொடி போல ஒரு வாட்டம். தலைமுடி, திரேகமெல்லாம் சிமெண்டு அப்பின மாதிரி, கம்மந்தூசி.

வியாபாரி புஷ்பராஜ் பெரிய மோட்டார் பைக்கில் தடதடவென வந்து இறங்கினார். ''வெலையைச் சொல்லுங்க... அண்ணாச்சி'' என்றார்.

''நீயே கேளு...''

''புள்ளை பெத்தவருதானே பேரு வைக்கணும்?''

''மண்ணுக்குள்ளே கெடந்து மல்லுக்கட்டி சீரழியுற எனக்கு, மார்க்கெட் நெலவரம் தெரியாதுல்லே?''

தரகர் ராஜையா நூறு ரூபாய் தாளை நீட்டி ஒரு விலை சொல்ல... சங்கையா மறுத்து தலையசைத்தான்.

''அந்த வெலைக்கெல்லாம் தரமுடியாது...''

''அப்ப... நீங்க ஒரு வெலை சொல்லுங்க''

''அதெல்லாம் முடியாது. நீ மேலே ஏறி வா''

குவிண்டால் எழுநூற்று முப்பது ரூபாய் என்று விலை திகைந்தது.

மூன்று அகத்திக்குச்சிகளை குடிசை பாணியில் நிறுத்தி... உச்சியில் முடிச்சு போட்டு... அதில் கயிறு கட்டி... தராசு விட்டம் மாட்டி... எடை போட்டு...

சாக்குக்கட்டு வந்து சேர்ந்தது.

வாளியில் கம்பை கோதிக்கோதி –

சங்கையா தர, வாங்கி எடை போடுகிற ராஜையா. கொஞ்ச நேரத்தில் பன்னிரண்டு மூட்டைகள். இன்னும் சில இடங்களில் பல மூட்டைகள். வியாபாரி பத்து நாள் வாய்தா கேட்டார். சங்கையா ஒரேயடியாக மறுத்துவிட... செல்போனில் பேசுகிற புஷ்பராஜ். செல்போனிலேயே பேரம் விலை தீர்ந்தது. 'ரூபாயும், லோடு வேனும் வரட்டும்' என்று சொல்ல...

அடுத்த அரை மணி நேரத்தில் வேன் வந்து நின்றது. மஞ்சள் பையில் பணத்துடன் ஓர் ஆள்.

பணம் கைமாறியது. எட்டாயிரத்துச் சொச்சம் சங்கையா கையில். ரெண்டாயிரத்துச் சொச்சம் புஷ்பராஜ் கையில். லாபம். சிரிப்பும் பேச்சுமாக லோடேற்றினார் கள்.

சங்கையா, புஷ்பராஜ் கையிலிருந்த ரெண்டா யிரத்துச் சொச்சத்தையே கூர்ந்து பார்த்தான். ஒரு மணி நேரச் சாமார்த்திய லாபம். வருஷம் முழுக்க... குடும்பமே வந்து கொட்டுன வேர்வைக்கு ரவ்வும் பகலுமாய் மாடா உழைத்த உழைப்புக்கு எட்டாயிரத்துச் சொச்சம். ஒரு மணிநேரப் பேச்சுக்கு, ரெண்டாயிரத்துச் சொச்சம் புஷ்பராஜுக்கு.

'இதான்... நம்ம நாடு. சூரியனைப்போல உழுகிற வனுக்கு சுருங்குன கோவணம்தான். நிலாபோல பேசுகிற ஏவாரிக்கு பட்டுத்தலைப்பாகை. சங்கையா வுக்குள் கொதிக்கிற உணர்வுகள். மடியில் சுருட்டி வைத்திருந்த பணத்தை வலதுகையால் தடவிக்கொண்ட போது...

மனசுக்குள் இனம்புரியாத வலி. வியர்வையே அவமரியாதைக்குள்ளான மாதிரியோர் வேதனை. உள்மன வெறுமை. வியாபாரி புஷ்பராஜ் எல்லாரையும் டீ வடை சாப்பிடும்படி சந்தோஷமாக உபசரிக்க... ஒரே சிரிப்புக்காடு. பேச்சுக்காடு.

''சங்கையா அண்ணாச்சி... வாங்க. நீங்களும் வடை டீ சாப்புடுங்க...''

ஆதியில் வந்த வியர்வை-சூரியனுக்கு... இடையில் வந்த வியாபார நிலா, ஒளிதானமா?

''வேண்டாம்பா... நீங்க சாப்புடுங்க...'' கொதிக்கும் மனசும் மன்னிக்கும் நினைவுமாக விளக்குமாறு, சுளகு, தார்ப்பாயை எடுக்கிற சம்சாரி சங்கையா. அவன் மனசில் ஒருகனம்.

- த சண்டே இந்தியன்
செப்டம்பர் 2007

✱ ✱ ✱

15. நிராகரிப்பு

ஒன்பது நாற்பதாகிவிட்டது மணி. ஆபீஸ், இதோ நெருங்கிவிட்டது. இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த ராகவன், பிரதான சாலையின் வாகன நெரிசல்களுக்கிடையே ஊடுருவிப் பாய்கிறான். முதிர்காலை வெயில் சுள்ளென்று அறைகிறது. பத்திரிகை அலுவலகம் இருக்கிற சந்துக்குள் திரும்பியவன், கடிகாரத்தைப் பார்த்தான்.

'ஆபீஸுக்குள்ளே போய்ட்டா... 'தம்' அடிக்க முடியாது. இங்கேயே ஒரு டீயடிச்சுட்டு... 'தம்' அடிச்சுட்டுப் போயிரலாமே'

மின்னிய யோசிப்பில் வண்டியை ஓரங்கட்டி, ஸ்டாண்ட் போட்டு, இன்ஜின் இரைச்சலை நிறுத்தி விட்டு, உருவிய சாவியுடன் வந்தான். சந்து முனையில் டீக்கடை.

''ஒரு...டீ''

''ஸ்ட்ராங்க்கா... லைட்டா?''

''மீடியம்''

நறுக்கி வைத்திருந்த காகிதத்துண்டை உருவி அந்தக் காகிதத்திலேயே சமோசாவை எடுத்துப் பிய்த்து...

''ஒரு வில்ஸ் பில்டர் குடுங்க...''

எல்லாம் முடிய பதினைந்து நிமிடமாயிருந்தது. சிகரெட் துண்டை பூட்ஸ்காலில் நசுக்கினான். வயிற்றில் ஒரு நிறைவின் முட்டல். மனதில் ஒரு திருப்தியின் ததும்பல்.

வண்டிக்கு மறுபடி மூச்சுவந்தது. உயிர்பெற்று இரைந்தது. கேட் வாட்ச்மேனின் சல்யூட்டுக்கு தலையசைத்து விட்டு... வாகன நிறுத்தத்துக்குப் போனான். கிடைத்த இடைவெளிக்குள் வண்டியைச் சொருகி, நிறுத்திவைத்துவிட்டு...

பத்திரிகை அலுவலகத்தின் தலைவாசலில் வரவேற்பறை... எதிர்ப்படுகிற சக ஊழியர்கள்.

''ஹலோ...'' ''ஹலோ...'' ''குட்மார்னிங்...'' ''குட்மார்னிங்''கள்... ஏகப்பட்ட ஹலோகள். ஏகப்பட்ட நற்காலை வணக்கங்கள்.

''எப்படியிருக்கீங்க....?'' யந்திரமயமான குசல விசாரிப்புகள்.

''ஃபைன்... ஓ.கே'' அதே யந்திர கதியில் பதிலளிப்புகள்.

எலெக்ட்ரானிக் மிஷின்முன், தனது கார்டை காட்டி, வருகையைப் பதிவு செய்துகொண்டான்.

ரிசப்ஷனிஸ்டாக உட்கார்ந்திருந்த வானதி சொன்னாள்.

''இ.பி.மீட்டிங் அசெம்பிளாயிருச்ச. உங்களுக்காகத் தான் வெயிட்டிங்''

''எம். இ. வந்துட்டாரா?''

''இப்பத்தான் வந்தாரு.'' அவனுக்குள் பகீரென்றது. ஆபத்தான தாமதம்.

ஆசிரியர் குழு என்பதற்கான ஆங்கிலச் சொல் எடிட்டோரியல் போர்டு. அதன் சுருக்கம் இ.பி. முதன்மை ஆசிரியர் என்பதற்கான ஆங்கிலச் சொல்லின் சுருக்கம் எம்.இ.

''அடடே... டயமாயிருச்சா...?'' அவனுள் சுழற்றி வருகிற ஒரு பரபரப்பு. 'தாமதமாகி விட்டோமே'... என்ற சின்ன பதற்றம். பெரிய அலுவலகம். சமுத்திரம் போல. சூரிய வெளிச்சத்துளி நுழைய அனுமதியில்லை. எல்லா அறைகளிலும் மின்விளக்கு. ஆயினும், அந்தி நேரத்து இருள் வெளிச்சம் போல... எல்லா அறைகளி லும் ரகசியமான தேன்நிற வெளிச்சம். மங்கலான வெளிச்சமா, விலகாத இருட்டா? இனம் பிரிக்க முடியாத மர்மமான வெளிச்சம்.

எம்.இ.அறையில்தான் இ.பி.மீட்டிங். ஒற்றைச் சோபா நாலைந்து. மூவர் உட்கார்கிற சோபா இரண்டு.

எல்லா அறைகளிலும் ஏ.ஸி.யின் இதமும், மௌன ரிதமும்.

ராகவனும் தள்ளுகதவை தள்ளிக்கொண்டு தலை நீட்டினான். ''யாரு, ராகவனா...? கம்...இன்''

எம்.இ.யின் வரவேற்பில் மெல்லிய சிடுசிடுப்பு. இதமான கண்டிப்பு. தாமத வருகைக்கு தாமதமற்ற தண்டிப்பு.

அவன் எம்.இ.டேபிளுக்கு எதிர்த்தாற்போல் போடப்பட்டிருந்த மூவருக்கான சோபாவில் உட்கார்ந்தான்.

''ராகவ்...''

எம்.இ.தான். சற்றே காரமான குரலில்...

''எஸ்.ஸார்...''

''நீங்க மட்டும் வந்திருக்கீங்க....''

''எஸ், ஸார்...''

''மேட்டர் வேண்டாமா? போய்... உங்க அறைக்குப்போய்... எடுத்துட்டு வாங்க... க்விக். ரொம்ப டயமாச்சு''

''எஸ்...ஸார்''

''மேட்டர் ரெடியா... ரெடி பண்ணணுமா?''

இது மிகக்கூடுதலான கோபத்தின் மெல்லிய வெளிப்பாடான கிண்டல். கண்டனத்தை உள்ளடக்கிய நக்கல்.

ராகவனுக்குள் அவமானமாக உணர்ந்திருந்தான். பத்து நிமிடம் முந்தி வந்திருக்கலாம். இவன் தாமதம்,

மொத்த அலுவலகப்பணியையே உறுத்துகிறது. எரிச்சல் படுத்துகிறது. சிடுசிடுக்க வைக்கிறது. இவனுக்கு எதிரானதோர் மனநிலை, அந்த அறை முழுவதும் இருளாகப் பரவியிருக்கிறது.

இன்றைக்கு இவன் சொல் எடுபடுமா? இவன் முன் வைக்கிற கருத்து நிற்குமா? இவனது அபிப்பிராயத்தை வியாக்யானப்படுத்திப் பேசினால்... அதைச் சகிப்பார்களா?

ராகவனுக்குள் வலி நிறைந்த வேதனை அதிர்வுகள்.

இவன் ஓட்டமாக ஓடினான். எடிட்டோரியல் போர்டுக்கான அறைக்கு ஓடினான். நீளவாக்கிலான அறை. பெரிய ஹால் மாதிரி. அதில் நெஞ்சளவு, நெஞ்சளவு தடுப்பு அட்டைகள். பிரிக்கப்பட்ட அறைகள். ஒரு மேஜை. மூன்று நாற்காலிகள். இரண்டு பீரோக்கள், மேஜையில் ஒரு டெலிபோன். கம்ப்யூட்டர்.

பீரோவை திறந்தான். சிறுகதைகளுக்கான ஃபைல்கள். பரிசீலனைக்குரியவை. பரிசீலித்து தேர்வு செய்யப் பட்டவை. தேர்வு செய்யப்பட்டவற்றுள் முக்கியமா னவை. அவற்றுள் இந்த இதழுக்கானது. இத்தனையும் தனித்தனி ஃபைல்கள்.

மேலே இருந்த இரண்டு ஃபைல்களை தூக்கிக் கொண்டு... பீரோவை பூட்டி...

அவனுள் பதற்ற அலைகள். ஒருவித அவமான அவஸ்தை. அடுத்தடுத்து அவமான அடிகள். வார்த்தை

ஊசிகள். குத்திக்கிழித்து மறுபக்கம் வருகிற ஊசிக் குத்தல்கள்.

தாமதம், முதல் தப்பு. தயாரிப்பில்லாமல் கூட்டத்தில் உட்கார்ந்தது, இரண்டாவது தப்பு. இத்தனை சீனியரான எடிட்டோரியல் போர்டு மெம்பருக்கு இது லட்சணமா?

இவனை இவனாலேயே மன்னிக்க முடியவில்லை. சகித்துக் கொள்ள முடியவில்லை. 'ச்சேய்' என்றிருந்தது.

பதற்றத்தில் விரல்களில் நடுக்கம். கழுத்தடியில் வியர்வை, அந்த ஏ.ஸி.யிலும். செயல்களில் பரபரப்பு. தடுமாற்றம்.

இவனது பேண்ட் பாக்கெட்டில் ஒரு கதை இருக்கிறது. காக்கி கவர். இவன் எழுதியது. இதை பரிசீலனையில் முதன்மைப்படுத்தி, எடிட்டர் ஒப்புதலைப் பெற்று, இந்த இஷ்யூவிலேயே ஏற்றிவிடலாம் என்ற திட்டம். இப்போதும் அதே தீவிரம்.

அந்தக் கவரைப் பிரித்தான். கதையை உருவினான். உள்மடிப்புகளாக ஒட்டிக் கிடந்தது. அவசரப்பதற்றத்தில் அதை வெளிமடிப்புகளாக மடித்து... காகிதக்கற்றையை நேர் செய்து... இந்த இதழுக்கான ஃபைலில் போட்டான்.

ஃபைலை மூடி... சரிசெய்து... எல்லாமே அவசரம். கை நடுக்கப் பதற்றம். மனப்பரபரப்பு.

இவன் ஓடினான். எம்.இ.யின் அறைக்கதவைத் தள்ளி உள்ளே நுழைகிறபோது... மணி, பத்து பதினைந்து.

எல்லாக் கண்ணிலும் எரிச்சல். கடுகடுப்பு. சகிப்பின்மை. எம்.இ.யின் முகத்தின் இறுக்கம். அழுந்த மூடியிருந்த உதடுகள். இவனையே இறுகலான அழுத்தமாய் தொடர்கிற பார்வை.

கனிவற்ற குரலின் உணர்ச்சியற்ற உலர்தல்.

''கூட்டத்தை ஆரம்பிச்சிரலாமா, ராகவ்?''

''எஸ்...ஸார்...''

''எல்லாம் ரெடியா... இப்ப?''

''ரெடி சார்...''

''இனிமே... இப்படி ஆகாமப் பாத்துக்கங்க...''

''ஸாரி...ஸார்...''

''சரி... வெளிவந்திருக்கிற நடப்பு இஷ்யூவை பற்றின உங்க கருத்துக்களைச் சொல்லுங்க... ம்... சம்பத், நீங்க ஆரம்பிங்க''

சம்பத் பேசினார். தலையங்கம்... வாசகர்பகுதி... சினிமா சம்பந்தமான பேட்டிகள்... சிறுகதை... நொடிக்கதைகள்... துணுக்குகள்... கவர்ஸ்டோரி...

எல்லாமே பாராட்டுகள். மெல்லிய விமர்சனம் கூட முன்வைக்கவில்லை. அவர் தந்த மேட்டர், சிதைக்கப் பட்டிருந்ததையும், அந்தப் போர்ஷன் சரியாக வடிவமைக்கப்படாமல் போனதை மட்டுமே குறையாக கூறியிருந்தார்.

எம்.இ. குறுக்கிட்டார்.

''சம்பத், நீங்களும் உங்கமேட்டரை செறிவா... சுருக்கமா... சுவாரஸ்யமா எழுதித் தாங்க... வளவளன்னு நீளமா எழுதுனா... எடிட்டாகத்தான் செய்யும்?'' என்ற எம்.இ. மேலும் தொடர்ந்தார்.

''சரி... சினிமா சம்பந்தமான பேட்டிகள்லே ஸ்டில்ஸ் செலக்ட் பண்ணுனது யாரு?''

கனத்த மௌனம். யாரும் யாரையும் காட்டிக் கொடுக்காத கபட மௌனம்.

''ரைட்... ஸ்டில்ஸ் கலர்ஃபுல்லா இருக்குறதும், கவர்ச்சியாயிருக்குறதும் தேவைதான். வல்க்கார்ட்டி யான ஆபாசமா போயிரக்கூடாது. நம்ம சர்க்குலேஷனை அது பாதிக்கும். கவனமா பாத்துக்கங்க...''

கூட்டம் நடந்தது. இடையில் காபி வந்தது. காபி முடிந்த பிறகும் யார்யாரோ பேசுகிற சத்தம். எம்.இ.யின் கவனம் அவ்வப்போது ராகவன் பக்கம் தாவுகிறது.

அவனது கவனம் கூட்டத்தில் இல்லை. சக இ.பி. மெம்பர்களின் கருத்துகளைக் கவனிக்கவில்லை. அவன் நினைவு வேறு எங்கோ அலைவது, முகத்தைப் பார்த் தாலே தெரிகிறது.

ராகவன் தேர்ந்தெடுத்து பிரசுரமாகியிருக்கிற சிறு கதை விமர்சிக்கப்படுவதைக் கூட கவனிக்காத அசிரத்தை.

அவன் கவனமெல்லாம்... அவனது சிறுகதையில். அதை எப்படி முன்னிலைப்படுத்துவது? எவ்வாறு முதன்மைப்படுத்துவது? கதையின் ஸ்நாப்ஸிஸை என்ன வார்த்தைகளில் சுவாரஸ்யப்படுத்துவது? எடிட்டரின்

ஒப்புதலைப் பெற்றுவிட முடியுமா? அவரது கவனத்தை ஈர்க்கிற மாதிரி, மனதை வசீகரிக்கிற மாதிரி கதைச் சுருக்கத்தை எங்கிருந்து துவக்குவது?

எம்.இ.யின் பார்வை அவ்வப்போது தன்மீது தெறிப்பதைக் கூட அவன் உணரவில்லை.

நேரம் ஊர்ந்தது. ராகவன் முறை வந்தது. ஏனோ தானோவென்று... பட்டும்படாமல்... யந்திரமாய் அபிப்பிராயம் சொன்னான். விளக்கெண்ணெயில் வதக்கிய வெண்டைக்காய் மாதிரி.

அடுத்த வார 'இஷ்யூ'வுக்கான மேட்டர் தயாரிப்பு பற்றி பேச்சு துவங்கியது.

''ராகவ்... நமக்கு ஒரே ஒரு சிறுகதை வேணும்.''

''ஆமா... சார்...''

''எப்படி செலக்ட் பண்ணி வைச்சிருக்கீங்க...?''

''பிரசுரத் தகுதியோட பதிமூணு கதைகள். அதுலே முக்கியமானவை ஆறு சார்... அந்த ஆறுலே இந்த இஷ்யூவுக்காக மட்டும் ரெண்டு ரெடி சார். மூணாவதா... என்னோட மேட்டர் ஒண்ணும் இருக்கு...''

''உங்க மேட்டர்னா...?''

''சிறுகதைதான் சார்... நல்ல சப்ஜெக்ட் சார்... சொல்லட்டுமா?''

''டவுன் சப்ஜெக்டா... வில்லேஜா?''

''டவுன்தான் சார்...''

''உங்க கதையை நாலைஞ்சு இஷ்யூவுக்குப் பெறகு ஞாபகப்படுத்துங்க.... பாத்துக்கலாம். மீதி ரெண்டு கதைகளும் என்ன மாதிரியான சப்ஜெக்ட்?''

''அதுவும் டவுன்தான் சார்...''

''பிரசுரத் தகுதியோட இருக்குற கதைகள்லே எல்லாமே டவுன் சப்ஜெக்ட்தானா?''

''ஆமா... சார்''

எம்.இ. சற்றே நிதானிக்கிறார். அவர் முகத்தில் சிறிய சிந்தனை. யோசனை ஓரிடத்தில் குவிமையமாகிற தீவிரம்.

ராகவனுக்குள் மன உளைச்சல். மோசமாக வீழ்ந்து சரிந்துவிட்ட மனச்சோர்வு. அவனது திட்டமெல்லாம் தவிடுபொடி. இந்த இஷ்யூவிலேயே ஏற்றிவிடலாம் என்று நினைத்திருந்த அவனது கதை,... ஒற்றைச் சொல்லில் புறந்தள்ளிவிடப்பட்டது. நிராகரிக்கப்பட்டு விட்டது.

அவனுள் பரவுகிற வலி. குத்திக்கிழித்தெறியப்பட்ட மனசின் ரணம்.

''நம்ம பத்திரிகையிலே கடந்த நாலு இஷ்யூவா, எல்லாமே டவுன் சப்ஜெக்ட் சிறுகதையாகவே வந்துருக்கு. இந்த இஷ்யூவுலே ஒரு வில்லேஜ் சப்ஜெக்ட்டை ஏத்துவோம். அப்பத்தான் வாசக ரசனையிலே ஒரு கிளர்ச்சி உருவாகும். ஒரு மாறுதலா இருக்கும்.''

''ஆனா...'' தயங்கி இழுக்கிற ராகவன்.

''என்ன ஆனா?''

''வில்லேஜ் சப்ஜெக்ட்லே எதுவும் வரல்லே... சார்''

''அப்படியா? இந்த இன்லெண்ட் லட்டரைப் படியுங்க...''

ஏதோ ஒரு கிராமத்திலிருந்து வந்திருந்த கடிதம். ஒரு மாதத்துக்கு முன்பு அவரால் அனுப்பப்பட்ட 'சுரணை மிக்கவன்' சிறுகதை என்னாயிற்று என்று கேட்டிருக்கிறார். கதையின் உள்ளடக்கத்தையும் சுருக்கமாக எழுதியிருக்கிறார்.

''இந்தக் கதை என்னாச்சு, ராகவ்?''

''பிரசுரத்தகுதி பெறலே''

''ஏன்?''

''கதை பூராவும் மாட்டுக்கறி அறுப்பு... மாட்டுக்கறி ருசின்னு ஒரே கவுச்சி வாடை, சார். நம்ம ரீடர்ஸ் அசூயைப்படுவாக.''

''ரீடர்ஸோட சைக்காலஜி பத்தி நீங்களா ஒரு கணிப்புக்கு வராதீக. ரீடர்ஸோட சைக்காலஜிங்குறது சமுத்திரமணல்மாதிரி. யாரும் எண்ணிக் கணக்குப் பாத்துரமுடியாது. ம்... அப்புறம்?''

''கதை ரொம்ப நீளம், சார். நம்ம பேஜ்லே பன்னெண்டு பேஜஸ் வரும் சார்.''

''கதை நல்லாயிருந்தா... அது ஒரு பிராப்ளம் இல்லே... 'கொஞ்சம் நீளமானசிறுகதை'ன்னு சப்டைட்டில் வைச்சிட்டா... ரீடர்ஸ் சலிப்பில்லாம வாசிச்சிருவாங்க''

ராகவ் மௌனம். தலைகுனிந்திருந்தது. 'ஒரு கதையை தேர்வு செய்கிற முழுத் தகுதி நீ பெறவில்லை என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டது. கதையின் தரம் குறித்து நிர்ணயிக்கக்கூடத் தெரியாமல் போனவன் என்பது அம்பலமாகி விட்டது.

ரொம்ப அவமானமாக உணர்ந்தான். நிறைந்த சபையில் அம்மணமாக நிறுத்தப்பட்ட மாதிரியோர் அவமான அவஸ்தை. சக எடிட்டர்கள் மத்தியில் வீழ்ந்து கிடக்கிற அவனது ஈகோ.

''ராகவ், உங்களாலே நிராகரிக்கப்பட்ட அந்த 'சுரணை மிக்கவனை' தேடி எடுத்து, என்னோட டேபிள்லே கொண்ணாந்து வைங்க... ஓ.கே.?''

''எஸ்...ஸார்.''

இவனால் ரகசியமாக நிராகரிக்கப்பட்ட ஒரு சிறுகதை... இவனையே பகிரங்கமாக நிராகரித்து விட்டது.

ராகவன் மனசளவில் ரொம்பவே சரிந்துகிடந்தான், அதள பாதாளத்தில்.

வடக்கு வாசல், 2008

* * *

16. மனக்கோணல்

இதமான காலைப்பொழுது. உட்கார்ந்து புத்தகமோ பத்திரிகையோ வாசித்தால் சுகமாக இருக்கும்.

ஆனால்- வாக்கிங் போயாகணும்.

வாக்கிங் போவது என்றாலே பெரிய இச்சிலாத்தி. 'ச்சே' என்று கிடக்கும். வாக்கிங் என்பது கட்டாயமாகிற போது - நிர்ப்பந்தமாகிறபோது - ஒரு சுமையாகி விடுகிறது. வெறுப்புக்குரியதாகி விடுகிறது. உயிரைக் காப்பாத்த... இப்படியொரு தொல்லையா?

நினைவு தன் போக்கில் சிடுசிடுப்பாக ஓடிக் கொண்டிருக்க, நான் புறப்பட்டு விட்டேன். சோம்பல் படிந்த மனசின் சோர்வு. சிடுசிடுப்பு.

''வாக்கிங் போறேன்''... மனைவியிடம் சொன்ன தகவல். காலெடுத்து வைக்கவே சோம்பல் படுகிற மனசு.

வாசல்படிவிட்டு முற்றத்தில் கால்வைத்தவுடன், தெறித்தோடிய சேவல். உலர்ந்த பருக்கைகளை பொறுக்கிக்கொண்டிருந்த கோழி, என் திடீர் பிரவேசத்தில் பயந்து, 'கேர்ர்'ரென்று ரெக்கை விரித்து மாரடித்துக் கொண்டே ஓடியது.

ஊரைக் கடந்தால் வண்டிப்பாதை. எதிரில் ஒரு செவலை நாய். என்னைப் பார்த்துத் திகைக்கிறது. பயப்படுகிறது. அதன் கண்ணில் உயிர்ப்பயம்.

நான் இடது தடத்துக்கு விலக... பயம் கலைந்து, பம்மி விலகியோடுகிற குட்டோட்டம். உயிர் தப்பித்த சந்தோஷம்.

பாதையோர சீமைக்கருவேல மரத்து நுனி விளாரில் நின்று விளையாடிய அணில். என் வேகம் கண்ட அதிர்வில் தெறித்தோடுகிறது. அதற்கும் உயிர்ப்பயம்.

ஓடையை கழித்து, ஆற்றோரக்கரையை ஒட்டிய வளைவில் எனது நடைவேகம். பனை மரத்தில் இருக்கிற மயில் வீறிட்டலறுகிறது. 'அபாயம் ஒண்ணு வருது' என்ற தொனி. தூரத்தில் ஒரு மயிலின் பதில் வீறிடல்.

''நா எச்சரிக்கையாகத்தான் இருக்கேன்''.

ஆவாரஞ்செடி மறைவில் ஏதோ இரை பொறுக்கிக் கொண்டிருந்த முயல், என் வேக நடை பார்த்த பயத்தில் சிலீரென்று ஓடி மறைகிறது.

உயிர்ப்பயம் என்பது எல்லா உயிர்களின் சுபாவம். உயிரை காத்துக் கொள்வதற்கு எல்லா ஜீவராசிகளும்

தன்னியல்பாக முயல்கின்றன. சோம்பலற்று செயல்படு கின்றன. துரிதச்செயல்.

இதில் எனக்கு மட்டும் என்னத்துக்கு வெறுப்பும், இச்சிலாத்தியும்? உயிரை ஆரோக்கியப்படுத்த நடைப் பயிற்சி தேவை என்றால்... இயல்பாக செய்ய வேண்டியதுதானே?

என்னுள்.. எண்ண வளைவு நெளிவுகள். நடை 'வேகு...வேகு' என்று முன்னோக்கி...

மறுநாள்...

இதமான காலை. 'வாக்கிங் போகணும்'.

இச்சிலாத்திப்படுகிற கோணமனசு. வழக்கம் போலவே சோம்பல்படுகிற நான்.

செம்மலர்
ஜூன் 2008

✱ ✱ ✱

17. மர்ம யோகிகள்

ராத்திரி ஒன்பது மணிக்கெல்லாம் ஊர் அடங்கி விடும். தெரு நிறைய இருட்டு அப்பிக்கிடக்கும். வேலுவும் முனியனும் கள்ளத்தனமான பார்வையுடன் டீக்கடைக்கு வருவார்கள். பூனைகள் மாதிரி.

டீக்கடை சாத்திக்கிடக்கும். ஆள் இருக்காது. டீக்கடையின் மேலச்சுவரில் ஐந்து சைக்கிள்கள் சாய்த்துக் கிடக்கும்.

ஐந்து சைக்கிளையும் ஒரே செயினில் கோர்த்து, ஒரு சிறிய பூட்டு போட்டு பூட்டியிருப்பார்கள்.

பகல் பூராவும் இந்த இடத்தில்தான் சைக்கிள் கடைக்காரர் பஞ்சர் பார்ப்பார். வீல் கோட்டம் எடுப்பார். துருப்பிடித்த பழைய சைக்கிளை தனித்தனியாக பிரித்து, சீமெண்ணையில் ஊறப்போட்டு, ஓவர் ஆயில் பார்ப்பார். சைக்கிள்களை வாடகைக்கு விடுவார்.

மணிக்கு ஐம்பது பைசா. நைட் வாடகை ஒண்ணரை ரூபாய்.அதற்கும் வழியில்லை வேலுவிடம். மொத்தமே ஒண்ணரை ரூபாய் தான் இருக்கிறது. இதில் ரெண்டுபேர் சினிமா பார்த்தாக வேண்டும். தரை டிக்கட், ஒரு டீ, ஒரு முறுக்குக்குச் சரியாக வரும். சைக்கிளுக்கு துட்டு இல்லை. வாடகை தர வக்கில்லை.

அதுக்காக... எம்.ஜி.ஆர். படம் மர்மயோகியை பார்க்காமலிருந்து விட முடியுமா?

பூனைபோல பம்மிப் பம்மி வருகிற ரெண்டுபேர். வேலுவின் கையிலிருக்கும் கோணூசி, பூட்டின் வாயைத் திறந்து விடுகிறது. முதல் வண்டியை தனியாக எடுத்து ஸ்டாண்ட் போட்டு நிறுத்திவிட்டு, சைக்கிள் செயினை இழுத்துமாட்டி, பூட்டை போட்டு ஓர் அமுக்கு. மாட்டிக் கொண்டது.

''முனியா, வண்டியை நைஸா நகட்டு.''

''நீ?''

''வர்ரேண்டா...''

''எங்க நிக்க?''

''கருத்தநாயக்கரு பொட்டல்லே நில்லு.''

தொண்டைக்குள் சத்தமான கிசுகிசுப்பு. ரொம்ப மெல்லிசான முணுமுணுப்பு. வேலு சந்து வழியாக சத்தமில்லாமல் பாய்ந்தான். மூன்றாம் தெருவில் நின்றான். படப்படியில் ஓர் இருளுருவம்.

''யார்ரா... அது?'' அதட்டலான விசாரிப்பு. வேலுவுக்கு மின்னல் மாதிரி மூளை வேலை செய்யும்.

சட்டென்று குரலை மாற்றி ''நாந்தான்'' என்றான் வேற்றுக்குரலில்.

''நாந்தான்னா...?'' மிரட்டலான உறுமல்.

''சன்னாசித்தேவரு...''

''என்ன இந்நேரம்?''

''சும்மாதா...''

வேலுவின் குரல், சன்னாசித்தேவரின் கரகரத்த குரலாகவே இருந்தது, அச்சு அச்சலாக. வேலுவுக்கே ஆச்சரியமாக இருந்தது. தன்னைத் தானே பாராட்டிக் கொண்டான். ''வில்லாதி வில்லன்டா...நீ.''

வேலுவின் வீட்டு முற்றத்தில் கொடியில் கிடந்த துண்டை உருவிக்கொண்டான். டயர் செருப்பை மாட்டிக் கொண்டான்.

என்ன நினைத்தானோ... கால் செருப்பைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டான். ''இதுவேறு.... 'லொடக், லொடக்' குன்னு சத்தம்குடுத்து ஊரை உசுப்பும்.''

சத்தமில்லாத நடை. 'தடக், தடக்'கென்று சத்தம் போடுகிற நடுநெஞ்சு. அரவமில்லாமல் ஊரைக் கடந்து, ஓடையில் விழுந்து கரையேறினால், ரெண்டு பக்கமும் மொளகாய்த் தோட்டந்தான். நடுவில் நீள்கிற வண்டிப்பாதை.

''ம்ம்...ஏறுடா...''

பெடலை மிதித்து ஏறுகிற முனியன். ஓட்டமாய் ஓடி, ஒரே செண்டிப்பாக செண்டித்து, கேரியலில் 'நச்'சென்று உட்கார்கிற வேலு... கரிசல் காட்டு வண்டிப் பாதைக்கு நடுவில் நீள்கிற ஒற்றையடிப் பாதையில் உருளுகிற சைக்கிள்.

உழுத கரிசல் மண்ணாக கருத்த இருள். சிதறிக் கிடக்கிற வெள்ளிகளின் வெளிச்சம். திக்கிமுக்கி சைக்கிள் மிதிக்கிற முனியனின் முதுகெல்லாம் 'தொப், தொப்'பென்று வியர்வைக்காடு. 'கேஸ்ஸூ, பூஸ்ஸூ' என்கிற இளைப்பு.

''என்னடா முடியலியா? நா மிதிக்கிட்டா?''

''சாமிநாதபுரம் வரைக்கும் மல்லுக்கட்டுதேன்.''

இருட்டு கூடவே வந்தது. கனத்த போர்வையாகப் போட்டுக் கமுக்கமாக மூடுகிறது. வேடிக்கை பார்ப்பதைக் தவிர, வேறொன்றும் செய்ய முடியாமல் கண்விழித்து நின்ற நட்சத்திரங்கள். வீறிடலுடன் 'விர்ர்' ரென்று பறக்கிற பனங்காடை.

சாமிநாதபுரத்து சாம்பல் நிறத்து நாயை நினைத்தால், குலைநடுங்குகிறது. வேங்கை மாதிரி 'திகு, திகுவென்று' ஓடி வந்து பாயும். குரைக்காமல் உறுமலுடன் வருகிற கடிநாய்.

ஊரடங்கிய வேளையில் நாயை அதட்டக்கூட ஆள் இருக்காது. என்ன செய்ய?

ஊருக்கு மேல்புறம், உழுது கிடந்த கரிசல் புஞ்சை. பாதை விட்டு விலகி, ஊருக்குள் போகாமல்... உழவு

புழுதியில் சைக்கிளை உருட்டி... இலந்தை முள்ளில் விழுந்து உடம்பெல்லாம் முட்கள் அப்பிக்கொள்ள... தத்திப் புத்தித் தடுமாறித் தத்தளித்து...

சாமிநாதபுரம் தாண்டிய போது...

அப்பாடி என்று ஆசுவாசப்பட்டது மனசு. ஏழு மலை ஏழு கடல் தாண்டிய மாதிரியான மூச்சிரைப்பு. நடுநெஞ்சு உலர்ந்து, காய்ந்து புண்ணாகிவிட்டது.

மெட்டல் ரோடு. நாய்வாயில் சிக்கிய சக்கரைச் சாக்காக நார்நாராகிக் கிடந்த ரோடு. வேலு சைக்கிளை வாங்கி மிதித்தான்.

ஹாண்டில் பார் ஒரு பக்கமாக இழுத்துக் கொண்டே போயிற்று. மைய அச்சின் நட்டு லூசாகிக் கிடந்ததில், பெடல் ஒரு சீராக சுழல மறுத்து, 'லொடக், லொடக்' கென்று அடம்பிடித்தது.

வேலுவுக்கு வியர்த்துக் கொட்டுகிறது. மிதிக்க மிதிக்க சைக்கிள், செக்காக நிற்கிறது. 'ச்சேய்...'யென்று வருகிறது.

மர்மயோகி எம்.ஜி.ஆரின் வாள்சண்டை ஈர்க்கிறது. மரம் விட்டு மரமாக விழுதுகளில் பறக்கிற அந்த வேகம். ''கரிகாலன் குறி வைத்தால், தப்பாது'' என்று வைரச் சொல்லோடு அம்பு விடுகிற அந்தத் தன்னம்பிக்கை...

மன ஆவல், காலில் இறங்க... பெடல் சுழல்கிறது. சத்திரப்பட்டி வந்தால் தார்ரோடு. உன்னி உன்னி மிதிக்கிறான். சீட்டை விட்டு எழுந்து நின்று, ஓங்கி ஓங்கி மிதிக்கிறான்.

ஓய்ந்த உடம்புக்குள் உத்வேகம் தருகிற எம்.ஜி. ஆரின் புன்னகை, மர்மயோகியின் கண்கள்.

வேலுவுக்குள் சாமி ஏறிய மாதிரியோர் ஆவேசம். ஆங்காரம். சைக்கிள் தீயாகப் பறக்கிறது.

எல்லாம் நினைத்தபடியே நடந்தன. முறுக்கு...டீ, எல்லாமே நன்றாக இருந்தன. படத்தில் ஆங்காங்கே விழுந்திருந்த வெட்டுக்கள். படம் தவ்வித் தவ்விப் போனது. ஆனாலும் எம்.ஜி.ஆர் வருகிற சீன்க ளெல்லாம் அச்சழியாமல் இருந்ததில், ஒரு திருப்தி.

படம் முடிகிற போது –

ஒண்ணரை மணியாகிவிட்டது. ஒரு டீக்கடையில் வயிறு முட்ட தண்ணீரைக் குடித்துவிட்டு, சைக்கிளை மிதித்தனர்.

இப்போது,

உறக்கச்சடவு, ஓய்ந்த உடம்பு. ஆர்வம் வடிந்த மனநிலை. ரெண்டு பேருக்குமே 'எங்காச்சும் படுத்தால் தேவலை' என்று தோன்றியது. குறுக்கெலும்பு, தொடையெல்லாம் ஒரே வலி, ரணக்கடுப்பு.

சைக்கிள் மிதிக்கிற தெம்பில்லை.

முனியன் கேரியலில் உட்கார்ந்து, இரு பக்கமும் காலைப் போட்டு... வேலுவுடன் சேர்ந்து கூட்டுப் பெடல் போட்டான். ரெண்டு பேர் மிதியில் வண்டி உருண்டது.

சாமிநாதபுரம் தாண்டி... கரிசல் காட்டு வண்டிப் பாதையில் வருகிறபோது.

ஒரு சிறிய கிடங்கு.

அதில் விழுந்து ஏறிய கணத்தில்...

'டொங்ங்க்'கென்று எதிலோ விழுந்த அதிர்வு. முன்வீல் கட்டுப்பாடற்று, இஷ்டப்படி உருள... ரெண்டு பேரும் சைக்கிளுடன் சேர்ந்து விழுந்து உருண்டனர். முழங்காலிலும் முழங்கையிலும் சிராய்ப்புகள். காந்த லெடுக்கிறது. கரிசல் புழுதியை அள்ளி காயத்தில் அப்புகின்றனர். வலி தீயாய் காந்துகிறது.

சைக்கிளைத் தூக்கிப் பார்த்தால் –

ஃபோர்க் ஒடிந்துவிட்டது. முன்வீல் தனியாக வந்துவிட்டது. பழைய வண்டி. நட்டுகளெல்லாம் எங்கெங்கோ உதிர்ந்துவிட...

ரெண்டு பேரும் ஆளுக்குக் கொஞ்சமாக சைக்கிளைத் தூக்கிச் சுமந்தனர்.

சுமந்த சைக்கிளை, சுமக்க வேண்டிய அவலம்.

முனியன் பதறிப்பதைத்தான் ''ஐயோ ஆத்தாடி'' என்று புலம்பினான். வேலு கல்போல கலங்காமல் வந்தான். ''புலம்பிச் சாகாதேடா'' என்று கோபமாய் அதட்டினான்.

எடுத்த மாதிரியே... பூனை மாதிரிபோய் சைக்கிள் துண்டுகளை உரிய இடத்தில் போட்டுவிட்டு... அரவமில்லாமல் பம்மிப் பதுங்கிப் போய்விட்டனர்.

'உடைந்த சைக்கிளால் ஏதாச்சும் வம்பு வழக்கு வருமோ' என்று பதறிப் பதைக்கிற முனியன். பயநடுக்கத்தில் புலம்பிப் புலம்பி மாய்கிறான்.

''உளறித் தொலைச்சிராம... நீ ஓஞ்சோலியைப் பாரு'' என்று அதட்டலாகச் சத்தம் போட்டான் வேலு. மறுநாள்...

உடைந்து கிடந்த சைக்கிளைப் பார்த்துவிட்டு... கொதிப்பும் கோபமுமாக கொந்தளித்த சைக்கிள்காரர். குடிகாரனைப் போல... சகட்டு மேனிக்கு வைது தீர்த்தார். குருட்டு ஈயின் இரைச்சல்.

நாலு நாள் கழித்து –

சன்னாசித் தேவருடன் மல்லுக்கு நிற்கிற சைக்கிள் கடைக்காரர்.

''நீதான்... என் சைக்கிளை எடுத்து... சீரழிச்சிருக்கே. இதுக்கு நீ ஊர்க்கூட்டத்துலே கட்டுப்பட்டாகணும். இல்லேன்னா... நடக்குறதே வேற.''

சண்டைச் சேவலாகக் கொண்டை தூக்கி... கொக்கரிக்கிற அவர். இந்தத் தெருச்சண்டையை பார்க்கிற வேலுவுக்கு...

ஒரே சிரிப்பாணியாகவும் வருகிறது. உள்ளுக்குள் ஒரு குற்ற உணர்ச்சியின் வலியும் படர்கிறது.

வடக்கு வாசல்
ஏப்ரல் 2007

★ ★ ★

18. அவள் வாசம்

சித்திரை மாசத்து உச்சி வெய்யில். தலையைப் பிளக்கிறது. கன்னமேடுகளின் தீக்காந்தல். கண்ணை இடுக்கிக் கொண்டுதான் வெட்ட வெளியை பார்க்க முடிகிறது. அப்பவும் தீ ஊசியாக கண்ணுக்குள் வந்து சொருகுகிற வெள்ளை வெய்யில். வெய்யிலின் முகத்தில் புளிச்சென்று எச்சிலைத் துப்புகிற கிட்ணனுக்குள், புகையிலை வாசமாக வந்து போகிறாள், செல்வி.

செம்மறிகளுக்கு வெய்யில் தெரியவில்லை. வளர்ந்து, பச்சைப்பசேலென்று கிடக்கிற புல்லையும் கொழைகளையும் ''பர்ர்ருச், பர்ர்ருச்'' என்று சத்தம் தெறிக்கக் கடித்து மேய்கின்றன. ஆவல்பறப்போடு ஓடிஓடி மேய்கின்றன.

கிட்ணன் காது முழுக்க ''பர்ர்ருச், பர்ர்ருச்.'' மேய்கிற ஆட்டை மேயவிடாமல், காமக்கனைப்போடு ரெண்டு

உதடுகளையும் பிதுக்கிக்கொண்டும் இளித்துக் கொண்டும் கொம்புக்கிடாய் வளைய வருகிறது.

காதுக்குள் நாராசமாக வந்து விழுகிற நெருடலான காமக்கனைப்புகள். கிட்ணனுக்குள் தீப்பறந்தது.

கால்விரல்களால் ஒரு கல்லை எடுத்து, மடக்கி, கைக்கு கொண்டு வந்து... கல்லுக்கு சிறகு முளைத்தது.

'விர்ர்ர்'ரென்கிற கல்லின் இரைச்சலிலேயே கதி கலங்கிப்போய் கலைந்தோடுகிற கிடாய்.

ஒருச்சாயலாக ஊன்றிய கம்பின் உச்சியில் அவனது வலது கட்கம் கிடந்தது. உடம்பின் பாரம் முழுதும் அந்தக் கட்கத்தின் மேல். ஒருகாலை விறைப்பாக ஊன்றி மறுகாலை மடித்து அதன்மேல் சாய்த்து... வலது கை ஒரு சிறுகல்லை வைத்துக் கொண்டு சுழன்று கொண்டே யிருந்தது. கிட்ணன் கட்டியிருந்த கயலி கிழிந்துநைந்து போய், முக்கால் காலைத்தான் மறைத்தது .கொழைகட்டு வதற்கான நூல் கயிறை இரண்டாக மடித்து, பெல்ட்டாக கட்டியிருந்தான். நீலக்கலர் பனியனை மறைக்காத அரைக்கைச்சட்டை.

போன பங்குனிமாதத்தில் ஓர் அதிசயம் நடந்தது. பதினைந்து நாளாக விடாத புயல்மழை. கோடை மழையும் கொடிய வெய்யிலுமாக பார்த்துப்பழகிபோன பங்குனியில், ஆடுகள் அலறும். வாய்வைக்க ஒரு பச்சைகூட தட்டுப்படாது. காய்ந்து கனல்பறக்கும்.

ஆனால் இந்தப் பங்குனியில் புயல்மழை. ஆற்றில் வெள்ளம். கட்டாந்தரையிலும் பொட்டல் வெளியிலும் கூட பச்சைப்புல்செழிப்பு.

'இன்னும் ஓர் அதிசயம் நடக்காதா...?' கிட்ணனின் அடிமன ஏக்கம்.

ஊன்றியிருக்கிற கம்பைப் பார்த்தான். கம்பின் அடிநுனி, தரையில் குழிபோட்டு உட்கார்ந்திருக்கிறது. குழிக்குள்ளிருந்து முளைத்துவருகிற ஒருபச்சைப்புல். நீண்டு உயர்ந்து, கம்பைச் சுற்றிப்படர்ந்து பச்சைப் பாம்பென வளர்ந்து... இவன் தோளில் குளிர்ச்சியான கை பதிக்கிற ஓர் இளம்பெண். வெய்யிலை நிலா வெளிச்சமாக்குகிற அவளது புன்னகை. இவனது முதுகில் அழுத்தமாக பதிகிற அவள் மார்புகளும் வயிறும்.

இவனைத் தழுவி, கழுத்தைச்சுற்றி, மார்பிலும் வயிற்றிலும் படர்கிற அவளது பிஞ்சுக்கைகள். அதன் காம இறுக்கம். இவனுக்குள் திகுதிகுவென திணவு.

கண்ணைச் சொருகிக்கொண்டு வருகிற கிறுகிறுப்பு. வலது நெற்றிப்பொட்டில் 'கிண்ண்'ணென்கிற குடைச்சல்.

இவன் மாயலோகத்தில் சஞ்சரிப்பு. இவனுக்குள் ஒரு மாயலோக மன விரிப்பு. முறுக்கேறி முறுக்கேறி... மேலும் கீழுமாய் சுழன்று... துடித்து... வடிந்த வெள்ள மென ஒரு வெறுமை வந்து தாக்கி... துவண்டு...

அவன் கண் விழிக்கிறபோது...

வேலி முள் விளாறால் சுழற்றியடித்த மாதிரி, சுரீரென்று காந்துகிறவெய்யில். புற உலகம். வெய்யில் உலகம். நிலவேயில்லாத, நிரந்தர வெய்யில் நிஜம்.

செவலையும், வெள்ளையும், கருமையுமான செம்மறியாடுகள் 'கர்மமே கண்ணாக...' பர்ருச் பர்ர்ச்'சில் இருக்க... பறப்பெடுத்துப்போய் இரைகடிக்க....

இவன் வடக்காமல் ஓடுகிறான். டயர் செருப்பு 'லடக்,லடக்'கென்று எழுப்புகிற சப்த இடைஞ்சலை பொருட்படுத்தாமல், ஓட்டமாய் ஓடுகிறான். பாறை முடிச்சுகளாகவும், சாய்ந்த நிலையில் வேலி மரங்களு மாய் கிடக்கிற மணலில்லா ஆறு. முறுக்கிப் பிழிந்த ஈரத்துணியாக ஓடிக்கொண்டிருக்கிற தண்ணீர். ஆறு முழுக்க ஓடிமுடிந்த வெள்ளத்தின் சுவடுகள். காய்ந்த முள்குமிகள். சாய்ந்த சீமைக்கருவேலி. ஓடுகிற கிட்ணன், ஓடிய வேகத்தில் குப்புறப்பாய்ந்தான். தாயென தாங்கிப் பிடித்துக் கொண்ட தண்ணீர். வெய்யிலில் கொதி நீராகிப் போன வெதுவெதுப்பு.

ரெண்டு மூன்று முங்கு முங்கியெழுந்தான். துணிமணிகளைக் கழற்றாமலேயே பரபரவென்று தேய்த்து முங்கி எழுந்துவிட்டு... துவட்டாமல், துடைக்காமல் நீர் சொட்ட சொட்ட பாறை முடிச்சுகளில் ஏறினான். அவனிடம் ஓர் உக்கிரம்.

அவனுள் பேய் மாதிரி ஏறிக்கொண்டு உடம்பை அமுக்கி மூச்சுத்திணறடித்த ஏதோ ஒரு வெறி, இறங்கியிருந்தது.

நீர், நெருப்பை மட்டுமல்ல. வெறியையும் தணிக்கும். நீர், மனசைக் கழுவும். மனசின் அழுக்கைக் கழுவும். சகலத்தையும் கழுவும்.

நீரில் முங்கி எழுந்து வந்து நிற்கிற இவனை வேற்றாளாகக் கருதி... ஆடுகள் நிமிர்ந்து பார்த்தன. வேற்றுக் குரலில் கனைத்தன. 'யாரிது' என்பது மாதிரி யான கனைப்பு.

'நாந்தான்' என்கிற மாதிரி, கிட்ணன் ஆடுகளை அதட்டிச் சத்தம் கொடுத்தான்.

சத்தத்தில் இனம் கண்டு கொண்ட செம்மறிகள், ஒருமனப்பட்ட நிதானத்துடன் இரையைக் கடிக்க ஆரம்பித்தன.

காயடிக்காமல் விடப்பட்ட அந்த ஒற்றைக்கிடாய், திருகுமுறுகலான கொம்புடன் கனைத்துக் கொண்டும், உதடுகளை இளித்துக் கொண்டும் ஒவ்வொரு ஆட்டின் பின்னாலும் நச்சரித்துக் கொண்டிருந்தது.

கிட்ணன் ஒரு கல்லை விட்டான், அதன்மீது.

கிட்ணனுக்கு முப்பது வயசு இருக்குமா? இருக்க லாம். கூடவும் இருக்கலாம். யார்கண்டது? பெற்றவள் இருந்து, பிறந்த தினத்தை விரல் விட்டு எண்ணினாளா? தகப்பன் இருந்து கணக்கு வைத்திருக்கிறானா? ஒரு நாதியுமில்லை. நாத்தாங்காலுமில்லை.

ஒரே ஒரு கிழடி தான் 'ஆச்சி' என்று இருந்தாள். அவளுக்கும் கூத்துவன் ஓலையைத் தேடி எடுத்துக் கிழித்து விட்டான்.

''வவுத்துக்கஞ்சிக்கு ஆடு மாடுகளை மேய்ச்சி, எப்படியோ காலத்தைத் தள்ளு'' என்று சொல்லாமல் சொல்லிவிட்டு மண்டையைப்போட்டு விட்டாள்.

முத்தையாக் கோனார் வீட்டு ஆடுகளை மேய்க்கிறான். செம்மறியாடுகள். நாப்பத்தினாலு ஆடுகள். ஒரு கிடாய். பன்னிரண்டு குட்டிகள். அதுகள் தொழுவத்தில் கூட்டுக்குள் கிடக்கும். அதுகளுக்கு இளங்கொழை கட்டித்தொங்க விட்டிருப்பான்.

ஆட்டின் மூத்திரவாசத்தில் ஊறிப்போய் விட்டான். சாணமும், சளியும் கலந்த அந்த நாத்தமில்லாமல் அவனால் இருக்கமுடியாது.

வாகை மரத்தில் தொங்கிய தூக்குச் சட்டியை மனசுதேடியது. வாயும், நாவும் நமநமத்தன. எச்சில் ஊறாமல் சண்டித்தனம் பண்ணுகிறது. என்னத்தையோ பறிகுடுத்த மாதிரி இருக்கிறது. தூக்குச்சட்டிக்கு அடியில் கணேஷ் புகையிலை இருந்தது. எடுத்து உள்ளங்கையில் பதனமாய் தட்டி, விரல்களால் தடவிவிட்டு, சுத்தப் படுத்தி, நுனிவிரல்களால் உருட்டி திரட்டி பொடி உருண்டையாக்கி...

மணிபர்ஸ் வாயை அகலப்படுத்துவதைப்போல அடி உதட்டைப்பற்றி இழுத்து, உதட்டுக்கும் பல்லுக்கும், இடையில் அந்த உருண்டையை அமுக்கி... வாயை அழுந்த மூட... அவனுக்குள் சுரக்கிற எச்சில். புகையிலையின் லாகிரி வாசத்துடன் கூடிய எச்சில். உதடு 'சுறுசுறு'வென்று காந்துகிறது. சுகக்காந்தல்.

அந்த சுகக்காந்தல், அவனுக்குள் போதையேற்றும். கிண்ண்ணென்று உடம்பு மேலேறும். காற்றில் மிதப்பது போல ஒரு மனத்தோற்றம்.

ரெண்டு தடவை 'புளிச், புளிச்'சென்று எச்சிலைத் துப்புவான். பிணவாசம் மணக்கும். மூத்திரவாசமும், சாண நாத்தமும், சளி வீச்சமும் பிடித்துப் போனதைப் போல, அவனுக்கு இந்தப் பிணவாசமும் மணக்கும்.

அப்புறம் ஊறுகிற எச்சிலை நாவில் ருசித்து, நிறுத்தி... அனுபவித்து, ரசித்து விழுங்குவான்.

காணாத சுகத்தை கண்ட மாதிரி... கண்கள் சொருக மனசு திளைப்பான். அந்த சுகத்துக்கு அடிமையாகி ரொம்ப நாளாகி விட்டது.

ரெண்டு மூணு மாதத்துக்கு முந்தி –

'திடுதிப்'பென்று ஆள் காணாமல் போய்விட்டான் கிட்ணன். அவனில்லாத ஏக்கத்திலும் பசியிலும், செம்மறிகள் தொழுவத்திற்குள் சுற்றிச்சுற்றி வந்து கத்தின. கூட்டுக்கதறலாக ஆடுகள் கத்தின. அவற்றின் கதறல், குலைபதற வைத்தது.

முத்தையாக் கோனார் பதறிப்போனார். இளவட்டங்களை சைக்கிள்களில் மூலை மூலைக்கு அனுப்பி தேட வைத்தார். ரெண்டே நாளில் கோழிக் குஞ்சை ஈரத்துணி போட்டு அமுக்கின மாதிரி கைப்பற்றிக்கொண்டு வந்து விட்டார்கள் கிட்ணனை.

''எதுக்குடா... இந்தப்பய, கோணக்காலைச் சாத்துதான்?'' என்று திகையாமல் தவித்த முத்தையாக் கோனாரிடம் இளவட்டங்கள் சொன்னார்கள்.

''காயடிக்காத கிடாய்... கனைச்சிக்கிட்டு திரியுது''

''அடடே... அப்படிப்போகுதா... கதை?''

அந்த நேரம் பார்த்து... மாடத்திக் கிழவி மண்டையைப் போட... அவளது பேத்தி நாதியற்ற குமரியாக ஆதரவற்று நின்றாள். இவனும் நாதியற்றவன்.

முத்தையா கோனாரின் ஈரமனசில் இரக்க நினைவுகள்.

தனித்தனி ரெண்டு அனாதைகள். 'ஒன்றாகச் சேர்த்து வைத்தால்... ஒரு குடும்பமாக செழித்து விடுமே...' என்று யோசித்தார். நாதியற்றதுகளின் இணைப்பில் ஒரு நாற்றங்கால் தோன்றிடுமே.

உள்ளூர் கோயிலில் மாலை மாற்றி, கல்யாணம். ரெண்டு மாசமாயிற்று.

வயிறுபுடைக்க இரைதின்று விட்டு, நீரிலும் முங்கி யெழுந்த செம்மறி போல... மனத்ததும்பலில் இவன். ஏகசந்தோஷம். மனசுக்குள் ஒரே கொண்டாட்டம். குதூகலம். ஆதாளி.

அந்த ஆதாளி, நீர்க்குமிழி மாதிரி. தோன்றிய மாயத்தில் உடைந்து போய் விட்டது.

''கிட்டக்க அண்டாதேய்யா... தூரப் போய்யா'' என்று சொல்லி புதுப்பொண்டாட்டி, புதுசு மங்காமலேயே இருக்கிறாள். ரெண்டு மாதமாய்!

இதை யார்கிட்டே போய்ச்சொல்ல? வெக்கங்கெட்ட கேவலக்கூத்து. ''எம் பொண்டாட்டி என்னை அண்டவுட மாட்டேங்கா''ன்னு யார்கிட்டே சொல்ல?

அசிங்கமில்லியா? ''நீ ஆம்பளையில்லியா''ன்னு நாக்கைப் புடுங்கிச்சாகுற மாதிரி யாருமே கேப்பாங்களே … அடப் பாதரவே!

காறிக்காறி துப்புகிற செல்லி. முகமெல்லாம் நிரந்தரமான அசூயை. அசிங்கத்தில் கால் வைத்த மாதிரி ஒரு முகக்கோணல்.

''ச்சேய்… நாத்தம்….'' ''ச்சீய்… கொடலைப் புரட்டுகிற வாசம்…'' ''அய்ய்க்…. பொண நாத்தம்''

காறிக்காறி துப்புகிற சளியோடு… வந்துவிழுகிற அருவருப்பு முணுமுணுப்புகள்

கிட்ணனும் எப்பவுமில்லாத அதிசயமாக சாயங்காலக்குளியல் போட்டுப்பார்த்தான். கடையில் சொல்லி, நல்ல நல்ல வாசனைச் சோப்புகளை வாங்கித் தேய்த்தான். ம்ஹூம்… கதையாக மாட்டேனென்கிறது. 'கிளி, சிக்குவேனா' என்கிறது.

காறித்துப்பல்கள், அடைமழையாக தொடர… ''பொண வீச்சம்'' என்ற மின்னல் முழக்கம் அதிர…

ஈரத்தோடு வெட்ட வெளியில் சித்திரை வெய்யிலில் நிற்கிற கிட்ணன். அவனுக்குள் செல்லி காறித்துப்புகிற சத்தம். இவன் மூஞ்சியில் வந்து அப்புகிற எச்சில்.

இவனுக்குள் ஒருதீ ஜ்வாலைவிட்டு 'திகுதிகு'வென எழுகிற நெருப்பு நாக்குகள். 'இதுக்கு என்னதான் முடிவு,' என்றறியாமல் எழுகிற தீஜ்வாலையின் அனல்.

மறுநாள் தொழுவத்திற்குள் செம்மறிகள் கத்திக் கதறின. முள்படல் கதவைதிறக்க கிட்ணன் வரவில்லை. எங்கோ கம்பி நீட்டிவிட்டான்.

இப்ப.... முத்தையா கோனார் ரெண்டே இளவட்டங்களை சைக்கிளில் அனுப்பி வைத்தார்.

''தேடிப்புடிச்சு, அமுக்கிக் கொண்டாங்கடா'' என்று தாட்டியமாக சொல்லிவிட்டு, வெள்ளை மீசையில் கை போட்டார்.

இளவட்டங்களை அனுப்பிய கையோடு... பெஞ்சாதியை கூப்பிட்டார்.

''ஏளா... போய் செல்வியை கூட்டிட்டுவா''

''இங்கயா?''

''ம்... அப்புடியே என்ன, ஏதுன்னு விசாரிச்சுப்பாரு. ''சின்னஞ்சிறுசுக. உள்குட்டுகளை கேட்டுப்பாரு.''

பெஞ்சாதி மட்டும் திரும்பி வந்தாள்.

''என்னளா?''

''நா பேசி... குடைஞ்சி விசாரிச்சுட்டேன்.''

அவள் சொல்லச் சொல்ல... வருத்தத்துடன் தலையை தலையை ஆட்டுகிற அவர். வளைந்து நிமிர்ந்த நரைமீசையில் கவலையின் நிழல். அதற்கு முரணாக உதட்டில் ஒருசிறிய குறும்புப் புன்னகைக் கீற்று.

''அ...ப்...ப...டியா போகுது... கதை?'' என்று நிறுத்தி நிதானமாக முணுமுணுக்கிறார். மேல்துண்டை மடித்துத் தோளில் மாற்றிக்கொண்டார். நெஞ்சு ரோம மெல்லாம் நரைச் சுருள். ''அப்ப... கிட்ணன் பய வந்துவான்...''

சைக்கிளில் தேடிப்போன இளவட்டங்கள் மூலை மூலையாக ஊர் ஊராக ரவுண்டடிக்க... முத்தையா கோனார் நினைத்த மாதிரியே... நடந்தது.

மறுநாள்-

விடியற்காலம். இதமான மஞ்சள் வெயிலின் பிஞ்சுக்கரங்கள் அவர் முகத்தில் வருட... திண்ணையில் உட்கார்ந்திருந்தார். அவர் மனசுக்குள் வந்துபோகிற செல்லி.

அறுத்துப்போட்ட கொடியாக வாடிக்கிடக்கிற அவள் முகம். கலங்கிச் சிவந்த கண்ணில் நீர்க்கோர்வை.

''இப்படியொரு கூறு கெட்ட தலையெழுத்து எந்தலையிலே வந்து விடிஞ்சிருச்சே.. அடக்கூத்து வனே, இதுவும் ஒனக்குச் சம்மதமா?'' என்று காய்ந்த தலைரோமங்களில் அறைந்துகொண்டு அவள் அழுகிற கோலம்.

அவருக்குள் குற்ற உணர்வின் முள் உறுத்தல். ''நல்லது செய்யறதாக நெனைச்சுக்கிட்டு... இந்தப் பச்சை மண்ணு வாழ்வை வீணடிச்சிட்டேனோ..'' என்ற நினைவுகளின் மொய்ப்பு. மனச்சிராய்ப்பின் வலி.

அப்பத்தான்.

வீட்டு முற்றத்தில் வந்து நின்ற கிட்ணன். பசியின் வாட்டத்தில் பயல் கறுத்துப் போய் துவண்டு போயிருக்கிறான். முகம் குறாவிப் போயிருந்தது.அரை உயிராக ஆகிப்போயிருக்கிற அவனைப் பார்த்தால்...

கோபம் கோபமாக வருகிறது, கோனாருக்கு. முகத்தை ஒருச்சாயலாக திருப்பி, ஓரக்கண்ணால் முறைக்கிறார்.

''எங்கேலே வந்தே?'' இறுகலான அவரது உறுமல். பூனைபோல பம்மிப்பதுங்குகிற அவன் தலை, வெட்டுண்ட மாதிரி குனிகிறது. தாழ்ந்து கவிழ்கிறது.

''நின்று சாதிக்க முடியாத கோழைப் பயலுக் கெல்லாம் என்னத்துக்குடா கலியாணமும் காட்சியும்? அப்படியே கண் காணாம போய்த்தொலைய வேண்டியதுதானே?''

தலை கவிழ்ந்த நிலையில் கண்ணை மட்டும் உயர்த்தி அவரைப் பார்க்கிற அவனுள் அச்ச நிழல்.

''என்னத்துக்குடா இப்ப வந்தே? அந்த தாயத்தப் புள்ளையை தவிக்க வுட்டுட்டுப் போய்ட்டு, இப்ப என்னத்துக்கு வந்தே?

''அவா... தான் அம்புட்டுக்கும் காரணம்.''

''அவா என்னடா செய்ஞ்சா? அடிச்சாளா, வைய் றாளா? ஆக்கி அவிச்சுப்போடுறா. தின்னுக்கிட்டுத் திரிய வேண்டியதுதானே?''

''இல்லே... இல்லே... அவாதான்'' பயத்தில் தயக்கமாக பாதியில் அறுந்து போகிற குரல். மனசுக்குள் முட்டுகிற புகாரை சொல்ல முடியாத அவனது தவிப்பு.

குறுக்கிட்டு சீறிச் சினக்கிற கோனார்.

''என்னடா சொல்லப்போறே? எல்லாந்தெரியும். வுட்டுக்குடுத்து வாழ்றதுதான் குடும்ப வாழ்க்கை. நீ என்னத்தை வுட்டுக்குடுத்தே, செல்விக்காக?''

''செல்லிக்கு என்ன புடிக்குது, என்ன புடிக்க லேன்னு யோசிச்சியா? பிரியமிருந்தா அறிஞ்சிருப்பே இல்லே?''

கிட்ணனுக்குள் புதிய குழப்பம். மருட்டல்.

''பொணநாத்தமெடுக்கிற போயிலையை வாய்லே திணிச்சுக்கிட்டு, 'புளிச், புளிச்'சுன்னு துப்பிக்கிட்டு திரியுதீயே... அந்த நாத்தமெடுத்த சனியனை வுட்டுத் தொலைக்கமுடியுமா, முடியாதாடா?''

விரலை நீட்டி கோபமாக் கேட்கிற கோனாருக்குள் பாசத்தளும்பல்.

அவரது கேள்வி அவனை உலுக்கியது. அவனுக்கே அவனைப் புரிய வைத்தது.

''பொண வீச்சம்... பொண வீச்சம்'' என்று அருவருப்பும் அசூயையுமாகக் காறிக்காறி துப்பிய செல்லியின் முகக் கோணல்கள் நினைவில் நிழலாடு கிறது.

அவனுக்குள் அவிழ்ந்த இருள் முடிச்சுகள்

மறுவருஷம் செல்லி பெற்றடுத்த ஆண்குழந்தைக்கு 'முத்தையா'' என்ற பெயர்தான் வைக்கவேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்று வாதாடினான் கிட்ணன்.

புதியபார்வை – ஜூலை 2008

✱ ✱ ✱

19. திரும்புதல்

சன்னாசிக்குள் ஜில்லென்னு குளிர்ச்சியான நீர் பீய்ச்சியடிக்கிற மாதிரியொரு மனப்பரவசம். சொந்த ஊர் மண்ணுக்குள் பாதம் பதிய நடக்கப்போகிறோம் என்ற நினைப்பே நெஞ்சுக்குள் சந்தோஷ நதியாக பிரவாகம் எடுக்கிறது.

திருப்பூரிலிருந்து புறப்படுகிற சிவகாசி பஸ்ஸில் வந்துகொண்டிருக்கிறான். அஜீத் நடித்த படம் டி.வி.டி யில் ஓடிக்கொண்டிருக்கிறது. சன்னாசிக்கு டிரைவர் சீட்டுக்குப் பின்னால் மூன்றாவது சீட்டில் ஜன்னலோரம் இடம். 'அட்டகாசம்' படம். ரெட்டை அஜீத். தாதாவாக ஒருத்தர். அம்மாபிள்ளையாக ஒருத்தர்.

படத்தில் மனசுலயிக்கவில்லை. நினைவு பூராவி லும் சொந்தக் கிராமத்தின் கூரைவீடுகள். வேலிக் காடுகள். மயில் கூட்டப்பேயிரைச்சல். மஞ்சணத்தி மரங்களில் வெண்புள்ளி நிறைந்த குயில்கள்.

இவன் மேய்த்த ஆடுகள். வனச்சுவாசம். ஆடு மேய்த்த காடுகள். கதுவாலி முட்டைகளை பச்சை பச்சையாக உடைத்துக் குடித்த ருசிகள். குருவி சுட்டுத் தின்ற கருகல் வாசம். கடலை விளைந்த காடுகளில் காலாலேயே எத்தி எத்தி... கடலைச்செடியின் வேர் கண்டு, செம்மண்ணில் முகம் காட்டிய வெண்முத்துக்களான பச்சைக் கடலைகளை பறித்து, உடைத்துத் தின்ற பால்ருசி.

பழைய வாழ்வின் வாசங்கள். பால்ய காலத்துப் பரவசங்கள். நினைவலமாரிகளில் மூச்சு முட்டிக்கிடந்த பழைய பழைய எண்ணங்கள். சம்பவங்கள். கிராமத்து நெடி. ஆட்டு மூத்திர வாசம்.

சொந்த ஊர் மண் என்பது, சூட்சுமமான உணர்வு. உயிரின் மையத்தில் கால் பதித்து வேரடித்திருக்கிற உற்சாக நினைவுகள். கிளர்ச்சியூட்டுகிற உயிரின் சிலிர்ப்புகள்.

அந்தமண் பிறந்து விழுந்த மண். முட்டி தேய தேய தவழ்ந்து தவழ்ந்து உரிந்த தொலி இணுக்குகள் விழுந்த மண். சிறு பாதங்களால் எற்றி எற்றி எழுப்பிய புழுதிக்குள்ளிருந்த கல்லில் மோதி கட்டை விரல் நகம் பெயர்ந்து, சிந்திய ரத்தம் கலந்த மண். சதையும் ரத்தமும், உயிரும் மனச்சுவாசமும் குழைந்த மண். மனச்சுபாவத்தை வடிவமைத்த மண்.

தெருப்புழுதியை எற்றி விளையாடிய சந்தோஷம் போலவே, கட்டைவிரல் நகம் பெயர்த்த வலிகளும்

தான்... கிராமம். அடிமனசை அரிவாளாக வெட்டிய அவமானங்கள். அம்மணப்படுத்தி தெருப்புழுதியில் உருட்டின மாதிரியான இழிவுகள். ஏளனங்கள். அவமதிப்புகள்.

பெருமூச்சுடன் வெளியே பார்க்கிறான், சன்னாசி. கண்டக்டர் 'டிக்கட்... டிக்கட்... டிக்கட்' என்கிற சத்தம், இடைவிடாமல் தொடர்கிற விசில் இரைச்சலாக நீள்கிறது. நின்று வருகிறவர்கள் நெருக்கடிக்குள்ளாகி மூச்சுத்திணறுகிற சத்தம்.

சதையை பிய்த்துக்கொண்டு ஊடுருவுதைப் போல, அந்தக் கூட்டத்துக்குள் டிக்கட் போட்டு, இன்வாய்ஸ் எழுதுகிற கண்டக்டரின் சிரமத்தவிப்பின் சிடுசிடுப்பு. 'இறக்கம் இருக்கா?' என்று வினவுகிற டிரைவரின் ஹாரன் சத்தம். ''ரைட் ரைட் போகலாம்'' என்கிற மொழியில்லாத விசிலின் ரெட்டை ஊதல்.

ஊர் இப்ப எப்படி இருக்கும்? ஏளனமாகப் பார்க்குமா? ''வந்துட்டான், களவாணிப்பய'' என்று காறித்துப்புகிற மாதிரி பார்க்குமா? பழைய கோபத்தை பத்திரப்படுத்தி பாதுகாத்து வைத்திருக்குமா? முறைத்து முறைத்து விறைக்குமா?

அவனுள் பரவுகிற பதற்ற அலைகள். அவற்றை போக்கடிக்கிற மாதிரியான மாற்று நினைவுகள். கடந்து ஓடிப்போயிருக்கிற பத்து வருஷங்கள். நூற்றிருபதுக்கும் மேற்பட்ட மாதங்கள். புதுத் தலைமுறையே தலை யெடுத்திருக்கும். இவனை இன்னார் என்றறியாத

இளவட்டப்பட்டாளம். மீசை அரும்பியிருக்கும். வெறித்து வெறித்துப் பார்க்கும். முகஜாடை அடையா ளத்தை வைத்து இவன்தான் யூகிக்க முடியும்.

''யார்ரா நீ? முகச்சாடையை வைச்சுப் ''பாத்தா... முருகேசன் மகன் மாதிரி தோணுது. யார்ரா உங்கப்பன்?''

''முருகேசன்தான். நீங்க?''

''உங்கப்பனும் நானும் ஆடுமேய்ச்சுக்கிட்டு ஒண்ணாவே திரிஞ்சோம். இப்ப நா திருப்பூர்லே இருக்கேன்.''

''என்னவாக இருக்கீங்க?''

''வழியத்து வகையத்து... பொழைக்க திசையத்து ஓடுன நாய், கலெக்டராகவா ஆகியிருக்கும்? கொத்த னாரா இருக்கேன்.'' சலிப்பும் வலியுமான குரல் மெலிவு.

இப்படித்தான் ஊர்க்காரர்களோடு உறவாட வேண்டி யிருக்குமோ? பார்த்த கணத்தில் பழகிக் கலக்க முடியாமல், எண்ணெயில் தண்ணீராக அந்நியப்பட்டே மிதக்க வேண்டியிருக்குமோ...? ஒட்டாமல் உரசாமல் உரையாடவேண்டியிருக்குமோ?

இன்னும் ''பழையதை'' ஞாபகம் வைத்திருந்து வெறுப்பும் ஏளனமுமாக பார்க்கிற பெரியாட்களும் இருப்பார்களோ? 'களவாணிப்பய' என்று கடுப்பும் வெறுப்புமாகப் பார்ப்பார்களோ?

அவனுள் ஊசலாடுகிற நினைவுகள். அங்கிட்டும் இங்கிட்டுமாக இவனைப் போட்டு இழுத்தடித்து அலைக்கழிக்கிற எண்ணங்கள்.

நல்ல ரோடு. தடங்கலற்று பாய்கிற பஸ். பஸ்ஸின் வேகத்தில் உற்பத்தியாகிற காற்றின் குளிர்மை. ஜன்னல் வழியே வெளியே பார்க்கிறான்.

சின்னச்சின்ன ரோட்டோரத்து ஊர்கள். நிறைய புதுவீடுகள். குடிசைகள் உட்பட எல்லா வீடுகளிலும் கலர் டி.வி. ஓடிக்கொண்டிருக்கிறது.

எந்நேரமும் டி.வி.களில் தொடர்கள். அழுகையும் கண்ணீருமாய்... வெறுப்பும் திமிருமாய் பெண்கள். நல்லவர்களும், வில்லிகளும் பெண்கள்தாம்.

சினிமாக்கள். சினிமாக்களின் துண்டுகள். பாட்டுகள். ஆட்டங்கள்.

இவன் குடியிருக்கிற கீற்றுக் கொட்டகையில் கூட சிறியதாக ஒரு கலர் டி.வி. இருக்கிறது. சோறுதண்ணீர் இல்லாமல் கூட வாழ்ந்துவிடலாம் போலிருக்கிறது. டி.வி.இல்லாமல் ஒரு நிமிஷம் கூட மூச்சு விட முடியாது.

முந்தியெல்லாம் டி.வி.யும் கிடையாது. ஓர் இழவும் கிடையாது. டிரான்ஸிஸ்டர்தான். டி.எம்.எஸ் பாடுவார்.

சினிமா வேணும்னா டாக்கீஸ்லே போய் பாக்கணும். அப்பவெல்லாம் திருவேங்கடத்தில் டாக்கீஸ் உண்டு. ஆலங்குளத்திலும் உண்டு.

ஆடு மேய்க்கிறவர்களால் முதல்காட்சிக்கெல்லாம் போக முடியுமா? அதுவும் ரெண்டாவது ஷோதான்.

காடுகரைகள், ஓடைக்காடு, தரிசுக்காடு என்று ஆடுகளை மேய்த்துவிட்டு, கருங்கல் கிடங்குத் தண்ணீ

ரில் 'போட்டெடுத்து'விட்டு... பட்டிக்குள் அடைக்கும் போது பொழுது அடைந்து, கருகருவென்று மயங்கி விடும். இருள் ராட்சஸம் பெருஞ்சிறகுகளை விரித்து மூடும். ஆடுகளின் சிநேகிதமான கதறல்கள் துரத்தும்.

அப்புறம்தான்... கொழை ஒடிக்க ஓடணும்.

முருகேசனும் சன்னாசியும் தான் இதில் இணை பிரியாத கூட்டாளி. முருகேசன் பட்டியில் ஆடுகளை அடைத்துவிட்டு, படல்கதவை சாத்தி விட்டு சன்னாசி யிடம்தான் ஒரே ஓட்டமாய் ஓடிவருவான்.

''கொழைக்குப் போகணும்லே?''

''ம்...''

''எங்குட்டுப் போக?''

''ரெங்கையா நாய்க்கரு புஞ்சையிலே அகத்திக் கொழை கைபடாத ரோசா மாதிரி கெடக்கு. போய்... கை வைச்சிருவமா?''

''ஆள் பாத்துட்டாகன்னா? அடிபிச்சியெடுத்து, மப்பைக் கழட்டிருவாகளே...''

''நம்ம திங்குறதுக்கா? வாயில்லாச் சீவன் வவுத்துப் பாட்டுக்குத்தானே?''

''அதுக்காக? களவாடவுடுவாகளா?''

''இதெல்லாம் களவுல்லேடா. வவுத்துப்பாட்டுக்கு எடுக்குறதெல்லாம் களவுல்லே. சேத்து வைச்சிருந்து வட்டிக்கு வுடுறதுக்காக எடுக்குறதுதான், களவு''.

''இப்பப் போகவா?''

''இன்னும் கொஞ்சம் இருட்டட்டும், போவம்''

போய்... பூனை பம்மிப் போகிற மாதிரி காட்டுப் பக்கம் ஒதுங்கி, பொழிக்குள் இறங்கி... 'மடக், மடக்'கென்று கொப்பு கொப்பாக ஒடித்து... ஆமணக்கு கொழையையும் ஒடித்து கயிறு போட்டுக் கட்டி... தலைப் பாரமாக சுமந்துகொண்டு வந்து... பட்டிக்குள் அடைபட்டுக் கிடக்கிற குட்டிகளுக்குக் கட்டினர்.

கொழை கண்ட மகிழ்வில் அதுகள் போடுகிற கூப்பாடு. மகிழ்ச்சியான கதறல். குதியாளம்.

அப்புறம்தான்... சாமி நாயக்கர் கிணற்றில் போய் குதித்தனர். குதித்த குதியில் தண்ணீரே திடுக்கென பயந்துவிட்டது. சளாரென்று சுவரில் தெறித்த தண்ணீர். சுவர்ப்பொந்தில் அடைந்திருந்த பனங்காடை, இருளைக்கிழிக்கிற மாதிரி கத்திக்கொண்டு பறந்தடித்து ஓடுகிறது. உயிர்ப்பயம்.

இவர்கள் குளிப்பு, இராக்குளிப்புதான். இனி தான் வயிற்றுப்பாடு.

சோற்றை சாப்பிட்டு முடித்து, ஈரக்கையை துடைக்க சன்னாசியிடம் வந்து விடுவான் முருகேசன்.

''இன்னிக்கு சினிமாவுக்குப் போனா...என்ன?''

''சினிமாவுக்கா...? போனா நல்லதுதான். என்ன சினிமா... எங்க நடக்குது?''

''ஆலங்குளத்துலே 'தாயைக் காத்த தனயன்' எம்.ஜி.ஆர். குடுத்தது.''

''சிலம்புச்சண்டை அதுலேதானே? எம்.ஜி.ஆர். மின்னல் மாதிரி கம்பைச் சுழற்றுவாரே?''

''அதே படம்தான்.''

''அப்ப... கட்டாயம் போகணும்.'' காசுபணத்துக்கு செலவுக்கு திகைப்பதேயில்லை.

''ஊருக்கு தெற்கே முத்தையாநாடாரு புஞ்சையிலே பருத்திவெடிச்சு கெடந்துச்சு, ஜில்லுன்னு...''

''சரி... பெறப்புடு''

துண்டை தலைப்பாகையாக கட்டிக்கொண்டனர். வேட்டித் தூசியை தட்டி உதறிவிட்டு இவர்கள் கிளம்புகிறபோது, பனங்காட்டு மயில்கள் கூட்டாக கூவிற்று, பயத்தில்.

ரவ்வோடு ரவாக முத்தையா நாடாரின் புஞ்சைக்குள் இறங்கிவிட்டனர். ஆட்டுக்காரர்களுக்கு பாதங்களிலும் கண் உண்டு. முள், பாம்பு, கிடங்கு, கட்டைகளுக் கெல்லாம் விலகிப்போய் விடுகிற இருட்டனுபவம். இருட்டே தொழில். இருட்டே பிழைப்பு. கொழை களவு செய்யாதவன் ஆடுமேய்க்க முடியுமா? ராத்திரி, இருட்டு, பேய், பாம்பு என்று பயந்தால் நடக்குமா?

பருத்தியை உருவி உருவி... மடியில் போட்டனர். பூப்பஞ்சாக... குருவிக் குஞ்சாக மிருதுவாக இருந்தது. கப்பென்று மடிகனத்தது.

ஊருக்குள் நுழைகிற போது... ஊர் அடங்கி விட்டது. காடுகரைகளில் பாடுபட்டு ஜீவனை வடித்தவர்கள்... நாளையும் பாடுபட்டு உயிரைத் தரவேண்டியவர்கள். உறங்கி உயிர்சேமித்தால்தான் மறுநாள் உழைக்க முடியும். உறங்குகிற ஊர்.

ஒன்று இரண்டு கிழடுகட்டைகள், நோயாளிகள் தவிர எல்லாரும் உறங்கிவிட்டனர். அந்நேரமும் உறங்காமல் கடை வைத்திருப்பவர் சுப்புக்காளை நாடார். களவு சாமான்கள் வாங்குவதற்காகவே சாமக்காட்டில் கடைதிறந்து வைத்திருப்பார்.

அவரிடம் பருத்தியைப் போட்டு, காராச்சேவும், அவித்த சீனிக்கிழங்கும் துட்டும் வாங்கிக் கொண்டாகி விட்டது.

ராசமணித் தேவர் சைக்கிள்கள் வாடகைக்கு விடுகிறவர். பகல் பூராவும் சைக்கிள்களை அக்கு அக்காக பிரித்தெடுத்து, எண்ணெயில் அலசி மாட்டி... சைக்கிள் ரிப்பேர்தான் தொழில்.

வாடகைச் சைக்கிள்கள் இரவில் சுவரில் சாய்த்துக் கிடக்கும். ஐந்து சைக்கிளையும் ஒரே செயினால் கோர்த்து பூட்டு ஒன்று தொங்கும். கிராமத்தில் களவு போகாது என்ற முரட்டு நம்பிக்கை. ''சைக்கிள் கழுதையை நாயா தூக்கிட்டுப் போகப் போகுது?'' என்ற நம்பிக்கையில் ஊறிய தைர்யம்.

அந்தப் பூட்டை கள்ளச்சாவி போட்டு திறந்து, ஒரு சைக்கிளை மட்டும் எடுக்கிற சன்னாசி. கேரியல் வைத்த

சைக்கிள். 'காற்று இருக்கிறதா?' டயர்களை நசுக்கிப் பார்த்தான். பிரேக் வேலை செய்கிறதா? செயின் சிக்கல் பண்ணுதா? பெடல் சுழல்கிறதா?

செக்கப் முடிந்து சைக்கிளை நகர்த்துகிற சன்னாசி. கிளிப்பை தட்டி, ஸ்டாண்டை எடுத்து, பெடலில் கால் வைத்த வேகத்தில் காற்றாய் பறக்கிற சைக்கிள்.

வண்டிப்பாதைத் தடம். காட்டு வழி. கண்ணைக் கட்டின மாதிரி மையிருட்டு. கிடங்கு மேடான நொடிப்புகள் கொண்ட பாதை.

எல்லாம்... பழகிப்போன நரகம். தடங்கலற்ற பயணம்.

சன்னாசிக்கு பெடலை அழுத்தி அழுத்தி மிதிக்க மிதிக்க வியர்த்துக் கொட்டுகிறது. 'தஸ்ஸ¬ புஸ்ஸ¬'ஸென்று இரைக்கிறது.

''ஏலேய்... கேரியல்லே பிரேதம் கணக்கா உக்காந்துருக்கே?''

''தேர்லே போற மாதிரி... ஆடி அசைஞ்சு போறது சொகமா இருக்கு''.

''எனக்கு உசுரு போவுதுடா... செத்த நாயி.''

''நா என்ன செய்ய?''

''நீயும் பெடல்லே காலை வைச்சு மிதி''

எம்.ஜி.ஆரின் புன்னகையின் வசீகரம். திருவிழாக் கூட்டத்தில் வெற்றிலை முதுகில் சுண்ணாம்பு தடவிக்

கொண்டே, கண்ணடிக்கிற ஸ்டைல். நளினமாக நாணப் புன்னகையில் அரைமுகம் மறைத்து, அரைக்கண் மலர்த்துகிற கன்னடத்துக்கிளி.

உள்ளுக்குள் ஓடுகிற சினிமா, உயிருக்கு வலிமை தருகிறது. சைக்கிளை மிதிக்கிற பலம் தருகிறது.

சுற்றிக்கிடக்கிற இருட்டு. இராக்குருவியின் வீறிடல். மேகமில்லா ஆகாயத்தில் விதைத்த சோளப் பொறிகளாக நட்சத்திரங்கள். கரிசல் காட்டு வேலி விளார்களின் முள் உரசல்கள்.

முக்கி முக்கி சைக்கிள் மிதித்தாலும், தொலை தொலைவாக, சினிமாக் கொட்டகையின் பச்சை லைட்.

அந்தப்பரபரப்பிலும் சன்னாசி மனசுக்குள் ஆட்டு நினைப்பு. கொம்பு முளைத்த காயடிக்காத கிடாய் சும்மா கிடக்குமா? ஆடுகளை படுத்து அசைபோட விடாமல்... காமக்களைப்பாக கனைத்து பாடாய்படுத்துமா? களேபரப்படுத்துமா?

கம்மாப்பட்டியைத் தாண்டி, தண்ணீரில்லாத கண்மாயுக்குள் நீள்கிற ஒற்றையடிப்பாதையில் குறுக்கு வழியாக ஓடி...

சினிமா பார்த்து... கம்புச்சண்டைக்கு விசிலடித்து, குத்துச்சண்டைக்கு கூப்பாடு போட்டு... முறுக்கு வாங்கி நொறுக்கித்தின்று... டீ குடித்துவிட்டு சைக்கிள் ஏறுகிற போது...

உயிர் வடிந்து போனது மாதிரியான உடல்சோர்வு. சதையெல்லாம் கவ்விப்பிடிக்கிற வலி. குறுக்கெலும்

பெல்லாம் குடைச்சலெடுக்கிற ரணம். மனசு முழுக்க அயற்சி.

'எங்கனடா வுழுந்து ஒறங்கலாம்' என்று கிடந்து தவிக்கிற திரேக அசதி. மனச்சோர்வு.

எங்கோ கதறுகிற கிடையாடுகளின் அலறல் சத்தம், சன்னாசி உயிருக்கு சூடு தருகிறது. சுரணை பெற்ற மன பலத்தில்... 'ஆடுகளுக்கு கொழைகட்டணுமே' என்ற தவிப்பில் வலுபெறுகிற நரம்புகளின் புடைப்பு. ஈர்க்கிற வாழ்க்கையின் அழைப்பு. சைக்கிள் இருட்டை ஊடுருவிக்கொண்டு பாய்ந்தது. இருவர் சேர்ந்து போடுகிற பெடல். தொடையின் வலியை சகித்துக் கொள்கிற மனசு.

ஆற்றின் பாறை இடுக்குகள். வேலி மர அடர்த்தி. பனை மரத்தின் காய்ந்த ஓலைகளின் சலசலப்பு. உயிர்ப்பயத்தில் கதறி வீறிடுகிற மயில்கள்.

ஊர்வந்துவிட்டது.

''ஏலேய் முருகேசா...''

''என்ன...?''

''நீ இங்கன எறங்கி வீட்டுக்குப்போ''

''ம்...நீ?''

''சைக்கிளை அங்கன செவர்லே சாத்தி, வைச்சுட்டு, நா வூட்டுக்குப் போறேன்.''

''வாடகை குடுக்க துட்டு இருக்கா?''

''இருக்கு. ராசமணியண்ணாச்சிக்கிட்டே விடிஞ்ச பெறகு தந்துருதேன்.''

பெடலிலிருந்த பாதங்களை எடுத்து விலகிய கணத்திலேயே குதித்து இறங்கிக் கொண்ட முருகேசன்.

சைக்கிளிலேயே நடுத்தெருவுக்குள்போய், சைக்கிள் சரித்துகிடந்த இடத்திலேயே சுவரில் சாத்தி வைத்து விட்டு...

படுத்துகிடந்த நாயொன்று தலைநிமிர்ந்து உறுமியது. காலடிச் சத்தத்தில் சிநேகிதமறிந்து மௌனமாகியது.

வியர்த்துக் கொட்டுகிற உடம்பு. 'தொப்பு, தொப்பென்று நனைந்து கிடக்கிற பனியனும், கயலியும். முறுக்கிப் பிழிகிற உடம்பு ரணம். துவண்டுசரிகிற உயிரின் அயற்சி.

நெஞ்சுக் கூடு இளைக்கிறது. விம்மி விம்மி விடைக்கிறது.

சாமத்துக்கும் மேலாகிவிட்டது. தேய்பிறை நிலா தலைகாட்டியது. வைகறைப் பொழுதின் அரும்புநிலை.

வீடுநோக்கி நடந்தான். துவண்டு தளர்ந்த நடை.

''யார் றா, அது?''

முத்தையா நாடார் திண்ணையில் படுத்திருந்தவர், தலை தூக்கி வருகிறார்.

''நாந்தான்...'' உலர்ந்த தொண்டைக்குள் தடுமாறி தவிக்கிற குரல்.

''நாந்தான்னா? எவண்டா இம்புட்டு நேரத்துலே?''

''சன்னாசி... ஆட்டுக்காரன்...''

''நீயா...? அப்பச்சரி...'' சாந்தமாகிற சமாதான மடைகிற பெரியவர்.

தள்ளி நடக்கிறான். அப்பத்தான்.

அந்த விபரீதம். தலைகீழாக உலகமே புரண்ட மாதிரியோர் அதிர்வு. நம்பவே முடியாத விகார காரியம்.

அந்தப் பெரியகாரை வீட்டுத் தொழுவத்தில்... அரிக்கேன்லைட்டின் வெளிச்சத்தில்... ஆத்திர அவசர மான திரேகப் பிணைப்பு. உன்மத்தமான உயிர்க்கலப்பு. உணர்ச்சிப்பெருக் பிரவகிப்பில் அடித்துச் செல்லப் படுகிற பிராணிப்பிறவிகள், முக்கல் முணகலான பரவச உச்சம்.

இவனது காலடி அரவம். அரும்புகிற வைகறைப் பொழுதில் எதிர்பாராத மனிதச் செருமல்.

அலைய குலைய பதறிப்போய், அரையும் குறையு மாக வேட்டியை அள்ளிக்கொண்டு தெறித்தோடுகிற அந்தக் கறுத்தமனிதன்.

மங்கலான வெளிச்சத்தில் பிடிபடுகிற உருவம். பக்கத்து ஊர்க்காரன். அடப்பாவி, நீயா?

சைக்கிளைச் சாத்திய சுவர்பக்கமாக ஓடுகிற அந்த முரட்டுமூர்க்க கறுத்த உருவம்.

தொழுவத்தின் இன்னொரு வாசல் வழியாக அரைகுறையாக துணிகளை அள்ளிக்கொண்டு ஓடுகிற அந்த மகராசி. புண்ணியவதி.

இந்த வீட்டுப் பெண்ணா? குலவிளக்கென ஊரே கையெடுத்து கும்பிடுகிற ஒழுக்கமான குத்து விளக்கா? இந்தப் பெண்ணா, இப்படி?

கல்யாணமாகி ஒன்பது வருஷமாகியும் பிள்ளை யில்லாதவள். 'மலடி மலடி' என்று உற்றமும் சுற்றமும் குற்றமும் சொல்லப்படுகிறவள். வார்த்தைக் கத்திகளால் அடிக்கடி குத்துப்படுகிறவள். குத்திக்குதறப்பட்டாலும் அழுக முடியாது.

'யார் மலடு' என்று பரிசோதனையில்லை. சோதிக்கச் சொல்லும்படி கூறுவதற்கு இடம் தராத உயர் குடும்ப கௌரவம்.

அதற்காக இப்படியா? அயலூர்க்காரனுடனா? ஐயய்யோ... ஒரே சாட்சி, இவன்.

இவனது மனசாட்சியின் துடிப்பு. மனித நேய மனக் குழைவு, இந்தக் குலவிளக்கை காட்டிக் கொடுத்து விட்டால்... குத்துப்பட்டு குத்துப்பட்டு உயிர்கதறுகிற இந்த ஜீவனின் ஒரு பிறழ்வை - ஒரு குற்றத்தை - அம்பலப்படுத்தினால்...

நாண்டுக்கிட்டு உசுரைக் கொன்று கொள்ளும் இந்தக் குத்து விளக்கு.

ஐயய்யோ... கௌரவமும் ஒழுக்கமும் உயர் பண்பு மான ஒரு பெண்ணின் சாவுக்கு தான் காரணமாவதா?

சன்னாசிக்குள் பெரும் குழப்பம். மனத்தவிப்பு. அங்கிட்டும் இங்கிட்டுமாக இழுத்து அலைக்கழிக்கப் படுகிற மனவதை. நினைவவஸ்தை.

மறுநாள் பகல்முழுக்க, அக்கரைப்பட்டி காட்டில் ஆடுகளை மேய்த்துவிட்டு, கருங்கல் கிடக்குத் தண்ணீரில் இறக்கி நீந்தவிட்டு... வீடு பத்திக் கொண்டு வரும்போது, இருட்டி விட்டது.

''ஊர்க்கூட்டம் இன்னிக்குப் போடுறாக, ஒனக்குத் தெரியுமா?''

படரில் இழுத்துச் சாத்துகிறபோது பக்கத்து வீட்டு மாரிச்சாமிதான் தாக்கல் சொன்னான்.

''தெரியாதே... போட்டா போடட்டும். எனக்கென்ன?''

''கூட்டமே ஒனக்காகத்தான் கூடுது. ஒன்னைக் கூப்புட்டு விசாரிக்கத்தான்.''

சன்னாசிக்குள் பதற்ற அலைகள். ஈரக்குலை நடுங்கி அதிர்கிறது. உயிரின் ஆணிவேரின் அடிநுனிவரை பரவிப் படர்கிற அச்ச அதிர்வு.

வெலவெலத்துப்போன மனசோடு பதற்றமாகக் கேட்கிற சன்னாசி.

''என்னத்துக்கு?''

''ராசமணியண்ணாச்சியோட சைக்கிளைக் காணோமாம். நீதான் களவாண்டுட்டீயாம். 'நீதான்'னு ஸ்ட்ராங்கா சாட்சி சொல்றாரு முத்தையா நாடாரு...''

குத்துவிளக்கை அழுக்காக்கி விட்டு, தெறித்தோடிய அந்த அயலூர்க்காரன், தப்பித்தோடுகிற பதற்றத்தில்

சுவரில் சாய்த்திருந்த சைக்கிளை பயன்படுத்தி விட்டானோ...?

இவனுக்குள் அடிவயிற்றில் பயப்புரட்டல். ''ஐயய்யோ... வந்து சேந்துச்சே நாசக்காடு'' என்று புலம்பித் தவிக்கிற சன்னாசி.

ஊர்க்கூட்டத்தில் நிறுத்துவார்கள். மேல்துண்டை கட்கத்தில் வைத்து 'ஊரை வணங்கி' தலைதாழ்ந்து நிற்கணும். ஆள்ஆளுக்குத் திட்டுவார்கள். வைது பேசுவார்கள். சீற்றமும் ஆத்திரமுமாய் காறித்துப்பு வார்கள்.

'ரெண்டாயிரம் அபராதம்' என்பார்கள். சபையை வணங்கி, நெடுஞ்சாண் கிடையாக விழுந்து கும்பிட ணும். கும்பிடக் கும்பிட குறைந்து வருகிற அபராதம், ஐநூறு ரூபாயில் வந்து நின்று கொள்ளும்...

''கட்டுடா... தொகையை...'' என்று கூப்பாடு போடுவார்கள்.

நினைவில் ஓடுகிற ஊர்ப்பழக்கம். வழமுறை. அம்மணமாக்கி தெருப்புழுதியில் புரட்டியெடுக்கிற மாதிரியான அவமானம்.

நினைத்தாலே உயிர்பதறுகிறது. நடுங்கியதிர்கிற உணர்வுகள்.

நரியைக் கண்ட பயத்தில் கத்துவதைப்போல ஆடுகள் கதறுகிற பரிதாபம்.

வீட்டுக்குள் ஓடிஒளிந்து கொண்டான்.

சந்தர்ப்பம் சாட்சியம் கச்சிதமாக வலைபின்னி யிருக்கிறது. ''நாந்தான் சன்னாசி. ஆட்டுக்காரன்'' என்று தான் சொன்னவுடன் தலைசாய்த்த முத்தையாநாடார்.

அவர் சாட்சி, இவனை வகையாக சிக்கவைத்து விடும்.

அவமானப்பட்டு சீரழியணும். அசிங்கப்பட்டு நிற்கணும். ஒண்ணுக்குமத்த தெரு நாய்கூட காறித் துப்பும். வாங்கிக்கிட்டு தலைகுனியணும்.

''அய்யா... ராசா... ராசா... அய்யா.''

நாவிதனின் குரல்.

''என்னப்பா?''

''ஊரு கூடுது. உங்கமேலே பிராது. ஊர்ப்பெரியாளுக உங்களை கையோட கூட்டிட்டு வரச்சொன்னாக...''

இவனுக்குள் நடுக்க அதிர்வுகள். அச்சக் குளிர்வு.

''நீ போ... நா வாரேன்...''

''கைப்புடியா கூப்புட்டு வரச்சொல்லி எனக்கு உத்தரவு.''

''நீ போப்பா... நா எங்கயும் ஓடிர மாட்டேன். பின்னாலேயே வந்து சேருதேன்.''

பயத்தில் நனைந்த குரல். பதற்றத்தை வெளிக் காட்டாமல், கெத்து விடாமல் பேச முயன்ற பாச்சா பலிக்கவில்லை என்பதை சன்னாசி உணர்கிறான்.

இப்ப என்ன செய்ய?

''களவாணி நாந்தான்'' என்று சொல்லி அசிங்கப் படுவதா? அவமானப்பட்டு, மானம் கிழிந்து கிடக்கவா? அல்லது உண்மையைச் சொல்லிவிடுவதா? ஒரு குல விளக்கின் சுடரை அணைத்துவிடுவதா? மானமுள்ள குடும்பப்பெண்ணை ஊர்சிரிக்க இழிவுபடுத்துவதா? அம்பலப்படுத்தி... ஒரு நல்ல உயிர் சாவதற்கு தான் காரணமாவதா?

சன்னாசிக்குள் அலைக்கழிவு. மனத்தடுமாற்றம். உணர்வுத் தத்தளிப்பு.

சுயநலமா... மனிதநேயமா...?

அந்த முன்னிரவின் இருளில் சந்துகளில் புகுந்து, ஊரைக்கடந்து ஓட்டமெடுத்தான். எங்கே, எதற்கு, எத்திசையில் என்று கேள்விகளால் சூழப்பட்ட குழப்பத் திலும் கால்போனபோக்கில்...

திசைகளற்று பயணப்பட்ட சன்னாசியின் கால் நின்றுதிகைத்த இடம் திருப்பூர். கட்டிடக் கட்டுமானத் தில் சித்தாளாக சாந்துச் சட்டிதூக்கி செங்கல் சுமக்கத் துவங்கி... கரண்டி பிடிக்கிற கொத்தனாராக அனுபவப் பட்டு... இப்போது இவன் கைக்குள் பத்து கொத்தனார் களும், முப்பது சித்தாள்களுமாய்....

சிவகாசியில் வந்திறங்கினான் சன்னாசி... பத்தாண் டில் மாற்றம் தெரிகிறது. சிவகாசி பஸ்ஸ்டாண்டே விரிவாக இருக்கிறது. சிமெண்டுத்தளமாகியிருக்கிறது.

நிறைய கடைகள் பெருகியிருக்கின்றன. தனதுகிராமம் இருக்கும் திசையை நோக்க... மனசுக்குள் பரவசத்த தும்பல்.

இன்னும் ஒரு டவுன் பஸ்தான். ஊரின் தெரு மண்ணில் கால்பதிக்கலாம். உயிரும், ரத்தமும், உணர் வும் சிந்திக் கலந்த அந்தத் தாய்மடியில் முகம் புதைத்து விடலாம்.

சிவகாசி ஊருக்குள் ஒரு ரவுண்டு சுற்றினான். எல்லாமே புதுமையாக இருந்தது. புதிய உணர்வின் இனிமைப் பூரிப்பு. மனசுக்கே றெக்கை முளைத்த மாதிரியோர் மனப்பிரவாகம்.

குழந்தையின் மனசைப்போலக் குதூகலிக்கிற சன்னாசி. கும்மியடிக்கிற மனக் கும்மாளம்.

உயிரைப் பிணைக்கிற உணர்வுச் சூட்டுமம். உள்ளூர் மண். பிறந்த மண். தவழ்ந்த மண். தத்தித்தத்தி நடந்த மண். எச்சில் வடித்த மண்.

ஊருக்குப் போகணும். முருகேசனைத் தேடணும். பத்து வருஷத்துக்கு முந்தி நடந்ததை விளக்கிச் சொல்ல ணும். ''நா களவாணியில்லே'' என்று முருகேசனிடம் மட்டுமாவது சொல்லணும்.

அந்தப் புண்ணியவதி... தன்னைப் பார்த்தால்-

அந்தக் குத்துவிளக்கின் மானச்சுடர் நடுங்கியதிரும். அந்தக் குலவிளக்கு குற்ற உணர்ச்சியால் தடுமாறித் தத்தளிக்கும். தனது மானமரியாதை பறிபோய் விடுமோ

என்று கலங்கித்தவிக்கும். தன்முகத்தை- கண்களை – பார்க்க முடியாமல் அந்தக் குலமான மனசு பதறித் தவிக்குமே...

அந்தக் குலவிளக்கின் மனத்தவிப்பை நினைக்க நினைக்க பரிதாபமாக இருக்கிறது. பாவமாக இருக்கிறது. 'ஐயோ' என்று ஈரம் கசிக்கிறது.

சன்னாசிக்குள் புதியத் தத்தளிப்பு.

இப்ப ஊர் போகணுமா? அந்தக் குத்துவிளக்கின் வாழ்வில் நடுக்க அதிர்வு ஏற்படுத்தணுமா?

நெகிழ்ந்து குழைகிற கருணை மனசுக்குள் புதிய நினைப்பின் மின்னல்.

வேண்டாம்... பிறந்த ஊர் மண்ணை மிதிக்கிற சந்தோஷம் வேண்டாம். ஒரு குலவிளக்கின் மான மனசை அதிரவைக்கிற பாவமும் வேண்டாம்...

சன்னாசி, மதுரை பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து விட்டான், திருப்பூருக்கே திரும்புவதற்கு.

செம்மலர் 2008

• • •

திருவரசு புத்தக நிலையம்